ASSOCIATION
PAGANERI.

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

தலைவர் ஜவாஹர்

16. 1Ken
5712844 (1)
1187
P.1.88 (2)

5655

தனித்தனி ஆசிரியர் எழுதிய

தமிழ்நாட்டுச் சிறுகதைத் தொகுதிகள்

1. மங்கையர்க்கரசியின் காதல்
2. நீல மணி
3. கன்யா குமாரி
4. சந்தனக்காவடி
5. சக்ரவாகம்
6. கனகாம்பரம்
7. தோட்டியை மணந்த அரச குமாரி
8. பவழ மாலை
9. வெண்தாமரை
10. அழகி
11. லக்ஷ்மீ கடாக்ஷம்
12. ஜடாதரன்
13. குழலோசை
14. வாடா விளக்கு
15. குழந்தையின் மனம்
16. பிள்ளை வரம்
17. தேவகி
18. சக்தி வேல்
19. மோகினி
20. போகும் வழியில்
21. வஸந்தா
22. ஆலமரத்துப் பிள்ளையார்
23. வைர டோலக்
24. பட்டாசுக் கட்டு
25. பட்டுப் புடைவை
26. கொந்தளிக்கும் பாசம்
27. ஐ. ஸி. எஸ். பிள்ளை
28. கோகில கானம்
29. பொறுமை
30. புதிய ஒளி

தலைவர் ஜவாஹர்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHA
CHETT... TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

ஆசிரியர்

தி. ஜ. ர.

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை

1947

காபிரைட்] [ரூ. 3-8-0

எங்கள் தேசிய நூல்கள்

ஆசார்ய கிருபளானி
மஹாதேவ கோவிந்த ரானடே
ஜனாதிபதி ரூஸ்வெல்ட்
லோகமான்ய திலகர்
பாஞ்சால சிங்கம் லஜபதி ராய்
பண்டித மோதிலால் நேரு
டாக்டர் ராஜேந்திர பிரஸாத்
எல்லைக் காந்தி கப்பார்கான்
அபுல் கலாம் ஆஸாத்
அன்னை கஸ்தூரி
என் சரிதம் - மஹாத்மா காந்தி
ரா ஜா ஜி

*

விட்டல்பாய் படேல்
நேதாஜி சுபாஸ் போஸ்
ஸர்தார் படேல்
ஜான்ஸி ராணி
மார்ஷல் ஸ்டாலின்
புதுமைக்கவி பாரதியார்
அரங்கசாமி ஐயங்கார்
பண்டித மாளவ்யா
ஸரோஜினி தேவி
புக்கர் வாஷிங்டன்
தீனபந்து ஆண்ட்ரூஸ்
ராமாபாய் சரஸ்வதி
சுவாமி ராமதீர்த்தர்
அருணா ஆஸப் அலி

Printed at the Sadhu Press,
Royapettah
P. I. C. No. M. S. 115,
for The Allance Company
M y l a p o r e
P. I. C. No. 109-C. 2100-29-3-47

கல்வி மந்திரி அவர்களின்

முன்னுரை

'தைரியமுடையவனுக்கே வெற்றி' என்பது பண்டித ஜவாஹர்லால் அவர்களின் வாக்குகளில் ஒன்று. நமது நாட்டின் சுதந்திரத்திற்கு அடிகோலியவர்களில் பண்டித ஜவாஹர்லால் ஒருவர். ஆண்மை, அளவற்ற தைரியம், எல்லையில்லாத உணர்ச்சி, ஓய்வில்லாத முயற்சி - இவை, சிறந்து விளங்க விரும்பும் எல்லா ஊழியர்களுக்கும் அவசியமானது. பண்டித ஜவாஹர்லால் அத்தகைய ஊழியராக விளங்குகிறார். அக்காரணத்தினாலேயே இந்திய இளைஞர்களின் உள்ளத்தை அவர் கொள்ளை கொண்டிருக்கிறார்.

நமது இளைஞர்களும் அங்ஙனமாகவேண்டும். அதற்கு இச்சிறு நூல் உதவுமென்று நம்புகிறேன்.

7-4-47 தி. சு. அவிநாசிலிங்கம்.

ஆசிரியர் முன்னுரை

ஜீவிய சரித்திரங்களை எழுதுவதில் பல அம்சங்கள் கவனிக்கப்படுகின்றன. அவைகளைப் பயன்படுத்தும் அளவையும் முறையையும் நோக்கத்தையும் பொறுத்து, ஜீவிய சரித்திரங்கள் பலவிதமாயும் அமைகின்றன. யாருடைய ஜீவிய சரித்திரத்தை எழுதுகிறோமோ அவரைப்பற்றிய சகல தகவல்களும் கிடைப்பது அநேக சமயங்களில் துர்லபமா யிருக்கிறது. இதனாலும் ஜீவிய சரித்திரத்தின் வகை சிலசமயம் பாதிக்கப்படுகிறது. தலைவர் ஜவா ஹரின் ஜீவிய சரித்திரத்தை எழுதுவதில், அந்தச் சிரமம் அவ்வளவாக இல்லை. அவரே எழுதியுள்ள சுய சரித் திரத்திலும், மற்றும் அவர் எழுதியுள்ள உலக சரித்திரம் தவிர்த்த ஏனைய சகல புத்தகங்களிலும் அவருடைய ஜீவியம் பற்றிய ஏராளமான தகவல்கள் கிடைக்கின்றன. ஜீவிய சரித்திரத்தின் கர்த்தா இவ்வாறு தம்மைப்பற்றித் தாமே சொல்லியுள்ள தகவல்கள் கொஞ்சம் கூட்டிக் குறைத்தோ வர்ணம் பூசியோ இருப்பது பெரும்பாலும் சகஜமாகும். ஆகையால், இந்த அகத் தகவல்களைக் கிடைக்கக்கூடிய புறத்தகவல்களுடன் உரைத்தும் ஒப் பிட்டும் பார்த்து, நிஷ்பட்சபாதமான முடிவுகள் காண் பது, ஜீவிய சரித்திரம் எழுதுவதில் ஒரு முறையாகும். ஆனால், எல்லா ஆசிரியர்களும் அப்படிச் செய்யவேண்டு மென்ற நியதியில்லை. நான் கட்சிக்காரன்; ஜவாஹரைப் போற்றுபவன். ஆகையால், அவர் தந்துள்ள தகவல்களை நான் அப்படி யப்படியே பயன்படுத்தி யிருக்கிறேன். அலசி ஆராயவில்லை. ஜவாஹரைப் பாராட்டுவோர், என்னை ஆதரித்தாக வேண்டும். மற்றவரைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

கர்த்தாவின் மன வளர்ச்சி, சுய வாழ்க்கை நிகழ்ச்சிகள், புற நிகழ்ச்சிகளோடு அவருக்குள்ள சம்பந்தம், குணாதிசய விளக்கம், கருத்துக்கள் - இப்படிப் பல அம்சங்களையும் பூர்ணமாய் இசைத்தோ, இவைகளில் சிலவற்றை மாத்திரம் விரித்து மற்றவற்றைக் குறுக்கியோ அகற்றியோ, ஆசிரியர்கள் தங்கள் நோக்கத்துக்கிசைய ஜீவிய சரித்திரங்களை வரைவார்கள். ஜவாஹரின் ஜீவியம் மகாத்மா காந்தியின் ஜீவியத்துக்கு அடுத்தபடியாக, பல வருஷ காலமாய், தேசீய இந்தியாவின் சரித்திரத்திலே, ஊடும் பாவும்போல் இழைந்து கிடக்கிறது. மகாத்மா காந்தியைப்போல் ஜவாஹரும் ஒரு லட்சிய வாதி. அவர்கள் இருவருக்கும் இடையிலே உள்ள வேற்றுமை அகன்றது. ஆனால், அந்த அகன்ற வேற்றுமைக்குள்ளே ஓர் ஆச்சரிய ஒற்றுமை கரந்து கிடக்கிறது. ஜவாஹரின் சரித்திரத்தைப் பல அம்சங்களையும் கொண்ட பரிபூர்ணமான வகையிலும் உருவிலும் எழுதுவதென்றால், புத்தகத்தின் ஆற்றலும் அளவும் மிகமிகப் பெருகிவிடும். நான் அந்த முறையைக் கைக்கொள்ளவில்லை.

தற்காலம் 'பத்திரிகை எழுத்து' என்று சொல்லும் ரீதியிலே வரையும் ஜீவிய சரித்திர வகையையே, நான் மேற்கொண்டேன். ஒரு புருஷரின் பல குணாதிசயங்களையும் மனப்பண்பையும் இணையற்ற முறையில் பளிச்சென்று வெளியிடக்கூடிய அம்சங்கள் எவையென்றால், அவரது வாழ்க்கையில் நடந்த பலவித நிகழ்ச்சிகளேயாகும். பெருநிகழ்ச்சிகள் மட்டுமல்ல, துக்கடா நிகழ்ச்சிகளுமே அந்தச் சக்திவாய்ந்தவை. ஸ்தூலமாகச் சொன்னால், இத்தகைய பல நிகழ்ச்சிகளையும் துக்கடாக்களையும் நிரல்படுத்தி, கோவைசெய்து, இசைக்கும் முறைதான் 'பத்திரிகை எழுத்து' ரீதியான ஜீவியசரித்திரம். இதன் ஒரு விசேஷம் என்னவென்றால், வாசகர் சிரமம் இல்லாமல் கதைபோல் சுவாரஸ்யமாக இத்தகைய ஜீவிய சரித்

திரத்தைப் படிக்க இயலும். ஆசிரியனும், கர்த்தாவின் மீது தீர்ப்புச் சொல்லும் நீதிபதிபோல் இல்லாமல், பக்தனைப் போல் வரலாற்றை வரையலாம். இந்தப் பத்திரிகை எழுத்து ரீதியையே மேற்கொண்ட நான், தமிழ் வாசகர்களின் தேவையை நானறிந்தமட்டில் அனுசரித்து, ஜவாஹரின் வாழ்க்கையில் ஒளிவீசும் தேசீய சம்பவங்களை ஓரளவு தெளிவாக்கி, இந்தச் சரித்திரத்தை எழுதியிருக்கிறேன்.

இதை எழுதுவதற்கு நான் பற்பல நூல்களின் உதவியை நாடினேன். அவைகளுக்குள்ளே நான் மிகவும் கடமைப் பட்டவை (1) ஜவாஹரின் சுய சரித்திரம், (2) அவருடைய 'நான் கண்ட இந்தியா' என்ற சமீபப் புத்தகம், (3) ஜவாஹரின் சகோதரி கிருஷ்ணா எழுதிய நூலின் 'விதி என்ன செய்யும்?' என்ற தமிழ் மொழி பெயர்ப்பு - இந்த மூன்றுமேயாகும். மற்றும் ஜவாஹரின் பல எழுத்துக்கள், ஸிரில் மொடாக் எழுதிய 'சுதந்தரம் - விலை என்ன?' என்ற நூல், எஸ். கணேசன் வெளியிட்ட 'யங் இந்தியா' முதல் தொகுதிக்கு ராஜேந்திர பாபுவின் முன்னுரை, ஸ்பிராட் எழுதிய காந்தீயம், 'மகாத்மாவின் மனம்' என்ற ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிட்டி பிரசுரத்தின் தேதிக் கிரம ஜாபிதா, ஜகத் எஸ். பிரைன் எழுதிய ஜவாஹர்லால் சரித்திரம். 'டைம்ஸ் அப் இந்தியா' - 'நளாந்தா' - 'இந்துஸ்தான்' ஈயர் புக்குகள், எஸ். ஏ. ரஹீம் பதிப்பித்த காங்கிரஸ் வைர விழா மலர், நான் பதிப்பித்த 'சக்தி' பத்திரிகையின் சில இதழ்கள், இன்றுவரை சமீபச் செய்திகள் அடங்கிய 'ஹிந்து' இதழ்கள் - இவையெல்லாம் எனக்கு உதவியாயிருந்தன. ஆராய்ச்சி மிக்க விரிவான ஜீவிய சரித்திரம் அல்ல இது. அப்படியிருந்தும், இவ்வளவு நீண்ட ஜீவிய சரித்திரம் தமிழிலே இதுதான் முதலாவதா யிருக்கும் என்று நான் எண்ணுகிறேன். தவிர, ஜவாஹர் எப்படிப்பட்ட புருஷர் என்று தெரிந்துகொள்வதற்குப் போதிய

பொருள் இதில் கிடைக்குமென்றே நான் நம்புகிறேன். என்னுடைய அந்த எண்ணமும் இந்த நம்பிக்கையும் சரியோ, தவறோ - அது வாசகரின் தீர்ப்புக்குரிய விஷயம்.

அல்லயன்ஸ் கம்பெனியார் இதை உயர்ந்த முறையில் வெளியிட முன்வந்ததற்கு, எனது நன்றி உரியதாகும்.

சென்னை,
29, மார்ச், 1947

தி. ஜ. ர.

பொருளடக்கம்

		பக்கம்
1.	வம்சமும் தந்தையும்	1
2.	பாலியப் பருவம்	7
3.	வீட்டிலே வாத்தியார்	19
4.	சீமைப் படிப்பு	23
5.	ஊர் திரும்பியபின்	32
6.	தொழிலா, அரசியலா ?	38
7.	மணமும் மலைப் பயணமும்	47
8.	தந்தையின் மனமாற்றம்	53
9.	கிராமங்களிலே திரிதல்	62
10.	முதல் சிறைவாசம்	67
11.	வெளி வந்தபோது	73
12.	சில அனுபவங்கள்	79
13.	ஐரோப்பாவில்	85
14.	போலீஸ் தடியடி	91
15.	தந்தைக்குப்பின் மகன்	99
16.	உப்புப்போர் ராஷ்ட்ரபதி	105
17.	மோதிலாலின் மறைவு	112
18.	ராஜியும் ராஜி முறிவும்	117
19.	சிறை ஜன்னல் வழியே	123
20.	கமலாவின் பிரிவு	129
21.	முசோலினியைக் காண மறுப்பு	134
22.	மூன்றும் முறை காங்கிரஸ் மகுடம்	137
23.	அக்காளும் தங்கையும்	141

24. நாஜி அழைப்பு நிராகரிப்பு ... 146
25. திரிபுரியும் பின்னரும் ... 150
26. வெளியே போ ! ... 154
27. விடுதலையும் வரவேற்பும் ... 158
28. வேவல் திட்டம் முறிவு ... 162
29. மந்திரிகள் தூது ... 165
30. காஷ்மீரச் சம்பவம் ... 173
31. முதல் இந்திய தேசீய சர்க்கார் ... 179
32. லீகர் பிரவேசம் ... 185
33. அரசியல் நிர்ணய சபை ... 194
34. பிரிட்டிஷ் வாபஸ் கெடு ... 200

56555



தலைவர் ஜவாஹர்

தலைவர் ஜவாஹர்

1. வம்சமும் தந்தையும்

இளைஞர்கள் தொழும் வீர விக்கிரகம், பண்டித ஜவாஹர்லால். என்றாலும், அவர் கடைசிமுறை சிறையிலிருந்து வெளியே வந்ததும், "நான் கிழவனாகிவிட்டேன்" என்றார். மகாத்மா காந்தியோ, "ஜவாஹர்தான் என் அரசியல் வார்சு" என்றார். "அரசியலிலே வார்சாவது, மண்ணாங்கட்டியாவது! இதெல்லாம் சரியல்ல" என்று உடனே மறுத்தார் பண்டித ஜவாஹர். காந்திஜியின் பேச்சைக் கேட்டு, ஜவாஹர் இப்படி 'மக்கர்' செய்வதுபோல் தோன்றுவது இது முதல் தடவை அல்ல. ஆரம்ப முதலே இப்படித்தான். ஆனாலும், காந்திஜி ஜவாஹரை நிக்கிரகம் செய்யமாட்டார்; ஜவாஹரும் காந்திஜியை மீறி நடக்கமாட்டார். இதுதான் அதிசயம்.

உண்மையைச் சொன்னால், காந்திஜியின் அரசியல் வார்சு ஜவாஹர்தான். சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னே மகாத்மா காந்தி, முதல் முதலாக இந்திய

சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தார். அப்போது, சௌரிசாரா என்னுமிடத்தில் கட்டுக்கடங்காத கலகம் ஒன்று எழுந்தது. கலகம் அடங்கிச் சில மாதங்கள் கழிந்தன. "சௌரிசாரா கலகத்துக்கு நான் பொறுப்பாளி" என்று உலகறியக் கூறினார் காந்திஜி. சமீபத்திலே, "ஆகஸ்டுக் கலவரத்துக்கு நான் பொறுப்பாளி" என்று பகிரங்கமாய்க் கூறினார் பண்டித ஜவாஹர். எடுத்த காரியத்தில் களைக்கும் 'நன்மைக்கும் தீமைக்கும் நான் பொறுப்பு' என்று திடமான உறுதியோடு சொல்பவனே தலைவன். இன்று பண்டித ஜவாஹரை, "என் அரசியல் வார்சு" என்று காந்திஜி சொல்வதில் என்ன தவறு? ஒரு தலைவனுக்கு வேண்டிய பொறுப்புணர்ச்சியும் தெளிந்த லட்சியமும் சமரச மனோபாவமும் தியாகமும் அவரிடம் பரிபூர்ணமாய் இருக்கின்றன. அவருடைய வாழ்க்கை வரலாறு அதற்குச் சிறந்த அத்தாட்சியாகும்.

பண்டித ஜவாஹர் காஷ்மீரப் பிராம்மண வகுப்பிலே பிறந்தவர். சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்பு, ராஜ்கால் என்ற பண்டிதர் காஷ்மீரத்தில் கீர்த்தி வாய்ந்திருந்தார். சம்ஸ்கிருதம், பாரசீகம் என்னும் இரண்டு பாஷைகளிலும் அவர் பெரும் புலமை பெற்றிருந்தார். அப்போது டில்லியில் பருக்ஷியார் என்ற முஸ்லீம் சக்கரவர்த்தி ஆட்சி புரிந்துவந்தார். அவர் ஒரு சமயம் காஷ்மீருக்கு விஜயம் செய்தார். ராஜ்காலின் புலமை சக்கரவர்த்தியின் மனத்தைக் கவர்ந்தது. பண்டிதரைச் சக்கரவர்த்தி, டில்லி நகருக்கே வந்து வசிக்கும்படி கேட்டுக்கொண்டார். பண்டிதரின் குடும்பம் டில்லி போய்ச் சேர்ந்தது. பண்டிதருக்குச் சக்கரவர்த்தி, ஒரு ஜாகீரையும் வீட்டையும் வழங்கினார். வீடு, ஒரு 'நஹார்'ரின் கரையிலே இருந்தது. 'நஹார்' என்றால் 'கால்வாய்' என்று அர்த்தம். கால்வாய்க்குரியவன் 'நெஹ்ரூ'.

ராஜ்கால் பண்டிதரை, டில்லி மக்கள் 'கால் - நெஹ்ரூ' என்று அழைக்கத் தொடங்கினார்கள். இதிலிருந்து அந்தப் பண்டிதரின் வம்சத்தினருக்கு, 'கால்' என்ற பட்டம் போய், வெறும் 'நெஹ்ரூ' என்ற பட்டம் நிலைத்துவிட்டது.

அது மொகலாய ஆட்சி க்ஷீணித்துவந்த காலம். எந்த இடத்திலும் இன்றிருந்த நிலைமை நாளைக்கில்லை. இந்த அவந்தரையான நாட்களில், நேரு குடும்பத்தின் ஜாகீர் சொத்துச் சிறிது சிறிதாய்க் கரைந்து கொண்டே வந்து, கடைசியில் அழிந்தே போயிற்று. கால்நேருவின் பேரன் மார், டில்லியை விட்டு ஆக்கிராவுக்குப் போய்க் குடியேறினார்கள். அங்கேதான் பண்டித மோதிலால்நேரு, 1861-ஆம் ஆண்டு மேமீ 6-ஆம் தேதி பிறந்தார். ஆனால், அவர் கர்ப்பத்தில் இருக்கையிலேயே, அவருடைய தந்தை காலமாகிவிட்டார். மோதிலாலைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு, அவருடைய சகோதரர்களான பன்ஸிதார் நேரு, நந்தலால் நேரு இருவர்மீதும் ஏறியது. இந்த நாட்களில் பிரிட்டிஷ் நிர்வாகம் நாட்டில் ஓரளவு பரவிவிட்டது. பன்ஸிதார் நேரு, பிரிட்டிஷ் நீதி பரிபாலன இலாகாவில் உத்தியோகம் ஏற்றார். தம்பி நந்தலால் நேருவோ கேத்ரி சமஸ்தானத்தில் திவான் பதவி பெற்றார். பின்னால், அலகபாத்தில் நந்தலால் வக்கீல் தொழில் புரியலானார். அவருக்கு அதில் ஏராளமான வருவாயும் வரத்தொடங்கியது. இந்த நாட்களிலிருந்து மோதிலால், நந்தலாலிடமே வளர்ந்தார். நேரு குடும்பம் அலகபாத்தில் நிலைபெறலாயிற்று.

சிறு வயதில் பண்டித மோதிலால் சாதுக் குழந்தை அல்ல. நல்ல துறுதுறுப்பும் குறும்பும் நிறைந்திருந்தார். காலேஜிலே 'கலாட்டா'க்களைத் தூண்டிவிடும் மூல புருஷர்களில் ஒருவர் என்று பெயர் வாங்கியவர். முற்றும் மேல்நாட்டுப் பாணியிலே உடுப்பு அணிவார். அந்தக் காலத்தில் கல்கத்தா, பம்பாய் போன்ற மிகச் சில நகரங்களில்தான் சிலர் இப்படி உடுக்கத் துணிவார்களேயல்லா

மல், அலகாபாத் போன்ற சின்ன நகரங்களில் இப்படி உடுப்பவர் அபூர்வம். ஆனால், இந்தக் 'கலாட்டாக்காரப் பைய'னிடம் இங்கிலீஷ் புரொபஸர்களுக்கு மட்டும் வெகு பிரியம். மோதிலாலின் துறுதுறுப்பும் புத்திக் கூர்மையும் அவர்களுடைய மனத்தைக் கவர்ந்தன.

காலேஜ் பாடங்களில் மோதிலால் சரியாய்க் கவனம் செலுத்துவதேயில்லை. பரீட்சைகளில் விசேஷமாய் மார்க்கு வாங்கியதும் இல்லை. பி.ஏ., பரீட்சைக்கு உட்கார்ந்தார். "நாம் தேறப்போவதில்லை" என்று தாமே முடிவு கட்டிக் கொண்டு, முதல் கேள்வித்தாளுக்கு அரைமனத்தோடு விடை எழுதினார். எழுதிய விடையில் அவருக்கே திருப்தி யில்லை. ஆகையால் மீதிப் பரீட்சையை யெல்லாம் 'பகிஷ் காரம்' செய்தார். தாஜ்மகால் ஹோட்டலில் 'ஜம்' என்று உட்கார்ந்து உல்லாசமாய்க் காலங்கழிக்கத் தொடங்கினார். (பரீட்சை ஆக்கிராவில் நடந்தது). பரீட்சையே எழுதாத வருக்கு அது எப்படித் தேறும்? பட்டந்தான் எப்படிக் கிடைக்கும்? இரண்டும் நாஸ்தி. பின்னால், மோதிலாலை அவருடைய புரொபஸர் கூப்பிட்டனுப்பினார். "முட்டாள் பையனே! முதல் பேப்பருக்குக் கூடிய மட்டும் நன்றாய் விடை எழுதியிருக்கிறாயே; மீதிப் பரீட்சைகளுக்கு ஏன் வராமல் போய்விட்டாய்?" என்று கோபித்துக்கொண் டார். எப்படியானால் என்ன? மோதிலாலின் காலேஜ் படிப்பு இத்துடன் முடிந்தது. வெறும் படிப்பில்தான் இப்படி. இதே மோதிலால், பின்னால் லா காலேஜில் சட்டப் படிப்புப் படிக்கத் தொடங்கினார். அதில் வெகு ஊக்க மாயும் படித்தார்; தேறினார். அதற்காகத் தங்கப் பதக்கப் பரிசும் பெற்றார்!

கான்பூர் கோர்ட்டுகளில் வக்கீல் தொழிலை ஆரம்பித் தார். வெகு சீக்கிரத்தில் அதில் முன்னேற்றம் அடைந்தார். ஆனால், இந்த வயதிலும் விளையாட்டுக்களில் அவருக்கு

இருந்த மோகம் குன்றவில்லை. முக்கியமாக, குஸ்திச் சண்டைகளைப் பார்ப்பதில் அவருக்கு மிகுந்த பிரியம். அந்தக் காலத்தில், குஸ்திச் சண்டைகளுக்குப் பேர்போன நகரம் கான்பூர். மோதிலால் இந்தக் குஸ்திச் சண்டைப் போட்டிகளை ஆதரிக்கும் போஷகர்களில் ஒருவராய் விளங்கினார்.

கான்பூரில் மூன்று வருஷங்கள் 'அப்ரெண்டிஸா'ய்த் தொழில் புரிந்த பின்பு, அலகபாத் ஹைகோர்ட்டில் வக்கீல் தொழில் புரிவதற்காக, அங்கே போய்ச் சேர்ந்தார். சில நாளில் பண்டித நந்தலால் காலஞ்சென்றார். குடும்ப பாரம் முழுவதும், மோதிலாலின் தலையில் சுமந்தது. சகோதரரின் வழக்குகள் எல்லாம் மோதிலாலிடமே வந்து குவிந்தன. இராப்பகலாய் ஓய்ச்சலொழிவில்லாமல் தொழிலில் ஈடுபட்டார். மோதிலாலுக்கு வாலிபத்திலேயே வெற்றியும் கீர்த்தியும் செல்வமும் குவிந்தன. தொழிலைத் தவிர வேறு எந்த வேலையிலும் அவருக்கு அப்போது மனம் செல்லவில்லை. ஏதோ ஒன்று இரண்டு காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களுக்குப் போயிருப்பார். இதற்குமேல், அரசியலில் அவர் சிரத்தை கொள்ளவில்லை. நம் நாட்டின், அக்காலத்து அரசியல் வாதிகளைக் கண்டு, மோதிலாலுக்கு ஒருவித வெறுப்புக்கூட உண்டாகியிருந்தது. "ஒரு காரியமும் செய்யாமல் இவர்கள் வெட்டிப் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கிறார்களே" என்றுதான் அவர் வெறுப்படைந்தார். அவருக்கு உள்ளத்திலே மங்கலாக ஏதோ தேசீய உணர்ச்சி மட்டிலும் இருந்தது.

ஆயினும், ஆங்கிலேயர்களைக் கண்டு அவருக்கு மிகுந்த மதிப்பு உண்டாயிற்று. வருமானம் வரவரப் பெருகிக்கொண்டே வந்தது. செலவையும் அதற்கு ஏற்றபடி பெருக்கிக்கொண்டே போனார் மோதிலால். ராஜபோகமாய் வாழ்க்கையை நடத்தினார். சம்பாதித்த பணத்தைச் சேகரித்துவைத்துப் பணங் காக்கும்

பூதமாய் விளங்க, அவருக்குத் துளியும் இஷ்டமில்லை. மேல்நாட்டவர்களைப்போல், மிகுந்த சொகுசோடு குடும்பம் நடந்தது. இத்தகைய குடும்பத்தில்தான், பண்டித மோதிலாலுக்கு அன்னை சொரூப ராணியிடம் செல்வக் குமாரராய்ப் பண்டித ஜவாஹர்லால் நேரு பிறந்தார். பிறந்த நாள் 1889-ஆம் ஸு நவம்பர் மீ 14-ஆம் தேதி.

2. பாலியப் பருவம்

மேலும் மேலும் செல்வமும் செல்வாக்கும் கொழிக்கும் குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தையின் வாழ்க்கை எப்படி இருக்கும்? செல்வமான வாழ்வுதான். பந்தோபஸ்து நிறைந்து, எத்தகைய விசேஷ சம்பவங்களுமில்லாத பருவம் என்று, ஜவாஹரே தமது குழந்தைப் பருவத்தைக் குறிப்பிடுகிறுர்.

தம்மைவிட வயதில் மூத்த தாயாதிப் பையன்களெல்லாம் ஏதாவது பேசிக்கொண்டிருந்தால், ஜவாஹர் அதைக் கூர்ந்து கேட்பார். அவர்களின் பேச்சிலே ஒரு வார்த்தை கூட இவருக்குப்புரியாது. என்றுலும், ஒருவிஷயத்தை மாத்திரம் இவர் கிரகித்துக் கொண்டார். ஆளும் ஆங்கிலேயர்கள் ரெயிலிலும் கோர்ட்டிலும் பொது இடங்களிலும் இந்தியர்களை இழிவாய் நடத்துகிறுர்கள் என்றும், அதைச் சகிக்கமுடியாதென்றுந்தான் அந்த வாலிபர்கள் பெரும்பாலும் பேசிக்கொள்வார்கள். ஆகையால், ஆளும் அன்னியரிடம் அந்தச் சிறுவயதிலேயே ஜவாஹருக்கு ஆத்திரம் உண்டாயிற்று. அக்கிரமம் செய்யும் அன்னியன் எவனையேனும் யாராவது இந்தியன் எதிர்த்து அடித்தான் என்றுல், ஜவாஹர் அந்தப் பிராயத்திலேயே சந்தோஷம் அடைவார்.

ஆளும் அன்னியரின்அக்கிரமத்தைப்பற்றித்தான் இப்படி அவருக்குக் கோபம். தனிப்பட்ட ஆங்கிலேயர்களிடம் அவருக்கு வெறுப்பு ஏற்படவில்லை. ஏனென்றுல், பண்டித மோதிலாலைப் பார்க்க வரும் நண்பர்களில் பல ஆங்கிலேயர்களும் இருந்தார்கள். தவிர, ஜவாஹரைக் கவனித்துக் கொள்ளச் சில வெள்ளைக்காரத் தாதிகளையே பண்டித மோதிலால் அமர்த்தி வந்தார். ஆகையால், தனிப்பட்ட

ஆங்கிலேயர்களிடம் வெறுப்பு இல்லாதது மாத்திரமல்ல, வியப்புக்கூட ஜவாஹருக்கு உண்டாயிற்று.

மாலை நேரத்தில், அன்றுட வேலையின் களைப்புத்தீரப் பொழுது போக்குவதற்காகப் பற்பல நண்பர்கள் மோதிலாலின் வீட்டுக்கு வந்து கூடிவிடுவார்கள். கூட்டம் ஒரே பேச்சும் சிரிப்புமாய்க் கலகல என்றிருக்கும். மோதிலாலின் சிரிப்பு ஊரெல்லாம் பிரசித்தம். அவர் சிரித்தால் வீடே அதிரும். வீட்டில் கூடும் பெரிய மனிதர்கள் ஒருவருக்கொருவர் என்னதான் பேசிக் கொள்ளுகிறுர்கள் என்று அறிய, சின்னஞ் சிறு ஜவாஹருக்கு மிக்க ஆவலாயிருக்கும். கூடத்தில் தொங்கிய ஒரு திரைக்குப் பின்ஞல் இருந்துகொண்டு, திரையை மெல்ல விலக்கி, இடுக்கால் எட்டிப்பார்ப்பார் ஜவாஹர். இப்படிப் பார்க்கையில் சில சமயம் அகப்பட்டுக்கொண்டு விடுவார். மோதிலால் இவரைப் பிடித்து உள்ளே இழுப்பார். கையுங்களவுமாய்ப் பிடிபட்ட திருடனைப்போல இவர் நடுநடுங்குவார். இவருக்கு மோதிலால் விதிக்கும் தண்டனை என்ன தெரியுமா ? ஜவாஹர் கொஞ்ச நேரம் வரையில், மோதிலாலின் மடியிலே பேசாமல் உட்கார்ந்திருக்க வேண்டியதுதான் தண்டனை! இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் வேடிக்கையான ஒரு நிகழ்ச்சி நடந்தது.

மோதிலாலின் அளவற்ற தியாகத்தையும் தேசபக்தியையும் உலகம் அறியும். ஆனுல், எப்பேர்ப்பட்ட சுக போகங்களுடன் வாழ்ந்த அவர் பிற்காலத்தில் மகாத்மா காந்தியின் வசியத்தால் என்ன அற்புதமான மாறுதலை அடைந்தார் என்று கவனிக்கும்போதுதான், அவரது தியாகம் எவ்வளவு அபரிமிதமானது என்று நமக்குப் புலஞகும். மேல்நாட்டு நாகரிக மோகம் தலைக்கேறியவர்கள் அனுபவிக்கும் சுகங்களில் ஒன்று உயர்ந்த வகை மதுபானம். இதுதான் இன்றுங்கூட மிகப் பல ‘பெரிய’ இடங்களில் தண்ணீர் பட்ட பாடாய்

இருந்துவருகிறதே! மதுவெறியேறி மதிகலங்கி நிற்பதை ஒரு கௌரவமாய் எண்ணுவோர் இன்னுந்தான் இந்த நாட்டில் எத்தனைபேர் இருக்கிறார்கள்! அந்த நாட்களில், மோதிலாலும் இந்தத் தீமைக்கு ஆட்பட்டிருந்தார். அவரும் நண்பர்களும் விஸ்கி முதலிய மது வகைகளைப் பருகுவதை ஜவாஹர் கண்டிருக்கிறார். ஆனால், செக்கச் செவேல் என்றிருந்த ஒரு திரவத்தை மோதிலால் ஒருசமயம் குடிப்பதை ஜவாஹர் பார்த்தார். இந்தப் புதிய சரக்கு அவருக்கு ஒரே பீதியை உண்டாக்கிவிட்டது. 'குடுகுடு' என்று உள்ளே தாயிடம் ஓடினார். "அம்மா! அம்மா! அப்பா ரத்தம் குடிக்கிறார்" என்று கத்தினார்! 'கிளாரட்' என்பது போன்ற ஏதோ சிவப்பு மது அது. விஷயம் அவ்வளவுதான். இது ஜவாஹரை மிரட்டிவிட்டது. இங்கே ஒருவார்த்தை: இப்பேர்ப்பட்ட மோதிலால் தான் பின்னால் தேசத்துக்காகச் சர்வ சுகங்களையும் துறந்து, எளிய வாழ்வு வாழ்ந்தார். சிறைக்கும் சென்றார். அவருடைய தியாகத்தின் அளவை என்னென்று சொல்வது! எப்படிப் புகழ்வது!

பாலியத்திலே ஜவாஹருக்குத் தந்தையிடம் பிரமாதமான வியப்பு. வலிமை, தீரம், அறிவு இவைகள் நிறைந்த ஒரு வீர புருஷராகத் தந்தையை ஜவாஹர் மதித்தார். "நான் பெரியவனாய் வளரும்போது அப்பாவைப்போல் ஆகவேண்டும்" என்று கூட அவர் ஆசை கொண்டார். ஆனால், தந்தையிடம் அவருக்கு இவ்வளவு வியப்பும் அன்பும் நிறைந்திருந்தனவே; அந்தரங்கமான நெருக்கம் இருந்ததா? அதுதான் இல்லை. தந்தையிடம் ஒருவிதப் பயமும் கூடவேயிருந்தது. சில சமயம் வேலைக்காரர்களிடமும் பிறரிடமும் மோதிலால் சினந்து சீறி விழுவார். அப்போது அவருடைய ரௌத்திராகார சொரூபத்தைக் கண்கொண்டு பார்க்கமுடியாது. ஜவாஹர் பயந்து நடுங்குவார். என்றாலும், மோதிலால் நகைச்சுவையும் திடசித்தமும்

உடையவராகையால், தம்மைத் தாமே அடக்கிக்கொள் வார். பிற்காலத்தில், இந்தத் தன்னடக்க குணம் அவரிடம் வரவர வலுத்தது. முன்மாதிரி கோபம் கொள் வதே அபூர்வமாயிற்று.

ஜவாஹருக்கு ஐந்து அல்லது ஆறுவயது இருக்கும்: தந்தையின் மேஜையில் இரண்டு பவுண்டன் பேனுக்கள் இருப்பதை ஒரு நாள் அவர் பார்த்தார். அந்தப் பேனுக் களின்மீது அவருக்கு என்னவோ ஆசை விழுந்தது.

"அப்பாவுக்கு எதற்காக இரண்டு பேனு? ஒரே ஒரு பேனுவால்தானே எழுதுகிருர்? இரண்டு பேனுக் களையும் பிடித்துக்கொண்டா எழுதுகிருர்? ஒன்று போதும் அவருக்கு. இன்னென்று எனக்கு இருக் கட்டுமே" என்று ஜவாஹர் நினைத்தார். ஒன்றை எடுத்துக் கொண்டும் போய்விட்டார்.

மோதிலால் வந்தார். மேஜையைப் பார்த்தார். இரண்டில் ஒரு பேனுவைக் காணவில்லை. "என் பேனு எங்கே?" என்று இரைச்சல் போட்டார்.

அந்த இரைச்சலைக் கேட்ட உடனேயே பையன் சப்த நாடியும் ஒடுங்கி நடுங்கிவிட்டான்.

"நீ எடுத்தாயா?" என்று கேட்டார் மோதிலால்.

நரசிம்மமூர்த்திக்கு முன்னே இரணியன் வரலாம்; சத்தியம் பயந்தோடிப்போகும். நடுங்கிக் குன்றி நிற்கும் பச்சிளம் பாலகனுல் உண்மையை எப்படிச் சொல்ல முடியும்? "இல்லவேயில்லை. நான் எடுக்கவில்லை" என்று சாதித்துவிட்டார் ஜவாஹர்.

தேடிப் பார்த்தபோது பேனு அகப்பட்டுவிட்டது. ஜவாஹரே ஒளித்துவைத்தவர் என்று தெரிந்துவிட் டது.

மோதிலால் கோபமடைந்தால் கேட்கவேண்டுமோ? அருமை மகன் என்றும் பார்க்கவில்லை. அடி அடி என்று அடித்து நொறுக்கிவிட்டார்.

ஜவாஹருக்கு, அடிபட்ட வேதனை ஒருபுறம்; குற்றம் வெளிப்பட்டதே என்ற அவமானம் மறுபுறம். தாய் சொரூபராணியிடம் ஓடினார்.

மகனிடம் சொரூபராணிக்கு மிக்க அன்பு. மகன் என்ன குற்றம் செய்தாலும் அவள் மன்னித்துவிடுவாள். அடிபட்ட மகனைக் கண்டு அவள் மனம் பதைத்தாள்.

வலி பொறுக்காமல் துடிக்கும் அந்தப் பாலகனின் உடம்பிலே, பல களிம்புகளையும் மருந்துகளையும் தடவினாள். பலநாள் வரையில், இவ்வாறு பணிவிடை செய்தாள். பிறகுதான் ஜவாஹரின் தேகம் குணமடைந்தது.

தந்தை இந்த மாதிரி தம்மை அடித்தாரே; இதனால் ஜவாஹருக்கு அவரிடம் வெறுப்பு வந்ததா? துளிக்கூட வரவில்லை. ஏன்? "நான் தப்புச் செய்தேன். தப்புச் செய்தால் தண்டனைதானே கிடைக்கும்? அது நியாயந்தானே? ஆனாலும், அப்பா இவ்வளவு மோசமாய் அடித்திருக்கக்கூடாது. என்னவோ கோபத்தில் அடித்துவிட்டார். என்ன செய்கிறது?" என்றுதான் அவருக்குத் தோன்றியது.

இந்தச் சம்பவத்தால் தந்தையிடம் ஜவாஹருக்குப் பயம் அதிகரித்தது. ஆனால், அவர்மீது இவருக்கிருந்த வியப்பும் அன்பும் துளிக்கூடக் குன்றவில்லை. அவை என்றும்போலவே நிரம்பியிருந்தன.

ஆனால், தாய் சொரூபராணியிடம் ஜவாஹரின் பாசம் இப்படிப்பட்டதல்ல. தாயிடம் அவருக்குத் துளியும் பயம் கிடையாது; பயப்படத் தேவையும் இல்லை. ஜவாஹர் என்ன குற்றம் செய்தாலும் தாய் மன்னித்துவிடுவாள். தாய் தம்மிடம் அளவுகடந்த வாஞ்சை காட்டியதால், அவள்மீது ஜவாஹர் கொஞ்சம் அதிகாரங்கூடச் செலுத்தலானார். ஆனால், தாயிடந்தான் தம்முடைய அந்தரங்கங்களையெல்லாம் அவர் சொல்லுவார். சொரூபராணி சிறிது குட்டையான சரீரம் உடையவள். ஜவாஹர் வெகு

சீக்கிரத்தில் சற்றேறக்குறையத் தாயின் உயரத்துக்கு வளர்ந்துவிட்டார். இந்தக் காரணத்தினாலும் அவளைத் தமக்குச் சம்தையான ஒரு பெண்மணியாகவே ஜவாஹர் மதித்தார். சொரூபராணி நல்ல வசீகரமான பெண்மணி. அவளுடைய கைகளும் பாதங்களும் மிக்க அழகானவை. அவளும் காஷ்மீர தேசத்தவள்தான்.

மோதிலாலிடம் முன்ஷி முபாரக் ஆலி என்ற பெயருடைய ஒரு முஸ்லீம் குமாஸ்தா இருந்தார். அவரிடம் ஜவாஹருக்கு மிகுந்த நேசம். ஜவாஹருக்கு ஏதாவது மனச்சோர்வோ துயரமோ நேர்ந்தால், உடனே அவர் முஸ்லிம் குமாஸ்தாவிடம் சென்றுவிடுவார். ஜவாஹருக்கு முபாரக்ஆலி அருமையான கதைகளையெல்லாம் சொல்லி உற்சாகப் படுத்துவார். அரபியன் நைட் கதைகள் தொடங்கி 1858-ஆம் வருஷத்திய சுதந்தரப் புரட்சிவரை பலவிதக் கதைகள் சொல்லுவார். ஜவாஹர் மிக்க ஆவலோடு அவைகளைக் கேட்பார். முபாரக் ஆலி பின்னால் காலமாகிவிட்டார். ஆனால், ஜவாஹர் இன்றும் அவரை நன்றி கனிய ஞாபகம் வைத்திருக்கிறார்.

சொரூபராணியும், அத்தையுங்கூட அவருக்குப் பல கதைகள் சொல்லுவார்கள். ராமாயணம், பாரதம் போன்ற பல இதிகாசக் கதைகளை அவர்கள் சொல்லுவார்கள்.

அந்தச் சிறுபிராயத்திலேயே மதத்தில் ஜவாஹருக்கு அவ்வளவாகப் பற்றுதல் கிடையாது. மதம் என்றால் அது ஏதோ பெண்களின் விஷயம் என்று அவருக்குத் தோன்றியது. தந்தை மோதிலாலும் சரி, ஜவாஹரின் ஒன்றுவிட்ட அண்ணனும் சரி, மதச் சடங்குகளைப்பற்றித் தமாஷ் செய்வார்கள். ஆனால், குடும்பத்திலுள்ள பெண்கள் மட்டிலும் பலவிதப் பூஜை விரதாதிகளையெல்லாம் மிக்க சிரத்தையாக நடத்துவார்கள். அந்தப் பூஜை முதலியவை நடக்கையில், ஜவாஹருக்குச் சந்தோஷமாய்த்தான்

இருக்கும். இருந்தும், வீட்டுப் புருஷர்களில் பெரியவர்களைப்போல் நடித்து, அவரும் கொஞ்சம் கொஞ்சம் இவைகளைக் கேலி செய்ய முயல்வார். என்ருலும், தாயோ அத்தையோ அவரைக் கங்கையில் ஸ்நானம் செய்ய அழைத்தால், அவர் அவர்களோடு ஓடிவிடுவார். காசி முதலிய க்ஷேத்திரங்களில் சுவாமி தரிசனம் செய்யவோ, யாராவது பிரசித்திபெற்ற சந்நியாசியைக் தரிசிக்கவோ அவரை அவர்கள் அழைத்துச் செல்லுவதும் உண்டு. இத்தனை நடந்தும், ஜவாஹருக்கு மதத்தில் ஆழ்ந்த பற்றுதல் மாத்திரம் விழவேயில்லை.

இந்த விரத உற்சவாதிகளையெல்லாம்விட அதிகமாய் ஜவாஹருக்கு உற்சாகம் தந்தது அவருடைய ஜன்மவிழாக் கொண்டாட்டந்தான். வீட்டிலே வருஷந்தோறும் ஜவாஹரின் ஜன்ம தினம் வரும்போது, பைபையாகக் கோதுமையையும் வேறு பொருள்களையும் ஏழை மக்களுக்குத் தானம் வழங்குவார்கள். ஜவாஹர் புதிய உடுப்புகள் அணிந்துகொண்டு மின்னுவார். அவருக்குப் பற்பல பரிசுகள் வந்து சேரும். மாலையில் ஒரு பெரிய விருந்தும் நடக்கும். "எனக்காகவே இந்த வைபவங்களெல்லாம் நடக்கின்றன. ஆகையால், நான் ஒரு பெரிய வீரன்" என்று எண்ணி, ஜவாஹர் மனம் பூரிப்பார். "இந்த ஜன்ம தினம் அபூர்வமாக வருஷத்துக்கு ஒரு தடவைதானே வருகிறது? அடிக்கடி வரப்படாதா! வந்தால் எவ்வளவு ஜோராய் இருக்கும்!" என்று ஜவாஹர் ஏங்குவதுமுண்டாம். ஒவ்வொரு ஜன்ம தினமும் 'தம்பீ, உன் ஆயுசிலே ஒரு வருஷம் கழிந்தது?' என்று ஞாபகமூட்டும் எச்சரிக்கை நாள் என்ற விஷயம் அப்போது அவருக்குப் புரியவில்லை!

ஜவாஹருக்கு ஏழு அல்லது எட்டுவயதிருக்கும்போது, ஒரு ரஸமான சம்பவம் நடந்தது. அந்த நாட்களில், ஒரு குதிரைப்படை அலகாபாத்தில் வைக்கப்பட்டிருந்தது.

அந்தக் குதிரைப் படையிலிருந்த ஒரு வீரன் தினந் தோறும் நேருவின் வீட்டுக்கு வந்து, ஜவாஹரைக் குதிரை மீது ஏற்றிச் சவாரி பண்ணச்செய்து, தானும் துணை போவான். அது நல்ல லட்சணமான அரபிக் குதிரை. ஒருநாள் சாயங்காலம் குதிரை திரும்பிவந்தது. வெறுங் குதிரை! அதன்மேல் இருந்தபையனைக் காணவில்லை. பையனைக் கீழே தள்ளிவிட்டு, குதிரை கவலையற்று வீடு வந்து சேர்ந்துவிட்டது. அந்தச் சமயத்தில் பண்டித மோதிலால் ஒரு டென்னிஸ் கோஷ்டிக்கு விருந்து நடத்திக் கொண்டிருந்தார். விருந்து குலைந்தது. கூட்டத்திலே இந்த விஷயம் பெரிய கலவரத்தை உண்டாக்கிவிட்டது. மோதிலால் முன் செல்ல, விருந்தாளிகள் அனைவரும் அவரைப் பின்தொடர்ந்து குழந்தை ஜவாஹரைத் தேடப் புறப்பட்டார்கள். பற்பல விதமான வண்டிகள் பெரிய ஊர்வலம்போல் பையனைக் கண்டுபிடிக்கக் கிளம்பிவிட்டன. நடுவழியிலே 'பையன்' சாவகாசமாய் நடைபோட்டுக்கொண்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான். பையனைக் கண்டதும், எல்லோரும் சந்தோஷமடைந்து, அவர் ஏதோ ஒரு பெரிய வீரச் செயல் புரிந்துவிட்டதுபோல் அவரைக் கொண்டாடிப் புகழத் தொடங்கினார்கள்.

ஜவாஹருக்குப் பத்து வயது ஆகும்போது, குடும்பம் மிகப் பெரிய புது வீடு ஒன்றுக்கு ஜாகை மாறியது. அதற்குத்தான் 'ஆனந்த பவனம்' என்று மோதிலால் பெயர் சூட்டினார். இந்த வீட்டைப் பின்னும் பின்னும் பெரிதாக வளைத்துக் கட்டி ஒரு பெரிய மாளிகையாகவும் அவர் மாற்றிவிட்டார். இந்த மாளிகையே இன்று தேசத்தின் பொதுச் சொத்தாக - அகில இந்தியக் காங்கிரஸின் தலைமைக் காரியாலயமாக - விளங்கும் 'சுயராஜ்ய பவனம்.' பிற்காலத்தில் தமக்கு வயது வந்தபோது, "தந்தையே, இந்த மாளிகை யாருக்காக? இது எனக்கு வேண்டாம்.

இதைத் தேசத்துக்குக் கொடுத்து விடுங்கள்" என்று ஜவாஹர் தம்முடைய தந்தைக்கு ஓர் உருக்கமான கடிதம் எழுதியதாக ஒரு கதை உண்டு. அது எப்படியானாலும் சரி; மோதிலால் இந்த அரண்மனை போன்ற மாளிகையைத் தேசத்துக்கு நன்கொடையாகக் கொடுத்த தியாகம் உலகப் பிரசித்தமாகும்.

'ஆனந்த பவனம்' ஒரு புண்ணிய ஸ்தலத்தில் அமைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஸ்ரீ ராமபிரான் பதினாலு வருஷ காலம் வனவாசம் செய்து திரும்பி வந்த போது, தம்பி பரதனை முதல் முதலாக இந்த இடத்திலே தான் சந்தித்தாராம். இதற்குப் பக்கத்திலே பரத்துவாஜர் ஆசிரமம் ஒன்று இன்னமும் இருக்கிறதாம். பூர்வகாலத்தில் இங்கே ஒரு சர்வ கலாசாலை இருந்ததாய்ச் சொல்கிறார்கள்.

'ஆனந்த பவனம்' விசாலமான பெரிய மாளிகை. சுற்றிலும் அகன்ற தாழ்வாரங்கள். மாளிகையைச் சுற்றிப் பிரம்மாண்டமான தோட்டம். ஒருபுறம் கண்குளிரும் பசும் புல் தரை. பின்பக்கத்திலே பழமரச் சோலை. முன்பக்கத்தில் வசந்தமண்டபம். டென்னிஸ் பந்தாடும் விளையாட்டு மைதானம். வசந்தமண்டபத்திலே பெரிய கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிச் செய்த ஒரு செயற்கைக் குன்றின் உச்சியில் சிவபெருமானின் சிலை ஒன்று அமைத்திருந்தார்கள். சிலையின் தலையிலிருந்து ஒரு சிறிய நீரருவி புறப்பட்டு, அதன் அடியிலுள்ள ஒரு குட்டையில் விழுந்து கொண்டிருந்தது. சுற்றிலுமுள்ள செடிகளில் புஷ்பங்கள் பூத்துக் குலுங்கின. ஆனால், பிற்காலத்தில் புது வீடு கட்டத் தொடங்கியபோது, இந்த வசந்தமண்டபம் அதற்கு இடையூறாக இருந்ததாம். ஆதலால், இதை அழித்துவிட்டார்கள். ஆனால், நவநாகரிகமான சில புதிய வசதிகள் 'ஆனந்த பவன்' காம்பவுண்டுக்குள் நிர்மாணமாயின.

வெள்ளைக்கார தோரணையில் நீந்தக் கற்பதற்காகப் படித்துறையுள்ள ஒரு சிறிய குளம் வெட்டினார்கள். பத்து வயதுப் பாலகனான ஜவாஹர் இந்த 'நீச்சுக் குட்டை'யில் வெகு சீக்கிரம் மிக நன்றாய் நீந்தக் கற்றுக்கொண்டார். நீந்துவதிலும் சரி, முக்குளித்துப் பாய்வதிலும் சரி, அவர் பெரிதும் தேர்ச்சியடைந்துவிட்டார்.

குளத்தில் இறங்கினால் அதை இரண்டடித்துவிட்டுத் தான் ஜவாஹர் கரையேறுவார். மோதிலால் இந்த நீந்தல் குளத்திலும், 'ஆனந்த பவ'னிலும் மின்சார விளக்குகள் போட்டிருந்தார். இந்த மின்சார விளக்குகளும் நீந்தல் குளமும் அந்தக் காலத்தில் அலகபாத் நகருக்கே புதுமை யாகும். மோதிலாலின் பல நண்பர்கள் மாலை நேரத்தில் இந்த நீந்தல் குளத்துக்கு வருவார்கள். அவர்களைக் கண் டால், ஜவாஹர் குதூகலம் அடைவார். அதிலும் அவர் களில் நீந்தத் தெரியாதவர்களைக் கண்டால் அவருக்கு வெகு கொண்டாட்டம். நீந்தத் தெரியாதவர்களைக் குளத் திலே பிடித்துத் தள்ளுவதிலும் குளத்திலிருந்து வெளியே இழுத்துப்போடுவதிலும் அவர் பரமானந்தம் கொள்ளு வார்.

டாக்டர் தெஜ்பகதூர் சாப்ரூ இருக்கிறாரே, இவர் அந்தக் காலத்தில் அலகாபாதில் ஒரு ஜூனியர் வக்கீலா யிருந்தார். இவரும் இந்த நீந்தல் குளத்துக்கு வருவாராம். ஆனால், குளத்தின் முதல் படியிலேயே உட்கார்ந்துவிடு வாராம். அதாவது பதினைந்து அங்குல ஆழம் ஜலத்துக்கு அப்பால் போகக் கண்டிப்பாய் மறுத்துவிடுவார்! யாரா வது அவரை உள்ளே தள்ள முயன்றால் கூ கூ என்று கூச்சல் போடுவாராம். அவருக்கு நீந்தத் தெரியாது; அதைக் கற்றுக்கொள்ள இஷ்டமும் கிடையாது.

பண்டித மோதிலாலுக்கும் நீந்தத் தெரியாது. ஆனாலும், அவர் எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு, பகீரதப் பிரயத்தனம் செய்து, குளத்தின் அக்கரைக்குப்

போய்விடுவார். இந்தச் சம்பவங்களையெல்லாம் பண்டித ஜவாஹர் இன்னும் நன்ருய் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிருர்.

ஜவாஹரின் சிறு பிராயத்திலேதான், போயர் யுத்தம் நடைபெற்றது. அந்த யுத்தச் செய்திகளையெல்லாம் அவர் ஆவலாய்ப் படிக்கத் தொடங்கினுர். போயர்களிடமே அவருக்கு அனுதாபம் உண்டாயிற்று. உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களிடம் ஜவாஹருக்கு உள்ள தீவிர அனுதாபம் இன்று உலகப் பிரசித்தமாகும். இந்த அனுதாபத்தின் விதை போயர் யுத்தத்தின் போதே அவர் மனத்தில் முளைவிடத் தொடங்கிவிட்டது.

பத்து வயது வரையில் குடும்பத்தின் ஒரே குழந்தையாகவும் செல்வமாயும் வளர்ந்த ஜவாஹருக்கு, இந்த நாட்களில் ஒரு சகோதரி பிறந்தாள். இவள்தான் பண்டித விஜயலட்சுமி. இந்தச் சமயத்தில் தந்தை மோதிலால் ஐரோப்பாவில் இருந்தார். குழந்தை பிறக்கும்போது மிக்க ஆவலோடு வீட்டுத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து காத்துக்கொண்டிருந்தார் ஜவாஹர். டாக்டர்கள் உள்ளேயிருந்து வந்து, தங்கை பிறந்த சேதியை அவருக்குச் சொன்ஞர்கள். இதோடு நிற்காமல், ஒரு டாக்டர் வேடிக்கையாக, "உன் பாடு அதிருஷ்டந்தான், அப்பா. இது தம்பியாயிருந்தால், உன் சொத்தில் அல்லாவா பங்கு கேட்கும்?" என்று சொன்ஞர். இதை ஜவாஹரால் பொறுக்கமுடியவில்லை. "இந்த மாதிரி கெட்ட எண்ணம் எனக்கு உண்டாகுமா? இப்படியும் ஒருவர் நினைக்கிருரே!" என்று அவர் மனம் வெதும்பிவிட்டார்.

சீமைக்குப் போன மோதிலால் திரும்பி வந்து சேர்ந்தார். காஷ்மீரப் பிராம்மண சமூகத்துக்குள்ளே ஒரு புயல் அடிக்கத் தொடங்கி விட்டது. கப்பல் பிரயாணம் செய்ததற்காக எவ்விதப் பிராயச்சித்தச் சடங்கும் செய்துகொள்ள மோதிலால் மறுத்துவிட்டார். இதற்கு முன்பே

வேறு இரண்டொருவர் இம்மாதிரி சீமைக்குப் போய் வந்தபோதும் இந்த விவகாரம் கிளம்பியது. அதனால், காஷ்மீரப் பிராம்மண சமூகம் ஏற்கனவே இருகட்சி யாய்ப் பிரிந்துகிடந்தது. மோதிலால் விவகாரத்தினால் மூன்றாவதொரு கட்சியும் முளைத்தது. மோதிலாலுக்கு எதிர்ப்பாயிருந்தவர்கள் பிரமாத ஆத்திரத்துடன் கூச்ச லிட்டார்கள். ஆனால், மோதிலால் துளிக்கூட அவர்களைச் சட்டை செய்யவில்லை. அவருக்கு ஆதரவான கோஷ்டி மிகப் பெரியதாய் வலுத்தும் போய்விட்டது. ஆனால், இந்தப் பிளவெல்லாம் சில வருஷ காலத்தில் தீர்ந்துபோய்க் கோஷ்டிகள் மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்து போயின. மேலும் மேலும் பல காஷ்மீர வாலிபர்களும் பெண்களும் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் படிக் கப் போய்வந்தார்கள். பிராயச்சித்தச் சடங்கு என்பது அடியோடு ஒழிந்துபோயிற்று. காஷ்மீரி அல்லாதவர்கள், முஸ்லீம்கள், இந்தியரல்லாத அன்னியர்கள் இவர்களுட னெல்லாம் சமபந்தி போஜனம் செய்வதும் காஷ்மீரிப் பிராமணர்களிடையிலே சர்வசகஜம் ஆகிவிட்டது. ஏதோ சில வைதிகக்கிழங்கள் மாத்திரந்தான் அப்படிச் செய்யா மல் முக்கி முனகிக் கொண்டிருந்தன. முகமூடி அணியும் வழக்கத்தையும் காஷ்மீரிப் பெண்கள் கைவிட்டுவிட்டார் கள். கொஞ்சநஞ்சம் மிஞ்சியிருந்த முகமூடியும், 1930-ஆம் ஆு சத்தியாக்கிரகக் கொந்தளிப்பின்போது அடியோடு ஒழிந்தது. ஆனால், கலப்பு மணம் மாத்திரம் அவ்வளவு சகஜமாக நடைபெறவில்லை. என்றாலும், வரவர அதிக மான காஷ்மீரிகள் அதுவும் செய்துவருகிறார்கள்.

3. வீட்டிலே வாத்தியார்

ஜவாஹருக்குப் பதினெரு வயசா யிருக்கையில் பெர்டிஞண்ட் டி. புரூக்ஸ் என்ற ஐரோப்பியரை அவருக்கு உபாத்தியாயராக மோதிலால் நியமித்தார். அவர் மோதிலாலின் வீட்டிலேயே வசித்துக்கொண்டு, ஜவாஹருக்குக் கல்வி கற்பித்தார். ஐரிஷ் தகப்பனுக்கும் பெல்ஜியத் தாய்க்கும் பிறந்தவர் புரூக்ஸ். சுமார் மூன்று வருஷகாலம் அவர் ஜவாஹரோடு இருந்தார். இந்தக் காலத்தில் ஜவாஹருக்குச் சம்ஸ்கிருதமும் ஹிந்தியும் போதிக்க ஒரு பண்டிதரும் நியமிக்கப்பட்டிருந்தார். அந்தப் பண்டிதர் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் போதித்தும், பையனுக்குச் சம்ஸ்கிருதம் அவ்வளவாய் ஏறவில்லை. இலக்கணம் என்றாலே ஜவாஹருக்கு வெறுப்பு. சம்ஸ்கிருத பண்டிதர்களோ ஒரே இலக்கணமாய்த்தானே மாணுக்கரின் தலையில் கட்டியடிப்பார்கள்? ஜவாஹருக்குச் சம்ஸ்கிருதம் பிடிபடாததற்கு இதுதான் காரணம்.

ஆனால், ஆங்கிலம் போதித்த புரூக்ஸ் என்ன செய்தார்? புத்தகங்களைப் படிக்கும் ஆசையைச் சிறுவனிடம் பிரமாதமாய் வளர்த்துவிட்டார். ஜவாஹர் ஏராளமான ஆங்கிலப் புத்தகங்களைப் படித்தார். இன்னதுதான் படிப்பதென்றில்லை; அகப்பட்டதையெல்லாம் படித்தார். லூயி காரல் எழுதிய 'அற்புத உலகத்தில் ஆலிஸ்' போன்ற புத்தகங்களில்தான் அவருக்கு அதிக மோகம். கிம், டான் கிஷோட்டே ஆகியவைகளையும் அவர் படித்தார். ஸ்காட், டிக்கன்ஸ், தாக்கரே, வெல்ஸ், மார்க் ட்வெயின், ஷெர்லாக் ஹோம்ஸ், ஜெரோம் கே. ஜெரோம், மோலியர் ஆகியவர்களுடைய நாவல்களையும் கதைகளையும்

அவர் வாசித்தார். கவிதையிலும் அவருக்கு விசேஷமான பிரியம் உண்டாயிற்று.

ஜவாஹருக்குப் புரூக்ஸ் இவ்வாறு ஆங்கில இலக்கியத்தில் பற்றுதல் உண்டாக்கியது மாத்திரமல்ல; ஸயன்ஸ் ரகசியங்களிலும் பரிசயம் செய்துவைத்தார். வீட்டிலேயே ஒரு சின்ன 'லாபொரட்டரி' சிருஷ்டியாயிற்று. அதில் ஜவாஹர் நுழைந்து, பௌதிகம், ரசாயனம் சம்பந்தமான சோதனைகளைச் செய்துகொண்டு பல மணி நேரம் கழித்துவிடுவார்.

படிப்பைத் தவிர மற்றொரு விஷயத்திலும் ஜவாஹருக்குப் பலத்த மோகம்விழும்படி செய்துவிட்டார் புரூக்ஸ். அதுதான் சென்னை அடையாற்றிலுள்ள பெஸண்ட் அம்மையாரின் தியாஸபி. தாம் வசித்த அறையில் வாரந்தோறும் புரூக்ஸ் தியாஸபிக் கூட்டங்கள் நடத்துவார். அந்தக் கூட்டங்களுக்கு ஜவாஹர் செல்லுவார். இதனால், தியாஸபி சம்பந்தமான கருத்துக்கள் அவர் மனத்தைப் பற்றிக்கொண்டன. புனர்ஜன்மம், சூட்சும தேகம், கர்மம் இவைகளைப்பற்றி யெல்லாம் இந்தக் கூட்டங்களிலே பிரம்மஞான சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் பிரமாதமாய்ச் சர்ச்சை செய்வார்கள். பிளாவட்ஸ்கியும் பிற தியாஸபிஸ்டுகளும் எழுதிய நூல்களையும், ஹிந்து சாஸ்திரங்களையும், பௌத்தர்களின் தம்மபதத்தையும், பித்தாகரஸ், அப்பொலோனியஸ், ட்யானு முதலிய அநேக வேதாந்திகள் எழுதிய நூல்களையும் சரமாரியாய் அவர்கள் மேற்கோள் காட்டுவார்கள். அவர்கள் பேசியதிலெல்லாம் ஜவாஹருக்கு ஒன்றும் விஷயம் புரியவில்லை. என்றாலும், இந்தப் பிரபஞ்ச ரகசியங்களின் திறவுகோல் இங்கேதான் இருக்கிறது என்ற ஓர் உணர்ச்சி மாத்திரம் அவருக்கு எப்படியோ உண்டாகி விட்டது. இதிலிருந்து முதல் முதலாக ஹிந்து மதத்தில் ஜவாஹருக்கு உயர்ந்த மதிப்பு ஏற்படத் தொடங்கியது.

ஹிந்து சடங்குகளில் அல்ல ; உபநிஷத்துகள், கீதை இவைகளிலே மதிப்பு. இந்த உன்னதமான நூல்கள் அவருக்கு நன்ருய் விளங்கவில்லை. ஆனுலும், இவை அற்புதமான நூல்கள் என்ற அபிப்பிராயம் மட்டிலும் என்னவோ அவர் மனத்தில் பலமாய் விழுந்தது.

இந்த நாட்களில் அன்னிபெஸண்ட் அம்மையார் அலகாபாத்துக்கு விஜயம்செய்து, தியாஸபி சம்பந்தமாகப் பற்பல பிரசங்கங்கள் புரிந்தார். அவருடைய பிரசங்க சாதுர்யம் ஜவாஹரின் மனத்தைக் கவர்ந்தது. பெஸண்டின் பிரசங்கத்தைக் கேட்டு ஜவாஹர் பரவசம் அடைந்துபோவார். பிரசங்கம் முடிந்து திரும்புகையில் தாம் ஏதோ ஒரு கனவுலகத்தை விட்டு இறங்கியதுபோல் அவருக்குத் தோன்றும். அப்போது அவருக்கு வயது பதின்மூன்று தான். இப்படியிருந்தும், தியஸாபிகல் ஸொஸைட்டியில் அங்கத்தினராய்ச் சேர இவர் முடிவு செய்துவிட்டார். தந்தையிடம் சென்று, இதற்கு அனுமதி கேட்டார். அவர் சிரித்துக்கொண்டே அனுமதி கொடுத்தார். அவருக்கு இதில் விருப்பமும் இல்லை ; வெறுப்பும் இல்லை. அவர் இதை ஒரு பெரிய விஷயமாகவே நினைக்கவில்லை. தந்தையின் இந்த அலட்சிய மனோபாவத்தைக் கண்டு, ஜவாஹருக்குக் கொஞ்சம் வருத்தந்தான். “அப்பா பலவிதங்களில் பெரியவர்தாம். ஆனல், ஆத்மிக வளர்ச்சி மாத்திரம் அவரிடம் இல்லை” என்று ஜவாஹர் எண்ணினுர். உண்மையைச் சொன்னுல், மோதிலாலே ஒரு பழைய தியாஸபிஸ்டுதான். பிளாவட்ஸ்கீ காலத்தில் அந்த ஸமாஜத்தில் சேர்ந்தார் ; ஆனுல், பின்னுல் விட்டுவிட்டார்.

ஜவாஹர் தமது பதின்மூன்ருவது வயதிலே தியாஸபிகல் ஸொஸைட்டியிலே சேர்ந்தார். பெஸண்ட் அம்மையாரே தீட்சை செய்வித்தார். தீட்சை என்ருல் என்ன ? சில சன்மார்க்க உபதேசங்கள் செய்து,

சில தாந்திரிக சங்கேதங்களைச் சொல்லிக் கொடுத்தார். ஜவாஹர் பரவசமானார். காசியில் நடந்த தியஸாபிகல் கன்வென்ஷனுக்குச் சென்றார். அருமையான தாடி படைத்த கர்னல் ஆல்காட்டை அங்கே கண்டார்.

இதற்குப்பின் கொஞ்சகாலத்துக்கெல்லாம் ஆங்கில உபாத்தியாயர் புரூக்ஸ், ஜவாஹரை விட்டுச் சென்றுவிட்டார். ஜவாஹரின் தியாஸபிப் பற்றும் விடைபெற்றுக்கொண்டுவிட்டது. தியஸாபிக்கல் ஸொஸைட்டியில் சேர்ந்தவர்களெல்லாம் ஏதோ தெய்விகம் வாய்ந்தவர்கள் என்ற எண்ணமும் ஜவாஹரை விட்டு அகன்றது. அவர்களும் பிறரைப்போல் சாமான்ய மனிதர்களே என்று உணர்ந்துகொண்டார். ஆனால், புரூக்ஸிடம் தாம் கற்ற கல்வி விஷயத்தில் ஜவாஹர் இன்றும் நன்றி யுடையவராகவே இருக்கிறார். பெஸண்ட் அம்மையாரிடமும் அவருக்கு அன்பும் மரியாதையும் குன்றவேயில்லை.

இந்தக் காலத்தில் ருஷ்ய ஜப்பானிய யுத்தம் ஒன்று நடந்துகொண்டிருந்தது. ஜப்பானின் வெற்றிகள் அவருக்கு உற்சாகமூட்டின. தினந்தோறும் புதிய செய்திகளைப் படிப்பதற்காக, ஆவலோடு பத்திரிகைக்குக் காத்திருப்பார். ஜப்பானைப்பற்றிய ஏராளமான புத்தகங்களை வாங்கினார். அவைகளில் சிலவற்றைப் படிக்கவும் படித்தார். ஜப்பானிய சரித்திரம், வீரமான கற்பனைக் கதைகள் முதலியவைகளை வாசித்தார். தேசீய உணர்ச்சிகள் அவரது உள்ளத்தில் நிறைந்தன. ஐரோப்பாவின் தளையிலிருந்து இந்தியாவும் ஆசியாவும் சுதந்தரம் அடைய வேண்டுமென்று ஆசை கொண்டார். "கையிலே வாள் தாங்கிப் போராடி, வீரச் செயல்களெல்லாம் புரிந்து, இந்திய விடுதலைக்கு நான் உதவப் போகிறேன்" என்று என்ன என்னவோ மனக்கோட்டைகள் கட்டினார்.

4. சீமைப் படிப்பு

1905-ஆம் ஆண்டு ஜவாஹருக்கு வயசு பதினைந்து ஆயிற்று. தம் மனைவி சொரூப ராணியையும் ஜவாஹரையும் பெண் குழந்தையையும் அழைத்துக்கொண்டு மோதிலால் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார்.

கப்பலில் டோவர் துறைமுகம் போய்ச் சேர்ந்து, அங்கிருந்து ரெயிலில் லண்டனுக்குப் பிரயாணம் செய்தார்கள். ஜப்பானுக்கு அப்போது சூஷிமா என்னும் இடத்தில் பிரமாதமான கப்பற்படை வெற்றி ஒன்று கிடைத்திருந்தது. இந்த வெற்றிச் செய்தியை ரெயிலில் படித்துக்கொண்டே இவர்கள் லண்டனை எட்டினார்கள். இந்த வெற்றியால், ஜவாஹர் மனம் பூரித்துப் போயிருந்தார். லண்டனை அடைந்த சிறிது காலத்துக்குள்ளே, ஜவாஹர் முதல் முதலாக, பிற்கால ராஷ்டிரபதிகளில் ஒருவரான டாக்டர் எம். எ. அன்ஸாரியைச் சந்தித்தார். அன்ஸாரி அப்போது நல்ல வாலிபர். காலேஜ் படிப்பிலே முதல் தரமாய்த் தேறியிருந்தவர். அவருடைய புத்திக் கூர்மையும் சாமர்த்தியமும் ஜவாஹரின் மனத்தைக் கவர்ந்தன. அன்ஸாரி அச்சமயம் லண்டன் ஆஸ்பத்திரி ஒன்றில் வீட்டு ஸர்ஜனாக உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதிருஷ்டவசமாக, ஹாரோ கலாசாலையில் இடம் காலியிருந்தது. ஜவாஹர் அதில் சேர்ந்து கொண்டார். மகனைக் கலாசாலையில் சேர்த்துவிட்டு, மோதிலால் தமது குடும்பத்தோடு ஐரோப்பாவுக்கு விஜயம் செய்து, அங்கிருந்து இந்தியாவுக்குத் திரும்பிவிட்டார்.

ஜவாஹர் முதல் முதலாக, உற்றார் உறவினரையெல்லாம் விட்டு, கண்காணாத அந்நிய நாட்டில் தன்னந்

தனியரானூர். இது கொஞ்ச நாள் வரையில் அவருக்குக் கஷ்டமாகவே இருந்தது. ஆயினும், பள்ளிப் படிப்பில் கவனம் செலுத்துவதன் மூலமும், விளையாட்டுக்களில் கலந்து கொள்வதன் மூலமும் இந்தத் தனிமையின் சிரமத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் மறக்கடித்து வந்தார்.

ஜவாஹருக்கு லட்டீன் பாஷையில் போதிய ஞானம் இல்லை. இதனால் அவரைக் கீழ்வகுப்பிலே போட்டு விட்டார்கள். என்றாலும், வெகு சீக்கிரத்திலேயே அவரை மேல் வகுப்புக்கு ஏற்றிவிட்டார்கள். ஏனென்றால், பொது விஷயங்களிலும், அநேகம் பாடங்களிலும், தம் வயசுள்ள அனைவரையும்விட, ஜவாஹர் அதிக ஞானம் உடையவராயிருந்ததைக் காலேஜ் போதகர்கள் கண்டார்கள். சகோதர மாணவர்களை யெல்லாம்விட அதிகமாகப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் ஜவாஹர் படித்தார். "ஐயே! இந்த ஆங்கிலப் பையன்கள் எவ்வளவு மட்டிகளாயிருக்கிறார்கள்! தங்கள் விளையாட்டுகளைப் பற்றியே அவர்கள் எப்போதும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை விட்டால் அவர்களுக்கு வேறு எதைப்பற்றியுமே பேசத் தெரியவில்லை" என்று தகப்பனருக்கு ஜவாஹர் கடிதங்கள்கூட எழுதியதுண்டாம்.

அப்போது பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு ஒரு பொதுத் தேர்தல் நடைபெற்றது, லிபரல் கட்சியார் பெரிய வெற்றியடைந்தார்கள். வகுப்பு உபாத்தியாயர், "புதிய மந்திரி சபையை யார் அமைத்திருக்கிறார்கள்?" என்று மாணாக்கர்களை ஒரு கேள்வி கேட்டார். ஜவாஹரைத் தவிர, வேறு ஒரு பையனுக்கும் சரியான பதில் சொல்லத் தெரியவில்லை. ஜவாஹர் ஒருவரே சொன்னார். காம்பெல் பானர்மான் மந்திரிசபையை அமைத்திருக்கிறார் என்றும், யார் யார் அதில் அங்கம் வகிக்கிறார்கள் என்றும், ஜவாஹர் விரிவான ஜாபிதாக் கொடுத்துவிட்டார்.

அரசியலைத் தவிர, ஆகாய விமான வளர்ச்சியிலும் அவருக்கு இந்த நாட்களில் மிகுந்த சிரத்தை உண்டா யிற்று. நவீன விமானத்தை முதல் முதல் செய்தவர் களான வ்ரைட் சகோதரர்களின் சோதனைகள் அப்போது மும்முரமாய் நடந்து கொண்டிருந்தன. ஜவாஹருக்கு இந்த விஷயத்தில் ஏற்பட்ட பேருற்சாகத்தில், "அப்பா! இன்னும் கொஞ்ச காலத்தில் நான் தங்களை வாரம் ஒரு முறை விமானத்தில் வந்து பார்த்துவிட்டுத் திரும்புவேன்" என்று மோதிலாலுக்கு எழுதினாராம்.

ஜவாஹர் படித்த காலத்தில் ஹாரோ கலாசாலையில் மேலும் நாலைந்து இந்திய மாணவர்கள் படித்துக் கொண் டிருந்தார்கள். பரோடா சமஸ்தான மன்னரான கெயிக்வா ரின் குமாரர் ஒருவரும் அவர்களில் இருந்தார். இவர் அபூர்வ மாய்க் கிரிக்கட் ஆடுவாராம். அதனால், பையன்களிடம் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தார். கபூர்தாலா மகாராஜாவின் மூத்த குமாரரான பரம்ஜித் சிங் மற்றொருவர். இவர்தாம் இப்போது திக்கா சாகிப் ஆக இருப்பவர். இவருக்கும் மற்றப் பையன்களுடன் சரளமாய்ப் பழகத் தெரியாதாம். இவரை எல்லோரும் அடிக்கடி கேலி செய்வார்கள். இவருக்கு மகா கோபம் வந்துவிடும். "இருங்கள், இருங் கள். நீங்கள் மாத்திரம் எங்கள் கபூர்தாலாவுக்கு வாருங் கள்; உங்களை என்ன பாடு படுத்துகிறேன்" என்று இவர் உறுமுவாராம். ஆனால், தாங்கள் கபூர்தாலாவுக்குப் போகிறபோது இவர் படுத்தப் போகிற பாட்டைப்பற்றி எந்தப் பையனுமே கவலைப்படவில்லை. அவர்கள் பழைய படியே கேலி செய்துகொண்டுதான் இருந்தார்கள். பரம் ஜித் சிங் ஏற்கனவே பிரான்ஸில் கொஞ்ச காலம் பழகி, தட்டுத்தடவலின்றி நன்றாய்ப் பிரஞ்சு பாஷை பேசக் கற் றிருந்தார். ஆனால், இங்கிலாந்துப் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொடுத்த பிரஞ்சுப் பாடங்கள் அவருக்குப் புரியவேயில்லை. பி. ஏ. யில் முதல்தரமாய்த் தேறிய ஓர்

இந்தியன் ஆங்கிலேயருடன் இங்கிலீஷ் பேசத் தவிப்பதை நாம் எத்தனையோ தடவை கண்டிருக்கிறோமே! இதே மாதிரிதான் பரம்ஜித் சிங்கின் பிரஞ்சுப் பாட கதியும். பள்ளியில் படிக்கும் பாஷைக்கும் ஊரார் பேசும் பாஷைக்கும் சம்பந்தம் இருக்கக்கூடா தென்பது யார் இட்ட சாபமோ தெரியவில்லை!

ஜவாஹருக்கு ஹாரோ கலாசாலை வாழ்க்கை நன்கு கப் பழகிவிட்டது; அதில் பிரியமும் உண்டாயிற்று. என்றாலும், இரண்டொரு வருஷத்துக்குள்ளேயே, அந்த இடத்துப் படிப்புத் தமக்குப் போதாதென்று அவருக்குத் தோன்றியது. ஏதாவது சர்வ கலாசாலையில் பழக வேண்டு மென்று ஆசை கொண்டார். இதே சமயத்தில், அதாவது 1906, 1907-ஆம் வருஷங்களில், இந்தியாவிலிருந்துவந்த அரசியல் அடக்குமுறைச் செய்திகள் அவர் மனத்தைக் கிளறி விட்டன. சீமைப் பத்திரிகைகளில் மிகவும் சொற்பமாகவே இந்தியச் செய்திகள் பிரசுரமாகி யிருக்கின்றன என்றும், இந்தியாவில் மகத்தான சம்பவங்கள் நடக்கின்றன என்றும், அந்தச் சொற்பச் செய்திகளிலிருந்தே தெரிந்து விட்டது. லாலா லஜபதிராயும் அஜித் சிங்கும் நாடு கடத்தப் பட்டார்கள். வங்காளம் ஒரேயடியாய்க் கொந்தளித்தது. திலகரின் பெயர் பூனாவிலிருந்து அடிக்கடி தந்தியில் பறந்தது. சுதேசி இயக்கமும் அந்நிய பகிஷ்காரமும் மும்முரமாயின. இந்தச் செய்திக ளெல்லாம் ஜவாஹரின் உள்ளத்திலே புயலை எழுப்பின. ஆனால், ஹாரோவில் யாரிடம் தம்முடைய உணர்ச்சிகளைத் தெரிவிப்பது? அனுதாபம் காட்டக்கூடிய ஆப்தமான ஒரே ஓர் ஆத்மாகூட அங்கே கிடைக்காமல் ஜவாஹர் தவித்தார். விடுமுறை நாட்களில் தம்முடைய தாயாதிகளில் சிலரையும் வேறு சில இந்தியரையும் சந்தித்ததால், அவர்களுடன் பேசித் தம்முடைய மனத்தின் பாரத்தை ஓரளவு இறக்கிக்கொண்டார்.

கலாசாலையில் ஜவாஹருக்குப் பரிசு கிடைத்த புத்தகங்களில் இத்தாலிய தேசாபிமானியான கரிபால்டியின் சரித்திரத்தில் ஒரு பாகமும் இருந்தது. இது ஜவாஹரின் மனத்தை வசியம் செய்தது. உடனே ஜவாஹர் அந்தப் புத்தகத்தின் மற்றும் இருபாகங்களையும் விலைக்கு வாங்கி, வெகு கவனமாய்ப் படித்தார். இந்திய சுதந்தரத்துக்காகவும் இதே மாதிரியே வீரச் செயல்களெல்லாம் புரிந்து போராட வேண்டுமென்று அவர் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கனவுகள் கண்டார். இந்தியா வேறே, இதாலி வேறே என்ற எண்ணங்கூட மறந்து, இரண்டும் ஒன்றேபோல் அவர் மனத்தில் இரண்டறக்கலந்துவிட்டன. இம்மாதிரியான சிந்தனைகளைச் சிந்திக்க, ஹாரோ கலாசாலை அற்பமானதென்று அவருக்குத் தோன்றியது. கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த டிரினிட்டி காலேஜுக்குப்போக விரும்பி, தந்தையை அனுமதி கேட்டார். அவரும் அனுமதி அளித்தார். 1907-ஆம் ௵ அக்டோபர்மீ ஜவாஹர் டிரினிட்டி காலேஜில் போய்ச் சேர்ந்தார்.

கேம்பிரிட்ஜில் அதிக சுதந்தரம் கிடைத்தது. ஜவாஹருக்கு அதிலே மிகுந்த சந்தோஷம். பெரிய மாளிகைகள், குறுகிய தெருக்கள் எங்கும் தம் இஷ்டப்படி அவர் சுற்றுவார். அவருக்குப் பல நண்பர்கள் கிடைத்தார்கள். கொஞ்சம் வேலை, கொஞ்சம் விளையாட்டு, இவைகளோடு படிப்படியாய் அறிவு விசாலம் - இவை கேம்பிரிட்ஜ் வாழ்வு. ரசாயனம், பூமி இயற்கைச் சாஸ்திரம், தாவர சாஸ்திரம் இவைகளை அவர் பாடங்களாய் எடுத்துக்கொண்டார். ஆனால், கேம்பிரிட்ஜிலும் சரி, ரஜா நாட்களில் லண்டனுக்குப் போனால் அங்கேயும் சரி, யாரைச் சந்தித்தாலும், இலக்கியம், சரித்திரம், அரசியல், பொருளாதாரம் இவைகளைப்பற்றியும், சமீபத்தில் வெளிவந்த புத்தகங்களைப்பற்றியும் புலமையோடு அவர்கள் சம்பாஷிப்பதை ஜவாஹர் கண்டார். தாம்மட்டில் ஒன்றும்

தெரியாதவரா யிருக்கலாமா? அவரும் இவைகளையெல்லாம் வெகு சீக்கிரத்திலே படித்துக்கொண்டு, இந்தப் புலமையான சம்பாஷணைகளில் வல்லவரானார்.

1907-ஆம் வருஷத்திலிருந்து இந்தியா ஒரே கொந்தளிப்பா யிருந்தது. திலகர், அரவிந்தர் ஆகிய இரு தலைவர்களின் செயல்களும் அவரை உள்ளம் பரவசமடையச் செய்துவிட்டன. இந்தியாவில் தோன்றிய அமிதவாதத் திலகர் கட்சியிலே, இங்கிலாந்தில் இருந்த இந்திய மாணவர்களில் ஒருவர் தவறாமல் எல்லாருமே பற்றுதல் கொண்டுவிட்டார்கள். ஜவாஹரைப்பற்றிக் கேட்க வேண்டுமா?

கேம்பிரிட்ஜில் இருந்த இந்திய மாணவர்கள் 'மஜ்லிஸ்' என்று ஒரு சங்கம் அமைத்துக்கொண்டிருந்தார்கள். அதில் அடிக்கடி அரசியல் பிரச்னைகளைப்பற்றிய விவாதங்கள் நடைபெறும். அந்தச் சங்கத்துக்கு ஜவாஹரும் அடிக்கடி செல்லுவார். ஆயினும், அந்த மூன்று வருஷகாலத்திலும் அவர் பேசியதுமட்டும் கிடையாது. இதில் மாத்திரமென்ன? 'மாக்பை அண்ட் ஸ்டம்ப்' என்ற பெயருடன் காலேஜ் விவாதச் சங்கம் ஒன்று இருந்தது. அதிலும் ஜவாஹர் பேசியதே இல்லை. ஒரு பருவம் பூராவும் அதில் பேசாத அங்கத்தினர் அபராதம் செலுத்தவேண்டும் என்று அந்தச் சங்கத்திலே ஒரு விதி இருந்தது. ஜவாஹர் பலமுறை இந்த அபராதத்தைச் செலுத்தியிருக்கிறார்!

மஜ்லிஸில் பேசும் இந்திய மாணவர்கள், இந்திய அரசியலைப்பற்றி மகா உக்கிரமாய்த்தான் பேசுவார்களாம். 'குத்து, வெட்டு, கொல்லு' என்றெல்லாம் வீராவேச கர்ஜனையும் புரிவார்களாம். ஆனால் இப்படிப் பேசிய ஆசாமிகளே பின்னால் இந்திய ஸிவில் ஸெர்விஸின் ஆபரணங்களாகவும் ஹைகோர்ட் ஜட்ஜிகளாகவும் பரம சாந்தமான வக்கீல்களாகவும் ஆகிவிட்டார்கள் என்று ஜவாஹர் சொல்லுகிறார். அந்த ஆசாமிகளில்

எவரும் பிந்தி நடந்த இந்திய அரசியல் இயக்கங்களில் சாதாரணமாய்க்கூடப் பங்கெடுத்துக்கொள்ள வில்லையாம்! ஆனால், ஜே. எம். ஸேன் குப்தா, ஸைபுத்தீன் கிச்லூ, ஸையத் முகம்மது, தஸாதுக் அஹம்மதுஷெர்வானி ஆகியவர்களும் சற்றேறக்குறைய கேம்பிரிட்ஜில் ஜவாஹர் காலத்தில் படித்தவர்களே. இவர்கள் பின்னால் இந்திய தேசீயக் காங்கிரஸில் சிறந்த பங்கெடுத்துக் கொண்டார்கள். சமீபகாலம்வரை அலகாபாத் ஹைக்கோர்ட் பிரதம ஜட்ஜியாயிருந்து காலஞ்சென்ற ஸர் எஸ். எம். சுலைமானும் கேம்பிரிட்ஜில் ஜவாஹர் காலத்தில் படித்தவர்தாம்.

ஜவாஹர் கேம்பிரிட்ஜில் படித்துக்கொண்டிருந்த காலத்தில், அங்கே விபினசந்திர பால், லாலா லஜபதி ராய், கோபாலகிருஷ்ண கோகலே முதலிய பல இந்தியத் தலைவர்கள் விஜயம்செய்து பிரசங்கம் செய்தார்கள். ஹரி தயாளை லண்டனிலும், 'இந்தியன் சோஷியாலஜிஸ்ட்' பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீ ஷியாம்ஜி கிருஷ்ண வர்மாவை ஜெனிவாவிலும் ஜவாஹர் சந்தித்தார்.

அரசியல் பற்றுடைய இந்திய மாணவர்கள் 'இந்தியா ஹவுஸ்' என்ற ஒரு ஸ்தாபனத்தை அமைத்திருந்ததால், அதற்குப் போட்டியாக இந்தியா மந்திரி காரியாலயத்தார் மற்றோர் இந்திய மாணவர் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார்கள். அந்தப் போட்டி ஸ்தாபனம் இந்திய மாணவர்களை உளவு பார்ப்பதற்காகவே அமைக்கப்பட்டிருக்கிறதென்று பற்பல ஹேதுக்களால் இந்தியர் அனைவரும் மதித்தார்கள். என்றாலும், தங்களுக்கு இஷ்டமோ இல்லையோ எப்படியிருந்தாலும் அந்தப் போட்டி ஸ்தாபனத்தின் சிபாரிசு இல்லாமல் எந்த இந்திய வாலிபரும் பிரிட்டிஷ் சர்வகலாசாலை எதிலும் இடம்பெற முடியாமல் போயிற்று. ஆகையால், அநேக இந்தியர்கள் அந்தப் போட்டி ஸ்தாப

னத்தின் அமலைச் சகித்துக்கொள்ள வேண்டியதா யிருந்தது.

பண்டித ஜவாஹர் லண்டனில் இருக்கும்போதே, தந்தை மோதிலால் அதிகம் அதிகமாய் அரசியலில் கலந்து கொண்டார். இது மகனுக்கு மிகவும் சந்தோஷந் தான். ஆனால், தந்தை மிதவாதிகளுடன் சேர்ந்துகொண் டார். இதுமட்டில் மகனுக்குப் பிடிக்கவில்லை. மிதவாதி களுக்கும் அமிதவாதிகளுக்கும் அடிதடி நடந்து குழப்பத் தில் முடிந்த சூரத் காங்கிரஸுக்குப் பண்டித மோதிலா லும் விஜயம் செய்தார். பின்பு, காங்கிரஸை மித வாதிகள் கைப்பற்றிவிட்டார்கள். மோதிலால் தமது மாகாணத்தில் காங்கிரஸ் இயக்கத்துக்குத் தலைமை பூண் டார். ஆனால், பின்னால் கொஞ்சம் கொஞ்சமாக மித வாதத்தைக் கைவிட்டு, அதிதீவிர அமிதவாதி யாகிவிட் டார்.

ஜவாஹர் கேம்பிரிட்ஜ் படிப்பை முடித்து, இருபது வயசில் பட்டமும் பெற்றுவிட்டார். இனி அவர் எந்தத் தொழிலுக்குப் படிப்பது என்ற கேள்வி எழுந்தது. ஐ. ஸி. எஸ். படிப்பிலே அந்தக் காலத்தில் பொதுவாக அதிக மோகம். ஆகையால், ஜவாஹரும் அதில் சேரலாமா என்ற யோசனை கொஞ்சநாள்வரையில் இருந்தது. ஆனால், 22 வயசுக்கு மேற்பட்டு 24 வயசுக்கு உட்பட்டவர்களைத் தான் அந்த நாட்களில் ஐ. ஸி. எஸ். படிப்புக்குச் சேர்த் துக்கொண்டார்கள். ஆகையால், ஜவாஹர் ஐ. ஸி. எஸ். படிப்புக்குச் சேர்வதானால், இன்னும் நான்கு வருஷங் களுக்குக் குறையாமல் லண்டனில் இருக்க நேரும். தவிர, மகனுக்கோ தந்தைக்கோ, ஐ. ஸி. எஸ். படிப்பில் அப்படிப் பிரமாத ஆசையுமில்லை. ஆகவே, ஜவாஹர் பாரிஸ்டர் படிப்புப் படிக்க, இன்னர் டெம்பிளில் சேர்ந்து கொண்டார்.

1910-ஆம் ஸு ஜவாஹர் அயர்லாந்துக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தார். அப்போது அங்கே நடந்த சுதந்தரக் கிளர்ச்சியான ஷின்பீன் இயக்கம் அவருடைய மனத்தைக் கவர்ந்தது. பிரிட்டனிலே அந்தக் காலத்தில் மும்முரமா யிருந்துவந்த ஒருவகை ஸோஷலிஸ்டு இயக்கமான பேபியன் சங்கத்திலும் அவருக்கு அரைகுறையான ஒரு பற்றுதல் விழுந்தது. ஸோஷலிஸ்டுக் கருத்துக்களிலும் தெளிவில்லாமல் என்னவோ ஒருவிதமான கவர்ச்சி அவருக்கு உண்டாயிற்று.

இவ்வாருக, இங்கிலாந்தில் ஏழு வருஷகாலம் வாழ்ந்துவிட்டு, 1912-ஆம் ஸு பாரிஸ்டர் பட்டம் பெற்று, ஜவாஹர் இந்தியாவுக்குத் திரும்பினுர். இடையிலே ஒன்றிரண்டு முறை விடுமுறை நாட்களில் அவர் இந்தியாவுக்கு வந்து சிறிது காலம் தங்கிவிட்டுச் சென்றதுண்டு. ஆனுல், இந்தியாவுக்கு முடிவாக இப்போது திரும்பிவிட்டார்.

5. ஊர் திரும்பியபின்

ஊர் திரும்பியபின் வீட்டிலே ஜவாஹருக்கு இப்போது ஒரே ஒரு தங்கை மட்டும் இல்லை. இன்னொரு தங்கையும் பிறந்திருந்தாள். அவள்தான் கிருஷ்ணு ஹத்தீ சிங். கிருஷ்ணுவுக்கு வயது ஐந்துதான். என்றாலும், அவளுக்கு அந்தச் சிறு பிராயத்திலேயே வெகு பொருமையாம்! காரணம் என்ன? வேறொன்றும் இல்லை, ஜவாஹரின் முகத்தைக்கூட அதுவரையில் அவள் பார்த்த ஞாபகம் இல்லை. ஆனால், தாய் சொரூபராணி, மகன் ஜவாஹரைப் பற்றி ஓயாமல் புகழ்வதை அவள் கேட்டிருக்கிறாள். ஜவாஹரையே 'என் கண்மணி' என்று சொரூபராணி மதித்துவந்தாள். இதை அவள் மறைப்பதும் இல்லை. தந்தைக்கும் ஜவாஹரிடந்தான் பேரன்பு. ஆனால், அதை அவர் அவ்வளவாக வெளிக்குக் காட்டுவதில்லை. கிருஷ்ணுவின் அக்காள் விஜயலட்சுமி பேரழகி. அவளிடமும் எல்லாரும் செல்லமாய்த்தான் இருந்தார்கள். இருந்தும், அவளிடம் கிருஷ்ணுவுக்குப் பொருமை உண்டாகவில்லை.

கிருஷ்ணு ஒரு 'குறும்புக்காரப்' பெண். வீட்டிலே உள்ள ஆங்கில வாத்திச்சிக்குக் கட்டுப்பட மாட்டாள். அடிக்கடி கிருஷ்ணுவுக்குத் தண்டனை கிடைக்கும். அவளைத் தனியறையிலே போட்டுப் பூட்டியும் வைப்பார்கள். இராச் சாப்பாடு இல்லாமல் அவள் பலநாள் பட்டினியும் கிடப்பாள். விஜயலட்சுமி மிக்க பணிவோடு நடந்து கொள்வாள். இப்படிக் கட்டுக்கடங்காத கிருஷ்ணு யாருக்குத்தான் செல்லமாயிருக்க முடியும்? வீட்டுக்கு ஜவாஹர் வருவதிலே கிருஷ்ணுவுக்கு மகிழ்ச்சியில்லை. என்றாலும், "எல்லாரும் புகழ்கிறார்களே, அந்த அண்ணு

எப்படித்தான் இருப்பார். பார்க்கலாம்'' என்றுமட்டில் அவள் ஆவல் கொண்டாள்.

தங்களுடைய ஒரே செல்வ மகனுன ஜவாஹறரை வர வேற்பதற்காக, தாயும் தந்தையும் பல வார காலமாகவே ஏற்பாடுகள் செய்யத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் தான் இப்படி என்றுல், இந்த அக்காள் விஜயலட்சுமிக்கு என்ன வந்தது? அவளும் அண்ணன் வருகையை எதிர் பார்த்து மகிழ்ச்சியோடு இங்கும் அங்கும் ஓடியாடிக் கொண்டிருந்தாள். இதெல்லாம் கிருஷ்ணுவுக்குத் துளி யும் பிடிக்கவில்லை. அண்ணன் வந்தால், அவரை அடி யோடு வெறுப்பது என்று அவள் முடிவு செய்துகொண் டாள்.

கடைசியாக ஜவாஹர் வருகிற நாளும் வந்துசேர்ந் தது. அது கோடைகாலம். நேரு குடும்பம் முசோரி என்னும் மலைவாசஸ்தலத்தில் வசித்துக்கொண்டிருந்தது. எதிர்பார்த்த வேளையில் வாசலில் குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. வீட்டுக்குள்ளேயிருந்த ஒவ்வொரு வரும் ஆவலோடு வெளியே ஓடினுர்கள். தாயின் சாய லோடு ஓர் அழகிய இளைஞர் குதிரைமீது வருவதைக் கிருஷ்ணு கண்டாள். கண்டதுமே அவள் மனம் சிறிது ஒடுங்கிவிட்டது. வந்தவர் குதிரையிலிருந்து இறங்கி, முதலில் அம்மாவைத் தழுவிக் கொண்டார். பின்பு, ஒவ்வொருவரையும் வணங்கினுர். இதையெல்லாம் பார்த் துக்கொண்டே தயங்கித் தயங்கிச் சற்று எட்ட நின்று கொண்டிருந்தாள் கிருஷ்ணு. அவள் எதிர்பாராமலிருக் கையிலேயே, ஜவாஹர் அவள் அருகே சென்று, "இவள் தானே என் சிறிய தங்கை? இப்போது ஒரு சின்னப் பெண்ணுக வளர்ந்துவிட்டாளே!'' என்று சொல்லிக் கொண்டே, அவளைக் கைகளால் வாரி எடுத்து முத்த மிட்டுக்கொண்டார். ஆனுல், அவளைத் தூக்கிய அடுத்த நிமிஷமே திடும் என்று கீழே இறக்கிவிட்டார்!

ஜவாஹர் திரும்பி வந்த சில மாதங்கள் வரையில், கிருஷ்ணாவுக்கு மட்டில் அவரிடம் அன்பு உண்டாகவே யில்லை ; பயந்தான் இருந்தது. ஏனென்றால், அவருக்கு வேலையில்லாதபோதெல்லாம் சின்னத் தங்கையுடன் அவர் குறும்புத்தனமாக விளையாடத் தொடங்கிவிடுவார். பூனைக்கு விளையாட்டு, எலிக்கு எமவேதனை என்றமாதிரி, அவருடைய விளையாட்டு அவளுக்கு உபத்திரவமாயிருக் கும். அவளுக்கு இஷ்டமில்லாத வேலைகளில் அவளை ஏவுவார். பிறகு அவள் எதிர்பாராத பரிசுகளை யெல் லாம் அவளுக்குக் கொடுப்பார். ஆனால், அவள் மாத்திரம் அவரைக் கண்டால், கொஞ்சம் விலகியே இருப்பாள்.

என்றாலும், அவர் பெற்றோருக்கு எப்படி அருமை மகனாயிருந்தாரோ அவ்விதமே தங்கைகளுக்கும் அருமைச் சகோதரனாகவேயிருந்தார். இதைக் கிருஷ்ணாவும் பின்னால் நன்றாய் உணர்ந்து கொண்டாள். விஜயலட்சுமியையும் சரி, கிருஷ்ணாவையும் சரி, மற்ற முத்தண்ணாக்களைப்போல் அவர் பொட்டைக் காறுபாறு செய்யமாட்டார். அவர்கள் செய்யும் காரியம் ஏதாவது தமக்குப் பிடிக்காவிட்டால், ஜவாஹர் சாந்தமாயும் தந்திரமாயும் அவர்களிடம் பேசி, தங்கள் குற்றத்தைத் தாங்களே அவர்கள் உணர்ந்து திருத்திக்கொள்ளும்படி செய்வார். அவர் சொல்வதை அவர்கள் கேட்காவிட்டால், தமக்கு மனத்தில் எவ்வளவு வருத்தம் உண்டான போதிலும் அதை அவர் வெளிக் காட்டமாட்டார் ; அவர்களிடம் தமது கருத்தை வற்புறுத்தவும் மாட்டார். உண்மையைச் சொன்னால், தம் தங்கைகளுக்கு அவர் ஒரு வெறும் சகோதரராக மட்டும் அல்ல, நண்பராகவும் ஒப்பற்ற தோழராகவும் இருந்துவந்திருக்கிறார்.

என்றாலும், தந்தையைப்போலவே, ஜவாஹரும் கொஞ் சம் முன்கோபக்காரர்தாம். கிருஷ்ணாவுக்குச் சுமார் பதி னைந்து வயதிருக்கும். அவளுக்குக் கணக்குப்பாடம் சொல்

லித்தருவதாக, ஜவாஹர் அவளைக் கூப்பிட்டார். கிருஷ்ணு வுக்குக் கணக்கு என்றாலே கிலி. ஆனாலும், ஜவாஹர் அழைக்கும்போது எப்படி மறுக்கமுடியும்? சரி என்று வந்தாள். ஆரம்பத்தில் சில பாடங்கள்வரையில், ஜவாஹர் சொல்லிக்கொடுத்த விதம் அவளுக்கு மிகவும் இனிப் பாகவே இருந்தது. கணக்குப் பாடத்திலே அவளுக்குப் பிரியம்கூட விழுந்தது. ஜவாஹர் எப்போது வந்து பாடம் சொல்லிக்கொடுப்பார் என்று ஆசையோடு ஒவ் வொரு நாளும் எதிர்பார்த்துக்கொண் டிருக்கக்கூட ஆரம்பித்தாள். ஆனால்,ஒரு பாடம் நடக்கையில், பாடத்தில் கிருஷ்ணுவுக்குப் புத்தி செல்லவில்லை. அவள் கொஞ்சம் மந்தமா யிருந்தாள். ஜவாஹர் கோபித்துக்கொண்டார். இதனால் நிலைமை இன்னும் மோசமாயிற்று. மனங் கலங்கிய கிருஷ்ணுவுக்குப் பாடம் அடியோடு தடுமாறிப் போயிற்று. ஜவாஹர் உரக்கக் கூச்சல் போட்டார். புத்தகங்களை வீசி எறிந்தார். "போ வெளியே" என்று கத்தினார். கிருஷ்ணு மெதுவாகத் தன் புத்தகங்களை அடுக்கிக்கொண்டு அப்பால் செல்ல முயன்றாள். தனக்கு வந்த அழுகையை அடக்க அவள் என்னதான் முயன்றும், கண்ணீர் பீறிக்கொண்டு வெளிவந்தது. இதை ஜவாஹர் பார்த்துவிட்டார். அவருடைய மனசு இளகிவிட்டது. கிருஷ்ணுவைக் கட்டி அணைத்துக்கொண்டு, தம்மை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். இதற்குப்பின், அவர் என்னதான் நயவார்த்தைகள் சொல்லியும், கிருஷ்ணு அவரிடம் பாடம் கற்றுக்கொள்ள அடியோடு மறுத்து விட்டாள்!

1912-ஆம் வருஷ கடைசியில், இந்திய அரசியல் நிலைமை மிகவும் மந்தமாயிருந்தது. திலகர் சிறையில் இருந்தார். அமிதவாதிகள் திறமையான தலைவரில்லாமல் ஒடுங்கிக் கிடந்தார்கள். வங்காளப் பிரிவினையை நடக்கவொட்டா மல் தடுத்தபின்பு, வங்காளம் அமைதி பெற்றுவிட்டது.

மிண்டோ - மார்லி சீர்திருத்தத்தை, மிதவாதிகள் ஒருமித்து ஆதரிக்கத் தொடங்கிவிட்டார்கள். காங்கிரஸ் மகாசபை மிதவாதிகளின் கையில் இருந்தது. அந்த வருஷ முடிவில் நடந்த பங்கிப்பூர்க் காங்கிரஸ் மகா சபைக்கு, பண்டித ஜவாஹரும் ஒரு பிரதிநிதியாய்ப் போய்வந்தார்.

அந்தக் காலத்தில் காங்கிரஸ் என்றால், இங்கிலீஷ் படித்த மேல்வகுப்பாரே வருவார்கள். அவர்களில் பெரும்பாலோரும் கோட்டு பூட்ஸ் போட்டுக்கொண்டு துரைமார்களைப்போல் நடிப்பார்கள். காங்கிரஸ் ஏதோ ஓர் உல்லாச விழாமாதிரி நடக்குமேயொழிய, அரசியல் பரபரப்போ, நெருக்கடியோ எதுவும் அங்கே இராது. பங்கிப்பூர்க் காங்கிரஸுக்கு வந்திருந்தவர்களில் மிகச் சிலர்தாம் அரசியலில் உண்மையான ஊக்கமும் வேட்கையும் கொண்டிருந்தவர்களாய் ஜவாஹருக்குத் தோன்றினார்கள். அவர்களுக்குள்ளே ஜவாஹரின் மனத்தைக் கவர்ந்த ஒருவர் காலஞ்சென்ற கோபாலகிருஷ்ண கோகலே. ஸ்ரீ கோகலே அப்போதுதான் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிவந்திருந்தார்.

கோகலே பங்கிப்பூரை விட்டுத் திரும்பிச் செல்லுகையில் நடந்த ஒரு ரஸமான சம்பவத்தை, பண்டித ஜவாஹர் தமது சுய சரித்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அப்போது கோகலே பப்ளிக் ஸெர்வீஸ் கமிஷனில் ஓர் அங்கத்தினராயிருந்தார். ஆகையால், ரெயில் வண்டியில் ஒரு முதல் வகுப்பு அறை பூராவையும் தாமே கைப்பற்றிக்கொள்ள அவருக்கு உரிமை உண்டு. ரயிலிலே கும்பல் ஜாஸ்தியாய் இருந்தது. காங்கிரஸில் விசேஷப் பங்கெடுத்துக் கொண்டதால் கோகலே களைத்துப்போயிருந்தார். சுகமான நண்பர்கள் இல்லை. ஆகையால், அவர் ஒரு முதல் வகுப்பு அறையில் தாம் தனியே பிரயாணம் செய்ய விரும்பினார். அவர் வண்டியில் ஏறிக்கொண்ட சற்று நேரத்துக்கெல்லாம், பூபேந்திரநாத வசு அங்கே வந்தார்.

(இந்தப் பூபேந்திரநாத வசுவே பின்னல் இந்தியா மந்திரி சபையில் ஓர் அங்கத்தினரானூர்.) கோகலேயிடம் வசு, "நானும் உங்கள் அறையிலேயே பிரயாணம் செய்ய லாமா?" என்று கேட்டார். இவர் இப்படிக் கேட்ட வுடனே கோகலே உள்ளூறத் திகிலடைந்துவிட்டார். ஏனென்ருல், வசு பேச ஆரம்பித்துவிட்டால் 'தொண தொண' என்று காதைத் தொளைத்துவிடுவார். ஆனுல், எங்கேயோ போய்விட்டுச் சிறிது நேரத்துக்கெல்லாம் இன்னொருத்தரையும் அழைத்துக்கொண்டு, வசு வந்துசேர்ந் தார். "இந்த நண்பரும் உங்கள் அறையிலே பிரயாணம் செய்யலாமோ?" என்று கேட்டார். கோகலே அதற்கும் வெகு சாந்தமாகவே சம்மதித்தார்.

வண்டி புறப்பட்டுக் கொஞ்சதூரம் போனதும், வசு மறுபடியும் ஒரு கோரிக்கை செய்துகொண்டார். "மேல் தட்டிலே படுப்பதென்ருல், எனக்கும் என் நண்பருக்கும் ரொம்பவும் கஷ்டமாயிருக்கும். தாங்கள் கொஞ்சம் தயவு செய்து மேல் தட்டிலே ஏறிப் படுத்துக்கொள்வீர்களோ?" என்று கேட்டார்.

கோகலே வாய்திறக்கவில்லை. பேசாமல் மேல்தட்டிலே தொற்றி ஏறிப் படுத்துக்கொண்டார். வசுவும் நண்ப ரும் கீழ் ஆசனங்கள் இரண்டிலும் ஹாய்யாகப் படுத்து உறங்கினுர்கள்!

6. தொழிலா, அரசியலா?

அலகபாத் ஹைக்கோர்ட்டில், ஜவாஹர் வக்கீல் தொழில் புரியத் தொடங்கினர். சில மாதங்கள் வரையில், இந்தத் தொழில் அவருக்குக் கொஞ்சம் இனிப்பாகவே இருந்தது. ஆனல், அப்புறம் இதில் சலிப்புண்டாயிற்று. எல்லாரையும்போல் ஒரு விசேஷமுமில்லாமல் 'உண்பதும் உறங்குவது'மாக முடியும் இந்த உப்பு சப்பற்ற வாழ்க்கை அவருக்கு ருசிக்கவில்லை. அரசியல் என்றல், உக்கிரமான தேசீய உணர்ச்சிகொண்டு போராடி அந்நிய ஆட்சியை ஒழிக்கவேண்டுமென்பது ஜவாஹரின் கருத்து. ஆகையால், அந்த நாளைய அரசியலிலும் அவருக்கு உற்சாகம் உண்டாக வழியில்லை. ஜவாஹர் காங்கிரஸில் சேர்ந்து கொண்டார். ஆனலும் அபூர்வமாகத்தான் அதன் கூட்டங் களில் கலந்துகொள்வார். பிஜித்தீவில் இந்தியர்களை அடிமைகள்போல் நடத்திய ஒப்பந்தக் கூலி முறையை எதிர்த்து நடந்ததுபோன்ற கிளர்ச்சிகள் இந்தியாவில் தோன்றியபோது மட்டில், ஜவாஹருக்குப் பேருற்சாகம் உண்டாகிவிடும். அவர் அவைகளில் கலந்துகொண்டு ஆவேசத்தோடு வேலை செய்தார். ஆனல், இத்தகைய கிளர்ச்சிகள் ஒவ்வொரு சமயந்தான் வரும். ஆகையால், ஜவாஹருக்கு இவைகளினல் பூர்ணமான வேலை கிடைக்க வில்லை; இவையெல்லாம் தற்காலிக 'உத்தியோகந்'தான்.

'ஷிக்காரி' என்ற வேட்டைக்குச் சென்று, சில சமயம் அவர் பொழுதுபோக்க முயன்றர். ஆனல், அதில் அவருக்குத் தகுதியுமில்லை; கவர்ச்சியுமில்லை. காட்டுக்குப் போவதில் அவருக்கு வெகு குஷி; என்றலும் கொல்லுவ தென்ற ஜோலிக்கு மாத்திரம் அவர் போவதில்லை! ஜவாஹர் 'ரத்தமே சிந்தாத வேட்டையாடி' என்று கீர்த்தி

பெற்றவர்! என்னவோ ஓரே ஒரு சமயம் அதிருஷ்டவசத்தால் ஒரு கரடியை அவர் சுட்டுவிட்டார். வேட்டையிலே அவருக்கு இருந்த கொஞ்ச நஞ்ச உற்சாகத்தையும் ஒரு நாள் ஒரு மான்குட்டி வந்து கெடுத்துவிட்டது. காயம் பட்டுக் குற்றுயிராய்ச் சாகுந்தருணத்தில் இருந்த அந்த மான்குட்டி, ஜவாஹரின் காலடியிலே வந்து விழுந்தது. விசாலமான தன் விழிகள் நிறையக் கண்ணீர் பெருக்கிய வண்ணம், அது இவரை நிமிர்ந்து பார்த்தது. இந்தப் பரிதாபக் காட்சி பின்னால் ஒருபோதும் ஜவாஹரின் கண்ணை விட்டு அகலவேயில்லை.

கோகலேயின் இந்திய ஊழியர் சங்கத்தில், ஜவாஹருக்கு இந்த நாட்களில் சற்றுக் கவர்ச்சி உண்டாயிற்று. ஆயினும், அவர் அதில் சேர நினைக்கவேயில்லை. இதற்கு ஒரு காரணம், அவர் தமது தொழிலை விட விரும்பாதது; இன்னொரு காரணம், சங்கத்தின் மிதவாத அரசியல் அவருக்குப் பிடிக்காதது. என்றாலும், சங்கத்தின் அங்கத்தினர்களிடமெல்லாம் அவருக்குப் பெரிதும் மதிப்பு இருந்தது. அவர்களெல்லாம் அற்ப ஊதியம் பெற்றுக் கொண்டு, தேச சேவையில் ஈடுபட்டதுதான் ஜவாஹரின் மதிப்புக்குக் காரணம்.

1914-ஆம் ஹு ஆகஸ்டு மீ முதல் உலக மகாயுத்தம் தொடங்கியது. இந்தியத் தற்காப்புச் சட்டம் என்ற சட்டத்தின் கொடும்பிடிக்குள் அகப்பட்டு நாடு திணறித் தவிக்கலாயிற்று. அரசியல் இயக்கம் என்ற சங்கதியே அவிந்த விளக்குப்போல் மங்கிவிட்டது. பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்தன. அதட்டி மிரட்டி நிர்ப்பந்தமாய்ச் சேனைக்கு ஆள் பிடிக்கும் கோஷ்டிகள் பஞ்சாபில் வேலை செய்யத் தொடங்கின. மிதவாதிகளாகட்டும், அமிதவாதிகளாகட்டும், பொதுஜனங்களாகட்டும், யாருக்கும் பிரிட்டனிடம் துளிக்கூட அனுதாபம் கிடையாது. ஜெர்மனியின் வெற்றிகளைப்பற்றிக் கேட்கும்

போதெல்லாம் சகல ஜனங்களுக்குமே பரம களிப்பு. கோலி விளையாடும் குழந்தைகள்கூட, "அடே! என் கோலி கெய்ஸர் குண்டுடா" என்று விருது கூறுவார்கள். (அப்போது ஜெர்மனி ஒரு முடியரசு நாடு. கெய்ஸர் சக்கரவர்த்தி அதை ஆண்டுவந்தார். அப்போதும் ஜெர்மனி தான் முன்னின்று ஆஸ்திரியாவையும் துருக்கியையும் மட்டிலும் சேர்த்துக்கொண்டு, நாலுபக்கத்திலும் பகைமையைக் கிளப்பிக்கொண்டு, பிரான்ஸ், ருஷ்யா, பிரிட்டன், ஜப்பான், அமெரிக்கா, இத்தாலி இத்தனை நாடுகளையும் எதிர்த்து நின்று போரிட்டது.) ஜெர்மனியின் ஜயங்களுக்கு நம்நாட்டில் ஏன் இப்படிக் களிப்பு? ஜெர்மனியைத் தங்கள் அண்ணன் தம்பி என்று நம் நாட்டவர் நினைத்ததாலா? அப்படி ஒன்றுமில்லை. தங்களுடைய 'எஜமா'னாகிய பிரிட்டனைப் பணியவைக்கத் தங்களால் தான் முடியவில்லை; அந்தக் காரியத்தைச் செய்ய ஓர் அசுரன் இருக்கிறான் அல்லவா? இந்தச் சந்தோஷந்தான். (ஆனால், அந்த அசுரன் கடைசியிலே ஜயிக்கவில்லை; தோற்றே போனான்.)

லோகமான்ய பால கங்காதர திலகர் சிறையிலிருந்து வெளி வந்தார். அரசியல் இயக்கம் மெல்ல மெல்ல மறுபடியும் உயிர்பெற்றது. இரண்டு ஹோம்ரூல் லீக்குகள் முளைத்தன. ஒன்று, அன்னிபெஸண்ட் அம்மை தோற்றுவித்தது; மற்றொன்று, திலக மகான் தோற்றுவித்தது. ஜவாஹர் பார்த்தார். பாரபட்சம் காட்டவில்லை. இரண்டிலும் சேர்ந்துகொண்டார். என்றாலும், பெஸண்ட் லீகில் தான் அதிகமாய்ப் பணி புரிந்தார். அப்போது அன்னி பெஸண்டு வரவர அதிகமாய் இந்திய அரசியலில் ஈடுபட்டுச் சேவைபுரிந்து புகழ்பெற்று வந்தார். தேசியக் காங்கிரஸிலே உயிரும் உற்சாகமும் நிறைந்திருந்தன. முஸ்லீம் லீக்கும் காங்கிரஸுடன் தோளோடு தோள் சேர்ந்து வேலைசெய்தது. நாட்டில் ஒரே பரபரப்பு. பிரமாத

சம்பவங்கள் நடக்கப்போகின்றன என்ற கனவுகள் மக்களின் உள்ளத்திலே பொங்கி எழுந்தன. இந்த நிலைமையில், பெஸண்ட் அம்மையை இந்திய சர்க்கார் ஆள் தூக்கிச் சட்டத்தின்கீழ்ப் பந்தோபஸ்தில் வைத்தது. ஜனங்களின் பரபரப்பு இதனால் அதிகரித்தது. மங்கி மாய்ந்துவந்த மிதவாதிகளுக்குக்கூட இதனால் சற்று உக்கிரகம் வந்துவிட்டது. கனம் சீனிவாச சாஸ்திரியார்கூட மகா ஆவேசமாய்ப் பிரசங்கம் புரியத் தொடங்கிவிட்டார். ஆனால், நல்ல சமயத்தில் அதாவது பெஸண்ட் கைதியான தருணத்தில், அவர் ஓய்ந்து உட்கார்ந்துவிட்டார். வாலிப ஜவாஹரே செயல்புரிய வேண்டியதாயிற்று.

இந்தியத் தற்காப்புப்படை என்ற புதிய படையை, சர்க்கார் அப்போது அமைத்துவந்தார்கள். அதில் நடுத்தர வகுப்பு மக்களெல்லாம் சேர்ந்துவந்தார்கள். இந்தப் படை விஷயத்திலும் ஐரோப்பியரை ஒருவிதமாகவும் இந்தியரை வேறுவிதமாகவும் சர்க்கார் நடத்தினார்கள். ஆகையால், ஜவாஹரும் அவருடைய சகாக்களும் நாம் சர்க்காரோடு ஒத்துழைக்கக் கூடாதென்று வாதித்தார்கள். மிகுந்த விவாதத்துக்குப் பின்பு, ஒத்துழைக்கத்தான் வேண்டுமென்று தீர்மானமாயிற்று. ஏனென்றால், ஒத்துழைப்பதன் மூலம் நம் வாலிபர்களுக்கு ராணுவப்பயிற்சி ஏற்படுமே என்ற எண்ணந்தான். டாக்டர் டெஜ்பகதூர் சாப்ரூ, பண்டித மோதிலால் நேரு, ஸி. ஒய். சிந்தாமணி முதலியவர்கள் அடங்கிய ஒரு கமிட்டியும் அலகபாத்தில் அமைந்தது. தாம் இந்தப் படையில் சேர்வதாகச் சர்க்காருக்கு ஜவாஹரே ஒரு மனுப்போட்டார். இந்தச் சமயத்தில்தான் அன்னிபெஸண்ட் அம்மை பந்தோபஸ்தில் வைக்கப்பட்ட சேதி வந்தது. அதனால் ஏற்பட்ட பரபரப்பில் ஜவாஹர் எப்படியோ பெரியவர்களை மயக்கி, இந்தப் படை விஷயத்தில் சர்க்காருடன் ஒத்துழைப்பதில்லை என்று அவர்கள் தீர்மானிக்கும்படி செய்துவிட்டார். அவர்களும் ஏமாந்து

விட்டார்கள். இந்தியத் தற்காப்புப்படை அமைப்பது சம்பந்தமாகத் திட்டம் செய்திருந்த கமிட்டிக் கூட்டங்களையும் இதர சகல நடவடிக்கைகளையுமே அவர்கள் ரத்து செய்துவிட்டார்கள். சர்க்காரைக் கண்டிப்பதற்கு அடையாளமாகவே அவர்கள் இந்த முறையைக் கையாண்டார்கள். ஆனால், அந்தப் பெரியவர்களில் சிலரே, "யுத்த காலத்தில் நாம் இப்படிச் செய்திருக்கக் கூடாது" என்று பின்னால் முனகத் தொடங்கினார்கள் !

முதல் யுத்த ஆரம்ப காலத்தில், அரசியலிலும் சரி, வேறு பொது வேலைகளிலும் சரி, ஒதுங்கினாற்போல் இருந்துகொண்டுதான் ஜவாஹர் வேலை செய்துவந்தார். பொதுக்கூட்டங்களில் பிரசங்கம் செய்யமாட்டார். ஹிந்துஸ்தானியில் ஒரு சிறிய பிரசங்கம் செய்யக்கூடத் தம்மால் முடியுமா என்பதில் அவருக்கே சந்தேகம். கடைசியாக, 1915-ஆம் ஆு அலகாபாத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் அவரைப் பேசும்படி செய்துவிட்டார்கள். அச்சுக்கூடங்களுக்கு வாய்ப்பூட்டுப் போடும் ஓர் அடக்கு முறைச் சட்டத்தைச் சர்க்கார் அப்போது இயற்றினார்கள். அந்தச் சட்டத்தைக் கண்டிப்பதற்காகவே இந்தக் கூட்டம் நடைபெற்றது. ஜவாஹர் ஆங்கிலத்திலேயே பேசினார். மிகவும் சுருக்கமான பேச்சு. ஜவாஹரின் பேச்சைக் கேட்ட டாக்டர் சாப்ரூ பரமானந்தம் அடைந்துவிட்டார். அந்த மேடைமீதே பகிரங்கமாக அவர் நேருவை ஒரு குழந்தையைப்போல் கட்டியணைத்து முத்தம் இட்டுக்கொண்டுவிட்டார்! "சாப்ரூவின் இந்த ஆனந்தத்துக்குக் காரணம், என் பேச்சின் சுவை அல்ல. பொது மேடையில் நான் பேசிவிட்டேனே, இதுவே அவருக்குச் சந்தோஷம். பொதுஜன சேவைக்கு ஒரு புதிய ஆள் கிடைத்துவிட்டான் என்ற சந்தோஷம். அந்தக் காலத்தில், பொதுஜன சேவை என்றாலே பிரசங்கம் புரிவதுதான்" என்கிறார் ஜவாஹர்.

பெஸண்ட் அம்மை பந்தோபஸ்தில் வைக்கப்பட்டது முதலே பண்டித மோதிலால் மற்ற மிதவாதிகளைப்போல் இல்லாமல் தீவிர வாதி யாகிவிட்டார். பெஸண்டின் ஹோம்ரூல் லீக்கில் சேர்ந்து, அலகாபாத் கிளையின் தலைவருமானார். என்றாலும், மகன் ஜவாஹர் போகிற போக்கைக் கண்டு மாத்திரம் அவருக்குக் கொஞ்சம் கிலி உண்டாகிவிட்டது. வீட்டிலே தந்தைக்கும் மகனுக்கும் அரசியல்பற்றி ஓயாத விவாதம் நடக்கும். மிக்க விறு விறுப்பான விவாதம். "செயல், செயல், செயல் புரிய வேண்டும். வெறும் பேச்சுப் பயனில்லை" என்று துடித் தார் ஜவாஹர். என்ன செயல் புரிவது என்பதுமட்டில் தெளிவில்லை. மகனின் இந்தத் துடிப்பைப் பார்த்த தந்தை, "இவன் எங்கேயாவது வங்காள பயங்கரப் புரட்சிக்காரர் களோடு சேர்ந்துவிடப் போகிறானே!" என்று பயந்தார். ஜவாஹர் சொல்வதை மோதிலால் மறுப்பார். கடுமையான சொற்பிரயோகங்கள் நடக்கும். ஒருவரை ஒருவர் மாற்றி எப்படித் தம் வழிக்குக் கொண்டுவருவது என்று இராப் பகலாய்ச் சிந்தித்துச் சிந்தித்து, இருவரும் பலநாள் மன வேதனை அடைந்திருக்கிறார்கள். தந்தையும் மகனும் அரசியலால் இப்படிப் பிளவுபட்டு முடிவில்லாத விவாதங் களைச் செய்துகொண்டிருந்தது, தாய் சொரூப ராணிக்கும் வீட்டிலுள்ள பிறருக்கும் பயம் உண்டாக்கியது. அவர் களால் இதைக் காணச் சகிக்கவில்லை. எந்த நேரமும் நிலைமை நெருக்கடியாகவே இருந்தது. இதுபற்றி யாராவது ஏதாவது பேசினால், தந்தைக்குக் கோபம் வந்துவிடும் என்றும் மகனுக்கு ஆத்திரம் பொங்கிவிடும் என்று அஞ்சி, யாரும் வாய்திறப்பதில்லை.

1916-ஆம் ஆண்டு லட்சுமணபுரியில் நடந்த காங்கிரஸின் போதுதான், முதல் முதலாக மகாத்மா காந்தியைப் பண்டித ஜவாஹர் சந்தித்தார். மகாத்மாவின் வீரமான தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகப் போராட்டத்தைப்

பற்றிக்கேள்விப்பட்டு,மற்ற எல்லாரையும்போலவே ஜவாஹருக்கும் அவரிடம் பெரிதும் வியப்பு ஏற்பட்டிருந்தது. என்றாலும், ஜவாஹர் மாதிரி பல இளைஞர்களுக்கு, மகாத்மாவின் கொள்கைகள் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. "இதெல்லாம் அரசியலுக்கு ஒத்துவராது. மகாத்மாவுக்கும் நமக்கும் ரொம்ப தூரம். அவருக்கும் நமக்கும் கட்டிவராது" என்றே அவர்கள் நினைத்தார்கள். தொடக்கத்தில் காந்திஜி இந்திய அரசியலிலோ காங்கிரஸிலோ பங்கெடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார்; தென்னாப்பிரிக்க இந்தியப் பிரச்னை ஒன்றில் மட்டிலுமே ஈடுபட்டார். ஆனால், கொஞ்ச நாளைக்கெல்லாம் சாம்பரான் தோட்டக் குடிகளின் சத்தியாக்கிரகம் ஒன்று ஆரம்பித்து நடத்தி வெற்றிபெற்றார். இதைக் கண்டு, ஜவாஹர் போன்ற இளைஞர்களுக்கு உற்சாகம் மூண்டது. காந்திஜி தம்முடைய முறைகளை இந்தியாவிலும் பிரயோகிக்கத் தயாராயிருக்கிறார் என்பதை இது காட்டுவதாகவும், அவைகளால் வெற்றி கிடைக்கும் என்றும் அவர்கள் ஆனந்தம் கொண்டார்கள்.

காலேஜில் படித்த காலத்தில் ஜவாஹரின் மனத்தில் நிறைந்த சோஷலிஸக் கருத்துக்கள் இந்த நாட்களில் அமுங்கிப்போயின. தேசீய உணர்ச்சிகள் மேலோங்கின. அடிமை நாட்டினருக்குத் தேசவிடுதலை ஒன்றுதான் குறிக்கோளா யிருக்கவேண்டுமேயொழிய மற்ற விஷயங்களெல்லாம் பின்னேதான் என்ற உணர்ச்சி அவருக்கு உண்டாயிற்று. ஆனால், பெர்ட்டிராண்டு ரஸ்ஸல் போன்ற சில ஆசிரியர்களுடைய புஸ்தகங்களைப் படிக்கவே, சோஷலிஸக் கருத்துக்கள் அவரிடம் திரும்பவும் மெல்லத் தலைதூக்கின. தேசீய உணர்ச்சிகளும், அபிலாஷைகளும் சோஷலிஸக் கருத்துக்களும் ஒன்றுக்கொன்று அவர் மனத்திலே போராடத் தொடங்கின. மனம் நிலைகொள்ளவில்லை. வக்கீல் தொழிலிலே சுவை

யில்லாமல் போய்விட்டது. வேறு ஒரு வேலையும் இல்லாத தால், விருப்பமில்லாமலே வக்கீல் தொழிலை ஏதோ ஒரு வாறு நடத்திக்கொண்டிருந்தார்.

இந்தச் சமயத்தில், புகழ் மிக்க கல்கத்தா வக்கீல் ஸர் ராஷ்பிஹாரி கோஷுக்கு, ஜவாஹரிடம் என்னவோ ஒரு விசேஷப் பிரியம் விழுந்தது. வக்கீல் தொழிலிலே எப்படி வெற்றிபெறுவது என்ற விஷயமாக, ஜவாஹருக்கு அவர் பற்பல புத்திமதிகளெல்லாம் சொல்லத் தொடங் கினர். "இதோ பார். முக்கியமாக, உனக்குத் தோன்றிய ஏதாவது ஒரு சட்ட விஷயத்தைப்பற்றி, நீ ஒரு புத்தகம் எழுதவேண்டும். ஒரு ஜூனியர் வக்கீல், தொழிற் பயிற்சி பெற இதுதான் சிறந்த வழி. நீ புத்தகம் எழுதுவதானால், நான் உனக்குக் கருத்துகளெல்லாம் கொடுத்து உதவு கிறேன். புத்தகத்தை மேற்பார்வையிட்டுத் தருகிறேன்" என்று அவர் சொன்னர். ஜவாஹருக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை.

ஸர் ராஷ்பிஹாரி கிழவர் ; முன்கோபி. என்றாலும், ஜவாஹருக்கும் அவரிடம் ஒருவிதக் கவர்ச்சியிருந்தது. சிம்லாவில் ஒரு சமயம் மோதிலால், ஜவாஹர் இருவரை யும் ஸர் ராஷ்பிஹாரி தம் வீட்டில் விருந்துண்ண அழைத் தார். இன்னும் சிலரும் விருந்துக்கு வந்திருந்தார்கள். அவர்களில் கிழவர் கபர்தேயும் ஒருவர். ஸர் ராஷ்பிஹாரி தீர்க்கமான மிதவாதி. கபர்தே அமிதவாதி. விருந்து சாப் பிட்டு முடிந்ததும், கபர்தேயும் ராஷ்பிஹாரியும் தீவிர மாய் விவாதம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். காலஞ் சென்ற கோகலேயைக் குறைகூறினர் கபர்தே. "கோகலே லண்டனில் பிரிட்டிஷ் சர்க்காரின் ஏஜெண்டாயிருந்தார் ; என்னையே வேவு பார்த்தார்" என்றார். இதைக் கேட்டதும் ராஷ்பிஹாரிக்கு ஆக்கிரோஷம் வந்துவிட்டது. "கோகலே மிக உயர்ந்த மனிதர். எனக்கு நெருங்கிய நண்பர். அவரைப்பற்றி எவரும் தவருய் ஒரு வார்த்தை சொன்

ஞாலும், நான் பொறுக்கமாட்டேன்" என்றார் ராஷ்பிஹாரி. கோகலேயை விட்டுவிட்டு, சீநிவாச சாஸ்திரிமீது தாவினார் கபர்தே. சாஸ்திரி விஷயத்தில், ராஷ்பிஹாரிக்கு அவ்வளவாக அக்கறையில்லை. "கோகலே உயிருடன் இருந்தவரையில், இந்திய ஊழியர் சங்கத்துக்கு நான் நன்கொடை அளித்துவந்தேன். அவர் இறந்தபின், நானும் நன்கொடையை நிறுத்திவிட்டேன்" என்றார் ராஷ்பிஹாரி. இதன்பின், கோகலே, சாஸ்திரி இவர்களுக்கு எதிராக, திலகரைப் புகழ ஆரம்பித்தார் கபர்தே; "திலகர் உண்மையிலேயே பெரிய மனிதர்; அற்புதமான புருஷர்; மகான்" என்றார். "மகான்!" என்று எரிச்சலோடு கூவிய ராஷ்பிஹாரி, "மகான்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. நான் அவர்களுடன் துளியும் உறவு வைத்துக்கொள்ள மாட்டேன்" என்றார்.

7. மணமும் மலைப்பயணமும்

1915-ஆம் ஆண்டு ஒருநாள் ஆனந்தபவனத்தில் மோதிலால் ஒரு விருந்து நடத்தினார். விருந்து வைபவமாக நடந்து கொண்டிருந்தது. கிருஷ்ணா சிறிய பெண். ஆகையால், விருந்திலே அவள் கலந்துகொள்ளவில்லை. வெளிநடையில் இருந்தபடியே விருந்து நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண் டிருந்தாள். கிருஷ்ணாவின் அத்தை அவளைத் தன் கிட்ட அழைத்து, கையை ஒரு பக்கம் சுட்டிக் காட்டிக்கொண்டே, “ அதோ பார், அந்தப் பெண்ணை. அவளை உனக்குப் பிடிக்கிறதா ? அவள்தான் உன் அண்ணனைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறவள் ” என்றாள்.

அத்தை காண்பித்த பக்கத்திலே கிருஷ்ணா திரும்பிப் பார்த்தாள். மேஜையின் அருகே சில பேர்களுக்கு நடுவிலே, இதழ் விரிந்த மலர்போல் ஜொலித்துக்கொண்டு, உயர மான பேரழகி ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். அவள்தான் ஜவாஹரின் வாழ்க்கையைக் கனிவுபடுத்தவந்த பாவை கமலா.

அண்ணனுக்கு மனைவியாய் வரப்போகிறவள் என்றால் என்ன ? அது ஒன்றும் கிருஷ்ணாவுக்குப் புரிய வில்லை. “ இவள் நம்முடன் இருக்க வந்திருக்கிறாள் ” என்பது மட்டில் அவளுக்குப் புரிந்துவிட்டது. இவள் இன்னும் கொஞ்சம் சின்னவளாய், தனக்குச் சம வயதுள்ளவளாய் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று கிருஷ்ணா கொஞ்சம் பெருமூச்சுவிட்டாள். “ இல்லாவிட்டாலும் பரவாயில்லை. நமக்கு இன்னொரு சகோதரி கிடைக்கப்போகிறாளே ” என்று சந்தோஷம் கொண்டாள். “ அப்போது, கமலாவுக்குப் பதினேழே வயது. இளமையும் மதுரமும் பொலியும் வடிவம். அந்த

வடிவத்தில் அவளைக்கண்ட முதல் தோற்றம், என் நினைவி லிருந்து என்றும் அகலவில்லை'' என்று, கிருஷ்ணு சொல்லு கிருள்.

ஜவாஹரின் கல்யாணத்தை மகா விமரிசையாய் நடத்துவதற்காக மாதக் கணக்கில் ஏற்பாடுகள் நடந்தன. நகை செய்வோரும் வியாபாரிகளும் தையல்காரர்களும் பெருங்கூட்டமாக நாள்தோறும் 'ஆனந்தபவ'னுக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். பற்பல குமாஸ்தாக்கள் அநேக விதமான திட்டங்களை வகுத்து, அவைகளை நிறை வேற்றுவதற்கான முஸ்தீப்புகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

டில்லியில் பெண் வீட்டில் கல்யாணம் நடைபெற விருந்தது. முகூர்த்த தினத்துக்கு ஒரு வாரமிருக்கையில், நல்ல நாள் பார்த்து, மாப்பிள்ளை வீட்டார் அலகபாத்தை விட்டுப் புறப்பட்டார்கள். மோதிலால் நூறு விருந்தாளி களைத் தம்முடன் அழைத்துச் சென்றுர். அழகாய் அலங் காரம் செய்திருந்த ஒரு ஸ்பெஷல் ரெயில் வண்டியில் இவர் கள் போனுர்கள். மோதிலாலுடன் கூடச்சென்ற விருந் தாளிகளை யல்லாமல், டில்லியிலே நூற்றுக்கணக்கான வேறு பல விருந்தாளிகளும் வந்து இவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். விருந்தாளிகளுக்கென்று ஏற்கனவே பற்பல வீடுகள் அமர்த்தியிருந்தார்கள். அவை அனைத்தும் போதவில்லை. ஆகையால், இடம் இல்லாத விருந்தாளிகள் தங்குவதற்காக ஏராளமான கூடாரங்களை அமைக்கும்படி மோதிலால் கட்டளையிட்டார். ஒருவார காலத்துக்குள் இப்படி அமைந்த கூடாரங்களெல்லாம் சேர்ந்து ஒரு பெரிய நகரமே' நிர்மாணமாகிவிட்டது! அதற்கு 'நேரு கல்யாண நகரம்' என்ற பேரும் வழங்கத் தொடங்கியது.

அந்தக் காலத்தில் டில்லியில் குளிர் கடுமையாய் இருந்தது. கிருஷ்ணுவைப்போன்ற குறும்புக்காரக் குழந் தைகளுக்கு இது பேரானந்தந்தான். நேரு குடும்பத்தில் அவளைப்போன்ற குழந்தைகள் அதுவரையில் கண்டும்

கேட்டுமிராத ஏராளமான பந்துக்கள், இந்தியாவின் பல திசைகளிலிருந்தும் வந்து கூடினார்கள். இஷ்டமித்திரர்களும் ஏராளமாய் வந்தார்கள்.

1916-ஆம் ஆடு தொடக்கத்தில், வசந்தகால உதய நாளான வசந்த பஞ்சமியன்று, தங்கக்கிளிபோன்ற கமலாவுக்கும் மணிவிக்கிரகம் போன்ற ஜவாஹருக்கும் வெகு விமரிசையாக விவாக விழா நடைபெற்றது.

கல்யாணத்துக்குப்பின், நேரு குடும்பத்தார் சில மாத காலம் கோடையைக் காஷ்மீரத்தில் கழித்தார்கள். அங்கே ஜவாஹர் தம் குடும்பத்தாரை யெல்லாம் பள்ளத்தாக்கிலேயே விட்டுவிட்டு, ஒரே ஒரு தாயாதிப் பையனை மட்டில் அழைத்துக்கொண்டு, பலவார காலம் வரையில் மலைகளில் சுற்றித் திரிந்து, இமாலயப் பாதையான வடக்கு ரஸ்தாவுக்குப் போய்ச் சேர்ந்தார். இருவரும் ஜோஜிலாக் கணவாயின் உச்சியில் ஏறி நின்றுகொண்டு இருபுறமும் உள்ள அற்புதமான இயற்கைக் காட்சிகளைக் கண்டார்கள். ஒரு பக்கத்தில் பச்சைப்பசேல் என்று ஜொலிக்கும் செழிப்பான பள்ளத்தாக்கு; மறுபக்கம் வறண்டு குளிர்ந்து வர்ணமற்று வானளாவிய குன்றுகள் !

ஜோஜிலாக்கணவாயையும் தாண்டியாயிற்று. மட்டாயான் என்னும் இடத்தை அடைந்தார்கள். இன்னும் எட்டே எட்டு மைல் தூரத்தில் அமரநாத் குகை இருக்கிறது என்று ஜவாஹர் கேள்விப்பட்டார். ஆனால், பனிக்கட்டி உறைந்து குளிர் மிகுந்த பிரம்மாண்டமான ஒரு மலையைக்கடந்துதான் இவர்கள் அந்த ஸ்தலத்துக்குப்போக வேண்டும். "இருக்கட்டுமே. பரவாயில்லை. எட்டே மைல் தானே ? இதென்ன பிரமாதம் !" என்று அவர்கள் நினைத்தார்கள். ஜவாஹரும் நண்பரும் இப்போது தங்கியிருந்த முகாமே சுமார் *11,500* அடி உயரம். இருந்தும், அவர்களுடைய உற்சாகத்தில் இன்னும் உயரச் செல்ல முடிவு செய்தார்கள். இன்னும் சில ஆட்களையும் துணைக்கு

அழைத்துக்கொண்டு, ஒரு சிறு கோஷ்டியாக அமரநாத் குகையை நோக்கிக் கிளம்பினார்கள். அவர்களுக்கு வழிகாட்டிச் செல்ல ஓர் ஆட்டிடையனும் கூடவே வந்தான்.

கோஷ்டியார் கயிற்றின் உதவி கொண்டு தொற்றி ஏறிப் பல உறைபனிப் பாளங்களைக் கடந்து சென்றார்கள். மேலெ ஏற ஏற மூச்சுவிடக் கஷ்டமாயிருந்தது. கூடவந்த கூலிகள் சொற்பச் சாமான்களையே தூக்கி வந்தார்கள். இப்படியிருந்தும், அவர்களில் சிலர் ரத்தம் கக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்தச் சமயம் பார்த்துப் பனி வேறே பெய்யத்தொடங்கியது. உறைபனிப் பாளங்கள் வழுக்கின. அவர்கள் தளர்ந்து தள்ளாடிப்போனார்கள். எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் பிரம்மப் பிரயத்தனமாயிருந்தது. என்றாலும், அவர்கள் கொண்ட முயற்சியை விடாமல், ஒரே மூர்க்கமாக மேலே ஏறிக்கொண்டேயிருந்தார்கள். பன்னிரண்டு மணிநேரம் இப்படி ஏறியபின் ஓர் உச்சியை அடைந்தார்கள். அங்கே பிரம்மாண்டமான ஒரு பனிப்புலம் தென்பட்டது. இது ஒரு கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. சுற்றிலும் பனிச் சிகரங்கள் சூழ்ந்து, தேவர்களின் மணிமகுடம்போல் விளங்கியது. இனி இந்தப் பனிப் புலத்தைக் கடக்கவேண்டியதுதான் பாக்கி. அப்பால் மறுபுறத்தில் கீழே இறங்கி அமரநாத் குகையை அடைந்துவிடலாம். ஏறுவதே மிகவும் கஷ்டமான வேலை. ஏறுவதெல்லாம் ஏறியாயிற்று. இனி இறங்கவேண்டியது தானே ? அதற்கு யாராவது பயப்படுவார்களோ ? அவர்கள் பனிப்புலத்தைக் கடந்து, வெகு உற்சாகமாக இறங்க ஆரம்பித்தார்கள். ஆனால், இதுதான் மிக அபாயமான வேலையாயிருந்தது. இந்த இறக்கத்தில், பற்பல இடங்களில் பாறை வெடிப்புக்கள் 'ஆ' என்று வாயைப் பிளந்து

கொண்டிருந்தன. இந்த வெடிப்புக்களில் சிலவற்றின் வாய் தெரியாமல் புதிதாய் விழுந்த பனிநுரை சூழ்ந் திருந்தது. அப்படிப்பட்ட பனிநுரை ஒன்று ஜவா ஹருக்கு ஆபத்தாய் முடிந்தது. பிரம்மாண்டமான வெடிப்பு ஒன்றை அந்தப் பனிநுரை மூடியிருப்பது தெரியாமல், அதில் அவர் காலை வைத்துவிட்டார். அவ்வளவுதான். பேயின் வாய்போல் அகன்று பிளந்த அந்த வெடிப்புக்குள்ளே 'கிர்' என்று தலை குப்புற விழத் தொடங்கிவிட்டார். அதில் அவர் போயிருந்தால், அடியிலே அதலபாதாளத்தில் அமிழ்ந்து புதைந்திருக்க வேண்டியதுதான். ஆனால், நல்ல வேளையாக, அவர் கட்டியிருந்த கயிறு அருமல் அவரைக் காப்பாற்றியது. அவர் அந்தரத்தில் தொங்கி ஊசலாடியபடியே வெடிப்பின் ஒரு பக்கத்துப் பாறையை எட்டிப் பிடித்துக்கொண்டார். யாத்திரைக் கோஷ்டியினருக்கு இதனால் கொஞ்சம் அதைரியம் உண்டாயிற்று. ஆயினும், அவர்கள் பிடிவாத மாய் மேலும் செல்ல முயன்றார்கள். ஆனால், போகப்போக இன்னும் பல பெரிய பெரிய வெடிப்புகள் குறுக்கிட்டன. எனவே, அத்துடன் யாத்திரையை நிறுத்தித் திரும்பிவிட் டார்கள். அமரநாத் குகையைக் காணாமலே ஜவாஹர் திரும்பவேண்டியதாயிற்று.

இந்த யாத்திரையில் கண்ட காஷ்மீர மலைச்சிகரங் களும் பள்ளத்தாக்குகளும் ஜவாஹரின்மனத்தைக் கவர்ந்து விட்டன. பின்னொருநாள் கூடிய சீக்கிரம் அங்கே சென்று அமரநாத், திபேத்தின் அற்புத ஏரியான மானஸரோவர், கைலாஸம் ஆகியவைகளையெல்லாம் பார்த்துவரவேண்டும் என்று அவருக்கு அடங்கா ஆவல். எத்தனையோ ஆண்டு கள் கழிந்தும் ஜவாஹரின் இந்த ஆவல் இதுவரை நிறை வேறவில்லை. அவரை வர வர அதிகமாய் இந்திய அரசியல்

வாழ்வும் சிறையும் இழுத்துக்கொண்டு, அவருக்கு இந்த அரிய யாத்திரைக்கான அவகாசமே கிடைக்காமல் செய்துவிட்டன.

ஜவாஹரின் இந்த மலை யாத்திரை பூர்த்தியாகாமல் தான் முடிந்தது; ஆனால், அவருடைய மணவாழ்க்கை, மிக்க இன்பமாகவே ஆரம்பித்தது. 1917-ஆம் வருஷ நவம்பர் மீ", ஜவாஹர்-கமலா தம்பதிகளுக்கு, அவர்களுடைய ஒரே அருமை மகளான இந்திரா பிறந்தாள்.

8. தந்தையின் மனமாற்றம்

முதல் உலக மகா யுத்தம், 1918-ஆம் ஹூ நவம்பர் மீ முடிவடைந்தது. இந்தியாவில் அரசியல் சீர்திருத்த ஆவல் ஒரு பக்கம் ; என்ன நிகழுமோ என்ற கவலையும் பயமும் மறுபக்கம்.-இப்படி இரண்டுவகை உணர்ச்சிகள் எழுந்தன. ஏனென்றால், ஒருபுறம் அரசியல் சீர்திருத்தம் வழங்குவ தாகச் சொல்லிக்கொண்டே, மறுபுறம் கொடிய அடக்கு முறை ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்துகொண் டிருந்தார் கள். மாண்ட் போர்டு அரசியல் சீர்திருத்த யாதாஸ்து 1918 ஆம் ஹூ ஜூலை மீ 8உ வெளியாயிற்று. ஆனால், அதே ஹூ அதே ஜூலை மீ 19 தேதி ரௌலட் கமிட்டி யாதாஸ்து என்ற கோர அடக்குமுறைச் சிபாரிசுகளும் வெளியாயின. ராஜத்துவேஷ வழக்குகளில் ஜூரிகளோ அசெசர்களோ வேண்டியதில்லை ; அப்பீல் கிடையாது ; சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யத் தேவையில்லை; சர்க்கார் யாரை வேண்டுமானாலும், சந்தேகத்தின்பேரில் பந்தோபஸ் துக் கைதி யாக்கிவிடலாம்.-இப்படியெல்லாம் சிபாரிசுகள் செய்தது ரௌலட் கமிட்டி. இந்தச் சிபாரிசுகளைப் பின் பற்றி, இந்திய சர்க்கார் ஒருசட்டமும் செய்துவிட்டார்கள். மகாத்மா காந்தி அப்போதுதான் கடுமையான நோயி லிருந்து மீண்டிருந்தார். இந்த ரௌலட் சட்டத்துக்கு, இந்திய வைசிராய் தமது அங்கீகாரத்தை அளிக்கவேண்டா மென்று, வைசிராயை மகாத்மா கெஞ்சிக் கேட்டுக்கொண் டார். அந்த வேண்டுகோளும், பிறர் வேண்டுகோள்களு மெல்லாம் வீணாயின. காந்திஜி, தமது முதல் முதலான அகில இந்தியக் கிளர்ச்சிக்குத் தலைமை பூண்டு நடத்தத் தொடங்கிவிட்டார். சத்தியாக்கிர சபை ஒன்று அமைத் தார். “ரௌலட் சட்டம் அமுலுக்கு வந்தால், அதன்

ஷரத்துக்களையும் வேறு அவ்வப்போது குறிப்பிடப்படும் ஆட்சேபகரமான சட்டங்களையும் மீறி நடக்கிறோம்'' என்று சத்தியாக்கிரக சபையின் அங்கத்தினர்களெல்லாம் ஒரு பிரதிக்ஞையில் கையெழுத்திட்டார்கள். இந்தப் பிரதிக்ஞையை மகாத்மாவே தயாரித்தார். இப்படி ஒரு சத்தியாக்கிரகம் தொடங்கப்போவதாக மகாத்மா விடுத்த வேண்டுகோளை முதல் முதலில் பத்திரிகைகளில் படித்த உடனே ஜவாஹர் பரமானந்தம் கொண்டார். தாம் உடனே இந்தச் சத்தியாக்கிரக சபையில் சேரவேண்டு மென்று துடித்தார். "ஆஹா! ஒரு வழியும் புரியாமல் தவித்த நிலையிலிருந்து, கடைசியாக ஒரு மார்க்கம் பிறந்து விட்டது. நேரடியாய்ச் செயல்புரிய ஒரு பாதை திறந்து விட்டது'' என்ற எண்ணந்தான் அவரது ஆனந்தத்துக்குக் காரணம். சட்டங்களை மீறுவதென்றால், என்ன அர்த்தம்? தானாகச் சிறையைத் தேடி அடைவதல்லவா? இதைப்பற்றி யெல்லாம் அவர் நினைக்கவில்லை; நினைத்தாலும் இதற் கெல்லாம் கவலைப்படவில்லை. காந்தி வழியிலே இறங்கி விடுவதென்று அவர் எண்ணினார். ஆனால், அது அவ்வளவு சுலபமாக இல்லை. தந்தை மோதிலால் நேரு, இந்தப் புதிய வழியிலே இறங்க எளிதிலே சம்மதிக்கவில்லை. மகனின் விருப்பத்தை மோதிலால் அடியோடு எதிர்த்தார். தந்தை யின் மனத்தை மாற்றுவது ஜவாஹருக்குப் பெரும் பாடாய்ப் போயிற்று.

புதிய திட்டம் எதையுமே மோதிலால் சட்டென்று ஏற்கமாட்டார். அதிலும், காந்திஜியின் சத்தியாக்கிரகத் திட்டம் அவருக்குப் பிடிக்கவேயில்லை. ஆயிரக் கணக் கான மக்கள் தாமாகச் சிறை செல்வதாக வைத்துக் கொள்வோம். சர்க்காருக்கு என்ன நஷ்டம்? அவர்கள் சிறிதேனும் மசிவார்களோ? தவிர, தம்முடைய செல்வ மகன் ஜவாஹர் சிறைக்குச் செல்வதா? என்ன அநியாயம்! ஐயோ! சிறை என்றால், என்ன கஷ்டமாயிருக்குமோ?

— இப்படியெல்லாம் அவர் யோசித்து மனம் வாடினார். சிறையிலே ஜவாஹர் தரையில் படுத்துறங்க வேண்டியிருக்குமே என்று நினைத்தபோது, மோதிலாலின் மனம் பதறியது. தரையில் படுத்தால் எப்படியிருக்கும் என்று அறிவதற்காக, உண்மையில் தாமே ஒருநாள் வீட்டிலே தரையில் படுத்து உறங்கிப் பார்த்தார். கடைசியில், காந்திஜியோடு சம்பாஷிப்பதற்காக, அவரை மோதிலால் அலஹாபாத்துக்கு வருமாறு வேண்டிக்கொண்டார். அவரும் அப்படியே வந்துசேர்ந்தார்.

காந்திஜியும் மோதிலாலும் நீண்ட சம்பாஷணைகள் நடத்தினார்கள். சம்பாஷணைகளின்போது, ஜவாஹர் பிரசன்னமாயில்லை. ஆனால், சம்பாஷணைகளின் பலனாக, ஜவாஹருக்கு மகாத்மா புத்திமதி கூறலானார்: " அவசரப்பட்டு உங்கள் தகப்பனாருக்கு மனவருத்தம் உண்டாகும்படி எதுவும் செய்துவிடாதீர்கள் " என்று அவர் சொன்னார். ஜவாஹருக்கு இது வருத்தமாயிருந்தது. ஆனால், நாட்டில் நடந்த சில சம்பவங்களால், நிலைமை அடியோடு மாறிவிட்டது. சத்தியாக்கிரக சபையின் வேலைகள் நிறுத்தப்பட்டன.

1919-ஆம் ௵ ஏப்பிரல் 6-ஆம் தேதி சத்தியாக்கிரக தினம் கொண்டாடவேண்டுமென்று மகாத்மா கட்டளையிட்டிருந்தார். அகில இந்தியாவிலும் மிக வெற்றிகரமாக அது கொண்டாடப்பட்டது. நாடெங்கும் அமைதியாக ஹர்த்தால் நடந்தது. ஆனால், மார்ச்சுமீ 3-ஆம் தேதி டில்லியில் ஒரு சிறு கலவரம் நிகழ்ந்தது. போலீஸாரும் ராணுவத்தினரும் சேர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இதனால் மனம் புண்பட்ட மக்களைச் சாந்தப்படுத்துவதற்காக, காந்திஜி ஏப்பிரல் 8-ஆம் தேதி டில்லிக்குப் புறப்பட்டார். ஆனால், பஞ்சாபிலும், டில்லியிலும் நுழையக்கூடாதென்று அவருக்குச்சர்க்கார் தடையுத்தரவு போட்டனர். அதற்குக் கீழ்ப்படிய மகாத்மா மறுத்தார்.

அவரைப் போலீஸார் கைது செய்து, தனி ரெயிலில் பம்பாய்க்குக் கொண்டுபோய் விட்டுவிட்டார்கள். ஆனால், மகாத்மா கைதியான செய்தி இந்தியாவின் மூலை முடுக்கி லெல்லாம் ஜனங்கள் கொந்தளிக்கும்படி செய்துவிட்டது. ஜனங்களை அடக்கும் காரியத்தில் அதிகாரிகளும் வெறி யாட்டம் ஆடிவிட்டார்கள். அஹமதாபாதில் சிறு கலகம் நடந்தது. அங்கே ராணுவச் சட்டம் அமலுக்கு வந்தது. அது சில நாளைக்குள்ளே வாபஸ் ஆயிற்று. ஆனால், பஞ்சாபில் அமிர்தஸரஸில் நடந்த கொடுமைதான் இந்தியரின் இருதயத்திலே என்றும் ஆறாத புண்ணை உண்டாக்கிவிட்டது. தங்களுக்கு வந்த ஆத்திரத்தில் ஜனங்கள் ஹத்துமீறி உன்மத்தம் கொண்ட சில செயல் களைச் செய்துவிட்டார்கள். அதற்கு வட்டியும் முதலுமாய் மாளாத் துன்பங்களை அவர்கள் அனுபவித்தார்கள்.

ஏற்கனவே, காந்திஜி கைதியான செய்தி கேட்டு மக்கள் பரபரப்படைந்திருந்தார்கள். பாஞ்சாலத் தலைவர் களான டாக்டர் கிச்லு, டாக்டர் சத்யபால் என்ற இரு வரும் ஏப்ரல் 10-ஆம் தேதி கைது செய்யப்பட்டார்கள் என்று அறிந்ததும், ஜனங்களுடைய பரபரப்பு உச்ச நிலையை அடைந்தது. இரு தலைவர்களையும் விடுதலை செய்யு மாறு டெபுடி கமிஷனரை வேண்டிக்கொள்ள ஒரு பெரிய ஜனக்கூட்டம் போயிற்று. அந்தக் கூட்டத்தை நோக்கி அதிகாரிகளின் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. ஜனங் களுக்குத் தலைகால் புரியவில்லை. கலகத்தில் இறங்கினார் கள். பாங்கிகள், தபாலாபீஸ்கள், பிற சர்க்கார் காரியாலயங்களையெல்லாம் கொள்ளையிட்டுக் கொளுத் தினார்கள். சில ஐரோப்பியரைக் கொன்றார்கள். இரண்டு பெண்களைத் தாக்கினார்கள். ஆயினும் வெகு சீக்கிரத்திலே கலகத்தை அதிகாரிகள் அடக்கிவிட்டார்கள்.

அப்போது மைக்கேல் ஓட்வியர் பஞ்சாப் கவர்னர். அவர் ஆட்சியின் கீழே அமிர்தசரஸ் நகரம் ராணுவ

அமலுக்கு உட்பட்டது. ஜெனரல் டயர் ஏப்ரல் மீ 11-ஆம் தேதி இரவு அந்த நகரத்துக்கு வந்துசேர்ந்தார். நகரத்தை அவர் வசம் அதிகாரிகள் ஒப்பித்தார்கள். அன்று தினமோ மறுநாளோ நகரில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை. 13-ஆம் தேதி ஜலியன்வாலாபாக்கில் ஒரு பொதுக்கூட்டம் நடக்கப்போவதாக, எவரோ சிலர் விளம்பரம் செய்தார்கள். ஜலியன்வாலாபாக் என்பது ஒரு காலி மைதானம். எவராவது கூட்டம் கூடினால், அவர்களைச் சுட்டு வீழ்த்துவோம் என்று ஜெனரல் டயர் ஒரு தடையுத்தரவு போட்டிருந்தார். ஜலியன்வாலாபாக்கில் கூட்டம் நடக்கப்போவதாகக் கேள்விப்பட்ட உடனே, ஜெனரல் டயர் தம்முடைய துருப்புகளைக் கூட்டிக்கொண்டு மெஷின் பீரங்கி சகிதம் அந்த ஸ்தலத்துக்கு விரைந்து வந்து சேர்ந்தார். அன்று ஹிந்துக்களுக்கு ஏதோ ஓர் உற்சவ நாள். ஆண்களும் பெண்களும் குழந்தை குட்டிகளுமாக, சுமார் 20,000 மக்கள் ஜலியன்வாலாபாக்கில் கூடியிருந்தார்கள். ஜலியன்வாலாபாக் நாலுபுறமும் அடைப்புகளுள்ள இடம். வானளாவிப் பல மாடிகள் உள்ள வீடுகள் சுற்றிலும் சூழ்ந்திருந்தன. ஒரு பக்கத்தில் மட்டும் சுமார் நூறு அடி தூரத்துக்கு வீடுகள் இல்லை. ஆனால், அங்கேயும் சற்றேறக்குறைய ஐந்து அடி உயரம் உள்ள ஒரு சுவர் இருந்தது. அந்த இடத்திலிருந்து வெளியேற ஒரே ஒரு வழிதான் உண்டு.

அந்த வழியை அடைத்துக்கொண்டு ஜெனரல் டயரும் அவருடைய 'வீரர்'களும் வந்து நின்றுகொண்டார்கள். கூட்டத்திலிருந்த ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்யவில்லை. செத்து விழுகிறவர்களைத் தூக்கவோ, காயம்படுகிறவர்களுக்கு உதவிசெய்யவோ ஏற்பாடு எதுவும் மேற்கொள்ளவில்லை. தாம் வந்துசேர்ந்த அரை நிமிஷ நேரத்துக்குள், ஜனங்களை ஜெனரல் டயர் தமது மெஷின் பீரங்கிகொண்டு சுடத் தொடங்கிவிட்டார்.

எங்கே கூட்டம் அடர்த்தியாயிருந்ததோ அங்கேபார்த்துச் சுட்டார். ஜனங்கள் சடசட என்று சாய்ந்தனர். ஓட ஒரு வழியும் காணுமல், பலர் அந்தத் தனித்த சுவர்மீது தாவினுர்கள். உடனே டயரின் மெஷின் பீரங்கி, அந்தச் சுவரை நோக்கித் திரும்பியது. தப்பியோடச் சுவர்மேல் ஏறியவர்கள், சுவரின் இருபக்கங்களிலும் படபட என்று துடித்துச் சுருண்டுவிழுந்து உயிர்விட்டார்கள். டயர் சுட்டார். இன்னும் சுட்டுக்கொண்டே இருந்தார். மேலும் மேலும் சுட்டார். “கையிலிருந்த தோட்டாக்கள் தீரும்வரையில் சுட்டேன்” என்று அவரே பின்னுல் கர்வத்தோடு கூறினுர். 1400 தோட்டாக்கள் வரையில் டயர் சுட்டார். சுமார் 500 அல்லது 600 ஜனங்கள் ஸ்தலத்திலேயே மாண்டு விழுந்தார்கள். இந்த எண்ணிக்கையைப்போல் மூன்று மடங்கு ஜனங்கள் காயம் அடைந்தார்கள். இதுதான் ஜலியன்வாலாப் படுகொலை என்பது. இது போக, எங்கே இரண்டு ஆங்கிலப் பெண்கள் தாக்கப்பட்டார்களோ அந்தக் குறுகிய தெரு வழியாக எவர் வந்தாலும் சரி அப்படி வருபவரைப் புழுவைப்போல் வயிறு தரையில் பதிய ஊர்ந்து செல்லும்படி டயர் உத்தரவு போட்டார். இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் பிறகு, அமிர்தசரஸ், லாகூர், குஜரத், லயால்பூர் ஆகிய ஜில்லாக்களில் ராணுவச் சட்டம் அமலுக்குவந்தது. கண்ணியம்வாய்ந்த பிரமுகர்கள் பலர் உட்பட ஏராளமான மக்கள் கைதுசெய்யப்பட்டார்கள். சிலருக்குக் கசையடி விழுந்தது. இன்னும் என்ன என்னவோ சொல்லொணுக் கொடுமைகளுக்கு ஜனங்கள் ஆட்பட்டார்கள். நிராயுதபாணிகளான ஜனங்களின்மீது விமானக் குண்டுகளையும்கூட அதிகாரிகள் வீசினுர்கள்.

ஆனுல், பஞ்சாபிலே என்ன நடக்கிறதென்று வெளியாருக்குத் தெரியாது. பஞ்சாபிலிருந்து வரும் சகல செய்திகளையும் சர்க்கார் தடுத்துவிட்டார்கள். வெளியார் எவரையும் பஞ்சாபுக்கு உள்ளே போகவும் அனுமதிக்கவில்லை.

அந்த நகரத்திலிருந்து யாரோ ஒருவர் இருவர் தப்பித்தவறி வெளியே வருவார்கள். அவர்கள் அடைந்திருந்த பீதியிலே, என்னவோ உளறிக்கொட்டுவார்கள். பஞ்சாபில் என்ன தான் நடக்கிறதென்று தெளிவாக அவர்களுடைய வாய்ப் பிறப்பிலிருந்து அறிந்துகொள்ள முடியாது. ஜவாஹரும் வேறு சில இளைஞர்களும் பகிரங்கமாகப் பஞ்சாபுக்குள் சென்று ராணுவச்சட்ட விதிகளை மீறவேண்டுமென்று துடித்தார்கள். அவர்களைப் பெரியவர்கள் தடுத்துவிட்டார்கள்.

சில மாத காலத்தில் ராணுவச்சட்ட ஆட்சி வாபஸாயிற்று. வெளியார் பஞ்சாபுக்குள் வருவதை அதிகாரிகள் தடுக்கவில்லை. துன்பப்பட்ட பஞ்சாப் மக்களுக்குக் கஷ்ட நிவாரண உதவிகள் புரிய, மாளவியாஜி, சுவாமி சிரத்தானந்தர் ஆகியவர் தலைமையில் ஒரு கோஷ்டியார் வேலை செய்தார்கள். பஞ்சாப் கொடுமைகளை விசாரிக்க ஒரு கமிட்டியைக் காங்கிரஸ் நியமித்தது. இந்தக் கமிட்டியில் தேசபந்து தாஸும் மோதிலால்நேருவும் முக்கிய ஸ்தானம் வகித்தார்கள். காந்திஜியை அவ்வப்போது எல்லோரும் ஆலோசனை கேட்டுக்கொண்டார்கள். அமிர்தசரஸ் பிரதேசத்தில் விசாரணை புரியும் வேலையைத் தேசபந்து முக்கியமாய் ஏற்றுக்கொண்டார். அவருக்கு உதவிபுரிய ஜவாஹர் துணைசென்றார். ஜவாஹருக்குத் தேசபந்துவிடம் ஏற்கனவேயிருந்த அன்பும் மதிப்பும் இந்த விசாரணையின்போது அதிகமாயின.

மகாத்மா காந்தியையும் பண்டித ஜவாஹர் இந்தப் பஞ்சாப் விசாரணையின்போதுதான் அடிக்கடி நெருங்கிக் காண வசதி ஏற்பட்டது. காந்திஜியின் யோசனைகளெல்லாம் கமிட்டியாருக்கு விசித்திரமாயும் புதுமையாயும் இருந்தன. அவைகளை அவர்கள் அங்கீகரிப்பதில்லை. ஆனால், அவர் எப்படியோ வாதித்து, எப்போதும் தம் யோசனைகளைக் கமிட்டியார் அங்கீகரிக்கும்படி செய்துவந்தார்.

பின்னால் நிகழ்ந்த சம்பவங்கள், காந்திஜியின் யோசனைகளே சரி என்று நிரூபித்துவிட்டன. ஜவாஹருக்கு மகாத்மாவின் ராஜீய தீர்க்கதிருஷ்டியில் இருந்த நம்பிக்கை இதிலிருந்து வரவர அதிகமாக வளர்ந்தது.

பஞ்சாப் விசாரணையால், பண்டித மோதிலாலின் மனம் முற்றும் மாறிவிட்டது. சட்டத்தைப்பற்றியும் சட்ட வரம்புக்குட்பட்ட கிளர்ச்சியைப் பற்றியும் அவர் கொண்டிருந்த நம்பிக்கைகளெல்லாம் அடியோடு ஆட்டமெடுத்து விட்டன. மகனின் வழிக்குத் தாமும் திரும்பி, மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கத்தில் இறங்க மோதிலால் தீர்மானித்துவிட்டார். ஜவாஹரிடம் மோதிலால் கொண்டிருந்த பேரன்பும், இப்படி அவர் மனம் திரும்பியதற்கு ஒரு முக்கியமான காரணமாகும்.

ஒத்துழையாமையில் இறங்க மோதிலால் தீர்மானித்ததன் பலனாக, அவருடைய வீட்டிலே பற்பல மாறுதல்கள் ஏற்பட்டன. தாம் லட்சம் லட்சமாய்ச் சம்பாதித்து வந்த வக்கீல் தொழிலை அவர் விட்டுவிட்டார். லட்சக் கணக்கில் சம்பாதித்தபோது, லட்சக்கணக்கிலேயே செலவிட்டு ராஜபோகமாய் வாழ்ந்தவராதலால், பின்னுக்கு வேண்டுமென்று பெரும் பொருள் ஒன்றும் அவர் சேர்த்து வைக்கவில்லை. ஆகையால், முன்போல் செலவிட முடியாதல்லவா? முதலில் தம்முடைய பல குதிரைகளையும் வண்டிகளையும் விற்றார். வீட்டிலே ஒரு பட்டாளம் வேலைக்காரர்கள் இருந்தார்கள். அவர்களிலும் சிலரை நீக்கவேண்டியதாயிற்று. விசேஷ விருந்துகளையெல்லாம் மோதிலால் கைவிட்டார். டிரெஸ்டனிலிருந்தும், வெனிஸ் நகரிலிருந்தும் வந்த அழகு மிகுந்த பீங்கான் சாமான்களையும் கண்ணாடிகளையும் மனோகரமான பல வேறு பண்டங்களையும் விற்றுவிட்டார். தமது அறுபதாம் வயதில் பற்பல பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டார். தொழில், அரசியல், சமூக வாழ்வு அனைத்திலும் நீண்ட

காலமாய்ப் பழகி வந்த பல நண்பர்களை இழந்தார். நேரு குடும்பத்தின் வாழ்க்கை மலையிலிருந்து மடுவில் விழுந்ததுபோல் மாறிவிட்டது.

மோதிலாலின் வீட்டில் இப்பேர்ப்பட்ட மாறுதல்கள் ஏற்படுவதற்குமுன்பு, ஓர் அதிசயமான சம்பவம் நிகழ்ந்தது. ஆனந்தபவனின் பின்புறத்தில் மோதிலாலுக்குச் சொந்தமான பல சிறிய வீடுகள் இருந்தன. அவைகளில், நிலக்கரி, விறகு முதலிய சாமான்களைப் போட்டு வைப்பார்கள். விறகு இருந்த சிறிய வீடு ஒன்றில், ஒரு பெரிய நல்லபாம்பு வெகுநாளாக இருந்துவந்தது. அது யாரையும் கடித்ததில்லை; யாருக்கும் எவ்விதமான தொந்தரவு கொடுத்ததும் இல்லை. அதைக் கண்டு எவரும் பயப்படுவதில்லை; கவலைப்படுவதும் இல்லை. வேலைக்காரர்கள் நடுராத்திரியில் கொஞ்சமும் தயங்காமல் அந்தச் சிறிய வீட்டுக்குள் போவார்கள். வீட்டை வாழவைக்கும் மனைப் பாம்பு என்றே அதை அவர்கள் எல்லோரும் எண்ணியிருந்தார்கள். 1920-ஆம் ஆண்டு புதிதாய் வந்த ஒரு வேலைக்காரன் ஒருநாள் மாலையில் அந்தப் பாம்பைக்கண்டு பயந்து அதை அடித்துக் கொன்றுவிட்டான். பழைய வேலைக்காரர்களும் வீட்டு எஜமானி சொரூப ராணியும் இந்த விஷயத்தைக் கேட்டு, "குடும்பத்துக்கு என்ன அனர்த்தம் நேரப் போகிறதோ!" என்று பயந்தார்கள். இதற்கேற்றபடி, சில நாளைக்கெல்லாம், மோதிலால் தொழிலை விட்டார். திரு, மகள் நடனமாடிய மாளிகை, ஏழையின் வீடுபோல் பொலிவிழந்தது. "இவையெல்லாம் பாம்பின் சாவால் விளைந்த துரதிருஷ்டங்கள்" என்றே வேலைக்காரர்கள் பேசிக்கொண்டார்கள். அவை நேரு குடும்பத்துக்குத் துரதிருஷ்டங்களோ என்னவோ; ஆனால், தேசத்துக்குப் பெரும் பாக்கியமாகவே முடிந்தன.

9. கிராமங்களிலே திரிதல்

1919 - ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் காலத்தில் அமிர்தசரஸ் காங்கிரஸ் நடைபெற்றது. இதற்குப் பண்டித மோதிலால் நேரு தலைமை வகித்தார். இதுதான் முதல் முதலான 'காந்தி' காங்கிரஸ். இந்தக் காங்கிரஸுக்கு லோக மான்ய பாலகங்காதர திலகரும் வந்திருந்தார்; அவர் இதன் விவாதங்களில் விசேஷமாய்ப் பங்கும் எடுத்துக் கொண்டார். என்றாலும், இந்தக் காங்கிரஸின் பெரும் பாலான பிரதிநிதிகள் - அவர்களையும்விட முக்கியமாய் வெளியில் கூடியிருந்த திரள் திரளான ஜனங்கள்- தங்களுக்கு வழிகாட்டக் காந்திஜியையே எதிர்பார்த்தார் கள். 'மகாத்மாகாந்திக்கு ஜே!' என்ற கோஷமே இந்திய அரசியல் வானத்தில் தலைதூக்கி நிற்கத்தொடங்கியது.

முதல் மகாயுத்தத்தில் துருக்கி, பிரிட்டனின் சத்துரு நாடாகவே இருந்தது. என்றாலும், யுத்த காலத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருந்த லாயிட் ஜார்ஜ், துருக்கியைச் சிதைப்பதில்லையென்றும், இஸ்லாம் மதத் துக்கு ஊறு செய்வதில்லையென்றும் உறுதி கூறியிருந்தார். ஆனால், சமாதான உடன்படிக்கை வரும்போது, பிரிட்ட னின் இந்த உறுதிமொழியெல்லாம் காற்றாய்ப் பறந்து போயிற்று. இந்திய முஸ்லீம்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்தார்கள். முக்கியமாக, அரேபியாவில் உள்ள முஸ்லீம் புண்யஸ்தலங்களெல்லாம் இஸ்லாத்துக்குப் பிரதம தலைவரான அதாவது கலீபாவான துருக்கி சுல்தான் வசமே இருக்கவேண்டும் என்று அவர்கள் கிளர்ச்சி செய் தார்கள். இதுதான் கிலாபத் கிளர்ச்சி என்பது. இந்தக் கிளர்ச்சியை மகாத்மா காந்தி பரிபூர்ணமாக ஆதரித்தார். இது சம்பந்தமாகக் காந்திஜியின் தலைமையில் தீவிரமாய்

ஒத்துழையாமைப் போர் புரியவும் இந்திய முஸ்லீம்கள் பேருற்சாகத்துடன் முன்வந்தார்கள். பண்டித ஜவாஹர் இந்தக் கிளர்ச்சியில் காந்திஜியை மிகவும் பலமாய்ப் பின் பற்றினர். காந்திஜியின் அதிகாரத் தொனியும் அந்தரங்க சுத்தியும் பணிவும் உறுதியும் ஊக்கமும் ஜவாஹரின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. இந்தக் குணங் களைத் தாமும் வளர்த்துக்கொள்ள ஆவல்கொண்டு, அந்த முயற்சியில் அவர் வெற்றியும் பெற்றுவிட்டார்.

1920-ஆம் ஸு வரையில் பண்டித ஜவாஹருக்கு ஆலைத் தொழிலாளர்களின் கஷ்டங்களும் குடியானவர்களின் துய ரங்களும் தெரியாமல் இருந்தன. அவருடைய அரசியலெல் லாம் மத்தியதர வகுப்பாரின் அரசியலாகவே இருந்து வந்தது. 1920-ஆம் வருஷத்தில்தான் முதல் முதலாக, குடியானவர்களிடம் நெருங்கிப்பழகி அவர்களுடைய நிலைமையை அறிந்துகொள்ள அவருக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பம் ஏற்பட்ட விதமே ஒரு விசித்திரமான கதையாகும்.

ஜவாஹரின் தாய் சொரூப ராணியும் மனைவி கமலா வும் தேக அசௌக்கியம் அடைந்தார்கள். அவர்களை அவர் ஆரோக்கிய ஸ்தலமான முசோரிக்கு அழைத்துச் சென்றார். அப்போது மோதிலால் ஒரு பெரிய ராஜாவின் வியாஜ்யத்தை நடத்திக்கொண்டிருந்தார். எதிர்த் தரப்பில் தேசபந்து தாஸ் ஆஜராயிருந்தார். ஜவாஹர் குடும்பம் முசோரியிலுள்ள ஸேவாய் ஹோட்டலில் தங்கியிருந்தது. அப்போது ஆப்கன் நாட்டுக்கும் பிரிட்டனுக்கும் ஒரு சிறிய யுத்தம் நடந்து சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடங்கியிருந்தன. ஆப்கன் தூதர்களும் ஸேவாய் ஓட்டலிலேயே வந்து இறங்கியிருந்தார்கள். அவர்கள் யாருடனும் கலக்காமல் ஒதுங்கியே இருந்துவந்தார்கள். இந்த நிலையில் திடீரென்று ஒருநாள் போலீஸ் சூப்பரிண் டெண்டு, ஸ்தல சர்க்காரின் ஒரு கடிதத்தோடு அங்கே

வந்துசேர்ந்தார். "இந்த ஆப்கன் தூதர்களுடன் நான் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்வதில்லை" என்று ஜவாஹரிடம் எழுதி வாங்கும்படி அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது! ஜவாஹருக்கு அவர்கள் யாரென்றே தெரியாது. அவர்கள் ஒரு மாத காலமாக அங்கே வந்திருந்தும், அவர்களில் யாருடனும் அவர் பேசியதும் இல்லை. இது அந்த சூப்பரிண்டெண்டுக்கே நன்ருய்த் தெரியும். ஏனென்ருல், அவர் அந்தத் தூதர்களை நெருங்கியிருந்து உளவு பார்த்து வந்திருக்கிருர். அப்படியிருந்தும், இந்த மாதிரி உத்தரவு வந்தது வீசித்திரமாகும். இப்படி எழுதிக் கொடுக்க ஜவாஹருக்கு இஷ்டமில்லை. ஆகையால், அவர் மறுத்துவிட்டார். இதன்மேல், இருபத்துநாலுமணி நேரத்துக்குள் டேராடூன் ஜில்லாவை விட்டு ஜவாஹர் வெளியேற வேண்டுமென்று அவருக்கு உத்தரவு வந்தது. அப்போது சட்டமறுப்பு இயக்கம் ஒன்றும் இல்லாததால் அவர் டேராடூனை விட்டு வெளியேறிஞர்.

அந்த நாட்களில் ஸர் ஹார்க்கோர்ட் பட்லர் ஐக்கிய மாகாணத்தின் கவர்னராய் இருந்தார். அவர் மோதிலால் நேருவுக்கு நண்பர். அவருக்கு மோதிலால் நட்பு முறையில் ஒரு கடிதம் எழுதிஞர். "இந்த முட்டாள்தனமான உத்தரவை நீங்கள் போட்டிருக்கமாட்டீர்கள் என்பது நிச்சயம். சிம்லாவில் உள்ள யாரோ மேதாவிதான் இதைப் போட்டிருக்கவேண்டும்" என்று அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். "உத்தரவு என்னவோ தீங்கில்லாததுதானே? ஜவாஹர் இதற்குக் கீழ்ப்படிந்துவிடட்டுமே. அதனுல், அவருக்கு ஒன்றும் கௌரவக் குறைவு வராது" என்று பதிலளித்தார் கவர்னர். மோதிலால் இதை ஒப்புக்கொள்ளவில்லை. "வேண்டுமென்றே இந்த உத்தரவை மீறும் நோக்கம் என மகனுக்குக் கிடையாது. ஆனுல், அவன் தாய் அல்லது மனைவியின் தேக அசௌக்கியம் கடுமையானுல், உத்தரவு எக்கேடு கெட்டாலும் சரிதான், அவன்

ஜவாஹர் குடும்பம்

முசோரிக்குப் போகத்தான் போவான்" என்று கவர்னருக்கு அவர் எழுதிவிட்டார். நிலைமையும் அப்படித்தான் ஆயிற்று. சொரூப ராணியின் உடல்நிலை மோசமடைந்தது. மோதிலாலும் ஜவாஹரும் தட்சணமே முசோரிக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் புறப்படச் சிறிதுநேரத்துக்கு முன்பு சர்க்காரிடமிருந்து ஒரு தந்தி வந்தது: தடை உத்தரவை ரத்துசெய்துவிட்டதாகத்தான் தந்தி.

தந்தையும் மகனும் முசோரிக்குப் போய்ச் சேர்ந்த மறுநாள் காலையில், ஹோட்டல், முற்றத்தில் முதல் முதலாக ஜவாஹர் சந்தித்த மனிதர் யார் தெரியுமா ? ஓர் ஆப்கானியர்தாம். அவர் ஜவாஹரின் குழந்தை மகளைத் தமது புஜத்திலே அணைத்துத் தூக்கிக் கொஞ்சிக்கொண்டிருந்தார். அந்த ஆப்கானியர் வேறு யாரும் அல்ல. ஆப்கன் தூதுக்கோஷ்டியாரில் ஒருவரேயாவார். ரகசியம் என்னவென்றால், ஜவாஹருக்கு வெளியேற்ற உத்தரவு வந்தவுடனே, அந்தச் செய்தி பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கிறது. அதை ஆப்கன் தூதுக் கோஷ்டியார் படித்திருக்கிறார்கள். "அடடா ! நமக்காக இப்படி ஒருவருக்குத் தடை உத்தரவெல்லாம் பிறந்துவிட்டதா ? அவர் யாரப்பா !" என்று எண்ணி, ஜவாஹரைப்பற்றி அறிய அவர்கள் ஆவல்கொண்டு விட்டார்கள். தூதுக்கோஷ்டியின் தலைவர், தினந்தோறும் ஜவாஹரின் தாய் சொரூப ராணிக்குக் கூடை பழங்களும் மலர்களும் அனுப்பிவரத் தொடங்கிவிட்டார் !

இந்த வெளியேற்ற உத்தரவுக் காலத்தில் ஜவாஹர் இரண்டுவாரம் அலகாபாத்தைச் சுற்றிலுமுள்ள கிராமங்களில் திரிந்தார். அப்போதுதான் முதல் முதலாகக் குடியானவர்களின் இயக்கத்தில் அவர் பலமாகச் சிக்கிக் கொண்டார். அவர்களின் துயரக் கதைகளையெல்லாம் கேட்டு அவர் மனம் உருகிவிட்டார். இதிலிருந்து இரண்டு வருஷ காலம், அதாவது 1920 முதல் 1921 வரையில்,

ஜவாஹர் பெரும்பாலும் கிராமங்களிலேயே சுற்றித் திரிந்து, ஏழைக் குடியானவர்களின் குறைகளையெல்லாம் அறிந்துகொண்டார் ; விவசாயிகளின் இயக்கம் வளர்ந்து வலிபெற்று வருவதையும் அவர் கண்டுகொண்டார் ; கிராம மக்களிடம் அவருக்கு மிக்க செல்வாக்கும் ஏற்பட்டது.

அயோத்தியில் குடியானவர்களின் நிலைமை மகா மோசமா யிருந்தது. அப்படி யிருந்தும் குடியானவர்களெல்லாம் முற்றும் அஹிம்சையைக் கடைப்பிடித்தார்கள். ஓரே ஒரு குடியானவன் மட்டிலுமே ஹிம்சையில் இறங்கினான். அதுவும் எப்படி? ஒரு தாலுக்தார் தமது வீட்டில் நண்பர்கள் புடைசூழ உட்கார்ந்திருந்தார். இந்தக் குடியானவன் அந்தக் கூட்டத்துக்கு நடுவே நுழைந்தான். கொலு வீற்றிருக்கும் தாலுக்தாரை நோக்கி, "ஏ! ஒழுக்கங் கெட்டவனே! உன் பெண்-சாதியை ஏன் கொடுமையாய் நடத்துகிறாய்?" என்று ஆத்திரத்துடன் கேட்டுக்கொண்டே தாலுக்தாரை விட்டான் ஓர் அறை. இந்தச் சம்பவத்தை அல்லாமல் வேறு விபரீதம் ஏதும் நடக்கவில்லை. ஜவாஹரின் பிரசாரம் அவ்வளவு தூரம் குடியானவர்களிடம் அஹிம்சையைப் பரப்பிவிட்டது.

10. முதல் சிறைவாசம்

1920-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் லாலா லஜபதிராயின் தலைமையில் காங்கிரஸின் விசேஷ மகாசபை ஒன்று கூடியது. இந்தக் கூட்டத்திலிருந்துதான் காங்கிரஸின் சரித்திரத்தில் காந்தி சகாப்தம் ஆரம்பம் ஆகியது. முதல்முதலாக, ஒத்துழையாமைத் தீர்மானம் இந்தக் கூட்டத்தில்தான் நிறைவேறியது. பட்டங்களைத் துறப்பது ; சர்க்கார் அலுவல்களில் ஒத்துழைக்க மறுப்பது; கலாசாலைகள், கோர்ட்டுகள், சட்டசபைகளைப் பகிஷ்கரிப்பது ; அந்நியத் துணியைப் பகிஷ்கரிப்பது - ஆகிய திட்டங்களைக் காங்கிரஸின் இந்தக் கூட்டந்தான் அங்கீகரித்தது.

இதற்கு முன்னெல்லாம் காங்கிரஸுக்கு வரும் பிரதிநிதிகள், துரைமாரைப்போல் தொப்பி, சராய்களைப் போட்டுக்கொண்டிருப்பார்கள். இந்தக் காங்கிரஸுக்குப் பின்னே அந்த வேஷமெல்லாம் போய்விட்டது. ஏழை நடுத்தர வகுப்பு மக்களே பிரதிநிதிகளாய் வரத்தொடங்கினார்கள். எல்லோரும் கதர் உடுத்தலானார்கள். பேசுவது பெரும்பாலும் ஹிந்துஸ்தானி அல்லது மாகாண பாஷை; இங்கிலீஷ் அமுங்கிவிட்டது.

கல்கத்தாக் காங்கிரஸ் முடிந்தபோது, 'அமிர்த பஜார்' பத்திரிகையின் ஆசிரியர் மோதிலால் கோஷ் நோயுற்றுப் படுத்த படுக்கையாய் இருந்தார். அவரைப் பார்த்துவர, காந்திஜி சென்றார். காந்திஜியுடன் ஜவாஹரும் போனார்.

காந்திஜியையும் அவருடைய இயக்கத்தையும் மோதிலால் பாபு ஆசீர்வதித்தார். மேலும், அவர் சொன்னார்: "என் சம்பந்தப்பட்ட மட்டில், நான் வேறு லோகத்துக்

குப் போய்விடப்போகிறேன். அது எங்கே இருக்கிறதோ அறியேன். ஆனால், எனக்கு ஒரே ஒரு திருப்தி. அந்த லோகம் எங்கே இருந்தாலும் சரிதான். அது இந்தப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இல்லாத இடமாய்த்தான் இருக்கும். கடைசியாய், இந்த ஏகாதிபத்தியம் எட்டாத இடத்துக்கு நான் போய்ச் சேரப்போகிறேன்" என்றார்.

அடுத்த மூன்று மாச காலத்தில், நாடெங்கும் ஒத்துழையாமை இயக்கம் வலுத்தது. சட்டசபைப் பகிஷ்காரம் வெற்றி அளித்தது. ஸ்தானங்கள் காலியில்லை; யார் யாரோ நுழைந்துவிட்டார்கள். ஆனாலும், வாக்காளர்களில் மிக ஏராளமான பேர் ஓட்டுப்போடவே இல்லை.

1921-ஆம் ஹு தேசமெங்கும் ஒரு புதிய உணர்ச்சி எழுந்தது. மூவகைப் பகிஷ்காரம் பிரமாதமாய் வலுத்தன. பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இந்திய ராணுவத்தை நம்பலாமா? தங்கள் கட்டளைகளைப் போலீஸார் நிறைவேற்றுவார்களா? இப்படி ஒரே சந்தேகம். தாங்கள் ஒன்றுமே புரியாமல் தவித்ததாக, 1921-ஆம் ஹு டிசம்பரில் வைசிராய் ரீடிங் பிரபுவே கூறினார். "சத்துருக்கள் (அதாவது காங்கிரஸ் காரர்) எப்போதும் முந்திவிடுகிறார்கள். இனி, நாம் முந்த வேண்டும்" என்று ஒரு விசித்திரமான ரகசியச் சுற்று உத்தரவையும் ஐக்கிய மாகாண சர்க்கார் பிறப்பித்தார்களாம்.

அதிகாரிகளுக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் எதைக் கண்டாலும் கிலியாயிருந்தது. ஜவாஹரின் சகோதரி விஜயலட்சுமிக்கு மேமீ 10-ஆம் தேதி விவாக முகூர்த்தம் வைத்திருந்தார்கள். 1857-ஆம் ஹு இதே தேதியில்தான் மீரத்தில் சிப்பாய்க் கலகம் ஆரம்பித்ததாம். ஆகையால், விஜயலட்சுமியின் விவாக முகூர்த்தத்தை, அந்தச் சிப்பாய்க் கலகக்கொண்டாட்டம் என்பதாக அதிகாரிகள் மருண்டுவிட்டார்கள். அலகாபாத் நகரில்இருந்த ஒவ்வோர்

இங்கிலீஷ்காரரும் அன்றுவரையில் ஜேபியில் ரகசியமாய் ரிவால்வரை வைத்துக்கொண்டு நடமாடினார்களாம். அவசியமானல், அவர்களுக்கெல்லாம் அடைக்கலம் அளிக்க, அலகாபாத்துக் கோட்டையையும் சர்க்கார்சித்தம் செய்துவைத்தார்களாம். 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற மாதிரி கதைதான்!

1921-ஆம் ஆு டிசம்பரில் நிலைமை உச்சத்தை எட்டியது. திரள்திரளான ஜனங்களைச் சர்க்கார் கைது செய்தார்கள். அப்போது வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்திருந்தார். அவரது விஜயத்தைக் காங்கிரஸ் பகிஷ்கரித்தது. டிசம்பரீ 6-ஆம் தேதி மாலை, முதல் முதலாகப் போலீஸார் 'ஆனந்த பவ'னில் நுழைந்தார்கள். தந்தையையும் மகனையும் கைது செய்தார்கள். அன்று தொடங்கி, யாரையாவது கைது செய்யவோ, அபராதத் தொகை வசூலிப்பதற்காக ஏதாவது ஜப்தி செய்யவோ, போலீஸார் அந்த மாளிகைக்கு அடிக்கடி வருவது சர்வ சகஜமாகிவிட்டது.

'மோதிலாலையும் ஜவாஹரையும் கைதுசெய்யப் போலீஸார் வருகிறார்கள்' என்று கேட்டதும், 'ஆனந்த பவ'னில் நீண்ட நாட்களாக வேலை பார்த்த ஊழியர் சிலர் சினங்கொண்டார்கள். "போலீஸாரை அடித்துநொறுக்கி, மதில்சுவர்களுக்கு அப்பால் தூக்கி எறிந்துவிடுவோமா?" என்று பேசிக்கொண்டார்கள். அன்னை சொரூப ராணி அவர்களை, "மடத்தனமாக ஏதாவது செய்துவிடாதே யுங்கள்" என்று எச்சரித்ததன் பேரில்தான், அவர்கள் சும்மா இருந்தார்கள்.

மறுநாள், மோதிலாலும் ஜவாஹரும் ஜில்லா மாஜிஸ்டிரேட்டால் விசாரிக்கப்பட்டார்கள். இருவருக்கும் ஆறு ஆறு மாதம் காவல் தண்டனை கிடைத்தது. சிறை செல்லும்போது மோதிலால் ஓர் அறிக்கை விடுத்தார்; "என் ஒரே மகனோடு சிறை செல்கிறேன். இதன்

மூலம் என் தாய்நாட்டுக்குத் தொண்டுபுரியும் பெரும் பேறு பெற்றேன்" என்று அதன் இடையே குறிப்பிட்டார்.

வேல்ஸ் இளவரசர் எங்கே சென்றாலும் தெருக்கள் அனைத்தும் பாழாயிருந்தன. எங்கே பார்த்தாலும் கைது செய்வதும், தண்டனை வழங்குவதும் மும்முரமாயின. தம் இச்சையாய், சுமார் முப்பதாயிரம் மக்கள் சிறை புகுந்தார்கள்.

ஆனால், இந்த இயக்கத்துக்கெல்லாம் மூலகர்த்தா வான மகாத்மா காந்தி மாத்திரம் இன்னமும் வெளியே தான் இருந்தார். அவர் ஒவ்வொரு நாளும் ஜனங்களுக்குக் கட்டளை விடுத்துக்கொண்டிருந்தார். அவரைக் கைது செய்தால் என்ன விபரீதம் நேருமோ என்று அரசாங்கம் பயந்து கிடந்தது.

1922-ஆம் ௵ பிப்ரவரி ௴ நிலைமை முற்றும் மாறியது. சௌரிசாரா என்ற கிராமத்துக்கு அருகில் சில ஜனங்கள் ஆத்திரங்கொண்டு பலாத்காரத்தில் இறங்கி, ஒரு போலீஸ் ஸ்டேஷனைக் கொளுத்திவிட்டார்கள். அதில் இருந்த இருபத்தொரு போலீஸ் கான்ஸ்டபிள்களும் ஒரு போலீஸ் சப்இன்ஸ்பெக்டரும் பஸ்மம் ஆகிவிட்டார்கள். உடனே, மகாத்மாகாந்தி தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தை நிறுத்தினார். "ஹிமாலயம்போன்ற பிழை செய்துவிட்டேன்" என்று பகிரங்கமாய் வருந்தினார். இயக்கம் நின்றது. பல மாதகாலம் கவலையுடன் திணறிக்கொண்டிருந்த சர்க்கார், 'அப்பாடா' என்று மூச்சுவிட்டார்கள். சில வார காலத்துக்கெல்லாம் காந்திஜியைக் கைது செய்தார்கள். இயக்கம் நடத்தியதற்காக அல்ல ; 'யங் இந்தியா'வில் மூன்று கட்டுரைகள் எழுதியதற்காக! அஹமதாபாது ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜி முன் விசாரணை நடந்தது. காந்திஜி ஆறுவருஷக் காவல் தண்டனை பெற்றார்.

எங்கேயோ யாரோ சில ஜனங்கள் ஆத்திரத்தால் பலாத்காரம் புரிந்ததற்காக, சத்தியாக்கிரக இயக்கத்தையே மகாத்மாஜி நிறுத்தியது சரியா? சிறையிலிருந்த ஜவாஹரும் தோழரும் சரியல்ல என்றே அச்சமயம் எண்ணினார்கள். இதனால் காந்திஜியிடம் அவர்கள் கோபமும் கொண்டார்கள். ஆனால், சிறைக்குள்ளிருந்து கொண்டு என்ன செய்ய முடியும்?

மூன்றே மாசத்தில் ஜவாஹரை அதிகாரிகள் விடுதலை செய்தார்கள். அவரைத் தவறுதலாகத் தண்டித்ததாகக் காரணம் சொன்னார்கள். ஆனால், மோதிலாலை விடுதலை செய்யவில்லை. ஜவாஹர் விடுதலையடைந்ததும், காந்திஜியைப் பார்க்க ஓடினார். அவர் போகுமுன், காந்திஜி கைதியாகி, சபர்மதிச் சிறையில் இருந்தார். சிறையிலே அவரை ஜவாஹர் பேட்டி கண்டார். மகாத்மாவின் வழக்கு விசாரணையையும் நேரில் பார்த்தார். மறக்கமுடியாத அந்தக் காட்சியைக் கண்டு, மன உருக்கத்தோடு ஊர் திரும்பினார்.

நாலைந்து வாரம் சென்றதும், அன்னியத் துணிக்கடை மறியல் செய்யத் தீர்மானித்ததற்காக, ஜவாஹர் மீண்டும் கைதியாகி, ஒன்றேமுக்கால் வருஷக் காவல் தண்டனையும் பெற்றார்.

லட்சுமணபுரிச் சிறையில் ஜவாஹரும் பிற சத்தியாக்கிரகிகளும் தேகாப்பியாசத்துக்காகக் காம்பவுண்டுக்குள் சுற்றிச்சுற்றி ஓடுவார்கள். இரண்டு இரண்டு பேராய்ச் சேர்ந்து கவலை மாடுகளைப்போல், தங்கள் சிறிய தோட்டத்துக்குத் தண்ணீர் இறைப்பார்கள். பெரும்பாலோர் தினந்தோறும் சிறிது சிறிது நூல்நூற்பார்கள். ஆனால், ஜவாஹர் மட்டில் பெரும்பாலான நேரத்தைப் படிப்பிலே கழித்துக்கொண்டிருப்பார். சூப்பரிண்டெண்டு எப்போது வந்தாலும் அவர் படித்துக்கொண்டேயிருப்பதைக் கண்டு எரிச்சல் கொள்வார். அதை ஜவாஹரிடம் சொல்லவும்

சொல்லிவிட்டார். "எப்போது பார்த்தாலும் இதென்ன படிப்பு! நான் எனது பன்னிரண்டாவது வயதிலேயே என் படிப்பை முடித்துவிட்டேனே" என்ருர். படித்தால்யோசிக்கத் தோன்றும். எதற்கு அந்த உபத்திரவமெல்லாம்? அந்த வீர இங்கிலீஷ் கர்னல் தமது படிப்பைச் சின்னஞ் சிறு வயதிலேயே துறந்த பெருமையால்தான், பின்னுல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தியோகம் வரையில் உயர்ந்துவிட்டார் போலிருக்கிறது என்று ஜவாஹர் கேலி செய்கிருர்.

சிறை வாழ்க்கையில் எத்தனையோ பொருள்களைக் காணமுடியாது. அங்கே காதில் விழும் ஒலிகளோ கர்ணகடூரமாய் இருக்கும். முரட்டுக் குரலும் கொச்சை வசவுகளும் சர்வ சகஜமாய்க் கிளம்பும். பெண்களின் இனிய குரலையும், குழந்தைகளின் மழலைச் சிரிப்பையும் என்று கேட்கப் போகிருேம் என்ற ஏக்கம் எந்தக் கைதிக்கும் உண்டாகும். ஆனுல், ஒரு சமயம் ஜவாஹருக்கு இன்னெரு அதிசயமான மனக்குறை உண்டாயிற்று. "அடேடே! ஒரே ஒரு நாய் குலைக்கும் சத்தத்தைக் கேட்டு ஏழெட்டு மாசம் ஆகிவிட்டதே!" என்று அவர் மனம் மறுகிருராம்!

1923-ஆம் ஞு ஜனவரி மாதம் **31**-ஆம் தேதி லட்சுமணபுரி சிறையிலிருந்த சகல அரசியல் கைதிகளும் விடுதலை அடைந்தார்கள். தந்தை மோதிலாலும், மகன் ஜவாஹரும் 'ஆனந்தபவன்' போய்ச் சேர்ந்தார்கள். பல நாளாய் மௌனம் குடிகொண்டிருந்த அந்த மாளிகையில், மீண்டும் மோதிலாலின் வசீகரச் சிரிப்பொலி கலகலவென்று கேட்கலாயிற்று. வீட்டிலுள்ளோர் பழைய மகிழ்ச்சியையும் அமைதியையும் மீண்டும் பெற்ருர்கள்.

11. வெளிவந்தபோது

பண்டித ஜவாஹர் சிறையிலிருந்து வெளிவந்தபோது நாட்டிலே பற்பல மாறுதல்கள் நிகழ்ந்திருப்பதைக் கண்டார். காந்திஜியின் தலைமையில் ஜவாஹருக்கு நம்பிக்கை குன்றவில்லை. ஆனால், காந்திஜியின் திட்டத்தில் பல அம்சங்கள் அவருக்குச் சரியென்று தோன்றவில்லை. காந்திஜியோ யாருக்கும் எட்டாமல் சிறையில் இருந்தார். ஆகவே, அவரிடம் ஆலோசனை கேட்க வழியில்லை.

1922-ஆம் ஹூ டிசம்பர் மாதக் கடைசி வாரத்தில் தேசபந்து தாஸின் தலைமையில் கயையில் நடந்த காங்கிரஸில், இரண்டு கட்சிகள் தோன்றின. தேசபந்து தாஸின் தலைமையில் மாறுதல் வேண்டுவோர் கட்சி எழுந்தது. அது சட்டசபைப் பிரவேசம் செய்யவேண்டும் என்றது. ராஜாஜி தலைமையில் அமைந்த மாறுதல் வேண்டாதோர் கட்சி, புதிய கட்சியை எதிர்த்தது. ராஜாஜி கட்சியே வெற்றிபெற்றது. சிறையிலிருந்து வெளிவந்த ஜவாஹருக்கு இரண்டு கட்சிகளுமே பிடிக்கவில்லை. சட்டசபைப் பிரவேசம் அவருக்கு அடியோடு வெறுப்பாயிருந்தது. மாறுதல் வேண்டாதோரின் திட்டமாவது பிடித்ததா ? அரசியல் நடவடிக்கை வேண்டுமென்று அவர் விரும்பினார். மாறுதல் வேண்டாதோரின் திட்டமெல்லாம், வெறும் சமூகச் சீர்திருத்தமாகவே அவருக்குத் தோன்றியது. இரண்டு கட்சிகளுந்தான் பிடிக்கவில்லை. வேறே என்ன செய்வது ? ஜவாஹர் ஒன்றுமே புரியாமல் குழம்பியிருந்தார்.

இந்நிலையில், அவருக்குப் புதியதொரு செயல் துறை கிடைத்தது. நாடெங்கும் காங்கிரஸ் தலைவர்கள் முனிஸிபல் நிர்வாகத்தைக் கைப்பற்றினார்கள். தேசபந்து தாஸ்

கல்கத்தா மேயரானார். விட்டல்பாய் படேல் பம்பாய்க் கார்ப்பொரேஷனின் தலைவரானார். சர்தார் படேல் அஹமதாபாது முனிசிபாலிட்டியின் தலைவரானார். அலகாபாது முனிஸிபாலிட்டியின் தலைவர் பதவிக்குக் காங்கிரஸ் தரப்பில் யார் போட்டியிடுவது ? தேர்தல் நடக்க முக்கால் மணி நேரத்துக்கு முன் வரையில், ஜவாஹரின் பெயரே பிரஸ்தாபத்துக்கு வரவில்லை. ஆனால் காங்கிரஸ் தரப்பில் போட்டியிட்டு வெல்லக் கூடியவர் அவர் ஒருவர்தாம் என்று கடைசிநேரத்தில் முடிவாயிற்று. ஜவாஹர் யோசிப்பதற்கே அவகாசம் இல்லை. அந்தப் பதவி அவர் தலையில் சுமந்தது. ஏற்கனவே, ஜவாஹர் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாயிருந்தார். இப் போது இந்த வேலையும் சுமந்தது. நகர நிர்வாகத்தில் அவர் பெரிதும் ஊக்கம் எடுத்துக்கொண்டார். பற்பல சீர்திருத்தங்கள் புரிந்து, நல்ல பெயரும் வாங்கினார்.

ஜவாஹர்லால் சிறையிலிருந்து வெளிவந்ததும், முதல் முதலாக அவர் கண்ணில் பட்டது ஒரு ரசமான கடிதம். அந்தக் கடிதத்தை ஜவாஹருக்கு எழுதியவர் அலகாபாத்து ஹைகோர்ட் பிரதம ஜட்ஜி ஸர் கிரிம்வுட் மீயர்ஸ். கடிதத்தின் வாசகத்தில் அன்பு ததும்பியது. "அடிக்கடி நாம் சந்திக்கவேண்டும்" என்று ஜவாஹரை ஜட்ஜி அழைத்திருந்தார். ஜவாஹருக்கு இதற்குமுன் அவரை யாரென்றே தெரியாது. அவருக்கும் இவரை நன்றாய்த் தெரிய வழியில்லை. என்றாலும், ஜவாஹரிடம் ஜட்ஜிக்கு என்னவோ ஒரு விசேஷப் பிரியம் விழுந்தது.

ஜட்ஜியின் அழைப்புக்கிணங்கி அவரை ஜவாஹர் பலமுறை சந்தித்தார். ஜட்ஜியும் ஏதாவது ஒரு முனிஸிபல் வரியை ஆட்சேபிக்க வருபவர்போல் சாக்குச் சொல்லிக் கொண்டு, ஜவாஹரை வந்து காண்பார். ஆனால், சம்பாஷணை மட்டில் எங்கெங்கேயோ தாவும். ஜட்ஜி ஒரு சமயம் இந்திய மிதவாதிகளைப்பற்றி மிக்க வெறுப்போடு

பேசினார். "அவர்களிடம் எங்களுக்குத் துளி மதிப்பாவது உண்டு என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்றார் ஜட்ஜி. ஜவாஹருக்கு இனிக்கப் பேசவேண்டும் என்பதே ஜட்ஜி யின் நோக்கமாயிருக்கவேண்டும். இதன் பின்பு, புதிய சட்டசபைகளையும் மந்திரிகளையும்பற்றிப் பேச்சுத் திரும்பியது. ஜட்ஜி சொன்னார்:

"மக்களுக்குச் சேவைபுரிய, இந்த மந்திரிகளுக்கு எவ் வளவோ சந்தர்ப்பம் இருக்கிறது. நாட்டின் சகல பிரச்னை களிலும் கல்விதான் ஜீவாதாரமானது. ஒரு கல்வி மந்திரி பூரண சுயேச்சையோடு காரியம் செய்வாரானால், கோடிக் கணக்கான ஜனங்களின் தலைவிதியை அவர் மாற்றிவிட முடியாதா? உங்கள் மாதிரி புத்திக் கூர்மையும், குண மும், லட்சியமும், உழைப்பும் உள்ள ஒருவர் கல்வி மந் திரியாயிருந்தால், எத்தனையோ அற்புதங்கள் புரிந்து விடலாமே! நான்கூடச் சமீபத்தில் கவர்னரைச் சந்தித் துப் பேசிக்கொண்டிருந்தேன். உங்கள் கொள்கைப்படி வேலை செய்ய, உங்களுக்குப் பூர்ண சுதந்தரம் அளிப்ப தாக என்னிடம் அவர் உறுதி கூறியிருக்கிறார்."

இவ்வாறு ஜட்ஜி மேலே மேலே அடுக்கிக்கொண்டு போனார். இங்கே சட்டென்று அவர் ஜாக்கிரதைப்பட் டார். தாம் அளவுக்கு மிஞ்சிப் போய்விட்டதாக உணர்ந்துகொண்டார். ஆகவே, "இருந்தாலும், உத்தி யோக முறையில் யாரையும் நான் கட்டுப்படுத்த முடி யாது. நான் சொன்னதெல்லாம் முற்றும் என் சொந்த யோசனையேயாகும்" என்று ஜட்ஜி தமது பேச்சை முடித்தார்.

சுற்றி வளைத்துக்கொண்டு தந்திரமாக ஜட்ஜி பேசிய பேச்சு, ஜவாஹருக்குத் தமாஷாய் இருந்தது. அந்நிய சர்க்காரின் கீழ் ஒரு மந்திரியாகச் சேர்ந்து உழைப்பது என்ற யோசனை, அவர் மனத்திலும் நினைக்க முடியாத தாகும். ஆனால், எத்தனை நாள்தான் நாம் இப்படியே

ஒத்துழையாமையும், போராட்டமும், அழிவு வேலையு மாய்க் காலந்தள்ளுவது? நம் குழந்தைகளும் பேரன்மார் களுந்தாம் ஆக்க வேலை புரியப்போகிருர்களோ? இந்த மனக்கிளர்ச்சி மட்டில் அவருக்கு உண்டாயிற்று.

இதற்கிடையில், தேசபந்து தாஸின் மாறுதல் வேண்டும் சுயராஜ்யக் கட்சி வலுத்தது. தந்தை மோதிலால் நேரு, தாஸின் நெருங்கிய தோழரும் துணைவருமானுர். மகன் ஜவாஹரையும் தம் கட்சிக்கு இழுக்க, தேசபந்து முயன்ருர். ஜவாஹர் மசியவில்லை. மகன் தன் இஷ்டப்படி நடந்துகொள்ளட்டும் என்று தந்தை விட்டுவிட்டார்.

1923-ஆம் ஞு செப்டம்பரில் நடந்த டில்லிக் காங் கிரஸில் தேசபந்து தாஸ் வெற்றிபெற்ருர். சட்டசபைப் பிரவேசத்தைக் காங்கிரஸ் அனுமதித்துவிட்டது. இந்த நாட்களில் தாஸூம் மோதிலாலும் மிக நெருங்கிய நட்புக் கொண்டார்கள். வெறும் ராஜீயத் தோழமை அல்ல; ஆப்த சிநேகிதர் ஆகிவிட்டார்கள். ஒருவரை யொருவர் முன் கூட்டிக் கலந்துகொள்ளாமலே, மற்றவரின் கையெழுத்தைத் தமது அறிக்கையில் இருவரில் எவரும் தாமாகவே போட்டுக்கொண்டு விடுவார்கள். பரஸ்பரம் அவ்வளவு நம்பிக்கை.

பாட்டியாலா, நாபா இந்த இரண்டின் சீக்கிய மகா ராஜாக்களுக்கும் 1923-ஆம் ஞு பலமான சொந்தச் சச்சரவு ஏற்பட்டது. அதன் பலனுக, நாபா மகாராஜா வைச் சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிட்டு, பிரிட்டிஷ் நிர்வாகி ஒருவரை நாபாவில் ஆள இந்திய சர்க்கார் நியமித்துவிட்டார்கள். சீக்கியர் இதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். அதன் இடையே ஒரு சட்ட மறுப்பு இயக்கம் கிளம்பியது. அதைப் பார்த்து வருவதற் காக, ஜவாஹர் மற்றும் இரு நண்பர்களோடு அங்கே சென் ருர். மூவரையும் நாபா போலீஸார் கைது செய்தார்கள். மூவர் கையிலேயும் விலங்கு மாட்டி வீதிவழியே இழுத்துச்

சென்றார்கள். மூவரையும் ஒருவரோடு ஒருவர் சேர்த்து விலங்கிட்டு, அசுத்தமான ஒரு சிறைக்குள் தள்ளினார்கள். அவர்கள் தூங்கவும் முடியவில்லை; உட்காரவும் முடியவில்லை. மேலெல்லாம் எலிகள் குதித்தோடின. இரண்டு நாள் கழித்து விசாரணை தொடங்கியது. படிக்காத ஜட்ஜி ஒருவர் விசாரணை நடத்தினார். எதிரிகளுக்கு நியாயமாய் உள்ள என்ன உரிமையைக் கேட்டாலும், நாபா சட்டத்தில் அதற்கு இடம் இல்லை என்று சொல்லி அவர் மறுத்து விட்டார். வெளி வக்கீல் ஒருவரைத் தாங்கள் அமர்த்திக் கொள்ள விரும்புவதாக, ஜவாஹர் சொன்னார். அதற்கும் "நாபா சட்டத்தில் இடமில்லை" என்ற கிளிப்பிள்ளைப் பதில் தான் கிடைத்தது. "அப்படியானால், நீங்கள் என்னவேண்டு மானாலும் செய்துகொள்ளுங்கள். உங்கள் விசாரணையில் நாங்கள் கலந்துகொள்ளப்போவதில்லை" என்று ஜவாஹரும் நண்பர்களும் சொல்லிவிட்டார்கள். சாட்சிகளெல்லாம் ஒரே பொய் மயம். பல நாள்வரை ஒரு ஜட்ஜி விசாரித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் அவர் அன்றைய விசாரணையை முடித்துவிட்டு எழுந்துபோன பிறகும், இவர்களைக் கோர்ட்டிலேயே வைத்திருந்தார்கள். ஒரு நடிகருக்குப் பின்னே இன்னொரு நடிகர் பிரவேசிப்பது போலவே, திடும் என்று மற்றொரு ஜட்ஜி அங்கே வந்து தோன்றினார். இவர்கள்மீது வேறொரு வழக்கு இருப்பதாகச் சொல்லி, இரண்டாவது ஜட்ஜி அதை விசாரிக்கத் தொடங்கினார்.

வழக்கு நடந்துகொண்டேயிருக்கையில், இடையில் ஒருநாள், தந்தை மோதிலால், மகனைப் பார்க்க வந்தார். "நான் எதிர்வாதமே செய்யப்போவதில்லை. ஆகையால், நீங்கள் போங்கள்; நடந்தது நடக்கட்டும்" என்று சொல்லி, அவரை ஜவாஹர் திருப்பி அனுப்பிவிட்டார். ஆனாலும், கபிலதேவ மாளவியா என்ற ஒரு வாலிப வக்கீலை, அங்கேயே இருந்து விசாரணையைக் கவனித்து

வரும்படி சொல்லிச் சென்றார் மோதிலால். அந்த வக்கீல் கோர்ட்டில் இருக்கையிலேயே, சில போலீஸார் அவரிடம் சென்று, அவர் கைவசமிருந்த சில தஸ்தாவேஜிக்களைப் பலவந்தமாய்ப் பிடுங்க முயன்றார்கள்.

எல்லாம் ஓரே கேலிக் கூத்தாயிருந்தது. இரண்டு வாரம் இப்படியே இழுத்துக்கொண்டுபோன பின்பு, மூவருக்கும் தனித்தனி சுமார் இரண்டு இரண்டு வருஷக் காவல் தண்டனை கிடைத்தது.

தண்டனைக்குப் பிறகு இரண்டு உத்தரவுகள் பிறந்தன. தண்டனைகளை 'சஸ்பெண்டு' செய்திருப்பதாக ஓர் உத்தரவு. எதிரிகள் உடனே நாபாவை விட்டு வெளி யேற வேண்டும் என்றும், அனுமதியின்றித் திரும்பவும் நாபாவுக்குள் வரக்கூடாதென்றும் மற்றோர் உத்தரவு. உத்தரவுகளைப் போலீஸார் காட்டினார்களே யொழிய, அவைகளுக்கு நகல் கேட்டதற்குக் கொடுக்க மறுத்து விட்டார்கள். இவர்கள் மூவரும் அன்றிரவே, ரெயிலில் நாபாவை விட்டு வெளியேறினார்கள்.

இவ்விதம் ஒரு சுதேச சமஸ்தானத்தின் நிர்வாக அவந்தரையை முதல் முதலாக நாபாவில் கண்ட ஜவாஹர் அது முதல் சுதேச சமஸ்தானப் பிரஜைகளின் காங்கிரஸ் வளரும் விஷயத்தில் மிகுந்த அக்கறை எடுத்து உழைத்து வரலானார்.

12. சில அனுபவங்கள்

1923-ஆம் ஆண்டு டிசம்பர் மாதக் கடைசியில், மௌலானா முகம்மதலியின் தலைமையில், காக்கினாடாக் காங்கிரஸ் நடைபெற்றது. முகம்மதலிக்கு ஜவாஹரிடம் விசேஷமான பிரியம். ஆகையால், ஜவாஹர் காங்கிரஸின் காரியதரிசியாயிருக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். அதிலிருந்து, ஜவாஹர் பல வருஷங்கள் மீண்டும் மீண்டும் எப்படியோ காங்கிரஸ் காரியதரிசியாயிருக்க நேர்ந்தது.

அந்த வருஷம் முகம்மதலியும் ஜவாஹரும் மிக்க ஒற்றுமையாகவே வேலைசெய்தார்கள். ஆனால், சில சின்ன விஷயங்களில் மட்டும் இருவருக்கும் தகராறு வந்துவிடும். காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களின் பெயர்களை, முன் பின் மரியாதைக் குறிகளோ பட்டங்களோ சேர்க்காமல் வெறுமையே எழுதும் வழக்கத்தை ஜவாஹர் புகுத்தினார். மஹாத்மா, மௌலானா, பண்டிட், ஷேக், ஸையத், முன்ஷி, மௌல்வி, ஸ்ரீயுத், ஸ்ரீ, மிஸ்டர்; எஸ்குயர் இந்த ஒன்றுமே வேண்டாமென்று அவர் விட்டு விட்டார், உடனே, முகம்மதலி பறந்துகொண்டு ஒரு தந்தியடித்தார்: "பழையபடி பட்டங்களை யெல்லாம் போடுங்கள்; முக்கியமாக, காந்திஜியை மகாத்மா காந்தி என்றே எழுதுங்கள்" என்றது தந்தி.

ஜவாஹருக்கும் முகம்மதலிக்கும் ஓயாமல் அடிக்கடி நடந்த இன்னொரு விவகாரம் கடவுளைப்பற்றியது. காங்கிரஸின் எந்தத் தீர்மானமாயிருந்தாலும் சரிதான், முகம்மதலி எப்படியாவது அதற்குள்ளே கடவுளைப் புகுத்தி விடுவார். ஜவாஹர் ஆட்சேபிப்பார். "நாஸ்திகம், நாஸ்திகம்" என்று முகம்மதலி சீறுவார். மதவிஷயத்தைப்பற்றி, முகம்மதலியுடன் மேற்கொண்டு விவாதிக்க

ஜவாஹர் விரும்புவதில்லை. அவருடைய மனம் நோகும் படி ஏதும் சொல்ல நேருமோ என்ற அச்சத்தால், ஜவாஹர் தாமாகவே ஒதுங்கிவிடுவார்.

1924-ஆம் ஹு டிசம்பர் மீ பெல்காமில் நடந்த காங்கிரஸுக்கு மகாத்மா காந்தி தலைமை வகித்தார். அவரும் ஜவாஹரை அடுத்த வருஷக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கச் செய்துவிட்டார். காங்கிரஸின் பொதுக் காரியதரிசிகளுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற ஒரு யோசனை அந்தக் காங்கிரஸில் எழுந்தது. காரியதரிசிகளில் ஒருவரான ஜவாஹர், இந்த யோசனையை வரவேற்ருர். குறைந்த பட்சம் ஜீவனத்துக்குப் போதிய ஊதியமாவது அளிக்காமல், ஒருவரிடம் முழுநேர வேலை வாங்குவது நியாயம் அல்ல என்று அவர் கருதினுர். இப்படிச் சம்பளம் வாங்கக் கூடாதென்று, ஜவாஹரிடம் மோதிலால் பலமாய் ஆட்சேபித்தார். "பணத்துக்கு நான் உங்களையே சார்ந்திருக்க வேண்டியிருக்கிறதே!" என்று தந்தையிடம் நேரே சொல்லாமல், மறைமுகமாவும் மிகத் தளுக்காகவும் ஜவாஹர் ஒரு சமயம் தெரிவித்தார். "இதென்ன முட்டாள்தனம்! பொது ஜன சேவை செய்யாமல், உன் நேரம் முழுவதையுமோ அல்லது அதில் பெரும் பகுதியையோ சொற்பப் பணம் சம்பாதிப்பதிலே ஈடுபடுத்துவது சரியா? நான் இரண்டே இரண்டு நாள் உழைத்தேனுனல், அதனுல் கிடைக்கும் பணம் உனக்கும் உன் மனைவிக்கும் வருஷம் பூராவும் செலவு செய்யப் போதுமே!" என்று பதில் அளித்தார் மோதிலால். இதற்கு மேல் பேச ஜவாஹருக்கு வாயில்லை.

காக்கினுடாக் காங்கிரஸுக்குப் போய்விட்டு அலகாபாதுக்கு ஜவாஹர் திரும்பியபோது, ஒரு ரஸமான சம்பவம் நடந்தது. அலகாபாத்தில் கங்கையும் யமுனையும் கூடுகின்றன. அங்கே சரஸ்வதியும் வந்து சேர்ந்துகொள்வதாக ஓர் ஐதீகம். இந்த இடத்துக்குத் திரிவேணி என்று

பெயர். இங்கே கும்பமேளத்துக்காக ஏராளமான ஜனங்கள் ஸ்நானம் செய்ய வந்தார்கள். ஆனால், இந்த வருஷம் வெள்ளம் பிரமாதமாயும் இழுப்பு மிகுந்தும் இருந்ததால் திரிவேணியில் யாரும் ஸ்நானம் செய்யக் கூடாதென்று சர்க்கார் தடையுத்தரவு போட்டுவிட்டார்கள். பண்டித மதன்மோகன மாளவியா அதை ஆட்சேபித்தார். சர்க்கார் கேட்கவில்லை. இருநூறு ஜனங்கள் கொண்ட ஒரு கூட்டத்தோடு மாளவியாஜி சத்தியாக்கிரகம் செய்யக் கிளம்பிவிட்டார்.

ஜவாஹருக்கு இந்தச் சங்கதியெல்லாம் ஒன்றும் தெரியாது. இந்தப் புண்ணிய ஸ்நான விஷயத்திலும் அவருக்கு எவ்வித நம்பிக்கையும் கிடையாது. கும்பமேளத்தன்று காலையில் கூட்டத்தை வேடிக்கை பார்ப்பதற்காக, அவர் கங்கைக் கரைக்குப் போனார். மாளவியாஜியின் சத்தியாக்கிரகம் அப்போதுதான் ஜவாஹருக்குத் தெரியவந்தது. சர்க்காரின் தடை உத்தரவு மிக்க நியாயம் என்பதே ஜவாஹரின் கருத்து. ஆயினும், சர்க்கார் தங்களுடைய அதிகாரத்தைக் காட்டிய தோரணை அவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, மாளவியாஜியின் சத்தியாக்கிரக ஸ்நானப் படையில், உடனே ஜவாஹரும் சேர்ந்துகொண்டார்.

ஜனங்கள் நதியில் இறங்கமுடியாமல், சர்க்கார் இரும்புக் கம்பிகளை நட்டுப் பெரிய வேலி போட்டிருந்தார்கள். சத்தியாக்கிரக கோஷ்டியார் அந்த வேலியருகே போய்ச் சேர்ந்ததும், அவர்களைப் போலீஸார் தடுத்துவிட்டனர். இவர்கள் கையோடு கொண்டுபோன ஏணியையும் அவர்கள் பிடுங்கிக்கொண்டார்கள். மாளவியாஜியின் அஹிம்சா தர்மப் படை வீரர்கள், அப்படியே மணலில் ‘ ஜம் ’ என்று உட்கார்ந்துவிட்டார்கள். சூரியன் கிளம்பி வெயிலும் வரவர உக்கிரமாயிற்று. சத்தியாக்கிரகிகள் மணிக் கணக்காய் உட்கார்ந்திருக்கிறார்கள். போலீ

ஸார் ஒன்று இவர்களைக் கைதாவது செய்ய வேண்டும்; அல்லது இவர்களுக்கு வழியாவது விட வேண்டும். இரண்டும் இல்லை. வெகு நேரமாகியும் ஒருவித விமோசனத்தையும் காணோம். வாலிப ஜவாஹருக்கோ இதைப் பொறுக்கமுடியவில்லை. தமக்குப் பக்கத்திலிருந்த சில தோழர்களை நோக்கி, "நாம் இந்த வேலியைத் தாண்டிக் குதிப்போம்" என்று யோசனை சொன்னார். முதலில் தாமே அதன்மீது தாவி ஏறினார். மற்றும் பலர் அவரைப் பின்பற்றி வேலியில் தொத்தினார்கள். சிலர் ஒன்றிரு கம்பிக் கால்களைப் பிடுங்கி, ஆள் புகக்கூடிய வழியும் செய்தார்கள். போலீஸ் குதிரை வீரர்கள் முரட்டுத்தனமாக ஒன்றும் செய்யவில்லை. தங்கள் தடிகளால் ஜனங்களை மறித்துப் பின்னால் மட்டும் தள்ளிக் கொண்டிருந்தார்கள்.

ஜவாஹரிடம் இந்தச் சமயத்தில் யாரோ ஒரு தேசீயக் கொடியைக் கொடுத்தார். அதை அவர் வேலிக்கம்பம் ஒன்றில் உயரக் கட்டிவிட்டு, அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தார். பெரிய புரட்சி நடத்துவதுபோல அவர் மனத்தில் பிரமாதமான பரபரப்பு உண்டாயிற்று. கடைசியில் ஜவாஹர் மறுபக்கத்தில் குதித்தார். வெகுநேரம் வெயிலில் புழுங்கிய எரிச்சல் தீர, ஜில்லென்று தண்ணீரில் குதித்து, சுகமாய்க் கங்கா ஸ்நானம் செய்தார்; திரும்பி வந்தார். இங்கே மாளவியாஜியும் அவருடைய படை வீரர்கள் பலரும் முன்போலவே வெயிலில் வெகு அமைதியாக இன்னமும் உட்கார்ந்திருக்கக்கண்டு ஜவாஹர் ஆச்சரியமடைந்தார். சரியென்று தாமும் பழையபடி மாளவியாஜியின் பக்கத்தில் நல்ல பிள்ளையாகப் போய் உட்கார்ந்து கொண்டார்.

கடைசியாக, மாளவியாஜிக்கே இந்த நிலைமை சகிக்கவில்லை. அவர் திடீரென்று எழுந்தார். குதிரைகளுக்கும் காலாள் போலீஸாருக்குமிடையிலே புலிபோல் பாய்ந்தார்.

சாதாரணமாக, யார் செய்தாலுமே இது ஒரு தீரமான காரியம். தள்ளாத கிழவர் மாளவியாஜி இப்படிச் செய்தது பேராச்சரியமாகும். மற்றவரும் அவரைப் பின்பற்றினார்கள். அவர்களைத் தடுக்கச் சிறிதுநேரம் வரையில் முயன்றபோலீஸார், பின்பு அந்த முயற்சியைக் கைவிட்டுப் போய்விட்டனர்.

ஜவாஹரும் பிறரும் அநேகமாகத் தங்கள்மீது சர்க்கார் ஏதாவது வழக்குத் தொடரக்கூடும் என்றே எதிர்பார்த்தார்கள். ஆனால், "மாளவியாஜிமீது வழக்குத் தொடரச் சர்க்காருக்கு விருப்பமில்லைபோல் தோன்று கிறது. ஆகவே, சின்ன மீன்களும் தப்பித்துக்கொண்டன" என்கிறார் ஜவாஹர்.

1924-ஆம் ஆு ஜனவரி மாதத்தில் சிறையில் மகாத்மா காந்திக்குக் கடுமையான குடல் நோய் உண்டாயிற்று. அதற்காக ஆஸ்பத்திரியில் அவருக்கு ஆப்பரேஷன் நடந்தது. பிப்ரவரி மீ அவரைச் சர்க்கார் விடுதலையே செய்துவிட்டார்கள். பம்பாய்க்கருகே உள்ள கடற்கரை ஸ்தலமான ஜுஹுவுக்கு, மகாத்மா காந்தி உடம்பைத் தேற்றிக் கொள்வதற்காகச் சென்றார். நேரு குடும்பத் தாரும் அங்கே போய் ஒரு சிறிய குடிசையில் தங்கினார்கள்.

இங்கே கடலில் நீந்தவும் கடற்கரையில் ஓடவும் குதிரைச் சவாரி செய்யவும் வசதி கிடைத்ததால், ஜவா ஹருக்கு நல்ல உல்லாசப் போதுபோக்காயிருந்தது. ஆனால், இவர்கள் வந்த முக்கிய நோக்கம் அதுவல்ல. காந்திஜி யுடன் அரசியல் சம்பாஷணைகள் நடத்துவதே அந்த நோக்கம். தங்களுடைய சுயராஜ்யக் கட்சிக்கு மகாத்மா வின் அநுதாபத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்பது மோதிலாலின் விருப்பம். மகாத்மாவின் வருங்காலத் திட்டம் என்ன, தமக்குத் தெரிந்த மட்டில் தேசத்தை வருத்திக்கொண்டிருக்கும் பற்பல பிரச்னைகள் குறித்து அவருடைய கருத்தென்ன என்ற சந்தேகங்களைத்

தெளிந்துகொள்ள ஜவாஹர் விரும்பினார். வெகு நட்புடனும் மிக்க மரியாதையோடுமே மகாத்மா சம்பாஷித்தார். ஆனால், சுயராஜ்யக் கட்சியிடம் அவர் ஆதரவு காட்ட மறுத்துவிட்டார். ஜவாஹரின் சந்தேகங்களில் ஒன்று கூடத் தீரவில்லை. மகாத்மா நீண்ட வருங்காலத்தைப் பீறிப் பார்க்க மறுத்துவிட்டார். பொறுமையாய் நிர்மாணத் திட்டங்களை நடத்தி ஜனங்களுக்குச் சேவை செய்துகொண்டே இருப்பதுதான் நம் கடன் என்று அவர் பதிலளித்துவிட்டார். கண்ணுக்கெட்டாத தூரத்தில் உள்ள லட்சிய வீட்டைக் காண, மகாத்மா ஒருபோதும் விரும்பியதில்லை. இதோ இங்கே இந்த நேரத்தில் ஒரே ஓர் அடி எடுத்துவைக்க ஒளி கிடைத்தால் அவருக்குப்போதும். நாம் எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியையும் சரியாய் வைத்தோமானால், லட்சியத்தை மேலும் மேலும் நிச்சயமாய் நெருங்குவோம் என்பதில் என்ன சந்தேகம்?

13. ஐரோப்பாவில்

1925-ஆம் ஆண்டு கடைசியில் ஜவாஹரின் மனைவி கமலா ஒரு கொடிய நோயில் விழுந்தாள். சிகிச்சைக்காக அவளை ஸ்விட்ஜர்லாந்துக்கு அழைத்துச் செல்லும்படி டாக்டர்கள் ஆலோசனை கூறினார்கள். 1926-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், ஜவாஹரும், மனைவி கமலாவும், அவர்களின் மகள் இந்திராவும் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் புறப்பட யோசிக்கு முன்பே, ஐரோப்பியப் பிரயாணம் செய்ய விஜயலட்சுமி பண்டிட்டும் அவருடைய கணவரும் திட்டம் போட்டிருந்தார்கள். இவர்கள் புறப்பட்ட கப்பலிலேயே அவர்களும் பிரயாணமானார்கள். இரண்டு மூன்று மாதத்துக்கெல்லாம் ஜவாஹரின் சிறிய தங்கை கிருஷ்ணாவும் ஐரோப்பாவுக்குப் போய் ஜவாஹரைச் சந்தித்தாள்.

ஜவாஹரின் குடும்பத்தார் ஜினிவாவில் ஒரு தனி வீட்டில் தங்கியிருந்தார்கள். ஜினிவாவில் அகில உலகக் கோடைக்காலப் பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது. இந்தியர், சீனர், சிங்களவர், பிரஞ்சுக்காரர், அமெரிக்கர், ஜெர்மானியர் முதலிய பற்பல நாட்டு ஜனங்களும்-முக்கியமாகக் கோடை விடுமுறைக்கு வந்த மாணவர்கள்-அந்தப் பள்ளிக்கூடத்தில் கூடியிருந்தார்கள். ஜவாஹரும் கிருஷ்ணாவும் அதில் சேர்ந்துகொண்டார்கள். அப்போது, சர்வதேச மகாநாட்டுக்காக அங்கே வந்திருந்த பல பிரபல அரசியல் நிபுணர்களும், ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் போன்ற பிரசித்தமான சர்வகலாசாலைகளின் பேராசிரியர்களும், புகழ்பெற்ற பல நூலாசிரியர்களும், அந்தப் பள்ளிக்கூடத்தில் பிரசங்கங்கள் புரிந்தார்கள். அவை மிக்க சுவை யுடையவையாயிருந்தன. இந்தப் பிரசங்

கங்களைக் கேட்பதன்றி, சர்வதேசச் சங்கம், சர்வதேசத் தொழிலாளர் காரியாலயம் ஆகிய இரண்டின் நடவடிக்கைகளிலும் ஜவாஹர் சிரத்தைகொண்டு கவனித்துவந்தார்.

மேற்கண்ட பள்ளிக்கூட ஆதரவில் ஒவ்வொரு வார முடிவிலும், உல்லாசப் பிரயாணங்களுக்கும் ஏற்பாடு செய்தார்கள். கமலாவின் உடல்நிலை கடுமையாய் இல்லாத போதெல்லாம், ஜவாஹரும் கிருஷ்ணுவும் இந்தச் சிறு சிறு உல்லாசப் பிரயாணங்களில் கலந்துகொள்வார்கள். ஜினிவா நகருக்கு மிகவும் சமீபமாக உள்ள வில்லுனூவே என்ற ஊரில்தான் பிரபல பிரஞ்சு ஆசிரியர் ரொமேன் ரோலந்து வசித்தார். மகாத்மா காந்தியின் அறிமுகக் கடிதத்துடன் அவரை முதல் முறை ஜவாஹர் போய்ப் பார்த்தார். பின்பு, எத்தனையோ முறை அவரைத் திரும்பத் திரும்பக் கண்டுவந்தார். எர்னஸ்ட் டாலர், ரோகர் பால்டுவின், பிராங்க் புச்மான் முதலிய வேறு பல பிரபலஸ்தர்களின் நட்பையும் இந்தக் காலத்தில் ஜவாஹர் பெற்றார். கமலா சற்றுக் குணம் அடைந்து வரவே, ஜவாஹரும் கிருஷ்ணுவும் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குப் போய் வந்தார்கள்.

இந்த முறை ஐரோப்பாவில் தங்கிய ஒன்றே முக்கால் வருஷ காலத்தில், பழைய புரட்சிக்காரர்களும் நாடு கடத்தப்பட்டவர்களுமான பல இந்தியரை, ஜவாஹர் சந்தித்து நட்புக்கொண்டார். ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா, ராஜா மகேந்திரப் பிரதாப், காமா அம்மையார், மௌல்வி ஒபேதுல்லா, மௌல்வி பார்க்கதுல்லா, ஹரிதயாள், வீரேந்திரநாத சட்டோபாத்யாயர், தனகோபால முகர்ஜி, எம். என். ராய் ஆகியவர்களெல்லாம் அப்படிச் சந்தித்தவர்களில் சிலராவார்கள்.

அடக்கப்பட்ட நாடுகளின் மகாநாடு ஒன்று, 1927-ஆம் வருஷ ஆரம்பத்தில் பிரஸ்ஸல்ஸ் நகரில் நடைபெற்றது. இந்த மகாநாட்டுக்கு, ஜாவானியர், இந்தோ-சீனர்

பாலஸ்தீனர், சிரியர், எகிப்தியர், வடஆப்பிரிக்க அரபியர், ஆப்பிரிக்க நீக்ரோக்கள் ஆகியவரின் தேசீய ஸ்தாபனங்களெல்லாம் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பின. இந்தியத் தேசீயக் காங்கிரஸும் இந்த மகா நாட்டில் கலந்து கொள்ளலாம் என்று யோசனை கூறி, இந்தியாவுக்கு ஜவாஹர்லால் கடிதம் எழுதினார். காங்கிரஸும் இந்த யோசனையை ஏற்று, ஜவாஹரையே இந்த அடக்கப்பட்ட நாடுகளின் மகா நாட்டுக்குத் தனது பிரதிநிதியாக நியமித்தது. இந்த மகா நாட்டிலும், இதனின்றும் அமைந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு லீக் என்ற நிரந்தரச் சங்கத்தின் கமிட்டிக் கூட்டங்களிலும் ஜவாஹர் கலந்துகொண்டார். இதிலிருந்து, மேல்நாடுகளின் சில ரகசியங்களையும், அவைகளின் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு உட்பட்ட பல நாடுகளின் துயரங்களையும் ஜவாஹர் நன்றாய் அறிந்து கொள்ள வசதி ஏற்பட்டது.

1927-ஆம் ஞு செப்டம்பர் மீ பண்டித மோதிலால் நேருவும் ஐரோப்பாவுக்குப் போய்ச் சேர்ந்தார். எல்லாருமாக லண்டனுக்கும் பின்பு பெர்லினுக்கும் சென்றார்கள். நவம்பர் மாசம் ருஷ்யப் புரட்சியின் பத்தாவது ஆண்டு விழாவுக்கு வருமாறு ஜவாஹருக்கும் மோதிலாலுக்கும் அழைப்பு வந்திருந்தது. தந்தையும் மகனும் கமலாவும் கிருஷ்ணுவும் அந்த விழாவைப் பார்க்க மாஸ்கோவுக்குச் சென்றார்கள். விழாக் கொண்டாட்டம் மிக ஆடம்பரமாகவும் கண்கொள்ளாக் காட்சியாகவும் இருந்தது. சிவப்பு மைதானத்தில் லெனினுடைய கல்லறை இருந்தது. லெனினின் உடம்பைத் தைலத்தில் போட்டு அழியாதபடி பதனிட்டு, கண்ணாடிப் பெட்டிக்குள் இட்டு, அந்தக் கல்லறையில் வைத்திருந்தார்கள். குறிப்பிட்ட சில நேரங்களில் ஜனங்கள் அங்கே சென்று, லெனினுக்குத் தங்களுடைய வணக்கத்தைச் செலுத்திக் கொள்ளலாம் என்று ஸோவியத் சர்க்கார் அனுமதித்திருந்தார்கள்.

தலைத் தொப்பியை எடுத்துவிட்டு நூற்றுக் கணக்கான ஜனங்கள் வரிசையாக நின்றுகொண்டு லெனினுக்கு மரியாதை செய்தார்கள். கல்லறைக்கு உள்ளேயும் வெளியேயும் ஆயுதபாணிகளாகப் போர் வீரர்கள் காவல் புரிந்து கொண்டிருந்தார்கள். லெனின் எந்த நிமிஷத்திலும் எழுந்து பேசுவார் என்று எண்ணும்படியாக, தத்ரூபம் உயிரோடிருப்பது போலவே தோன்றியது அந்த உடலம்.

நேரு கோஷ்டியார் இன்னும் சில புதுமைகளை ருஷ்யாவில் கண்டார்கள். இந்தியச் சிறைச்சாலையில் முக்கிய வாயில்களிலெல்லாம் ஆயுதம் தாங்கிய சிப்பாய்கள் காவல் புரிவார்கள்; சிறைக்கு உள்ளேயும் வார்டர்கள் தடிகளையும் சில சமயங்களில் வேறு கொடிய ஆயுதங்களையும் தாங்கியபடிதான் நடமாடுவார்கள். நேரு கோஷ்டியார் கண்ட ருஷ்யச் சிறையிலோ, வாயிலில் ஒரே ஒரு காவல் வீரன் மட்டிலுமே துப்பாக்கி தாங்கி நடந்து கொண்டிருந்தான். சிறைக்குள்ளே இருந்த காவலர்கள் எவ்வித ஆயுதமும் இல்லாமல் நடைபாதைகளில் நின்று கண்காணித்து வந்தார்கள். கைதிகள் உள்ள அறைகளின் கதவுகளெல்லாம் திறந்தே இருந்தன. சில கைதிகள் தாங்களே அமைத்துக்கொண்ட ரேடியோக் கருவிகளில் பாட்டு, பேச்சு முதலியவைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சிறையில் சில சங்கீத வித்துவான்களும் இருந்தார்கள். அவர்கள் தங்களுடைய கீத வாத்தியங்களை மீட்டிக் கொண்டிருந்தார்கள். சில இடங்களில் சில கைதிகள் தொழில்களும் புரிந்து கொண்டிருந்தார்கள்.

ஜவாஹரின் தங்கை கிருஷ்ணா எவ்வித அலங்காரங்களும் இல்லாமல் மிகவும் சாதாரணமான ஒரு டாக்காப் புடைவையையே உடுத்திக்கொண்டு, மாஸ்கோவில் ஒரு கூட்டத்துக்குப் போயிருந்தாள்.

கூட்டத்தில் அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபப் பெண், அவளுடைய நெற்றியிலிருந்த குங்குமத்தைத் தொட்டுப்பார்த்தாள்; "ஆமாம்; நீ ஏன் இந்தப் பொட்டு வைத்துக் கொண்டிருக்கிறாய்? இது மதச்சின்னமா? எங்களுக்கு மதம் என்றாலே பிடிக்காதே" என்றாள்.

கிருஷ்ணா திடுக்கிட்டாள். "ஆடை உடுத்துவது எப்படியோ அதே மாதிரி குங்குமத்தையும் அணிவது என் வழக்கம். அதன் அர்த்தத்தைப்பற்றியெல்லாம் நான் யோசித்தது கிடையாது" என்றாள் கிருஷ்ணா.

அவளுடைய வார்த்தைகளை ருஷ்யப்பெண் நம்பவில்லை; "மதச் சின்னம் இல்லையென்றால், அழகுக்காகத் தானா இந்தப் பொட்டு வைத்திருக்க வேண்டும்? அப்படித்தான் வைத்திருக்கிறாயா? முதலாளி வர்க்கத்தார் தாம் இயற்கைக்கு மாறான விதங்களிலெல்லாம் அலங்காரம் செய்து கொள்வார்கள். பொது உடைமைக்காரர்களுக்கு அதுவும் பிடிக்காது!" என்றாள்.

"நான் பொது உடைமை வாதி அல்ல; ஆனால், ஒரு நாள் அந்தக் கொள்கையுடையவளாக மாறக்கூடும்" என்று சொல்லி, கிருஷ்ணா ஒருவாறு தப்பித்துக் கொண்டாள்.

ஒரு வாரத்தில், நேரு கோஷ்டியார் பெர்லினுக்குத் திரும்பினார்கள். இந்தச் சிறு காலத்துக்குள் புதிய ருஷ்யாவை மிக நன்றாகப் பார்த்துவிட முடியாது. என்றாலும் போதிய அளவு புதிய திட்டங்களையும், உணர்ச்சியும் உற்சாகமும் நம்பிக்கையும் நிறைந்த மக்களின் புதிய கூட்டுவாழ்க்கை முறைகளையும் இவர்கள் காணமுடிந்தது. மோதிலாலுக்கு இவையெல்லாம் முற்றும் விசித்திரமாயிருந்தன. என்றாலும் அவர் மனத்திற்குள் இவைகளைப்பற்றி நல்ல மதிப்பு விழுந்தது. ஜவாஹரைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. அவர்கள் மனம்

அபேதவாதத் துறையை ஏற்கனவே ஓரளவு நாடியிருந்த தென்று சொல்லலாம். புதிய நாடு ஒன்று உருவாகிவரும் காட்சி அவர்கள் எல்லார் மனத்திலுமே ஆச்சரியத்தை எழுப்பியது. ஸோவியத் ருஷ்யாவில் சில அதிருப்திகர மான அம்சங்கள் இருந்தாலும், ஸோவியத் ருஷ்யாவே உலகத்துக்கு விமோசன வழிகாட்டப் போகிறது என்று தான் ஜவாஹருக்குத் தோன்றியது.

நேரு கோஷ்டியார் மாஸ்கோவில் இருந்தபோதுதான் ஸைமன் கமிஷன் நியமன அறிக்கை முதல் முதலாகப் பிறந்தது. இந்திய அரசியல் அமைப்பில் அடுத்தபடியாக என்ன சீர்திருத்தம் வழங்குவது என்று விசாரித்தறிவதற் காக என்று சொல்லி, ஸர் ஜான் ஸைமன் என்ற பிரபல வக்கீலைத் தலைவராய்க் கொண்ட ஒரு கமிஷனை, பிரிட் டிஷ் சர்க்கார் நியமித்தார்கள். இதற்குத்தான் ஸைமன் கமிஷன் என்று பெயர். இதற்குப் பின்பு சில நாளைக் கெல்லாம், அந்த ஸைமனுடன்கூட்டாக, லண்டன் பிரிவி கவுன்ஸிலில் ஓர் இந்திய ஜமீன்தாரி வழக்கில், பண்டித மோதிலால் நேரு ஆஜரானார். இந்த வழக்கில் ஏற்கனவே சில வருஷங்களுக்கு முன்னால் ஜவாஹரும் இந்தியாவில் ஆஜராகி யிருக்கிறார். ஆகவே, ஒரு முறை ஜவாஹரையும் அழைத்துக்கொண்டு தமது அறையில் ஆலோசனை செய்ய வரும்படி, மோதிலாலை ஸைமன் கேட்டுக்கொண்டார். அப்போது, ஸர் ஜான் ஸைமனை ஜவாஹர் நேரே சந் தித்து அறிந்தார். ஆனால், அடுத்த சில மாதங்களில், அந்த ஸைமனின் பெயரால், ஜவாஹருக்குக் கிடைத்த பயங்கரப் 'பரிசை' அப்போது அவரும் நினைத்திருக்க மாட்டார்; இவரும் நினைத்திருக்க மாட்டார்.

14. போலீஸ் தடியடி

தேகத்தில் சுறுசுறுப்பும் ஆரோக்கியமும் மனத்தில் உற்சாகமும் நிறைந்தவராய், ஜவாஹர் 1927 - ஆம் வருஷக் கடைசியில் இந்தியாவுக்குத் திரும்பினர். அவர் மனைவி கமலா பூர்ண குணம் அடையவில்லை. என்றாலும், பெரிதும் குணம் அடைந்திருந்தாள். இதனல், ஜவாஹ ரின் மனக்கவலை நீங்கியிருந்தது. இந்தியாவின் வருங் காலம் பற்றி, அவருடைய மனத்தில் திட்டமான பல கருத்துக்கள் தோன்றியிருந்தன.

கூடிய சீக்கிரம் ஐரோப்பாவில் பிரமாதமான கொந்தளிப்புகள் நிகழ்ந்து மகத்தான மாறுதல்கள் ஏற்படப் போகின்றன என்று அவர் ஊகித்துக் கொண்டார். இந்த மாறுதல்களால் உலகமே பாதிக்கப்படும். நம் இந்திய நாட்டை இந்த மகத்தான புதிய நிலைமைகளுக்கு ஏற்றவாறு சித்தம் செய்து உருவாக்குவதே இந்தியத் தலைவர்களின் அவசரக் கடமை என்று ஜவாஹர் தீர்மானித்தார். இந்திய மக்களுக்கு மனோபாவத்திலே கருத்து மாறுதல் ஏற்படுத்துவதுதான் பெரிய வேலை யாகும். முதலாவதாக, இந்திய அரசியல் லட்சியம் பூர்ண சுயேச்சை என்று திட்டமாய்ச் சொல்லிவிட வேண்டும். குடியேற்ற நாட்டந்தஸ்து வேண்டும் என்ற அசட்டுப் பேச்சையெல்லாம் நிறுத்தவேண்டும். அடுத்தபடியாக, சமூக வாழ்க்கையை உயர்த்தும் லட்சியம் இருக்கிறது. இந்த விஷயத்தில் காங்கிரஸ் வெகு தீவிரமாய்ச் செல்லும் என்று எதிர்பார்க்க முடியாது. தொழிலாளர் இயக்கங் களின் மூலந்தான் இந்த லட்சியத்தில் முன்னேற்றம் உண்டாக்க முடியும். ஆகையால், தாம் காங்கிரஸில் இருந்து கொண்டே, தொழிலாளர், மாணவர், விவசாயி

கள் ஆகியவரிடையே பிரசாரம் செய்யவேண்டும் என்று ஜவாஹர் எண்ணினர். காங்கிரஸுக்குள் எந்தப் பதவியையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்துகொண்டார். ஆனல், இங்கே அவர் வந்து சேர்ந்தபின்பு, காங்கிரஸ் அரசியல் அவரை வரவர அதிக மாகவே இழுத்துக்கொண்டுவிட்டது.

மார்ஸேல்ஸ் துறைமுகத்திலிருந்து நேரே கொழும்பு வழியாக, ஜவாஹர் சென்னைக்கு வந்துசேர்ந்தார். அவருடன் கமலா, இந்திரா, கிருஷ்ணு மூவரும் வந்தார்கள். மோதிலால் மட்டிலும் ஐரோப்பாவிலே மேலும் மூன்று மாதங்களுக்குப் பின் தங்கிவிட்டார்.

அப்போது, டிஸம்பர் மீ சென்னையில் காங்கிரஸ் மகா சபை நடைபெற்றது. ஜவாஹர் அதில் கலந்துகொண்டார். காந்திஜியும் சென்னைக்கு வந்திருந்தார். அதன் மகா சபைக் கூட்டங்களுக்கு அவர் விஜயமும் செய்தார். ஆனல், காங்கிரஸ் கொள்கையை உருவாக்கும் காரியத்தில் எவ்விதப் பங்கும் எடுத்துக்கொள்ளாமல் காந்திஜி ஒதுங்கியே இருந்தார்.

ஜவாஹர் ஒரு கற்றைத் தீர்மானங்களைத் தயாரித்தார்: (1) பூர்ண சுயேச்சையே காங்கிரஸ் லட்சியம், (2) யுத்தம் வந்தால் பிரிட்டிஷ் சர்க்காரோடு இந்தியர் ஒத்துழைக்கக் கூடாது, (3) உலக ஏகாதிபத்திய எதிர்ப்புச் சங்கத்தில் காங்கிரஸ் சேர்கிறது - இந்தமாதிரி பல தீர்மானங்கள். இவைகளை யெல்லாம் காங்கிரஸ் மகா சபையில் ஜவாஹர் பிரேரணை செய்தார். இத்தனை தீர்மானங்களும் எவ்வித எதிர்ப்புமின்றி ஏகமனதாக நிறைவேறிவிட்டன. ஜவாஹருக்கு இதில் சந்தோஷந்தான். ஆனல், அவர் மனத்திலே ஒருவிதச் சஞ்சலமும் உண்டாயிற்று. எல்லாரும் இந்தத் தீர்மானங்களைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்றே அவர் அஞ்சினர். இதற்கேற்றாற்போல், பூர்ண

சுயேச்சைத் தீர்மானம் பற்றி, பின்னால் வாதப் பிரதி வாதங்கள் முளைத்துவிட்டன.

இந்த வருஷம் டாக்டர் அன்ஸாரி காங்கிரஸ் தலைவர். அவரும் ஜவாஹரைக் காங்கிரஸ் காரியதரிசியாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இடையில் ஒரு வருஷம் விட்டிருந்த பின்பு, மீண்டும் ஜவாஹர் காங்கிரஸ் காரியதரிசியானார்.

சைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தால், அதைச் சகலவிதத்திலும் பகிஷ்கரிப்பதென்று, இந்தக் காங்கிரஸ் ஒரு தீர்மானம் செய்தது. கமிஷனும் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தது. எங்கே பார்த்தாலும் கறுப்புக் கொடிகள் தாங்கிய கூட்டங்கள்தாம் அதற்கு எதிர்ப்பட்டன. ‘ஸைமனே, திரும்பிப் போ!’ என்ற கோஷமே எல்லா இடங்களிலும் முழங்கியது. ஒன்றிரண்டு இடங்களில் போலீஸுக்கும் ஜனங்களுக்கும் சிறுசிறு சச்சரவுகள் ஏற்பட்டன. கமிஷன் லாகூருக்குப் போகும்போது, ஒரு பெரிய சம்பவம் நிகழ்ந்துவிட்டது. பாஞ்சாலச் சிங்கம் என்று பெயர்பெற்ற உத்தமத் தலைவர் லாலா லஜபதிராய், இத்தகைய பகிஷ்காரக் கூட்டம் ஒன்றுக்குத் தலைமை வகித்து நடத்தச் சென்றுகொண்டிருந்தார். இங்கிலீஷ்காரனான வாலிபப் போலீஸ்காரன் ஒருவன் லாலாஜியின் மார்பிலே தன் தடியால் அடித்துவிட்டான். தேசமே இதனால் துடிதுடித்துவிட்டது. சில மாதங்களுக்கெல்லாம் லாலாஜி காலமானார். அதன் காரணம் இந்த அடியின் அதிர்ச்சிதான் என்று சொல்லுகிறார்கள். (எந்த இங்கிலீஷ் ஸார்ஜெண்ட் லாலாஜியைத் தடியால் அடித்தானோ அந்த ஸார்ஜெண்டை, பின்னால் பகத் சிங் சுட்டு வீழ்த்திவிட்டார். அவருடைய கீர்த்தி நாடெங்கும் பரவியது. பகத் சிங்குக்குத் தூக்குத் தண்டனை கிடைத்தது. காந்தி - இர்வின் ஒப்பந்தம் நடந்தபோது, இந்தத் தூக்குத் தண்டனையை ரத்து செய்யும்படி செய்ய

மகாத்மார்ஜியாலும் முடியவில்லை. இதெல்லாம் பிந்திய சரித்திரம்.)

லாலாஜி அடிபட்ட சம்பவத்தால் சைமன் கமிஷன் அங்கத்தினர்கள் புது டில்லியில் ஈஸ்டர்ன் ஓட்டலில் தங்கியிருந்தார்கள். பாதி ராத்திரியில் நள்ளிருளைக் கிழித்துக்கொண்டு, ஏதோ ஓர் ஓலம் வந்துகொண்டேயிருந்தது. "சைமனே! திரும்பிப் போ. சைமனே! திரும்பிப் போ" என்ற சத்தமானது, இப்படித் தங்களை ராத்திரியிலும் துரத்துவதாக எண்ணி, கமிஷன் அங்கத்தினர்கள் பெரிதும் எரிச்சல் மூண்டார்களாம். உண்மை என்னவென்றால், அந்த ஓலம் மனிதக்குரலே அல்ல, பிரிட்டிஷ் இந்திய சாம்ராஜ்யத் தலைநகரமான புது டில்லிக் காடுகளில் திரிந்து கொண்டிருந்த நரிகளின் ஊளைதான் அது! இந்த ஊளையுங்கூட, தங்களைப் பகிஷ்கரிக்கும் எதிர்ப்புக் கோஷமாகத் தோன்றியிருக்கிறது கமிஷன்காரர்களுக்கு! அவர்கள் அடைந்திருந்த கிலி அவ்வளவு மோசமாய்ப் போயிற்று.

கமிஷன் லட்சுமணபுரிக்குப் போக ஆயத்தமாயிற்று. ஊர்வலங்களுக்கெல்லாம் தடை உத்தரவு பிறந்தது. தடையுத்தரவை மீறிப் பல பகிஷ்கார ஊர்வலங்கள் சிறு சிறு கூட்டமாகக் கிளம்பின. பண்டித ஜவாஹர் ஒரு கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். மற்றொரு கூட்டத்துக்குப் பண்டித கோவிந்த வல்லப பந்த் தலைமை வகித்தார். இவர்கள் இருநூறு கஜ தூரம் நடந்திருப்பார்கள். அப்போது, பின்புறத்தில் குதிரைகளின் காலடிச்சத்தம் கேட்டது. இவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். குதிரை மீதேறிய போலீஸ் வீரர்கள், வேகமாய்ப் பாய்ந்து இவர்களைத் துரத்தி வருவதைக் கண்டார்கள். அப்படி வந்த போலீஸ் வீரர்கள், தங்களுடைய பிரம்மாண்டமான தடிகளால் ஊர்வலத் தொண்டர்களை அடிக்கத் தொடங்கினார்கள். 'தொண்டர்கள் மிரண்டோடி இரு

புற நடைபாதைகளிலும் ஏறிக்கொண்டார்கள். இப்படி ஓடிய நிராயுதபாணிகளைக் குதிரை வீரர்கள் மிக்க தீரமாகத் துரத்தித் துரத்தி அடித்து வீழ்த்தினார்கள். ஜவாஹருக்குக்கூட இப்படித் தப்பியோடலாமா என்ற எண்ணந்தான் முதலில் உண்டாயிற்று. ஆனால், 'கோழையாக நடக்காதே' என்று மனம் சொல்லிற்று. நடு வீதியிலே தன்னந்தனியாக ஜவாஹர் நின்றுகொண்டார். ஒருகுதிரை வீரன் தடியைஆட்டிக்கொண்டு இவரைநோக்கி ஓடி வந்தான். "நடத்து உன் காரியத்தை" என்றார் ஜவாஹர். என்றாலும், 'மனத்துக்கு இஷ்டந்தான்; சதைக்குத் திராணி இல்லையே' என்பார்கள் அல்லவா? அந்த மாதிரி, தலை மட்டில் மறுபுறம் திரும்பிக்கொண்டது. ஜவாஹரின் முதுகிலே குதிரைவீரன் ஓங்கி இரண்டு அடிகள் கொடுத்தான். ஜவாஹரின் உடம்பெல்லாம் ஆடிவிட்டது. என்றாலும் அவர் இன்னமும் விழாமல் நின்றுகொண்டிருந்தார். அவருக்கே இதில் ஆச்சரியமும் திருப்தியும் உண்டாயின. போலீஸ் வீரர்கள் இத்துடன் ஒதுங்கி, ரஸ்தாவை மாத்திரம் சுவர் எடுத்துபோல் வழி மறித்துக்கொண்டு நின்றார்கள். தொண்டர்களும் வேறு வழியாய்ச் செல்வதில்லை யென்று அங்கேயே உட்கார்ந்து விட்டார்கள். ஒன்றிரண்டு மணிநேரம் கழிந்தது. இருட்டிவிட்டது. ஜனங்கள் இந்தச் சேதிகேட்டு ஏராளமாய்க் கூடிவிட்டார்கள். கடைசியாக, தொண்டர்கள் இஷ்டப்பட்ட வழியே செல்ல, அவர்களை அதிகாரிகள் விட்டுவிட்டார்கள். இது முதல் நாள் ஒத்திகை. அவ்வளவுதான். ஸைமன் கமிஷன் மறுநாள்தான் வரப்போகிறது.

இந்தச் சமயத்தில் மோதிலால் நேரு அலகாபாதில் இருந்தார். தாம் அடிபட்ட சேதியை அடுத்த நாள் காலைப் பத்திரிகைகளில் படித்துவிட்டுத் தந்தை எங்கே கவலைப்படப்போகிறாரோ என்று அஞ்சிய ஜவாஹர், அன்

றிரவே மோதிலாலுக்கு டிரங்க் டெலிபோன்மூலம் தகவல் தெரிவித்து, " ஒன்றும் அபாயமில்லை ; கவலைப்பட வேண்டாம்" என்று தைரியம் ஊட்டினார். ஆனால், மோதிலால் இதைக் கேட்கவில்லை. அவருக்கு இராத் தூக்கமில்லை. பாதி ராத்திரியில் லக்ஷ்மணபுரிக்கு வரப் புறப்பட்டார். கடைசி ரெயில்வண்டியும் போய்விட்டது. ஆகையால், மோட்டார் காரிலேயே கிளம்பிவிட்டார். மறுநாள் காலை 5-மணிக்கு அவர் லக்ஷ்மணபுரி வந்துசேர்ந்தார். 146-மைல் தூரம் மோட்டார் சவாரி செய்ததால், மோதிலால் பெரிதும் களைத்துப் போயிருந்தார்.

இதற்குள் மகன் இங்கே அன்றைய ஊர்வலத்துக்குத் தயாராகிவிட்டார். முதல் நாள் சம்பவத்தால், லக்ஷ்மணபுரி நகரம் முழுவதுமே ஆர்ப்பரித்து எழுந்திருந்தது. சூரியன் உதிக்கு முன்பாகவே, ஜனங்கள் ஏராளமாய் ரெயில்வே ஸ்டேஷனைச் சுற்றிலும் திரண்டுவிட்டார்கள். நகரின் பற்பல மூலைகளிலிருந்தும் எண்ணற்ற சிறுசிறு ஊர்வலங்கள் கிளம்பின. பல்லாயிரக் கணக்கான மக்கள் அடங்கிய மிக நீண்ட ஊர்வலம் ஒன்று, காங்கிரஸ் காரியாலயத்திலிருந்து புறப்பட்டது. அந்த ஊர்வலத்தின் நடுவிலேதான் ஜவாஹர் இருந்தார். இந்த ஊர்வலம் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் போனபோது போலீஸார் இதைத் தடுத்து, பக்கத்திலிருந்த பெரிய மைதானத்தில் வரிசையாய் நிறுத்திவிட்டார்கள். ஊர்வலக்காரர்கள் முட்டித் தள்ளிக்கொண்டு முன்னே செல்ல முயலவில்லை. சாத்துவிகமாக அங்கேயே அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். சுற்றிலும் குதிரைப் போலீஸாரும் ராணுவவீரர்களும் சூழ்ந்து காவல் புரிந்துகொண்டிருந்தார்கள். சிறிது நேரம் சென்றதும், கொஞ்ச தூரத்தில் நீளமாக அணி வகுத்த மூன்று நான்கு வரிசை குதிரைவீரர்கள் தென்பட்டார்கள். அவர்கள் இந்த ஊர்வலக்காரர்களை நோக்கி நாலுகால் பாய்ச்சலில்

தாவி வந்தார்கள். வழியிலே தப்பித் தவறிக் குறுக்கிட்டவர்களை யெல்லாம் வலமும் இடமும் தடிகளால் அடித்துக்கொண்டும், குதிரைக் கால்களிலே இடறிக் கொண்டும் அவர்கள் வந்தார்கள். மைதானம் முழுவதுமே ஒரு பெரிய ரணகளம் ஆயிற்று. சும்மா வேடிக்கை பார்க்கவந்த ஏராளமான ஜனங்கள் மண்டை யுடைந்தும், கைகால் முறிபட்டுவிழுந்து துடித்துக்கொண்டும் கிடந்தார்கள். ஆனால், இந்தக் காட்சியை யெல்லாம் பார்த்துச் சிந்திக்க, ஊர்வலத் தொண்டர்களுக்கு அவகாசம் இல்லை. வெகு சீக்கிரத்திலே அவர்கள்மீதும் அந்தக் குதிரை வீரர்கள் பாய்ந்துவிட்டார்கள். தொண்டர்கள் நகரவில்லை. குதிரைகள் முன்னங்கால்களைத் தொண்டர்களின் தலைக்கு மேலே தூக்கிக்கொண்டு நின்றபின்பு, வீரர்களின் தடிகள் தொண்டர்களைத் தாக்கலாயின. அடி என்றால் லேசல்ல ; மிக்க குரூரமான அடி.

ஜவாஹருக்கு முதல்நாள் இருந்த மனத்தெளிவு இன்று இல்லை. விழுந்த அடியிலே, ஜவாஹருக்குக் கண்கள் இருண்டுவிட்டன. என்றாலும் அவர் நகரவில்லை ; பின் வாங்கவும் இல்லை. ஒருசமயம் அவருக்கு அடங்காத ஆத்திரம் மூண்டது. "இதோ இந்தக் குதிரைமேல் இருக்கும் போலீஸ்காரனைக் கீழே தள்ளி, நான் ஏறி உட்கார்ந்து கொள்வது எவ்வளவு சுலபம்!" என்று எண்ணினார். ஆனால், அப்படிச் செய்தால் நிரபராதிகளான மக்கள் அடங்கிய இந்தப் பிரம்மாண்டமான கூட்டத்தில் கொடிய துப்பாக்கிப் பிரயோகம் போன்ற கோரக் காட்சிகள் நடந்து, பலர் உயிர் இழக்கநேருமே என்று அவர் அஞ்சினார். மனத்தை அடக்கிக்கொண்டார்.

கொஞ்சநேரத்தில் தொண்டர்களின் அணிவகுப்புக் குலைந்துவிட்டது. ஜவாஹர் தனியே அகப்பட்டுக்கொண்டார். அவருக்கு மேலும் மேலும் அடி விழுந்துகொண்டே இருந்தது. அவரை வேண்டுமென்றே வன்மங்கட்டிக்

கொண்டு போலீஸார் அடிப்பதாக,அவருடைய தோழர்கள் பயந்துவிட்டார்கள். அவர்கள் திடீரென்று பின்பக்கமாய் வந்து, ஜவாஹரை ஒரே கட்டாய்க் கட்டிப் பிடித்துத் தூக்கிக்கொண்டு போனார்கள். தங்களுடைய முதல் அணி வகுப்புக்கு நூறடி தூரத்தில் தொண்டர்களும் ஜவாஹரும் மறு அணிவகுப்புச் செய்து நின்றுகொண்டார்கள். போலீஸாரும் அணிவகுத்து, அவர்களுக்கு ஐம்பது அடி தூரத்தில் நின்றுகொண்டார்கள். அவர்கள் இப்படி நின்று கொண்டிருக்க, இத்தனை விபரீதங்களுக்கும் காரணமான ஸைமன் கமிஷன் கோஷ்டியார், அரைமைலுக்கு அப்பால் உள்ள வேறு வழியிலே ரகசியமாய்ப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கேயும் அவர்களைக் கறுப்புக் கொடிகள் விட்டபாடில்லை.

பின்பு, தொண்டர்களின் ஊர்வலம் மீண்டும் ஒழுங்காகக் காங்கிரஸ் காரியாலயத்துக்குத் திரும்பிச் சென்று கலைந்தது. ஜவாஹர் தமக்காகக் கவலையுடன் காத்துநின்று கொண்டிருந்த தந்தையிடம் சென்றார். அந்த அமளியில் ஏற்பட்ட பரபரப்பு அடங்கியது. ஜவாஹரின் தேகமெல்லாம் நொந்தது. இந்தச் சம்பவங்களையெல்லாம் பற்றி, ஜவாஹர் யோசிக்கலானார். "ஏதோ பலத்த சக்திகளால் உந்தப்பட்டு நாம் போராடுகிறோம்; கண்ணை மூடிக் கொண்டு போராடுகிறோம். எதற்காகப் போராடுகிறோம்? எங்கே செல்கிறோம்? செயலின் பரபரப்பிலே கட்டுண்டு லயித்திருந்தோம். அந்தப் பரபரப்புத் தீர்ந்தது. இப்போது, ஒரு கேள்வி எழுகிறது: இத்தனையும் என்ன முடிவுக்கு? என்ன முடிவுக்கு?" என்று அவர் சிந்திக்கலானார்.

•

15. தந்தைக்குப்பின் மகன்

அந்த வருஷம் இந்தியாவின் பற்பல அரசியல் கட்சிகளும் கலந்துகொண்ட ஒரு சர்வகட்சி மகாநாடு கூடியது. நேருவைத் தலைவராய்க்கொண்ட ஒரு கமிட்டியை அந்த மகாநாடு நியமித்தது. இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து ஏற்படக்கூடிய ஓர் அரசியல் திட்டத்தை உள்ளடக்கி ஓர் அறிக்கையை இந்தக் கமிட்டி தயாரித்தது. இதற்கு நேரு கமிட்டி யாதாஸ்து என்று பெயர்.

1928-ஆம் ஆண்டு டிசம்பர் மீ பண்டித மோதிலாலின் தலைமையில் கல்கத்தாவில் காங்கிரஸ் மகாசபை கூடியது. ஸென்குப்தா வரவேற்புக் கமிட்டித் தலைவர். சுபாஷ் சந்திர போஸ் தொண்டர் படைத் தலைவர். மோதிலால் தமது காரில் எங்கே சென்றாலும், ராஜமரியாதையோடு மெய்காப்பாளர் புடைசூழ அழைத்துச் செல்லப்பட்டார். நேராக நிமிர்ந்த பார்வையோடு கம்பீரமாய்க் குதிரைகளில் அமர்ந்த இளைஞர் படை ஒன்றும் முதல் அணியில் செல்லும். அடுத்தாற்போல், வழிகாட்டி வண்டி ஒன்றில், கண்கவரும் வர்ண உடுப்பணிந்து, தொண்டர் படைத் தலைவர் சுபாஷ் செல்வார். இந்த ஆடம்பரங்கள் மோதிலாலுக்குப் பெரிய உபத்திரவமாய்ப் போய்விட்டன. "என் உயிருக்கு ஒன்றும் ஆபத்து இருப்பதாய்த் தெரியவில்லையே! என்னை இப்படியெல்லாம் அழைத்துச் செல்ல வேண்டாம். என் இஷ்டப்படி போய்வர அனுமதியுங்கள்" என்று அவர் உரியவர்களைக் கேட்டுக்கொண்டார்.

தந்தைக்கும் மகனுக்கும் ஏற்கனவே இருந்த அபிப்பிராய வேற்றுமை, இந்தக் காங்கிரஸிலே மிகவும் முற்றிவிட்டது. பூர்ண சுதந்தரமே காங்கிரஸ் லட்சிய

மாயிருக்க வேண்டும் என்பது ஜவாஹரின் கருத்து. பூர்ண சுதந்தரத்துக்கு நாட்டின் பற்பல கட்சிகளையும் சம்மதிக்கச் செய்யமுடியாததால்தான், நேரு கமிட்டியின் யாதாஸ்து குடியேற்ற நாட்டு அந்தஸ்தை இந்திய அரசியல் திட்டமாய் வகுத்தது. தமது கமிட்டியின் அந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் மகாசபை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், அது அப்படிச் செய்யாவிட்டால் தாம் காங்கிரஸ் தலைமைப் பதவியை ராஜீநாமாச் செய்துவிடுவதாகவும் மோதிலால் கண்டிப்பாய்ச் சொன்னார். வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, இதுபற்றித் தந்தைக்கும் மகனுக்கும் கடுமையான விவகாரம் நடந்தது. காங்கிரஸ் மகாசபையில் ஒரு ராஜியான தீர்மானத்தை, மகாத்மா காந்தி பிரேரணை செய்தார். "1929-ஆம் ஆு முடிவுக்குள் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் வழங்காவிட்டால், அதன் பின்பு பூர்ண சுதந்தரமே காங்கிரஸ் லட்சியமாய் இருக்கும்" என்பதே அந்தத் தீர்மானம். இதன்மீது காந்திஜி மிக்க உணர்ச்சியுடன் பேசினார். ஜவாஹரின் நண்பர்கள் பலரும் ஓய்ந்து உட்கார்ந்துவிட்டார்கள். ஜவாஹர் மாத்திரம் விடவில்லை; இந்தத் தீர்மானத்தை அரைமனத்தோடு எதிர்த்தார். என்றாலும், தீர்மானம் நிறைவேறிவிட்டது. தேசீய லட்சியத்தைக் குறைத்துக்கொள்வது ஜவாஹருக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும், தீர்மானம் அவரை மீறி நிறைவேறிய பின்பு என்ன செய்வது? ஒருவாறு சமாதானமடைந்து மீண்டும் காங்கிரஸ் காரியதரிசி பதவியை ஏற்றுக்கொண்டார்.

1929-ஆம் ஆு இந்தியாவெங்கும் ஒரே கொந்தளிப்பாயிருந்தது. காந்திஜி கதர்ப் பிரசாரம் செய்து நாடெங்கும் சுற்றிக்கொண்டிருந்தார். இந்தியச் சட்டசபையில், பகத்சிங், தத் இருவரும் இருசிறு குண்டுகளை வீசினார்கள். பற்பல இடங்களில் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள்

நடந்தன. லாகூர் சதி வழக்கில் சம்பந்தப்பட்ட பகத்சிங், தத், ஜதீந்திரநாத தாஸ் முதலிய பலர் உண்ணுவிரதம் தொடங்கினார்கள். ஜதீந்திரநாத தாஸ் அதில் உயிரையும் துறந்துவிட்டார். வைஸிராயின் ஸ்பெஷல் ரெயில் வண்டி வந்த பாதையில் வெடிகுண்டு வைக்கப்பட்டது. ஆனால், சற்றுத் தவிறிவிட்டதால் வைஸிராய் வண்டி சேதம் ஏற்படாமல் தப்பியது. பர்மாவிலும் பொங்கி விஜயா என்ற புத்த சந்நியாசி சிறையில் உபவாசம் கிடந்து உயிர் துறந்தார். இப்படிப் பற்பல விதமான சம்பவங்கள் அந்த வருஷ முழுதும் நிறைந்து, ஜனங்களை ஓயாமல் பரபரப்பில் ஆழ்த்திவந்தன.

இந்த நிலைமையில், லாகூரில் நடக்கவேண்டிய அடுத்த காங்கிரஸ் நெருங்கி வந்துகொண்டிருந்தது. காங்கிரஸ் தலைமைப்பதவிக்கு அப்போது முதலில் மாகாணக் கமிட்டிகள்தாம் தங்களுக்கு விருப்பமான ஒரு பெயரையோ, பல பெயர்களையோ சிபாரிசு செய்வது வழக்கம். அநேகமாக எல்லா மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளும் மகாத்மா காந்தியின் பெயரையே அந்தப் பதவிக்குச் சிபாரிசு செய்தன. ஆனால் அவர் அதை நிராகரித்துவிட்டார். பண்டித ஜவாஹரைக் காங்கிரஸ் தலைவராய்த் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கடைசிநேரத்தில் மகாத்மா வற்புறுத்தினார். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும் வேறு வழியின்றி அப்படியே செய்தது. இந்த விதமாகத்தான் -. அதாவது மகாத்மா காந்தியின் நிர்ப்பந்தத்தாலேயே - முதல் முறை பண்டித ஜவாஹர் காங்கிரஸ் தலைமையைப்பெற்ருர். இது அவருக்குத் துளியும் பிடிக்கவில்லை. “இந்தத் தேர்தலின்போது நான் அடைந்த சங்கடமும் அவமான உணர்ச்சியும் எனக்கு வேறு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. எனக்குக் கிடைத்தது மகத்தான கௌரவந்தான். அதை நான் உணராமல் இல்லை. சாதாரணமுறையில் நான் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால், அகமகிழ்ந்திருப்பேன்.

வாசல் கதவு வழியாகவோ, கொல்லைக் கதவு வழியாகத் தானோ,நான் நுழையவில்லை ; திடீரென்று ஒரு கள்ளக் கதவு வழியாக நுழைந்து, சபையோரைப் பிரமிக்கச் செய்து, அந்தக் கௌரவத்தை நான் அடைந்ததாகவே எனக்குத் தோன்றியது. அதை வாபஸ் செய்துவிடலாமா என்றுகூட நான் நினைத்தேன். ஆனால், நல்ல வேளையாக, ஒன்றும் தடபுடல்செய்யக்கூடாது என்று மனத்தை அடக்கிக்கொண்டேன். சந்தடி செய்யாமல் வேதனை நிறைந்த இருதயத்தோடு வெளியே போய்விட்டேன்'' என்று ஜவாஹர் இதைப்பற்றி எழுதுகிறார்.

இந்தத் தேர்தலால் மற்றெவரையும்விடப் பேரானந்தம் அடைந்த ஒரு மனிதர் பண்டித மோதிலால்தாம். அவருக்கு மகனின் அரசியல்தான் பிடிப்பதில்லை. மகனிடம் அளவற்ற வாஞ்சை. மகனின் அபிப்பிராயங்களை அவர் கண்டிப்பார் ; உதாசீனமும் செய்வார். ஆனால், தம் முன்னிலையில் பிறர் எவரும் ஜவாஹரைக் குறைவாய்ப் பேச முடியாது. பேசினால், மோதிலால் சும்மா விடமாட்டார்.

இதற்கிடையில், நிலைமை மிஞ்சி வருகிறது என்றறிந்த பிரிட்டிஷ் சர்க்கார், இந்தியப் பிரச்னையைத் தீர்க்க, லண்டனில் ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டுவதாக அறிவித்தார்கள். உடனே பற்பல இந்திய அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 'தலைவர்கள் மகாநாடு' ஒன்று டில்லியில் கூடியது. காந்திஜி, மோதிலால், இந்திய அசெம்பிளி அக்கிராசனர் விட்டல்பாய் பட்டேல் போன்ற காங்கிரஸ் தலைவர்களும், சாப்ரூபோன்ற மிதவாதிகளும், மற்றும் பலரும் அதற்கு வந்திருந்தார்கள். வட்டமேஜை மகாநாட்டில் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்குவதை ஆதாரமாக வைத்துக்கொண்டே எல்லாச் சர்ச்சையும்

நடக்கவேண்டும் என்றும் வேறு சில நிபந்தனைகளும் குறிப்பிட்டு, ஒரு தீர்மானம் நிறைவேறியது. ஆனால், பின்னால் இந்தத் தீர்மானத்தைக் காங்கிரஸையன்றி மற்றமிதவாதிகளும் பிறரும் காற்றுவாக்கில் விட்டுவிட்டார்கள். தீர்மானத்தில் கண்ட நிபந்தனை எதையும் பிரிட்டிஷ் சர்க்கார் நிறைவேற்றவில்லை. காங்கிரஸ்காரரெல்லாம் சிறையில் கிடக்க, நாடெங்கும் வெறிபிடித்த அடக்குமுறை தாண்டவமாட, காங்கிரஸல்லாத சில்லறைக்கட்சித் தலைவர்கள் பலரும் லண்டனுக்கு ஓடி, பிரிட்டனுடன் குலவத் தொடங்கிவிட்டார்கள்.

டிசம்பர்மீ 29உ லாகூரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. இந்தக் காங்கிரஸ் பலவிதத்திலும் விசேஷம் வாய்ந்ததாகும். ஒரு தந்தை, தம் மகனிடம் காங்கிரஸ் தலைமைப் பதவியை ஒப்பித்தது காங்கிரஸ் சரித்திரத்திலேயே புதுமையாகும். காங்கிரஸ் சரித்திரத்தில் என்ன? உலகத்திலேயே காங்கிரஸுக்கு இணையான எந்த ஸ்தாபனத்தின் சரித்திரத்திலுமே காணாத புதுமையாகும். அந்தப் புதுமை இந்தக் காங்கிரஸிலே நிகழ்ந்தது. மகனிடம் தந்தை ராஷ்டிரபதி பதவியை ஒப்பித்தது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. பூர்ண சுதந்தரப் பிரதிக்ஞை இந்தக் காங்கிரஸிலேதான் தயாராயிற்று. ரவிநதிக் கரையில், விடியுமுன்பாக, நீலவானின் கீழே, பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆணும் பெண்ணும் குழந்தையும் முதியருமாய்க் கூடியிருந்தார்கள். ஜவாஹர் சுதந்தரப் பிரதிக்ஞையின் வாசகத்தைப் படிக்க, அத்தனை ஜனங்களும் அதை மந்திரம்போல் திரும்ப உச்சரித்து மேற்கொண்டார்கள்.

முந்திய காங்கிரஸில் கொடுத்த ஒரு வருஷத் தவணை முடிந்துவிட்டதால், இனிக் காங்கிரஸின் லட்சியம் பூர்ண

சுதந்தரமே என்ற தீர்மானத்தை மகாத்மா காந்தியே பிரேரணை செய்தார். தீர்மானம் ஏகமனசாய் நிறைவேறியது. (1) சட்டசபைகளை மீண்டும் பகிஷ்கரிப்பது, (2) வட்டமேஜை மகாநாட்டில் கலப்பதில்லை, (3) காங்கிரஸ் லட்சியத்தை அடைய, வரிகொடா இயக்கம் உட்படச் சகலவிதமான சட்டமறுப்பு இயக்கத்தையும் நடத்த அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரம் அளிப்பது என்ற தீர்மானங்களும் நிறைவேறின. என்றாலும், உண்மையான தீர்மானம் காந்திஜியிடமே இருக்கிறது என்று எல்லாருக்குமே தெரியும்.

16. உப்புப்போர் ராஷ்டிரபதி

ஜனவரிமீ 26-ஆம் தேதியைச் சுதந்தர தினமாகக் கொண்டாடவேண்டும் என்றும், நாடெங்கும் பொதுக் கூட்டங்கள் கூடிச் சுதந்தரப் பிரதிக்ஞையை ஜனங்கள் பகிரங்கமாய் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் தலைவர்கள் தீர்மானித்தார்கள். அவ்விதமே அளவிறந்த உற்சாகத்துடன் சுதந்தர தினம் தேசமெங்கும் கொண்டாடப்பட்டது. இது தேசத்தின் எழுச்சியை அற்புதமாய்ப் புலப்படுத்தியது. பிப்பிரவரிமீ 16வ சபர்மதியில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டி, சத்தியாக்கிரகம் தொடங்க மகாத்மா காந்திக்குச் சர்வாதிகாரம் அளித்தது. அதன்மேல், உப்பு வரியை ரத்து செய்யவேண்டும் என்பதுள்பட 11 நிபந்தனைகள் அடங்கிய ஓர் இறுதிக் கடிதத்தை, ரெஜினல்ட் ரெயினல்ட்ஸ் என்ற ஆங்கிலேயரின்மூலம் வைஸிராய் இர்வின் பிரபுவுக்கு மகாத்மா காந்தி அனுப்பினர். இர்வின் பிரபுவிடமிருந்து பதில் வரவில்லை. மார்ச் 12வ. காந்திஜி உப்புச் சத்தியாக்கிரகம் செய்ய, சபர்மதியை விட்டுத் தண்டிக் கடற்கரைக்குக் காலால் நடந்தே யாத்திரை கிளம்பினர். போகும்போது ஆசிரமத்தைக் கலைத்துவிட்டு, "சுயராஜ்யமின்றி நான் உயிரோடு சபர்மதிக்குத் திரும்பேன்" என்று ஓர் உருக்கமான சபதமும் செய்துவிட்டார். (அதன்படிதான் இன்று மகாத்மாஜி, வார்தாவில் வசிக்கிறர்.) மகாத்மா அக்காலத்தில் ஆரம்பித்த தண்டி யாத்திரையை, நேரிலிருந்து கண்ட 'ஹிந்து' பத்திரிகை நிருபர், "அன்று ராமபிரான் வனவாசம் புறப்பட்ட காட்சிபோல் இருந்தது" என்று வர்ணித்தது, இன்றும் பச்சைப் பசுமையாய் ஞாபகமிருக்கிறது.

மகாத்மா தம்முடன் எழுபத்தொன்பது தொண்டர்களை அழைத்துக் கொண்டு ஒரு படையாகவே புறப்பட்டார்.

தண்டிக்குப் போகும் வழியில், ஜம்புஸார் என்னும் இடத்தில், மோதிலாலும் ஜவாஹரும் காந்திஜியைப் போய்ச் சந்தித்துச் சில மணிநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். தமது 'ஆனந்தபவ'னைத் தேசத்துக்கு நன் கொடையாய் அளித்து, 'சுயராஜ்ய பவன்' என்று புதுப் பெயர் சூட்டுவது என்று, இங்கேதான் காந்திஜியையும் கலந்துகொண்டு, மோதிலால் தீர்மானித்தார். அலகாபாதுக்குத் திரும்பி வந்தவுடனே, மோதிலால் இந்த விஷயத்தைப் பகிரங்கமாய் அறிக்கை செய்ததுடன், மாளிகையைக் காங்கிரஸ் நிர்வாகிகளிடம் ஒப்படைக்கவும் செய்தார். 'சுயராஜ்ய பவனம்' என்ற இந்தப் பழைய 'ஆனந்தபவன'த்துக்குப் பக்கத்திலேயே சிறுமாளிகை ஒன்றையும் ஜவாஹரின் குடும்பத்துக்காக என்று ஏற்கனவே மோதிலால் கட்டியிருந்தார். 'ஆனந்த பவன'த்தை விட்டு வேறு எங்கேயும் போய் வசிக்க மோதிலாலுக்கு விருப்பம் இல்லை. ஆகையால், இந்தப் புதிய வீட்டுக்கு இப்போது 'ஆனந்த பவனம்' என்ற பெயரை வைத்து, நேரு குடும்பத்தார் யாவரும் இங்கே வசிக்கத் தொடங்கினார்கள்.

தண்டிகடற்கரையில் மகாத்மா உப்புக்காய்ச்சிய பிறகுதான் தேசமெங்கும் தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறவேண்டும் என்று ஏற்பாடாகியிருந்தது. போலீஸ்காரர்கள் எத்தனை அடித்து ஹிம்சித்தாலும் உப்பு அள்ளுவதையும் காய்ச்சுவதையும், கள்ளு, அந்நிய ஜவுளி மறியல்களையும் கைவிடாமல் சத்தியாக்கிரகம் செய்யப் பல தொண்டர்கள் நாடெங்கும் தயாராகிக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட பல தொண்டர்களை அலகாபாதிலும் பயிற்சி செய்துகொண்டிருந்தார்கள். கமலாவும்

கிருஷ்ணும் ஆணுடை அணிந்து, இந்தத் தொண்டர் பயிற்சியில் ஈடுபட்டார்கள். ஏப்ரல்மீ 6உ ஜலியன்வாலா தினமான தேசீய வார ஆரம்பநாள். அன்றைத் தினம் தண்டி கடற்கரையில் மகாத்மா காந்தி உப்புக் காய்ச்சி, சட்டத்தை மீறினர். மூன்று நாளைக்கெல்லாம் எல்லாக் காங்கிரஸ் ஸ்தாபனங்களும் அங்கங்கே இவ்விதமே சட்ட மறுப்பு நடத்த, காங்கிரஸின் அனுமதி பிறந்தது. என்ன அற்புதம்! ஜவாஹர் கூறுவதேபோல், 'திடீரென்று உப்பு என்பது ஒரு மந்திரச் சொல், வல்லமையுள்ள சொல், ஆகி விட்டது.' தேசமெங்கும் அங்கங்கே ஆணும் பெண்ணும் குழந்தையுமாக எண்ணற்ற மக்கள் போலீஸாரின் ஹிம்சைகளெல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு, செய்த சத்தியாக்கிரகம் வர்ணித்து மாளாத அற்புதமாகும்; வார்த்தையில் அடங்காத மகா காவியமாகும். "உப்புக் காய்ச்சிச் சத்தியாக்கிரகம் செய்வதாம்! பிரிட்டிஷ் சர்க்கார் இதற்குப் பயந்து ஓடிவிடுமாம்!" என்றெல்லாம் முதலில் பரிகாசம் செய்தவர்களே, இப்போது வெட்கம் அடைந்து விட்டார்கள்.

காந்திஜியைத் தவிர, பிற தலைவர்களெல்லாம் கைதாகிவிட்டார்கள். காந்திஜி மட்டில் ஒருமாதம் வரையில் கைதாகவில்லை. உப்புக் காய்ச்சுவதுடன் நிற்பதில்லை, இனிச் சர்க்கார் உப்பளங்களில் படையெடுத்து, போலீஸ் ராணுவ வீரர்களின் காவல்களைக் கடந்து புகுந்து உப்பு அள்ளிவருவது என்று மகாத்மா திட்டமிட்டார். இதை வைசிராய்க்கும் அறிவித்தார். உடனே, ஒருநாள் ராத்திரி சர்க்கார் அதிகாரிகள் காந்திஜியின் குடிசைக்குள் கள்ளரைப்போல் வந்து டார்ச் விளக்கு வெளிச்சம் போட்டு, அவரை இரவோடு இரவாய்க் கைதுசெய்து, கல்யாண வண்டிமாதிரி மஞ்சள் திரை விட்டு அலங்கரித்த ஒரு மோட்டார்காரில் மணவாளனைப்போல் ஏற்றிக்

கொண்டு போய்விட்டார்கள் ! இது மேமீ 5௳ நிகழ்ந்த சம்பவம்.

இதற்கு முன்னதாகவே, ஏப்ரல் 14௳ காங்கிரஸ் தலைவரான ஜவா ஹர் கைதாகிவிட்டார். அவருக்குப்பின், மோதிலால் முதலிய பல காங்கிரஸ் தலைவர்களும் சிறைப் பட்டார்கள். தந்தையும் மகனும் நைனி சிறையிலேயே வைக்கப்பட்டார்கள்.

ஜூலைமீ 27௳ திடீரென்று ஐயகரும் சாப்ரூவும் இவர்களிடம் வந்து தோன்றினார்கள். காந்திஜியிடமிருந்து அவர்கள் ஒரு சிறு கடிதம் வாங்கி வந்திருந்தார்கள். காங் கிரஸுக்கும் சர்க்காருக்கும் சமரசம் ஏற்படுத்தவே அவர் கள் இப்படித் தூதுவந்தார்கள். " காரியக் கமிட்டி சகாக் களை, முக்கியமாகக் காந்திஜியை, நேரே கலந்து ஆலோ சிக்காமல் நாங்கள் ஒன்றும் சொல்ல முடியாது" என்று ஜவா ஹரும் மோதிலாலும் மறுத்துவிட்டார்கள். இதன் மேல், இவர்களையும் ஆக்டிங் காங்கிரஸ் காரியதரிசியாய்ச் சிறைப்பட்ட டாக்டர் ஸையது முகம்மதையும் ஒரு ஸ்பெஷல் ரெயில்வண்டியில் ஏர்வாடா சிறைக்கு அதிகாரி கள் அழைத்துச் சென்றார்கள். இந்தப் பிரயாணத்தின் போது, மோதிலாலுக்குச் சிரமமில்லாமல் எவ்வளவு வசதி செய்ய முடியுமோ அவ்வளவு வசதியும் சர்க்கார் செய்து கொடுத்தார்கள். ஏர்வாடா சிறையில் ஒரு ரசமான சம்பவங்கூட நடந்தது.

ஏர்வாடா சிறைக்குப் போய்ச் சேர்ந்த முதல் நாள் இரவில், சிறை சூப்பரிண்டெண்ட் கர்னல் மார்ட்டின் என்பவர், "தங்களுக்கு எந்தவிதமான உணவு பிடிக்கும்?" என்று மோதிலாலைக் கேட்டார். " பிரமாதமாய் ஒன்றும் வேண்டாம். ஏதாவது லேசாய் எளிய உணவு போதும்" என்று மோதிலால் பதிலளித்தார். இப்படிப் பதிலளித்த வர், காலையிலே படுக்கையில் குடிக்கத் தேவையான டீயிலிருந்து இரவுச்சாப்பாடு வரையில் பற்பல இனங்கள்

கொண்ட ஒரு நீண்ட ஜாபிதாவை அடுக்கினுர். மோதிலால் சிறிதும் களங்கமில்லாமலேதான் பேசினுர். ரிட்ஸ், அல்லது ஸேவாய் ஓட்டலில் எது எளிய உணவோ அது தான் அவருடைய எளிய உணவுமாகும். ஆனுல், ஏர்வாடா சிறையிலே அப்படியா ? சூப்பரிண்டெண்ட் பிரமித்துப் போய்விட்டார். இந்தியாவின் மிகக் கீர்த்திவாய்ந்த தலைவர்களுக்குள்ளே பெருந்தலைவரை அவர் வெகுநாளாய்ப் பராமரித்து வந்திருக்கிருர். அவருக்கு உணவென்ருல், ஆட்டுப்பாலும் பேரீச்சம்பழமும், சில சமயம் ஆரஞ்சுப் பழங்களும் இருந்தால் போதும். இந்த மோதிலால் என்னடா என்ருல், அரண்மனைமாதிரி அல்லவா ஜாபிதாக் கொடுக்கிருர் ! சூப்பரிண்டெண்ட் ஆச்சரியத்தால் கல்லாய்ப் போகாமல் என்ன செய்வார் ?

காந்திஜி, மோதிலால், ஜவாஹர், முகம்மது, பட்டேல் தௌலத்ராம், சரோஜினி இவர்கள் ஒருபுறமும் சாப்ரூ, ஜயகர் இவர்கள் மறுபுறமுமாகக் கூடிக் கூடிப் பேசினுர்கள். ஒன்றும் பயன் ஏற்படவில்லை. தந்தை நேருவும் மகனும் நைனிக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஏர்வாடாவில் நடந்த பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட சிரமத்தால், அங்கேயே பண்டித மோதிலாலுக்குப் பலத்த காய்ச்சல் உண்டாகிவிட்டது. நைனிக்குத் திரும்பியபின், அவருடைய தேகநிலை வரவர மோசமாகிக் கொண்டே வந்தது. பத்துவாரம் சிறையிருந்த பின்பு, ஸெப்டம்பர் 8-ஆம்வ அவரைச் சர்க்கார் விடுதலை செய்து விட்டார்கள். ஜவாஹரும் தோழரும் மட்டில் சிறையிலேயே இருந்தார்கள். மோதிலால் வெளியேறிய பிறகு ஜவாஹருக்குச் சிறை என்னவோ வெறிச்சென்று இருந்தது. ஆனுல் ஒருமாதத்துக்கெல்லாம், அதாவது அக்டோபர் 11-வ ஜவாஹரின் ஆறுமாதத் தண்டனைக் காலம் முடிவடைந்து அவரும் விடுதலையடைந்தார்.

போராட்டம் நடந்துகொண்டே இருந்தது. ஆகையால், தமது விடுதலை சிறிது காலத்துக்குத்தான் என்று ஜவாஹருக்குத் தெரியும். அந்தக் குறுகிய காலத்தில் திறமையாக ஏதாவது செயல் செய்யவேண்டும் என்று அவர் தீர்மானித்துக் கொண்டார். கமலா மட்டிலுமே அலகாபாதில் காங்கிரஸ் சேவை புரிந்துகொண்டிருந்தாள். தந்தை முசோரியில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்தார். அவரோடு குடும்பத்தினரில் கமலாவைத்தவிர மற்ற எல்லாரும் போய் வசித்தார்கள்.

ஜவாஹர் விடுதலை யடைந்ததும், அக்டோபர் 13உ கமலாவை அழைத்துக்கொண்டு, முசோரிக்குப்போய்த் தந்தையுடன் மூன்றுநாள் தங்கினர். பின்பு, கமலாவும் ஜவாஹரும் அலகாபாதுக்குத் திரும்பினர்கள். இந்தச் சில தினங்களுக்குள்ளே ஐக்கிய மாகாணத்தில் வரீ கொடாமை இயக்கம் தொடங்கவேண்டிய ஏற்பாடுகளை ஜவாஹர் தீவிரமாய் மேற்கொண்டார். மகன் எந்த நிமிஷத்திலும் கைதாகக்கூடும் என்று அஞ்சிய மோதிலால், தமது உடம்பு எப்படிப் போனலும் போகட்டும் என்று அசட்டைசெய்து, வைத்தியர்களின் யோசனையையும் கேளாமல், மகனை மீண்டும் காண்பதற்காக அலகாபாதுக்கு ஓடிவந்தார்.

தந்தையைச் சந்திக்க ஜவாஹர், கமலாவுடன், ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்ருர். வண்டி தாமதித்து வந்ததால், அவரால் நீண்ட நேரம் தங்கிப் பேசமுடியவில்லை. அவசரமாக, கிராமத்துக் குடியானவர்களின் பிரம்மாண்டமான ஒரு பொதுக் கூட்டத்துக்கு அவர் போய்விட்டார். கூட்டம் முடிந்து கமலாவும் ஜவாஹரும் வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். கண்ணுக் கெட்டிய தூரத்தில் வீடு இருக்கும்போது, போலீஸார் வந்து காரை மறித்துக்கொண்டு ஜவாஹரைக் கைது

செய்து அழைத்துப் போய்விட்டார்கள். தன்னந்தனியே, கமலாமட்டில் வீட்டுக்குத் திரும்பினுள்.

மகனைக் கண்டுபேச ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த தந்தையிடம் மருமகள் கமலா தனியளாய்ப் போய்ச் சேர்ந்தாள். நடந்த சேதியைத் தெரிவித்தாள். மோதிலால் ஆவேசம் அடைந்தார். எதிரிலே யிருந்த மேஜையைப் படீர் எனத் தட்டிக்கொண்டே, "இனி நான் நோயாளியாய் இருக்கப்போவதில்லை. ஆரோக்கிய புருஷனுய், ஆண்மையோடு நடக்கப்போகிறேன். பலவீனமாய் நோய்க்குப் பணிந்து கிடக்கமாட்டேன்" என்று கோஷித்தார். இந்தத் தீர்மானத்தால், மோதிலாலின் உடம்பு சிறிது குணம் அடைந்ததுபோல்கூடத் தோன்றியது. தீவிரமாய் இயக்கத்தை நடத்த அவர் தம்மாலான முயற்சிகளையெல்லாம் செய்தார். ஆனல், இந்தத் தெம்பு நீடிக்கவில்லை. மீண்டும் நோய் அதிகரித்தது.

இந்த நிலையில், **1931**-ஆம் ஸு ஜனவரிமீ முதல்உ புது வருஷப் பிறப்பன்று கமலாவும் கைது செய்யப்பட்டாள். ஜவாஹருக்கு இது சந்தோஷந்தான். ஆனல், ஆரோக்கியமில்லாத பலவீனமான உடம்பாயிற்றே, சிறைவாசம் தாங்குமா என்றுதான் சிறிதுகவலைப்பட்டார்.

பெண்ணுரிமைக்குப் பாடுபட்ட தீரப்பெண் கமலா. ஆணுக்குப் பெண் தாழ்வென்ருல் அவள் துளியும் சகிக்க மாட்டாள்; சீறி விழுவாள். இத்தகைய கமலா சிறை புகுந்தபோது நிருபர்கள் அவளை ஒரு செய்தி தரும்படி கேட்டார்கள். ஹிந்து மனைவியின் இயற்கைக் குணம் அவளை அறியாமலே அவளிடமிருந்து வெளிப்பட்டது. "நான் என் கணவரின் அடிபற்றிச் செல்கிறேன். இதிலே நான் பெருமை கொள்கிறேன்; மகிழ்ச்சி அடைகிறேன். ஜனங்கள் கொடியைத் தாழாது பறக்கவிட்டுக்கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்" என்றே அவள் செய்தியளித்தாள்.

17. மோதிலாலின் மறைவு

ஜனவரி மாதம் 26-ஆம் தேதி மகாத்மா காந்தியையும் அசல் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களையும் ஆக்டிங் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களையும் நிபந்தனையின்றிச் சர்க்கார் விடுதலைசெய்தார்கள். நிலைமையைக் காங்கிரஸ்காரர்கள் புனராலோசனை செய்ய வசதியாகவே சர்க்கார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்கள். பண்டித மோதிலாலின் தேக அசௌக்கியம் கடுமையாய்ப் போனதால், சில மணிநேரம் முன்னதாகவே ஜவாஹர் விடுதலையானார். 26 நாள் சிறையோடு கமலாவும் விடுதலையானாள். அவளும் காரியக் கமிட்டியில் ஓர் ஆக்டிங் அங்கத்தினள். விஜயலட்சுமியின் கணவர் ரஞ்சித் மட்டில் தற்காலிக விடுதலையே பெற்றார். ஏனென்றால், அவர் காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர் அல்ல.

விடுதலை யடைந்தவுடனே, ஜவாஹரும் ரஞ்சித்தும் அலகாபாதுக்கு விரைந்தார்கள். ஜவாஹர் 'ஆனந்த பவன்'த்துக்குள் நுழைந்ததும், நேரே மோதிலாலின் அறைக்கு ஓடினார். தந்தையின் உடம்பும் முகமும் மாறியிருந்தது கண்டு, நெஞ்சங் கலங்கி வாயிற்படியிலேயே சிறிதுநேரம் பிரமித்து நின்றார். பின்பு, தந்தையும் மகனும் வாய் பேசாமல் ஒருவரை யொருவர் மார்புறத் தழுவிக்கொண்டார்கள். மோதிலால் மகிழ்ச்சி பொங்கிய முகமும் ஒளி நிறைந்த கண்களுமாய் மகனை ஆசீர்வதித்தார். தந்தையின் படுக்கையின் பக்கத்திலே மகன் உட்கார்ந்தார். அவரையும் அறியாமல் கண்ணீர் ஆறாய்ப்பெருகியது.

அடுத்தநாள் மகாத்மா காந்தி அலகாபாதுக்கு ஓடிவந்தார். அவர் வர இரவு வெகுநேரம் ஆகிவிட்டது.

அப்படியிருந்தும், காந்திஜியைக் காணும் ஆவலால் மோதிலால் தூங்காமல் விழித்துக் காத்திருந்தார். அவர் வந்து சொன்ன சில வார்த்தைகள் மோதிலாலுக்குப் பெரிய ஆறுதலாயிருந்தன. காந்திஜியின் வருகையால் அன்னை சொரூபராணியும் மனச்சுமை குறைந்து சிறிது ஆறுதல் பெற்றாள். விடுதலை அடைந்த யாவரும் மோதிலாலை வந்து கண்டார்கள்.

இந்நிலையில் இரண்டு நாளைக்கெல்லாம் ரஞ்சித்தைத் திரும்பவும் சிறைக்குக் கொண்டுபோய் விட்டார்கள். "ரஞ்சித் எங்கே? ரஞ்சித் எங்கே? இந்தியாவின் தூர தூரமான இடங்களிலிருந்தெல்லாம் ஜனங்கள் என்னை வந்து பார்க்கிறார்கள். என் மருமகன் ரஞ்சித்தைமட்டிலும் வராமல் தடுத்திருக்கிறார்களா?" என்று மோதிலால் அலட்டிக்கொண்டே யிருந்தார். இப்படி அலட்டிக்கொண்டிருப்பது அவர் உடம்புக்குக் கெடுதல் என்று டாக்டர்கள் அஞ்சினார்கள். டாக்டர்களுடைய யோசனையின் பேரில், ரஞ்சித்தையும் ஐக்கிய மாகாண சர்க்கார் நாலைந்து தினங்களுக்குள் நிபந்தனையின்றி விடுதலை செய்தார்கள்.

எல்லாக் காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் அலகாபாத்துக்கு வந்து ஆலோசனை புரிந்தார்கள். மோதிலாலுக்கு இந்தக் கூட்டங்களிலே கலந்துகொள்ளத் தெம்பு இல்லை; சிரத்தையும் இல்லை. அவர் உடம்பு வரவர மோசமாகி வந்தது. அதை அவரே அறிந்துகொண்டார். "மகாத்மாஜி, நான் கூடிய சீக்கிரம் போய்விடுவேன். சுயராஜ்யத்தைக்காண, இங்கே இருக்க மாட்டேன். ஆனால், அதை நீங்கள் வென்றுவிட்டீர்கள்; சீக்கிரத்திலே அடைவீர்கள்" என்று காந்திஜியிடம் அவர் சொன்னார்.

டாக்டர்கள் சொன்ன யோசனையின் பேரில், எக்ஸ்ரே சிகிச்சைக்காக, மோதிலாலைக் காரில் லட்சுமணபுரிக்கு 1931-ஆம் ஆண்டு பிப்ரவரி மீ 4உ அழைத்துச் சென்

ளூர்கள். காந்திஜியும் பிறரும் மோதிலாலுக்குப் பின்னு லேயே லட்சுமணபுரி போய்ச் சேர்ந்தார்கள். ஒன்றும் பயன் படவில்லை. மோதிலாலுக்கு மூச்சு முட்டிப் போயிற்று. ஆனால் கடைசி நேரத்திலும் பிரக்ஞை குறையவில்லை. தம் சிறிய மகள் கிருஷ்ணுவை, உருத் தெரியாமல் வீங்கிய தம் உதடுகளால், முகத்திலே அன் போடு அவர் முத்தமிட்டுக் கொண்டார். கிருஷ்ணுவின் கண்களில் நீர் ததும்பியது. வாய்விட்டு அலறுமல், கஷ்டப் பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டாள். மோதிலால் அவளைப் பிடித்த பிடியை நெகிழவிடாமல், சிரமத்துடன் நாக்குழற, "என் செல்வச் சிறுமகள் எப்போதும் தைரியமாயிருக்க வேண்டும்" என்று புத்திமதி சொன் ஞர். கிருஷ்ணு இதைத் தாங்க முடியாமல், கண்களை மூடிக்கொண்டு வெளியே ஓடி விம்மி விம்மி அழுதாள்.

நேரமாக ஆக மோதிலாலின் நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. கமலா, விஜயலட்சுமி, கிருஷ்ணு, பிற உறவினர்கள் ஆகிய அனைவரும் அசதியால் தூங்கி விட்டார்கள். ஜவாஹரும் சொரூபராணியும் வைத்தியர்களுமே அவர் பக்கத்திலே இருந்தார்கள். இரவு முழுவதும் ஒரே வேதனை. அடுத்த நாள், பிப்ரவரிமீ 6வ காலை தந்தையின் முகத்தை ஜவாஹர் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தார். இரவில் பட்ட உபாதையெல்லாம் தீர்ந்து, திடீரென்று அந்த முகத்திலே ஓர் அமைதி பிறந் தது; தெளிவு உண்டாயிற்று. தந்தை உறங்குகிறார் என்று ஜவாஹர் எண்ணினுர். ஆனால், தாய் சொரூப ராணியின் கண்கள் அதிகக் கூர்மையானவை. அவள் 'ஐயோ!' என்று அலறிவிட்டாள். "அம்மா! கத்தாதே அப்பா தூங்குகிருர்" என்று குழந்தைபோல் கூறினுர் ஜவாஹர். பாவம்! அந்தத் தூக்கமே மோதிலாலின் கடைசித் தூக்கமாயிற்று. அதிலிருந்து அவர் எழுந் திருக்கவேயில்லை.

கிருஷ்ணு, கமலா முதலியவர்களை, ஜவாஹரின் பெரிய தாய் போய் எழுப்பினுள். மோதிலால் இறந்து விட்டார் என்று அவள் அவர்களுக்குத் தெரிவித்தாள். அவர்கள் ஒவ்வொருவராகப் பிரேத அறைக்குள்ளே நுழைந்தார்கள். மோதிலால் அமைதியாய்ப் படுத்து உறங்குவதுபோல், அவருடைய உடம்பு கிடந்தது. அதற்குப் பின்பக்கத்திலே இருந்த வண்ணம் ஜவாஹர் கண்களில் நீர் ததும்ப, தந்தையின் தலையைத் தடவிக் கொண்டிருந்தார். காந்திஜி இந்தச் சமயத்தில், அறைக்குள்ளே வந்து, நேரே மோதிலாலின் பக்கத்திலே சென்ருர். ஏதோ பிரார்த்தனை செய்வது போலும், தம் கடைசி வணக்கத்தை மோதிலாலுக்குத் தெரிவித்துக்கொள்வது போலும், தலை குனிந்து சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டு நின்ருர்.

பின்பு, சொரூபராணியின் பக்கம் அவர் திரும்பினுர். சொரூபராணி ஒருமுறை வாய்விட்டலறியதல்லாமல், சொல்லொணுத் துயரத்தோடு மௌனமாய் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். காந்திஜி அவள் அருகில் அமர்ந்து தோளின்மேல் கையைவைத்து, "மோதிலால்ஜி இறக்கவில்லை. அவர் நெடுங்காலம் வாழ்வார்" என்ருர்.

வீட்டிலும் வெளியிலும் எண்ணற்ற மக்கள் கூடிக் கண்ணீர் விட்டார்கள். மோதிலாலின் உடலத்தை மோட்டார்க் காரில் அன்றே அலகாபாத்துக்குக் கொண்டு சென்ருர்கள். தேகத்தைத் தேசீயக் கொடியினுல் போர்த்தினுர்கள். ஜவாஹர் அருகில் உட்கார்ந்து கொண்டார். மருமகன் ரஞ்சித் காரை ஓட்டினுர். கார் பறந்தது.

அலகாபாதிலும் ஜனங்கள் ஆனந்த பவனத்திலிருந்து சுமார் நாலு மைல் தூரம் சமுத்திரமாய்க் கூடியிருந்தார்கள். வீட்டிலே சடங்குகள் நிறைவேறின. புஷ்பங்களால் அலங்கரித்த பாடைமீது உடலைக் கங்கைக் கரைக்கு எடுத்துச் சென்ருர்கள். சிதைக்கு ஜவாஹர் தீ மூட்டினுர். இந்தியாவின் கோடிக் கணக்கான மக்க

ளின் உள்ளத்திலே குடிகொண்டிருந்த அந்தத் தேகத்தை, உயர்ந்தெழுந்த தீச் சுவாலைகள் விழுங்கத் தொடங்கின. கூடியிருந்த லட்சக்கணக்கான மக்களுக்கு மாளவியாஜியும், காந்திஜியும் சில வார்த்தைகள் உருக்கமாகப் பேசினார்கள். பின்பு, அனைவரும் மௌனமாய்ப் பிரிந்தார்கள். தெளிந்த வானத்திலே நட்சத்திரங்கள் மட்டில் பளீர் என்று பிரகாசித்துக் கொண்டிருந்தன.

வைசிராய் இர்வின் (இப்போது லார்டு ஹாலிபாக்ஸ்) தம்பதிகள் உட்படப் பல்லாயிரக் கணக்கான பேர், நேரு குடும்பத்துக்கு அனுதாபச் செய்தி அனுப்பினார்கள். அவை ஜவாஹருக்கும் குடும்பத்தாருக்கும் ஓரளவு ஆறுதல் தந்தன. மற்றெதனையும்விட மகாத்மாஜி வந்து பிரசன்னமாயிருந்ததுதான், தாளமுடியாத அந்தத் துக்கத்தைத் தாங்கி ஆறுதல் பெற, சொரூபராணிக்கும் ஜவாஹர் முதலியவர்களுக்கும் அற்புதமாய் உதவியது.

18. ராஜியும் ராஜி முறிவும்

லண்டனில் நடந்த முதல் வட்டமேஜை மகாநாட்டுக்குப் போன ஒரு கோஷ்டியார் திரும்பிவிட்டார்கள். மோதிலால் இறந்த அதே நாள் காலையில் ஏறக்குறைய அதே நேரத்தில் பம்பாயில் வந்து இறங்கினார்கள். அவர்களில், சீனிவாச சாஸ்திரியார், ஸர் ஸாப்ரூ முதலிய சிலர் நேரே அலகாபாதுக்கு வந்தார்கள். காந்திஜியையும் மிஞ்சியிருந்த காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களையும் சந்தித்துப் பேசினார்கள். வைசிராயைச் சந்திக்க விரும்புவதாக அவருக்கு மகாத்மா ஒரு கடிதம் எழுதினால், அதிலிருந்து ராஜிப் பேச்சுகள் நடத்த வழி திறக்கும் என்று, அவர்களில் ஒருவர் யோசனை சொன்னார். அவ்விதமே வைசிராய் இர்வினுக்கு மகாத்மா காந்தி ஒரு கடிதம் எழுதினார். அதன் பலனாக, காந்திஜிக்கும் இர்வினுக்கும் டில்லியில் சம்பாஷணைகள் நடந்தன. மார்ச்ஸ்ரீ 4௳ இரவு காந்தி-இர்வின் உடன்படிக்கையும் ஏற்பட்டது.

உடன்படிக்கை ஷரத்துகளின்படி சட்டமறுப்பு இயக்கம் தாற்காலிகமாக நிறுத்தப்பட்டது. ஓர் ஆள் தலைச்சுமை உப்பை ஏழை மக்கள் சொந்த உபயோகத்துக்காகக் கடற்கரையில் எவ்வித வரியும் இல்லாமல் அள்ளிக்கொள்ள உரிமை கிடைத்தது. அந்நிய ஜவுளிக்கடைகளிலும், கள்ளுக்கடைகளிலும் அமைதியாய் மறியல் செய்ய அனுமதித்தார்கள். வசூலாகாத அபராதங்கள் ரத்தாயின. பலாத்காரக் குற்றம் செய்யாத பிற அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை அடைந்தார்கள். தாங்கள் கைப்பற்றிய சொத்துக்களில் இன்னமும் தங்கள் கைவசமே இருந்தவைகளைச் சர்க்கார் வாபஸ் செய்தார்கள். காங்கிரஸ் இரண்டாவது வட்டமேஜையில் கலந்துகொள்ளவும் இசைந்தது.

அரசியல் பிரச்னைபற்றிய மட்டில் உடன்படிக்கையில் கண்டிருந்த முக்கியமான ஷரத்து, "சமஷ்டி முக்கியம். அதேபோல, இந்திய நன்மைகளையே நோக்கமாய்க் கொண்ட பாதுகாப்புகளும் முக்கியம்" என்று கூறியது. இதுதான் ஜவாஹருக்கு மிக்க வருத்தமாயிருந்தது. ஆனால், அவர் காந்திஜியிடம் இதுபற்றி வாய் திறக்கவில்லை.

ஜவாஹரின் மனத்துயரை, காந்திஜி அறிந்துகொண்டார். அடுத்த நாள் காலையில் வழக்கம்போல அவர் உலாவச் செல்கையில் தம்முடன் கூட வரும்படி ஜவாஹரையும் அழைத்தார். நடந்துகொண்டே இருவரும் நீண்ட நேரம் சம்பாஷித்தார்கள். ஜீவாதாரமான எந்தக் கொள்கையும் தமது உடன்படிக்கையில் தியாகம் செய்யப் படவில்லை என்று காந்திஜி எடுத்துரைத்தார். ஜவாஹருக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஆனால், ஏதோ கொஞ்சம் சாந்தி உண்டாயிற்று. "உங்கள் ஒப்பந்தத்தின் குறை குணங்கள் எப்படிப் போனாலும் போகட்டும். நீங்கள் திடீர் திடீரென்று ஏதாவது குண்டுபோட்டு விடுகிறீர்கள். அதுவே எனக்குப் பயமாயிருக்கிறது. நானுந்தான் உங்களுடன் பதினாலு வருஷகாலமாக மிக நெருங்கிப் பழகிவருகிறேன். வெளிக்குப் புலனாகாத ஏதோ ஒரு மர்ம சக்தி உங்களிடம் இருக்கிறது. அதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை" என்றார் ஜவாஹர். "நீங்கள் சொல்லும் ஏதோ ஒரு மர்ம சக்தி என்னிடம் இருப்பது உண்மைதான். அதற்கு நான் ஜவாப்தாரியல்ல. அதனால் என்ன விளையும் என்பதை முன்கூட்டிச் சொல்ல என்னாலுமே முடியாது" என்றார் காந்திஜி. எப்படியாயினும் சரி; ஒப்பந்தத்தை இனி நிராகரிப்பது சரியல்ல என்று எண்ணினார் ஜவாஹர். அதைப் பூர்ணமாக ஆதரிப்பதென்றும் முடிவு செய்தார்.

மார்ச்சு மாசக் கடைசியில் சர்தார் படேலின் தலைமையில் கராச்சியில் காங்கிரஸ் மகா சபை கூடியது.

அப்போதுதான் பகவத்சிங், சுகதேவ், தத் மூவரும் தூக்கி லிடப்பட்டார்கள். அவர்களைக் காப்பாற்ற முடியாததற்காக, தீவிரவாதிகள் காந்திஜியைத் தூற்றத் தொடங்கினார்கள். அவருக்குக் கறுப்புக்கொடி பிடித்தார்கள்; கறுப்புப் பூமாலையும் கொடுத்தார்கள்; ஒரே ஆர்ப்பாட்டந்தான். இந்த ஆர்ப்பாட்டங்களையெல்லாம் மீறி, மகாத்மா காந்தி அற்புத வெற்றி அடைந்தார். மந்திர சக்தி கொண்ட அவருடைய வசீகரத்துக்கு ஓர் அத்தாட்சியாய் விளங்கியது கராச்சிக் காங்கிரஸ். காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை அங்கீகரிக்கும் தீர்மானத்தை, ஜவாஹரே பிரேரணை செய்தார். அது நிறைவேறிவிட்டது.

கராச்சிக் காங்கிரஸ் முடிந்ததும் டாக்டர்களின் யோசனைப்படி, ஜவாஹர் ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பினார். கமலா, இந்திரா இருவருடனும், ஒரு மாதகாலம் இலங்கையில் போய் இருந்தார். அங்கே அழகு வாய்ந்த நுவரேலியாவில் தங்கிய இரண்டு வார காலத்தில்தான் அவருக்கு உண்மையான ஓய்வு கிடைத்தது. மீதி நாளெல்லாம் விமரிசையான பற்பல வரவேற்புகளும் கூட்டங்களும் நிறைந்தன. இலங்கையிலிருந்து தென்னிந்தியாவுக்கு, மனைவியுடனும் மகளுடனும் அவர் வந்து சேர்ந்தார். குமரிமுனை, திருவனந்தபுரம், கொச்சி, மலையாளம், மைசூர், ஹைதராபாது முதலிய இடங்களையெல்லாம் சுற்றிக்கொண்டு, புறப்பட்ட ஏழுவார காலத்தில் மீண்டும் பம்பாய் வந்துசேர்ந்தார்.

காந்தி-இர்வின் உடன்படிக்கைக்குப் பின்பு, இர்வின் பதவிக் காலம் முடிந்து ஊருக்குப் போய்விட்டார். லார்டு வில்லிங்டன் புது வைசிராயாக வந்தார். ஆனால், லண்டனில் மட்டில், முற்றும் தொழிற் கட்சி மயமான மக்டானல்டு மந்திரி சபையே இருந்துவந்தது. காங்கிரஸின் ஏகப் பிரதிநிதியாக, லண்டன் இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டுக்கு மகாத்மா காந்தி போவதென்று

ஏற்பாடு. இடையிலே தகராறுகள் முளைத்தன. ஐக்கிய மாகாணத்தில் விவசாயிகள் கிளர்ச்சியும், எல்லைப்புறத்தில் செஞ்சட்டைத் தொண்டர் இயக்கமும் சர்க்காரை உறுத்திக்கொண்டேயிருந்தன. வில்லிங்டன் காந்தி சம்பாஷணைகள் நடந்தன. கடைசி நிமிஷம் வரையில் காந்திஜி புறப்படுவது நிச்சயமாயில்லை. "காந்தி, நீங்கள் எப்படியாவது லண்டனுக்குப் போயாக வேண்டும்" என்று உருக்கமாய் ஒரு கடிதத்தில் வற்புறுத்தினுர் லார்டு வில்லிங்டன். சிம்லாவில் பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கையில், பம்பாயில் கப்பலைப் பிடிக்கக் கூடிய கடைசி ரெயில் வண்டியும் போய்விட்டது. அதன் பின்பே ராஜி ஏற்பட்டது. காந்திஜிக்காகச் சிம்லாவிலிருந்து ஒரு ஸ்பெஷல் ரெயில் புறப்பட்டு, கல்காவில் பம்பாய் வண்டியைப் போய்ப் பிடித்தது. சிம்லாவிலிருந்து பம்பாய்க்கு மகாத்மாவுடன் ரெயிலில் ஜவாஹரும் கூடச் சென்று, கப்பலில் அவரை வழியனுப்பினுர். ஆகஸ்ட்மீ 29உ மகாத்மா லண்டனுக்குப் புறப்பட்டார்.

மகாத்மா காந்தி திரும்பி வருமுன் இங்கே நிலைமை முற்றிவிட்டது. ஐக்கிய மாகாண விவசாயிகள் சங்கடம் தாளவில்லை. சர்க்காரோடு தொல்லை ஏற்படாமல் தடுப்பது கஷ்டமாயிற்று. ஜவாஹரும் சகாக்களும் இதைத் தந்திமூலம் காந்திஜிக்குத் தெரிவித்தார்கள். "நான் திக்கற்றவனுயிருக்கிறேன். என்னுல் இப்போது உங்களுக்காக ஒன்றும் செய்யமுடியாது. உங்களுக்கு யுக்தமென்று தோன்றுகிறபடி நடந்து கொள்ளுங்கள்" என்று அவர் பதில் சொல்லிவிட்டார். இதே சமயத்தில் வடமேற்கு எல்லைப்புற மாகாணமும் வங்காளமும் வேறே கொந்தளித்துக் கொண்டிருந்தன.

இந்த இடைக்காலத்தில், அதாவது, லண்டனில் வட்ட மேஜை மகாநாடு கூடுமுன்பேதான் தொழிற் கட்சி மந்திரி சபை விழுந்துவிட்டது. தேசீய சர்க்கார் சபை என்ற

கூட்டு மந்திரி சபை ஏற்பட்டது. அதிலும் பிரதம மந்திரியாயிருந்தவர் மக்டானல்டுதான். இந்த மந்திரி சபை மாற்றத்தால்தாஞே என்னவோ, இந்திய சர்க்காரும் கொஞ்சம் மிடுக்காகவே நடக்கலாயினர். மேலே கண்ட மூன்று மாகாணங்களிலும் போர் தொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஜவாஹர், ஷெர்வானி, அப்துல் கபார்கான், டாக்டர் கான் சாகேப் முதலிய பலரைக் கைது செய்துவிட்டார்கள்.

இரண்டாவது வட்டமேஜை மகாநாடும் ஒன்றும் சாதிக்கவில்லை. ஆஞல், யாரோ வர்ணித்ததுபோல், ‘சிங்கக் குகையில் புகுந்து அதன் வாலைப் பிடித்து ஆட்டுவது போல்’ மகாத்மா காந்தி அஞ்சா நெஞ்சுடன் தன்னந் தனியராய் இந்திய சுதந்தர கோஷத்தை லண்டனிலும் எதிரொலிக்கச் செய்துவந்தார். அவருடைய ஒரு பிரசங்கத்தை - கடைசிப் பிரசங்கத்தை என்று ஞாபகம் - கேட்பதற்காக, பிரிட்டிஷ் மந்திரிசபைக்கூட்டம் ஒன்றையே ஒத்திப் போட்டுவிட்டு, அந்த மந்திரிகள் ஓடிவந்தார்கள் என்று ஞாபகம். இந்தியாவின் பூர்ண சுதந்தர உரிமையைப் பிரிட்டன் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று உருக்கமான வேண்டுகோளும், இல்லாவிட்டால் பிரமாத அனர்த்தம் நேரும் என்ற எச்சரிக்கையும் செய்துவிட்டு, மகாத்மா காந்தி டிசம்பர்மீ 28உ ஜவாஹரும் பிறரும் கைதான இரண்டுநாள் கழித்துப் பம்பாய் வந்து இறங்கிஞர். அப்போதுதான், அவருக்கு இங்கே கடைசியாக நிகழ்ந்த சம்பவங்கள் தெரிய வந்தன. பற்பல புதிய அவசரச் சட்டங்கள் பிறந்திருப்பதையும், தம் நெருங்கிய நண்பர்கள் சிலர் சிறைப்பட்டிருப்பதையும் அவர் கண்டார். இந்தச் சங்கடத்திலிருந்து ஒரு வழி காண்பதற்காக, வைசிராய் வில்லிங்டனைச் சந்திக்க மகாத்மா விரும்பித் தந்தி சொன்ஞர். “வங்காளம் ஐக்கிய மாகாணம், எல்லைப்புறம் இவைகள் பற்றியோ புதிய அவசரச்

சட்டங்கள் பற்றியோ பேசாதிருப்பதானால் மட்டுமே நீங்கள் என்னைச் சந்திக்கலாம்'' என்று பதில் தந்தி சொன்னார் வைசிராய். முன்னே லண்டன் செல்ல மகாத்மாவைக் கெஞ்சாதபடி கெஞ்சிய அதே வில்லிங்டன், இப்போது அவரைப் பார்த்துப் பேசக்கூட மிடுக்குடன் நிபந்தனை போட்டார்! நிபந்தனை யில்லாத சந்திப்பே வேண்டும் என்று கேட்டதற்குப் பரிசாக, மகாத்மா காந்தி, விசாரணையின்றியே 1932-ஆம் ஆு ஜனவரிமீ 4உ ராஜாங்கக் கைதியாய்ச் சிறைப்பட்டு விட்டார். மீண்டும் உக்கிரமான சத்தியாக்கிரகப் போரும், குரூர அடக்கு முறையும் தொடங்கிவிட்டன.

19. சிறை ஜன்னல் வழியே

மீண்டும் இயக்கம் ஆரம்பித்த தகவலெல்லாம் சிறையிலே ஜவாஹருக்குத் துண்டு துண்டாய் எட்டியது. அவருடைய விசாரணை நடந்து, இரண்டு வருஷக் காவல் தண்டனையும் கிடைத்தது. மாதங்கள் சென்றன. நல்லதும் கெட்டதுமாய்ச் செய்திகள் வந்து கொண்டேயிருந்தன. தேசீய வாரம் - ஏப்பிரல் 6உ முதல் 13உ வரை - வந்துசேர்ந்தது. அப்போது நிகழ்ந்த ஒரு சம்பவம் பற்றிய செய்தி, சிலநாள் கழித்துத்தான் ஜவாஹருக்கு எட்டியது. மற்றெல்லாத் துக்கமான சேதிகளையும் அவர் மனத்தில் அதுமங்கச் செய்துவிட்டது. இதைப் பற்றி, அவரே எழுதுகிறார்.

"அலகாபாதில் என் தாய் ஓர் ஊர்வலத்தில் இருந்தாள். ஊர்வல முன்னணியில், ஒரு நாற்காலியைப் போட்டுக்கொண்டு ரஸ்தாவில் அவள் உட்கார்ந்திருந்தாள். போலீஸார் அவளை நாற்காலியிலிருந்து கீழே தள்ளினார்கள். பிரம்பால் அவள் தலையிலே திரும்பத் திரும்ப அடித்தார்கள். காயம் ஒன்று வாய் பிளந்து ரத்தம் வழிந்தது. அவள் மூர்ச்சித்து நடு ரஸ்தாவிலே விழுந்து கிடந்தாள். ஊர்வலக்காரர்களும் பொது ஜனங்களும் விரட்டப்பட்டு, ரஸ்தா இப்போது காலியாய் இருந்தது. கொஞ்ச நேரம் கழித்து ஒரு போலீஸ் அதிகாரி வந்து அவளைத் தமது காரில் தூக்கி வைத்துக் கொண்டு ஆனந்த பவனத்தில் கொண்டுவந்து சேர்த்தார்.

"என் தாய் இறந்தாள் என்று அன்றிரவு அலகாபாதில் பொய் வதந்தி பரவியது. ஆத்திரங்கொண்ட ஜனங்கள் அஹிம்சையையெல்லாம் மறந்து, போலீ

ஸாரைத் தாக்கினார்கள். போலீஸார் துப்பாக்கியால் சுட்டார்கள். சிலர் மாண்டார்கள்.

"சிலநாள் கழித்து இந்தச் செய்தியெல்லாம் எனக்கு எட்டியது. பலவீனமான என் தாய், ரத்தம் சொரிந்து கொண்டு, வீதிப் புழுதியிலே கிடந்தாளா என்ற எண்ணம் என்மனம் பதறச் செய்தது. நான் அங்கே அச்சமயம் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேனோ! என் அஹிம்சா தர்மம் எவ்வளவு தூரம் நிலைத்திருக்குமோ! பல்லாண்டுகளாய் நான் கற்க முயன்ற அந்தப் பாடமெல்லாம் பறந்தே போயிருக்கும்; எனக்கோ, தேசத்துக்கோ என்ன கஷ்டங்கள் வந்தாலும் சரியென்று துணிந்து எது வேண்டுமானாலும் செய்திருப்பேன்."

ஜவாஹர் தொடர்ந்து சிறையிலே இருந்தார். வெளியே பல சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தன. உள்ளே இருப்பவர்களுக்கு இந்த வெளிக் கவலை யெல்லாம் ஏது? ஜவாஹர் முதலியோர் அமைதியாய், ஒரே விதமாய் நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தார்கள். 1932-ஆம் ஆு செப்டம்பர்மீ மகாத்மா காந்தியின் ஒரு 'வெடிகுண்டு' இந்த அமைதியைக் குலைத்தது. மக்டானல்டு துரையின் வகுப்புத் தீர்ப்பில் ஹரிஜனங்களை இந்து சமூகத்திலிருந்து பிரித்ததை எதிர்த்து, 'தீர்ப்பு மாறும் வரையில் அல்லது சாகும் வரையில் உண்ணா விரதம்' இருக்கப் போவதாக மகாத்மா சங்கல்பம் செய்த செய்திதான் அந்த வெடிகுண்டு.

ஓர் அரசியல் பிரச்னையை மத ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் கவனிக்கிறாரே என்று மகாத்மாவிடம் ஜவாஹர் கோபம் கொண்டார். இது சம்பந்தமாய்க் கடவுளை வேறு அவர் அடிக்கடி இழுப்பது ஜவாஹருக்குப் பிடிக்கவில்லை. பாபு (மகாத்மா காந்தி) இறந்து போனால் இந்தியா என்ன ஆகும்? அதன் அரசியல் எப்படிப் போகும்? வருங்காலம் பயங்கர இருள் சூழ்ந்ததாய்த்

தோன்றியது. ஜவாஹர் திரும்பத் திரும்ப யோசித்தார். மூளை தான் கிறுகிறுத்தது. இந்த மன அதிர்ச்சிக் கெல்லாம் மூலகாரணரான அந்த மகா புருஷரிடம் அன்பு ஒருபுறம், கோபம் ஒருபுறம், அவநம்பிக்கை ஒருபுறம் எல்லாம் சேர்ந்து ஜவாஹரின் மூளையைக் குழப்பின. எல்லாரிடமும் முக்கியமாய்த் தம்மிடமே சிடுசிடு என்று அவர் எரிந்து விழுந்தார்.

பின்பு, ஓர் அதிசய மாறுதல் அவரிடம் நிகழ்ந்தது. மனத்திலே நிம்மதி பிறந்தது. வருங்காலம் அவ்வளவு இருளாய்த் தோன்றவில்லை. 'எப்படியோ சரியான தருணத்தில் சரியான காரியத்தைச் செய்துவிடக்கூடிய ஒரு விசித்திர சக்தி பாபுவுக்கு உண்டு; அவருடைய இந்தச் செயலும் மகத்தான பலன்களைத் தரலாம்; குறிப்பிட்ட குறுகிய துறையில் மட்டிலுமல்ல. விரிந்த தேசீயப் போராட்டத்துக்கே அந்தப் பலன்கள் உதவலாம். பாபு இறந்தால், நமது சுதந்தரப் போர் மேலும் ஓங்கி நடக்கும். ஆகையால், என்ன நிகழ்ந்தாலும் சரி; அதற்கேற்றவாறு நடந்துகொள்ள, நம்மை நாம் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும்; தயாராயிருக்க வேண்டும்.' இவ்வாறெல்லாம் நினைத்தார் ஜவாஹர். காந்திஜி இறந்தாலும் சித்தங்கலங் குவதில்லை என்று ஜவாஹர் மனத்தைத் திட்டப்படுத்திக் கொண்டவுடனே, அவருக்கு நிம்மதி பிறந்தது.

'காந்திஜியின் உபவாசச் செய்தி நாடெங்கும் ஹிந்து சமாஜத்திடையே ஒரு மந்திர அலைபோல் கொந்தளிப்பை எழுப்பியது. ஆஹா! இந்தக் காந்திஜிதான் என்ன மந்திர வாதியாய் இருக்கிறார்! இந்தச் சின்னஞ்சிறு மனிதர், ஏர்வாடா சிறைக்குள் உட்கார்ந்துகொண்டு, மக்களுடைய இதயங்களின் சூத்திரக் கயிற்றைப் பிடித்திழுக்க எவ்வளவு அருமையாய் அறிந்திருக்கிறார்!' என்று ஜவாஹர் எண்ணினார்.

ஜவாஹருக்கு மகாத்மாவிடமிருந்து ஒரு தந்தி வந்தது : "வேதனை நிறைந்த இந்த நாளெல்லாம் நீங்கள் என் மனக்கண் முன்னே நிற்கிறீர்கள். உங்கள் அபிப்பிராயத்தை அறிய ஆவலாயிருக்கிறேன். உங்கள் அபிப்பிராயத்தை நான் எவ்வளவு மதிக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். இந்துவையும் சொரூபின் குழந்தைகளையும் பார்த்தேன். இந்து சந்தோஷமாயிருக்கிறாள் ; கொஞ்சம் சதைபிடித்திருக்கிறாள். சௌக்கியம். பதில் தந்தி சொல்லுங்கள். அன்பு."

இதுதான் காந்திஜியின் அபூர்வச் சிறப்பு. ஜவாஹரின் மகளும் சகோதரி மக்களும் தம்மைச் சந்திக்க வந்ததை, உபவாச வேதனைக்கும் எத்தனையோ ஜோலிகளுக்கும் நடுவிலேகூட மகாத்மா குறிப்பிட மறக்கவில்லை ! வாழ்க்கையின் சிறு விஷயங்களாய்த் தோன்றுபவைகளே, உண்மையில் மிகப் பெரியவைகளாய் இருக்கின்றன. அவைகளை மகாத்மா ஒருபோதும் மறப்பதில்லை.

தந்தி வந்த அடியிலேயே, ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டதாயும் செய்தி வந்தது. ஆயினும் ஜவாஹர் தமது பதில் தந்தியில் குறிப்பிட்டதாவது: "மத ரீதியாக எதையும் தீர்மானிக்க என்னால் இயலவில்லை. உங்கள் வழியைப் பிறரும் பின்பற்றிவிடக் கூடும். அது அபாயமாகும். ஆயினும், ஒரு மந்திரஜாலக்காரருக்கு ஆலோசனை சொல்ல, எப்படி நான் துணிவேன் ? அன்பு."

மறுபடியும் 1933-ஆம் வருஷம் மேமீ ஆத்மத் தூய்மைக்காக, மகாத்மா 21-நாள் உபவாசம் ஒன்று ஆரம்பித்தார். இப்போதும் ஜவாஹருக்கு அவர் ஓர் உருக்கமான கடிதம் எழுதினார். ஜவாஹருக்குத்தான் உபவாசம் என்றாலே பிடிக்காதே ; ஆகையால், அவர் அரைமனத்தோடு ஒரு தந்தி சொன்னார் ; "எனக்குப் புரியாத விஷயங்களைப்பற்றி நான் என்ன சொல்ல முடியும் ? எனக்கு இதெல்லாம் வழி தெரியாத ஒரு விசித்திர உலகம்போல் இருக்கிறது.

அங்கே உங்களை மட்டுமே அடையாளம் தெரிகிறது. இருளிலே வழிதடவுகிறேன் ; ஆனால், இடறி விழுகிறேன். என்ன நடந்தாலும் சரிதான் ; என் அன்பும் சிந்தையும் உங்களிடமே இருக்கும்."

இந்தத் தந்தியை அனுப்பியாயிற்று ; மீண்டும் ஜவாஹர் யோசித்துப் பார்த்தார். இது போதாது என்று எண்ணினார். மற்றொரு தந்தி சொன்னார் : " உங்களுடைய மகத்தான காரியத்தில் நீங்கள் இறங்கிவிட்ட இப்போது, மீண்டும் என் அன்பையும் வாழ்த்தையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்போது ஒரு விஷயம் எனக்கு மிகவும் தெளிவாய்த் தெரிகிறது : அதாவது, என்ன நிகழ்ந்தாலும், அது நன்மையாகவே முடியும் ; என்ன நிகழ்ந்தாலும், நீங்கள் வெற்றியே பெறுவீர்கள்."

இயற்கையாக, 1933-ஆம் ஞு செப்டம்பர்மீ 12உ ஜவாஹர் விடுதலையாக வேண்டியவர், அவருடைய தாய் சொரூபராணி திடீரென்று நோயுற்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதால், ஆகஸ்ட்மீ 30உயே அவரைச் சர்க்கார் விடுதலை செய்தார்கள்.

ஜவாஹர் முதலில் தாயைப் போய்ப் பார்த்தார். பின்பு, காந்திஜியைக் கண்டு பேசினார். காரியக்கமிட்டி அங்கத்தினர்களைச் சந்தித்தார். கல்கத்தாவுக்குப் போய் வந்தார். பீஹார் பூகம்பம் ஏற்பட்டதால், அங்கே பத்து நாள் கடுமையான சுற்றுப்பிரயாணம் செய்து, கஷ்ட நிவாரண வேலைகளைக் கவனித்தார். இவ்வாறு, சுமார் ஐந்தரை மாதம் வெளியே இருந்தார்.

1934-ஆம் ஞு பிப்ரவரிமீ 12உ அலகாபாதில், கமலாவும் ஜவாஹரும் டீ குடித்துவிட்டு, வராந்தாவில் நின்று கொண்டிருந்தார்கள். புருஷோத்தமதாஸ் தாண்டனும் அப்போதுதான் வந்து, இவர்களுடன் சேர்ந்துகொண்டார். இச்சமயம் ஒரு மோட்டார்கார் உள்ளே வந்தது. அதிலிருந்து ஒரு போலீஸ் அதிகாரி இறங்கினார். ஜவா

ஹருக்கு விஷயம் புரிந்துவிட்டது. அதிகாரியின் அருகே ஜவாஹர் சென்ருர்: "பகுத்திஞேம்ஸே ஆப்கா இந்த ஜார் தா" என்ருர். "அநேக நாளாய் உமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று அர்த்தம். "நான் என்ன செய்கிறது? கல்கத்தா வாரண்ட்" என்று அதிகாரி கெஞ்சும் குரலில் முனகினர். ஜவாஹர் கைதியாகி, கல்கத்தா போய்ச் சேர்ந்தார். இரண்டு வருஷக் காவல் தண்டனை பெற்ருர். இது ஜவாஹரின் ஏழாவது சிறை வாசம்.

20. கமலாவின் பிரிவு

1934-ஆம் வருஷத்திலிருந்து, கமலாவின் தேக அசௌக்கியம் கடுமையாயிற்று. சிறையிலிருந்த ஜவாஹர் அடிக்கடி தம்முடைய மனைவி கமலாவைப் போய்ப் பார்த்து வர அவருக்கு அதிகாரிகள் வசதி அளித்தார்கள்.

கமலாவின் நோய் முற்றிக்கொண்டே போயிற்று. மிச்சமுள்ள தண்டனைக் காலம் பூராவும் அரசியலிலிருந்து ஒதுங்கியிருப்பதாக, ஜவாஹர் மறைமுகமாக வாக்குறுதி கொடுத்தாலே போதும் ; அவரை விடுதலை செய்துவிடுவதாகச் சொல்லும்படி, பலரை ஜவாஹருக்குச் சர்க்கார் தூதனுப்பினார்கள். உண்மையில் அப்போது ஜவாஹருக்கு அரசியலில் துளிக்கூடப் பிரக்ஞையில்லை ; வெறுப்பாய்க் கூட இருந்தது. இருந்தாலும், வாக்குறுதி கொடுப்பதாவது ! அது தாம் கொண்ட பிரதிக்ஞைக்கும், லட்சியத்துக்கும், சகாக்களுக்கும், தமக்குமே துரோகம் அல்லவா ? இருந்தாலும், கமலாவின் பக்கத்திலே தாம் இருந்தால், அவளுக்குத் தெம்பாயிருக்கும் ; அவள் உயிர் பிழைக்கவும் கூடும். அவளுடைய உயிரைவிட, தமது கர்வம் பெரிதா ? இப்படியெல்லாம் யோசித்து, ஜவாஹர் சங்கடப்பட்டார். அவருடைய இந்தத் தர்மசங்கடத்தை, கமலாவே தீர்த்து வைத்துவிட்டாள்.

அப்போது, அவர் கமலாவைச் சந்திக்கச் சென்றிருந்த ஒரு சமயம், கமலாவுக்குக் கடும் சுரம். ஏறக்குறையப் பிரக்ஞையில்லாமல் படுத்திருக்கிறாள். ஜவாஹர் சிறைக்குத் திரும்ப விடைபெற வேண்டிய நேரம் வந்துவிட்டது. தன் பக்கத்திலேயே அவர் இருக்கலாகாதா என்றுதான் கமலாவுக்கு ஆசை. என்றாலும், அவள் தீரமான புன்சிரிப்புப்

பூத்தாள். குனியும்படி ஜவாஹருக்குச் சமிஞ்ஞை செய்தாள். ஜவாஹரின் காதோடு காதாக மெல்லிய குரலில்: " இதென்ன இது! சர்க்காருக்கு நீங்கள் ஏதோ வாக்குறுதி கொடுக்கப்போவதாகச் சொல்லுகிறார்களே? கொடுக்கவே கொடுக்காதீர்கள் " என்றாள்.

கமலாவின் நிலை பின்னும் பின்னும் மோசமாகிக் கொண்டே வந்தது. பொவாலியில் உள்ள ஓர் ஆரோக்கிய விடுதிக்கு அவளைக் கொண்டுபோய் வைத்தார்கள். அங்கே வந்து அடிக்கடி அவளைக் காண வசதியாக, ஜவாஹரை அல்மோராச் சிறைக்குச் சர்க்கார் மாற்றினார்கள்.

1935-ஆம் ஆடு மேமீ கமலாவைச் சிகிச்சைக்காக ஐரோப்பாவுக்கு அனுப்புவதென்று தீர்மானமாயிற்று. அச்சமயம் அவளைச் சந்தித்து அவளுக்கு விடை கொடுத்தனுப்ப, ஜவாஹரைச் சர்க்கார் அனுமதித்திருந்தார்கள். ஜவாஹர் கண்ணீருடன் அவளுக்கு விடைகொடுத்தனுப்பினார். ஆனால், செப்டம்பர்மீ கமலாவின் நிலைமை மிகவும் மோசமானதாகச் செய்தி வந்தது. 4உயன்று ஜவாஹரைச் சர்க்கார் திடீரென்று அல்மோராச் சிறையிலிருந்து விடுவித்துவிட்டார்கள். உடனே, ஜவாஹர் ஆகாயவிமான மூலம் ஐரோப்பாவுக்குப் பறந்து சென்றார்.

அப்போது, கமலா ஜெர்மனியில் பேடன்வீலர் என்னும் ஆரோக்கிய ஸ்தலத்தில் சிகிச்சை பெற்று வந்தாள். அங்கே செப்டம்பர்மீ 9உ ஜவாஹரைக் கமலாவின் பழைய தீரப் புன்னகை வரவேற்றது. ஆனால், அவள் மிக்க பலவீனமாயிருந்தாள். தேக வேதனையால் அதிகமாய்ப் பேசவும் அவளால் முடியவில்லை.

ஜவாஹரைக் கண்ட பூரிப்பினாலோ என்னவோ, அடுத்த சில நாளில் கமலா சிறிது குணமுற்றவளாய்க் காணப்பட்டாள். ஆனால், மீண்டும் சிறிது சிறிதாய் அவள் உயிர் நலிந்துவந்தது. அவள் சாவை ஜவாஹரால் எண்ணவும் முடியவில்லை. ஆகையால், இந்த நெருக்கடிக்குத் தப்பி

விட்டால் அவள் பிழைத்துவிடுவாள் என்றே அவர் கற்பனை செய்துகொண்டிருந்தார். டாக்டர்களும் தங்கள் வழக்கப்படியே அவருக்கு நம்பிக்கை கொடுத்து வந்தார்கள். நீண்டநேரம் அவளால் பேசமுடியாது. சில சமயம் அவளுக்கு ஜவாஹர் ஏதாவது புத்தகத்தைப் படிப்பார். அவள் கேட்டுக்கொண்டேயிருப்பாள். ஆனல், புத்தகம் சீக்கிரத்தில் முடியாது. அவளிடம் என்ன என்னவோ பேச வேண்டும் என்று ஜவாஹருக்கு ஆசை. ஆனல், அடக்கிக் கொள்வார். பழைய காலம், பழைய ஞாபகங்கள், இந்தியாவில் இருவருக்கும் தெரிந்த நண்பர்கள் - இவையெல்லாம் பற்றி இருவரும் சில சமயம் சம்பாஷிப்பார்கள். வருங் காலத்தைப் பற்றியும் ஆசையோடு ஓரிருவேளை பேசுவது உண்டு. உடம்பு மோசமாகியும் கமலா வருங்கால வாழ்க்கைபற்றிய ஆசையை விடவில்லை.

1936-ஆம் வரு ஜனவரி மீ பேடன்வீலரை விட்டு, ஸ்விட்ஜர்லாந்திலுள்ள லாஸேன் நகருக்கு அருகில் உள்ள ஓர் ஆரோக்கிய ஸ்தலத்துக்குக் கமலா மாறினள். கமலா, ஜவாஹர் இருவருக்குமே அந்த இடம் பிடித்தமாயிருந்தது.

இதற்கிடையில், ஏப்பிரல் மாதம் லட்சுமணபுரியில் நடக்கவிருந்த இந்தியக் காங்கிரஸ் மகா சபைக்கு ஜவாஹரையே இரண்டாம்முறை தலைவராய்த் தேர்ந் தெடுத்துவிட்டார்கள். கமலாவை இந்த நிலையில் விட்டு விட்டுப் போகலாமா? இல்லையானல், காங்கிரஸ் தலைமை யைத் துறக்கவேண்டும்? என்ன செய்வது? காங்கிரஸ் தலைமையைத் துறக்கக் கூடாதென்றும் கமலா சொன்னள். இந்தியாவுக்குப் போய்விட்டு, பின்னல் ஜவாஹர் திரும்பவும் கமலாவிடம் வந்துசேர்ந்து கொள்ளலாமென்றே, இருவரும் எண்ணினர்கள். டாக்டர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். டச்சு விமானம் ஒன்றில் டிக்கட்டும் வாங்கியாயிற்று. பிப்ரவரிமீ 28உ லாசேனைவிட்டு ஜவாஹர் புறப்படவேண்டியதுதான் பாக்கி. கமலாவுக்கு

ஜவாஹரைப் பிரிய மனமில்லை. என்றாலும், அவருடைய ஏற்பாடுகளை மாற்றும்படி சொல்ல அவள் விரும்பவில்லை. "இந்தியாவில் நான் நீண்ட காலம் தங்கமாட்டேன். இரண்டு அல்லது மூன்று மாதங்களில் திரும்பி வந்துவிடுகிறேன். அதற்குள்ளே வரவேண்டுமென்று நீ விரும்பினாலும்கூடத் தந்தி சொல்லு. விமானத்தில் பறந்து, ஒரே வாரத்துக்குள் ஓடிவந்து சேர்கிறேன்" என்றார் ஜவாஹர்.

புறப்படக் குறிப்பிட்ட தேதிக்கு நாலைந்து நாள் இருக்கும். அருகே உள்ள பெக்ஸ் என்னுமிடத்தில் இருந்த கலாசாலையில் படித்துக்கொண்டிருந்த இந்திரா, அந்தச் சில தினங்களை இவர்களோடு கழிப்பதற்காக வந்திருந்தாள். டாக்டர் வந்து, "நீங்கள் ஒரு வாரம் அல்லது பத்துநாள் கழித்து ஊருக்குப் போகலாம்" என்று ஜவாஹரிடம் சொன்னார். அவர் இதற்குமேல் ஒன்றும் கூற மறுத்துவிட்டார். ஜவாஹரும் உடனே அதற்குச் சம்மதித்து அடுத்த விமானத்தில் இடம் பதிவு செய்தார்.

இந்தக் கடைசி நாட்களில் கமலாவிடம் ஏதோ ஒரு நுணுக்கமான மாறுதல் ஏற்பட்டது. அவளது தேகத்தில் ஏதும் மாற்றம் தெரியவில்லை. ஆனால், சுற்றிலும் உள்ள பொருள்களில் அவள் மனம் செல்லவில்லை. "என்னை யாரோ அழைக்கிறார்கள்" என்று ஜவாஹரிடம் அவள் சொல்லுவாள். உள்ளே யாரையும் காணாதிருக்கையில், ஏதோ ஓர் உருவம் அறைக்குள் பிரவேசிப்பதாக, அவள் கூறுவாள்.

பிப்ரவரி மீ 28உ காலையில் அந்தக் கண்காணாத நாட்டில், கணவனையும் மகளையும், உற்ற நண்பராய் விளங்கிய டாக்டர் எம். அட்டால் என்பவரையும் அன்றி, வேறு உற்றார் உறவினர் எவருமில்லாத நிலையிலே, கமலா தன் கடைசி மூச்சை விட்டுவிட்டாள்.

அப்புறம் அக்கம்பக்க நகரங்களிலிருந்து வேறு சில நண்பர்களும் வந்து சேர்ந்துகொண்டார்கள். லாசேன் மயானத்திலே தகனம் நடந்தது. சில நிமிஷ நேரத்துக்குள்ளே அந்த அழகிய உடம்பும் புன்னகை நிரம்பிய அந்த வசீகர முகமும் எரிந்து பிடி சாம்பலாயின. அதில் மிஞ்சிய அஸ்தி, ஒரு சிறு கலசத்துக்குள் அடங்கிவிட்டது. பின்னுல், அந்த அஸ்தி இந்தியாவுக்கு வந்துசேர்ந்து, புனித கங்காநதியில் கலந்தது.

21. முசோலினியைக் காண மறுப்பு

லாசேனிலும் ஐரோப்பாவிலும் ஜவாஹரைப் பிணைத்து வைத்திருந்த தளை அறுந்துபோயிற்று. இனி அவர் அங்கே தங்கவேண்டிய தேவை இல்லை. அவர் மனம் நொந்துபோயிருந்தது. மகள் இந்திராவை அழைத்துக்கொண்டு, ஜெனிவா ஏரிக்கரையில் உள்ள மாண்ட்ரூ என்ற கிராமத்துக்குச் சென்று அங்கே சிலநாளை அவர் அமைதியாய்க் கழித்தார்.

மாண்ட்ருவில் ஜவாஹர் தங்கியிருந்த காலத்தில், லாசேனில் இருந்த இத்தாலிய ஸ்தானிகர் வந்து ஜவாஹரைக் கண்டார். "உங்கள் துக்கத்தில் முசோலினியின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதற்காகவென்றே பிரத்தியேகமாய் நான் இங்கே வந்தேன்" என்று அவர் சொன்னார். இதைக் கேட்டு ஜவாஹர் ஆச்சரியம் அடைந்தார். முசோலினியை அவர் பார்த்ததே இல்லை. அவருடன் இவருக்கு வேறு எந்தவிதமான தொடர்பும் கிடையாது. முசோலினியின் பாஸிஸத்திலும் ஜவாஹருக்குப் பெரிய வெறுப்பு. என்றாலும் மரியாதைக்காக, "என் நன்றியை முசோலினிக்குத் தெரிவியுங்கள்" என்று அந்த ஸ்தானிகரை ஜவாஹர் கேட்டுக்கொண்டார்.

இதற்குச் சில வாரங்கள் முன்னேயே, "முசோலினி உங்களைப் பார்க்க விரும்புகிறார்" என்று, ரோம் நகரிலிருந்து ஒரு நண்பர் ஜவாஹருக்கு எழுதினார். "நான் இப்போது ரோம் நகருக்கு வருவதற்கில்லை" என்று ஜவாஹர் பதில் அளித்தார். உண்மையும் அதுதான். ஆனால், பின்னால் விமானமூலம் இந்தியாவுக்குச் செல்ல ஜவாஹர் எண்ணியபோது, அந்த அழைப்பு மீண்டும்

வந்தது. அழைப்பிலே, ஆவலோடு மன்ருடும் தொனியிருந்தது. முசோலினியின் சந்திப்புக்கு ஜவாஹர் தப்பித்துக் கொள்ள விரும்பினர். ஆயினும், மரியாதைக் குறைவாய் நடந்துகொள்ள அவருக்குப் பிரியமில்லை. இந்த முசோலினி எப்படிப்பட்ட மனிதர் என்று காண ஜவாஹருக்கும் சிறிது ஆசைதான். ஆனால், அப்போது அபிஸீனியாவை முசோலினி ஆக்கிரமித்து அநியாய யுத்தம்வேறு நடத்திக் கொண்டிருந்தார். ஆகையால், தாம் அவரை அச்சமயம் பேட்டி கண்டால், பொய்ப் பிரசாரம் செய்ய அந்தப் பேட்டியை அவர் உபயோகித்துக்கொள்ளக் கூடும் என்று ஜவாஹர் அஞ்சினர். அதற்கு இடம் கொடுக்கவில்லை. எனவே, முசோலினியைத் தாம் சந்திக்க இயலாமைக்கு வருந்துவதாக, அந்த ரோம் நண்பருக்கு ஜவாஹர் எழுதினர். தப்பபிப்பிராயம் ஏற்படாதிருப்பதற்காக, மீண்டும் தமது மறுப்பைக் கடித மூலமும், டெலிபோன் மூலமும், அவருக்கு ஜவாஹர் தெரிவித்தார். இதெல்லாம், கமலா காலமாகுமுன்பு நடந்தவை. அவள் இறந்தபிறகு, "மற்றக் காரணங்கள் எல்லாம் ஒருபுறம் இருக்க, இப்போதுள்ள என் மனநிலையில் நான் யாரையும் பேட்டி காண முடியாதவனுயிருக்கிறேன்" என்று மறுபடியும் ரோம் நண்பருக்கு ஜவாஹர் ஒரு செய்தியனுப்பினர். இத்தனை தரம் திரும்பத்திரும்ப ஏன் மறுத்தார் என்ருல், ஜவாஹர் பிரயாணம் செய்யவேண்டிய விமானம் ரோம் நகரில் ஓர் இரவு தங்கிவிட்டே வரும்; அப்போது சங்கடம் கூடாதல்லவா ? ஆகையால்தான்.

மாண்ட்ரூவில் சிலநாள் இருந்துவிட்டு, ஜெனிவா, மார்சேல்ஸ் ஆகிய இடங்களுக்கு ஜவாஹர் சென்ருர். மார்சேல்ஸில் விமானத்தில் ஏறினர். விமானம் மாலையில் ரோம் நகரம் வந்துசேர்ந்தது. வந்தவுடனே, ஓர் உயர்தர இதாலிய அதிகாரி, முசோலினியின் மந்திரிசபைத் தலைவரிடமிருந்து ஒரு காகிதத்தோடு ஜவாஹரை வந்து

கண்டார். " தங்களை முசோலினி காண விரும்புகிறார். அதற்கு இன்று சாயங்காலம் ஆறு மணியைக் குறித் திருக்கிறார் " என்று கடிதம் கூறியது. ஜவாஹர் வியப் படைந்து, " நான்தான் முன்னமே இது இயலாதென்று செய்திகள் அனுப்பியிருக்கிறேனே " என்று தெரிவித் தார். " இல்லை, இப்போது நேரமெல்லாம் குறித்தாகி விட்டது. ஏற்பாட்டை மாற்றமுடியாது. நீங்கள் அவ ரைச் சந்திக்காவிட்டால், என் வேலை போய்விடும். உங்கள் சந்திப்புப்பற்றிப் பத்திரிகைகளில் ஒரு செய்தியும் வெளி வராது. அவரை நீங்கள் சிலநிமிஷ நேரம் கண்டால் போதும். உங்களோடு கைகுலுக்க வேண்டும்; உங்கள் மனைவி இறந்ததற்கு நேரே அனுதாபம் தெரிவிக்கவேண் டும். அவ்வளவுதான் முசோலினியின் ஆசை " என்றெல் லாம் அந்த அதிகாரி கூறினார். ஜவாஹர் இணங்கவில்லை. ஒருமணிநேரம் இருவரும் மிக மரியாதையாய் வாதித்துக் கொண்டே யிருந்தார்கள். சந்திக்கக் குறித்த நேரமும் சமீபித்துவிட்டது. தாம் பிடித்த பிடியையே ஜவாஹர் சாதித்துவிட்டார். சந்திப்பு இயலாதென்று டெலிபோன் மூலம் முசோலினியின் அரண்மனைக்குக் கடைசிநேரத்தில் செய்தி அனுப்பப்பட்டது. மேலும் அன்று மாலை, முசோலினிக்கு ஜவாஹர் ஒரு கடிதமும் எழுதினார்; " தங் களை நான் காணும்படி அன்புடன் தாங்கள் எனக்கு அனுப்பிய அழைப்பை நான் ஏற்றுக்கொள்ள முடியாத தற்கு வருந்துகிறேன். தங்களுடைய அனுதாபச் செய் திக்கு வந்தனம் " என்று அதில் குறிப்பிட்டார்.

பின்பு, ஜவாஹர் பிரயாணத்தைத் தொடர்ந்தார். மார்ச்சுமீ 11உ தன்னந் தனியராய் இந்தியா வந்துசேர்ந் தார்.

22. மூன்றும் முறை காங்கிரஸ் மகுடம்

ஏப்பிரல்மீ ஜவாஹரின் தலைமையில், லட்சுமணபுரியில் நடந்த காங்கிரஸ், தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். "முதலாளித்துவத்துக்குச் சங்கடம் வந்தது. உடனே அது பாஸிஸத்துக்குள் நுழைந்துவிட்டது. பாஸிஸம் அரக்கத்தனமாய் மேல்நாட்டு நாகரிக நன்மைகளையே அழித்து வருகிறது........... பாஸிஸமும் ஏகாதிபத்திய ஆதிக்கமும், அழிந்துவரும் முதலாளித்துவத்தின் இரண்டு முகங்களேயாகும்" என்று அவர் கோஷித்தார். இந்த முதலாளித்துவ அபாயத்தை ஒழிக்க, முதலில் அந்த அந்தத் தேசத்திலும், பின்பு உலக முழுவதிலும் சோஷலிஸத்தை ஸ்தாபிதம் செய்வதே வழியாகும் என்று அவர் தெள்ளத் தெளியக் குறிப்பிட்டார். இதைக் கண்டு, விசேஷ உரிமை படைத்தவர்களெல்லாம், எங்கும், ஜவாஹர்மீது சீறி விழலானார்கள். டாட்டாவைச் சேர்ந்த எ. டி. ஷராப் வாதத்தைக் கிளப்பினார். அவருக்கு ஜவாஹர் சரியான பதில் கொடுத்தார். "இந்த ஷராப்பும், இவரைப் பின்பற்றிய ஒரு சிலரும் இஷ்டப்பட்டாலும் சரி, இஷ்டப்படாவிட்டாலும் சரிதான், சோஷலிஸம் மெல்ல மெல்ல வந்து கொண்டுதா னிருக்கிறது. சமூகம் தன்னிச்சையாய்ப் பக்குவமுற்று அடையக்கூடிய மாறுதலைத் துரிதப்படுத்தாவிட்டால் புரட்சிதான் வந்துசேரும்" என்று ஜவாஹர் எச்சரித்தார்.

1935-ஆம் வருஷத்திய இந்திய அரசியல் சட்டத்தின் மாகாணச் சுயஆட்சிப் பகுதியை அமுலுக்குக் கொணர, சர்க்கார் இப்போது ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். ஆகவே, சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதென்றும், ஆனால் மந்திரி பதவி ஏற்பதா இல்லையா என்ப

தைத் தேர்தலுக்குப் பின்னுல் முடிவு செய்வதென்றும் காங்கிரஸ் தீர்மானித்தது.

ஆகஸ்டுமீ தீவிரமான தேர்தல் பிரசாரத்தில் காங்கிரஸ் இறங்கியது. 1936-ஆம் ஞு பிற்பகுதியிலும் 1937-ஆம் ஞு ஆரம்ப மாதங்களிலும், ராஷ்டிரபதி ஜவாஹர் நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்யலானுர். பம்பாய், சிந்து, டில்லி, ஐக்கிய மாகாணம், ஆந்திரம், தமிழ்நாடு நாகபுரி, மகாகோசலம், மகராஷ்டிரம், கல்கத்தா, கண்ணனூர் ஆகிய இடமெல்லாம் விஜயம் செய்தார். மொத்தம் 130 நாட்களில் 50,000 ஆயிரம் மைல் சுற்றினுர். விமானம், ரெயில், கார், குதிரை வண்டி, மாட்டு வண்டி, பைசிக்கிள், யானை, ஒட்டகம், குதிரை, கப்பல், படகு, கால்நடை ஆகிய பலவிதப் பிரயாணமும் செய்தார். இதையன்றி, பிப்ரவரிக்குப் பின்பு, ராஷ்டிரபதி ஜவாஹர் மீண்டும் பர்மா, மலேயா முதலிய நாடுகளுக்குவேறு விஜயம் செய்து வந்தார். எங்கே சென்ருலும் லட்சக்கணக்கான மக்கள் அவரைக் குதூகலமாய் வரவேற்ருர்கள்.

இந்தச் சுற்றுப்பிரயாண காலத்தில், நமது தமிழ் நாட்டைச் சேர்ந்த புதுக்கோட்டை சமஸ்தானத்தில் நிகழ்ந்த ஒரு ரசமான சம்பவத்தைமட்டில் இங்கே குறிப்பிடுவது அவசியமாகும். ‘ தாய் ஓரடி பாய்ந்தால், குட்டி எட்டடி தாவும்’ என்பார்கள் அல்லவா ? அந்தமாதிரி, பிரிட்டிஷ் இந்திய சர்க்காரைவிட, அதற்கு அடங்கிய சின்னஞ் சிறு சுதேச சமஸ்தானங்கள், இந்திய தேசீயப் பிரதிநிதிகளைக் கண்டு என்ன கிலி அடைகின்றன என்பதைக் காட்டும் ஓர் உதாரணம் அந்தச் சம்பவம்.

புதுக்கோட்டையில் சுற்றுப்பிரயாணம் செய்யவோ தங்கவோ ஜவாஹருக்கு உத்தேசம் இல்லை. புதுக்கோட்டை வழியாக, அவர் செல்ல நேர்ந்தது; அவ்வளவு தான்.

ஜவாஹர் புதுக்கோட்டை எல்லையை அடைந்தார். அங்கே சமஸ்தானசேனை யுத்த சன்னத்தமாய் அணிவகுப்புச் செய்து நின்றுகொண்டிருந்ததைக் கண்டார். காரை விட்டு இறங்கினர். போலீஸ் தலைவரோ அல்லது சேனுதிபதிதானே, யாரோ ஓர் அதிகாரி எதிரே நின்ருர். அவரை ஜவாஹர் விசாரிக்கலானுர்: "இதெல்லாம் என்ன? உலக நெருக்கடி வந்துகொண்டிருக்கிறதே, அதைச் சமாளிப்பதற்காக, புதுக்கோட்டை சமஸ்தானம் யுத்தசன்னுகம் செய்திருக்கிறதா? அல்லது ஏதாவது கலகம் நடக்கும் என்ற பயமோ?" என்று கேட்டார்.

"ஒன்றும் இல்லை. ஜனங்கள் வந்து விழுந்து உங்களுக்குச் சங்கடம் தரக்கூடாதல்லவா? வழியைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளவே இந்த அணிவகுப்பு" என்று அதிகாரி பதில் சொன்னுர்.

"பேஷ், பேஷ்! காங்கிரஸ் தலைவருக்கா இந்தக் கௌரவம்! வைசிராய்க்கல்லவா இதெல்லாம் நடக்கும்! அப்படியானுல், இந்தக் கௌரவத்தைப் பூர்ணமாய் அனுபவித்துக்கொள்கிறேனே" என்று எண்ணினுர் ஜவாஹர். காரில் ஏருமலே சாலையில் நடக்க ஆரம்பித்துவிட்டார். புதுக்கோட்டைச் சேனையும் அவரைத் தொடர்ந்துவந்தது. ஜனங்கள் ஒதுங்கியே நின்ருர்கள். சுமார் ஒருமைல் தூரம் இப்படி நடந்தபின்பு, 'போதும் இந்த வேலை, மெனக்கிட்ட வேலை' என்று எண்ணி, காரில் ஏறிக்கொண்டு ஜவாஹர் விடைபெற்ருர்.

விஷயம் வேருென்றும் இல்லை. புதுக்கோட்டை சமஸ்தான மக்கள், புரட்சிகரமான ஒரு காரியத்தைச் செய்துவிடாமல் தடுக்கவே, அதிகாரிகள் இந்த எச்சரிக்கை எடுத்துக்கொண்டார்கள். அந்தக் காரியம் இதுதான்: ராஷ்டிரபதி ஜவாஹருக்கு மாலை போடுவது!

ஜவாஹரின் சுற்றுப்பிரயாணம் மிக்க வெற்றிகரமாக நடந்தது. 1937-ஆம் ஞு பிப்ரவரிமீ நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் அமோக வெற்றிபெற்றது.

இதற்கிடையில், அடுத்த காங்கிரஸுக்கும் ஜவாஹரையே தலைவராய்த் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற கிளர்ச்சி எழுந்தது. அப்போதுதான் காங்கிரஸுக்குள்ளே உள்ள பல கட்சியாரும் ஒற்றுமையோடு வேலை செய்ய வசதி ஏற்படும் என்று பலதிறப்பட்டவரும் அபிப்பிராயப் பட்டார்கள். அப்படியே அவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மூன்றும் முறையாக, தேசத்தின் மிக உயர்ந்த கௌரவமான, காங்கிரஸ் தலைமை என்ற மணிமகுடத்தை அவர் அணிந்தார். இதுவரையில் ஜவாஹரையன்றி வேறு யாரும் இப்படி மும்முறை காங்கிரஸ் தலைமை தாங்கியதில்லை. (இப்போது, 1946-ஆம் ஆண்டு நான்காவது முறையும் அந்தப் பதவியை அவர் வகித்தது, இன்னும் ஆச்சரியமாகும்.)

1937-ஆம் ஆண்டு காங்கிரஸ் பெய்ஸ்பூரில் நடைபெற்றது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களையும் காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களையுங்கொண்ட ஒரு கூட்டம் நடத்தி, பதவி ஏற்பு விஷயத்தை முடிவு செய்வதென்று காங்கிரஸ் மகாசபை தீர்மானித்தது. அப்படியே அகில இந்தியக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது. பதவி ஏற்பதென்று முடிவாயிற்று. இந்த முடிவு ஜவாஹருக்குப் பிடிக்கவில்லை. என்றாலும் பெரும்பான்மையோரின் முடிவுக்குக் கட்டுப்பட்டு நடப்பதே நியாயம் என்று அமைந்திருந்தார். கவர்னர்களின் விசேஷாதிகாரங்கள்பற்றிச் சிலமாத காலம் தர்க்கம் நடந்தபின்பு, காங்கிரஸ்காரர்கள் ஆறு மாகாணங்களில் மந்திரிபதவி ஏற்றார்கள். ஜவாஹரின் சகோதரி விஜயலட்சுமியும் ஐக்கிய மாகாணத்தில் ஒரு மந்திரியாகப் பதவி ஏற்றாள். இந்தியாவிலேயே முதல் முதலாக மந்திரிபதவி ஏற்ற பெண்மணி விஜயலட்சுமிதான்.

23. அக்காளும் தங்கையும்

ஜவாஹர் பிறந்தது முதலே தாய் சொரூபராணியின் உடல் சீர்கேடடைந்து வந்தது. அடிக்கடி அவள் கொடிய நோயால் பீடிக்கப்பட்டாள். இவ்விதமாகப் பல வருஷங்கள் கழிந்தன. ஜவாஹரின் தாயும் தந்தையும் சுமார் ஐம்பது வருஷ காலம் இன்பதுன்பங்களில் பங்குகொண்டு, அன்பு மாருத் தம்பதிகளாக வாழ்ந்துவந்தார்கள். சொரூப ராணியை, மோதிலால் மிக்க ஆதரவோடு பராமரித்து வந்தார். அவர் காலமானதும், தான் எல்லாவற்றையுமே இழந்து விட்டதுபோல் அவள் கண்கலங்கி நின்ருள். தலைசிறந்த ஓர் அருமை மகனுக, ஜவாஹர் தம் தாயின் மனத்துயரை ஆற்றத் தம்மாலான கைங்கரியமெல்லாம் புரிந்தார். “அன்னையின் பணிக்கு அப்போது அவர் அர்ப்பணித்துக் கொண்ட பெருமையை வர்ணிக்கவே முடியாது. வாக்கால் வர்ணிக்க முடியாத அவ்வளவு புனிதத் தன்மை வாய்ந்தது அது. அம்மா தன் குழந்தைகளுக்காகவே, சிறப்பாய் ஜவாஹருக்காகவே உயிர் வாழ்ந்து வந்தாள்” என்று கிருஷ்ணு கூறுகிருள். ஆயினும். கமலாவின் மரணம் சொரூபராணிக்கு மற்ருெரு பேரிடியாயிற்று. நாளுக்கு நாள் அவள் மேலும் மேலும் நலிந்து வந்தாள்.

1938-ஆம் ஞு ஜனவரி மீ ஒருநாள் மாலை ஜவாஹர், விஜயலட்சுமி, அவள் கணவர், குழந்தைகள், கிருஷ்ணு எல்லோரும் ஆனந்தபவனத்தில் கூடியிருந்தார்கள். சில நாட்களாகவே சற்றுத் தெம்பாயிருந்து வந்ததுபோல் காணப்பட்ட சொரூபராணி, அன்று மிக்க உற்சாகத்தோடிருந்தாள்.

எல்லாரும் சாப்பிட்டார்கள். தாய் சொரூபராணியும் கூட இருந்து, பழங்கதைகளையெல்லாம் ஞாபகப்படுத்திக்

கொண்டு, வழக்கத்துக்கும் அதிகமாகச் சம்பாஷித்தாள். சாப்பாடு முடிந்தபின்பும் இரவு பத்தரைமணி வரையில் சம்பாஷணை தொடர்ந்தது. நடுராத்திரி வண்டியில் விஜய லட்சுமி லட்சுமணபுரிக்குப் புறப்படுவதாயிருந்தாள். தனக்குத் தூக்கம் வரவில்லையென்றும், விஜயலட்சுமி புறப்படும் வரையில் தான் விழித்திருக்கப் போவதாகவும், தாய் தெரிவித்தாள். மற்றவர் எவ்வளவு தடுத்தும் அவள் கேட்காமல் பேசிக்கொண்டிருந்தாள். பேசிக்கொண்டே யிருந்தவள், படிப்படியாகப் பேச்சுக் குறைந்து, அமைந்து விட்டாள்.

இரவு மணி பதினொன்று. விஜயலட்சுமி புறப்பட ஆயத்தமானாள். தாயிடம் விடைபெறச் சென்றாள். மக்களைச் சிறிதுநேரம் வெளியே அனுப்புவதானாலும், கட்டித் தழுவிக்கொண்டுதான் விடைகொடுப்பது சொரூப ராணியின் வழக்கம். இப்போதும் அப்படியே விஜயலட்சுமி யைத் தழுவிக்கொள்ள அவள் எழுந்தாள். எழுந்தவள் திடீரென்று சாய்ந்தாள். உடனே ஜவாஹரும் கிருஷ்ணா வும் விஜயலட்சுமிக்கு உதவியாகச் சென்று தாயைத் தாங்கியிராவிட்டால், அவள் கீழே விழுந்திருப்பாள். தாயை மக்கள் படுக்கையில் கிடத்தினார்கள். அதற்குள் ளேயே அவளுக்குப் பிரக்ஞை போய்விட்டது. இது திமிர் வாத நோயால் அவள் பீடிக்கப்பட்ட மூன்றாவது தடவை யாகும். டாக்டருக்குச் சொல்லியனுப்பினார்கள். டாக்டர் வந்தார். ‘இனி நம்பிக்கைக்கு இடமில்லை’ என்று டாக்டர் கைவிரித்துவிட்டார்.

ஜவாஹர், விஜயலட்சுமி, கிருஷ்ணா, இவர்களின் பெரியதாய் பீபி அம்மாள் ஆகிய எல்லோரும் சொரூப ராணியின் படுக்கையருகே திக்கற்றவர்களாய் இரவு முழுதும் கண்விழித்துக் காத்திருந்தார்கள். காலை ஐந்து மணிக்குத் திடீரென்று அவள் மூச்சு நின்றுவிட்டது. தூங்குவதுபோல், சொரூபராணியின் உடல் அமைதி

யுற்றது. ஜவாஹர் கண்ணீர் ததும்ப மெல்லிய குரலில், "அம்மாவும் போய்விட்டாள்" என்றார்.

சொரூபராணி இறந்த செய்தியைக் கேட்டதும், பீபி அம்மாள்தான் ஸ்தம்பித்துப் போனாள். பத்து வயது மூத்த அக்காளான தான் உடல் உறுதியோடு இருக்க, தன் தங்கை எப்படிச் சில மணி நேரத்தில் இறந்து போனாள்! அதை அவளால் நம்பவே முடியவில்லை. எத்தனையோ சுகதுக்கங்களை அவள் கண்டு தாங்கியிருக்கிறாள். ஆனால், தங்கை இறந்த துக்கத்தால் அவள் இதயம் ரத்தம் சொரிந்தது; புலன்கள் கலங்கிவிட்டன. இருந்தாலும், குழந்தைகளின் துக்கத்தைக் குறைப்பதற்காகத் தன் துக்கத்தை மறைத்துக்கொண்டாள். இறுதிச் சடங்குகளுக்கு ஆயத்தமான காரியங்களைச் செய்ய, குழந்தைகளுக்கு என்ன தெரியும்? பீபி அம்மாள் தானே முன்னின்று அவைகளையெல்லாம் செய்தாள்.

சொரூபராணியின் உடலம் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழ, பிரேத ஊர்வலம் வீட்டைவிட்டுப் புறப்பட்டது. 'ஆனந்த பவனம்' தலைவியையும் இழந்து, பொலிவுகுன்றி, மீண்டும் துக்கமும் கவலையும் சூழ்ந்தன.

புஷ்பங்களால் அலங்கரித்துக் கடைசி யாத்திரை புறப்பட்ட தன் தங்கையின் உடலைக் கண் மறையும்வரையில் பார்த்துக்கொண்டே நடைமுற்றத்தில் சிலைபோல் நின்றுகொண்டிருந்தாள் பீபி அம்மாள். அவள் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீரும் சிந்தவில்லை. பின்பு, அவள் விரைவாகத் திரும்பித் தன் தங்கை படுத்திருந்த அறைக்குள் புகுந்தாள். அங்கே தன் தங்கை புழங்கிய சகல பொருள்களையும் ஆவலோடு சிறிதுநேரம் பார்த்துக்கொண்டு நின்றாள்.

கிருஷ்ணா உள்ளே வந்து, "பீபி அம்மா, நீங்கள் படுத்துச் சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளலாகாதா?" என்று கேட்டாள்.

இதை அவள் லட்சியம் செய்யவில்லை. "நீ போய் முழுகிவிட்டு வா. உனக்குக் கொஞ்சம் டீ போட்டுத் தருகிறேன்" என்றாள் பீபி.

அவளுடன் வாதிட்டுப் பயனில்லை. கிருஷ்ணா முழுகி விட்டுவந்தாள். டீ தயாராய் இருந்தது. அதை எப்படி அவளால் குடிக்கமுடியும்? சித்தப்பிரமை பிடித்ததுபோல் நின்ற பீபி அம்மாளின் ஞாபகம் அவளுக்குக் கவலை தந்தது. எனவே, அவளைப் பார்ப்பதற்காக உள்ளே போனாள். தன் தங்கை படுத்திருந்த அதே இடத்தில், தானும் படுத்திருந்தாள் பீபி அம்மாள். கிருஷ்ணா குனிந்து அவளைக் கூப்பிட்டாள். பீபி அம்மாள் கண்களைத் திறந்தாள். "பீபி அம்மா, கொஞ்சம் டீ குடியுங்கள். தெம்பாயிருக்கும்" என்றாள். பதில் இல்லை. "பீபி அம்மா, தாங்கள் தான் இனி எங்களுக்குத் தாய். வேறு யாரும் இனி எங்களுக்குத் துணையில்லை" என்றாள் கிருஷ்ணா. கிருஷ்ணாவைப் பீபி அம்மாள் தழுவிக்கொண்டாள். முதல் முதலாகக் கண்ணீர் சொரிந்தாள். "மகளே, ஒருவருக்கு ஒரு தாய்தான் இருக்கமுடியும். உன் தாய் போய்விட்டாள். இனித் திரும்பமாட்டாள். அவள் ஸ்தானத்தை நான் வகிக்கமுடியாது. அவளுக்காகவே நான் உயிர் வாழ்ந்தேன். இனி நானும் போக வேண்டியவள்தான்" என்றாள். பின்பு, அவள் கண்ணை மூடிவிட்டாள். அதன் பிறகு, அவள் விழிக்கவேயில்லை. ஜவாஹர் வீடு திரும்பிய பின் வைத்தியருக்கு ஆளனுப்பினார். சொரூபராணிக்கு ஏற்பட்ட அதே திமிர்வாத நோய் பீபியையும் பிடித்ததாக, டாக்டர் கூறினார். பீபி அம்மாளுக்கு ஒருநாளும் திமிர் வாத நோய் வந்தது கிடையாது. உடல் வலிவோடிருந்த அவளை எப்படித்தான் தங்கையின் நோய் திடீரென்று

வந்து பிடித்ததோ ! மறுநாள் காலையில், முதல் நாள் தங்கை இறந்த அதே நேரத்தில், பீபி அம்மாளின் மூச்சும் நின்றுபோயிற்று.

பீபி அம்மாள் ஒரு பால்ய விதவை. வாழ்க்கையில் வேறு பற்றுதல் இல்லாததால், தங்கை சொரூபராணி யிடம் அவள் பேரன்பு செலுத்திவந்தாள். அவளுக்குச் சொந்தமாக வீடெதுவும் கிடையாது. உறவினர் வீடு களில் சிறிது சிறிது காலம் வாழ்ந்துவந்தாள். ஆனல், பெரும்பாலான நாட்களை 'ஆனந்தபவனத்'திலேயே கழிப் பாள். ஏழை எளியவர், ஆண்கள் பெண்கள் எவரும் பீபி அம்மாளிடம் வந்து புத்திமதி கேட்பார்கள்; வேறு உதவி களும் பெறுவார்கள். அவளுடைய வாக்கு வன்மையும் புத்திக் கூர்மையும் பாராட்டத் தக்கவை. சகல மக்களும் அவளைத் 'தேவி' என்று சொல்லி வணங்குவார்கள்.

முதல் நாளன்று ஓர் அரசியைப்போல் அலங்கரிக்கப் பெற்றுப் பெருந்திரளான மக்கள் புடைசூழ, சொரூப ராணிமயானம் சென்ருள். இன்று 'தேவி'யின் பிரேத ஊர் வலத்திலும், கந்தைத் துணி உடுத்தவர்களும், கிழவரும், உடல் மெலிந்தவருமாய், எண்ணற்ற மக்கள் மேலும் மேலும் வந்து திரண்டுவிட்டார்கள். அந்த மௌனமான ஊர்வலத்திலே கண்ணீர் வடிக்காத கண்களில்லை.

பீபி அம்மாளுக்குத்தான் என்ன சகோதரி அன்பு ! தங்கை இறந்த இருபத்துநாலு மணி நேரத்தில், சங்கல்ப மாத்திரத்தால் அவள் உயிர் துறந்த அற்புதத்தைத்தான் என்னென்று சொல்வது !

24. நாஜி அழைப்பு நிராகரிப்பு

காங்கிரஸ் மந்திரி சபை நிர்வாகங்களில் நடந்த சிற்சில சம்பவங்களும் காங்கிரஸ் அரசியலில் ஏற்பட்ட வேறு சில நிலைமைகளும் 1937-ஆம் ஞு பிற்பகுதியில் நேருவுக்கு மனச்சஞ்சலம் தந்தன. ஆகவே, அவர் அடுத்த வருஷக் காங்கிரஸ் காரியக்கமிட்டியில் அங்கம் வகிப்பதில்லை யென்று முடிவு செய்தார். இவ்விஷயத்தை மகாத்மாவுக்கும், காரியக்கமிட்டி சகாக்கள் சிலருக்கும், அச்சமயம் ஐரோப்பாவில் இருந்த சுபாஷ் பாபுவுக்கும் கடிதங்கள் மூலம் தெரிவித்தார். 1938-ஆம் ஞு ஹரிபுராக் காங்கிரஸுக்குத் தலைவர் தேர்தல் இன்னும் நடக்கவில்லை யாயினும், சுபாஷே தலைவர் என்ற மட்டில் எல்லாருக்கும் நிச்சயமாயிருந்த சமயம் அது.

பின்னுல் சுபாஷ் பாபுவைத் தலைவராய்க் கொண்டு, ஹரிபுராவில் காங்கிரஸ் நடைபெற்றது. இந்தச் சமயத்தில் ஐக்கிய மாகாணம், பீஹார் இந்த மந்திரி சபைகளில் நெருக்கடி உண்டாயிற்று. ஜவாஹர் காரியக்கமிட்டியில் சேரவேண்டாமென்றிருந்த உறுதி இதனுல் ஆட்டமெடுத்தது. தவிர, சுபாஷ்பாபுவுக்குப் பூர்ண ஒத்துழைப்புத் தரத் தமக்கு இஷ்டமில்லையென்று யாரும் நினைப்பதற்கு இடம் கொடுக்கலாகாதென்றும் ஜவாஹர் நினைத்தார். ஆகவே, காரியக்கமிட்டியில் சேர ஒப்புக்கொண்டார்.

பின்னும் ஜவாஹரின் சஞ்சலம் தீரவில்லை. காந்தீயவாதிகள் சிலரிடம் வேறு அவருக்குக் கோபம் வந்தது. 1938-ஆம் ஞு ஏப்பிரல் மீ மகாத்மாவுக்கு ஒரு கடிதம் எழுதினுர். "காரியங்கள் போகிற போக்கைப் பார்த்தால், இந்தியாவில் நான் திறமையாக வேலை செய்யமுடியா

தென்று எனக்குத் தோன்றுகிறது. சென்ற சில மாதங்களாகவே இந்த உணர்ச்சி எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், நான் ஐரோப்பா செல்லத் தீர்மானித்திருக்கிறேன். அங்கேயிருந்தால், நான் அதிக உபயோகமாயிருப்பேன் என்று தோன்றுகிறது. களைத்துக் குழம்பியிருக்கும் என் மனத்துக்கும் தெளிவு உண்டாகும்'' என்று அதில் ஜவாஹர் குறிப்பிட்டார்.

ஜூலையில் ஜவாஹர் ஐரோப்பாவில் ஸ்பெயின் நாட்டுக்கு விஜயம் செய்தார். அப்போது, அந்த நாட்டில் உள்நாட்டு யுத்தம் நடந்துகொண்டிருந்தது. சட்ட பூர்வமாய் அமைந்திருந்த சோஷலிஸ்டு சர்க்காரைக் கவிழ்க்க, கலகக்கார பிராங்கோ புரட்சி செய்தார். இப்போது ஸ்பெயின் சர்வாதிகாரியாயிருக்கிருரே இந்த ஜெனரல் பிராங்கோதான். சோஷலிஸ்டு சர்க்காரின் சில மந்திரிகளையும் தலைவர்களையும் நேரு கண்டார். பார்ஸிலோனுவில் நேரு தங்கியிருந்தபோது, அங்கே கலகக்காரர்களின் விமானக் குண்டுகள் சொரிந்த கோரக் காட்சியைத் தம் கண்ணுல் கண்டார். இந்தியாவுக்குத் திரும்பியதும், கலகத்தால் தவிக்கும் அந்த ஸ்பெயின் மக்களுக்கு ஜவாஹர் ஒரு கப்பல் நிறைய உணவு அனுப்பிஞர்.

நேச நாடுகள் அபிஸீனியாவுக்குத் துரோகம் செய்தபோதும், அதற்கு அநுதாபம் காட்டிய ஜவாஹர், அவைகள் ஸ்பெயினுக்குத் துரோகம் செய்கையிலும் ஸ்பெயின் ஜனநாயக சர்க்காரையே ஆதரித்தார். அடுத்தாற்போல், ஜெக் நாட்டுக்கும் அவர் சென்ருர். அங்கே மற்றுமொரு துரோகம் - மூனிக் ஒப்பந்தம் - நடக்க ஏற்பாடாகிவருவது கண்டு மனம் பதைத்தார்.

இந்த ஐரோப்பிய விஜய காலத்தில், ஜெர்மன் நாஜிகள் ஜவாஹரைத் தங்கள் நாட்டுக்கு வரும்படி அழைத்தார்கள் ; “ நீங்கள் நாஜி தத்துவத்தை எதிர்ப்பவர் என்று எங்களுக்குத் தெரியும். இருந்தாலும் நீங்கள் நேரே வந்து

ஜெர்மனியைப் பார்க்கவேண்டும் என்பது எங்கள் விருப்பம். நீங்கள் எங்கள் விருந்தாளியாகவோ, தனிப்பட்ட முறையிலோ, உண்மைப் பெயருடனே, மாறுபெயருடனே, எப்படி வேண்டுமானாலும் வரலாம். உங்களுக்கு இஷ்டப்பட்ட இடங்களுக்கெல்லாம் சுதந்தரமாய்ப் போய்ப் பார்க்கலாம்'' என்று அவர்கள் கூறினார்கள். இந்த அழைப்பை ஜவாஹர் மறுத்துவிட்டார். இதற்குப் பதிலாக, ஆக்கிரமிப்பு அபாயத்திலிருந்த ஜெக் நாட்டையே அவர் போய்ப் பார்த்தார்.

இந்தச் சம்பவங்கள் கழிந்த ஐந்து வருஷங்களுக்குப் பின், அகமதுநகர்க் கோட்டையில் சிறைப்பட்ட கைதி ஜவாஹர் எழுதுகிறார்: "மூனிக் ஒப்பந்தம் நடக்குமுன்பு, நான் சில பிரிட்டிஷ் மந்திரிகளையும் பிரபல ஆங்கில அரசியல் வாதிகளையும் சந்தித்தேன். பாஸிஸம், நாஜிஸம் ஆகிய இரண்டையும் கண்டித்து, சில அபிப்பிராயங்களைக் கூறினேன். என் அபிப்பிராயங்கள் அவர்களுக்குப் பிடிக்கவில்லை...ஹிட்லரிடம் அவர்களுக்குப் பயம் மாத்திரமல்ல; ஓரளவு வியப்பும் இருந்தது.

"ஆனால், இப்போதோ, பாஸிஸம், நாஜிஸம் இரண்டையும் எதிர்த்துப் போர் நடக்கும் இப்போதோ, நானும் என் போன்றோரும் சிறையில் கிடக்கிறோம். ஹிட்லரையும் முஸோலினியையும் தலைபணிந்து வணங்கியவர்கள் - சீனாவில் ஜப்பானிய ஆக்கிரமிப்பை ஆதரித்தவர்கள் - சுதந்தரம், ஜனநாயகம், பாஸிஸ எதிர்ப்பு என்ற கொடியை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். இதுதான் விதியின் விசித்திரச் சூழற்சி என்பது!''

ஜவாஹர் தம் சொந்தப் பொறுப்பில்தான் ஐரோப்பாவுக்குச் சென்றார். என்றாலும், அவர் பகிரங்கமாய்ச் சொல்லக்கூடிய அபிப்பிராயங்களைப் பொதுவாய்க் காங்கிரஸ் அபிப்பிராயங்களாகவே எவரும் மதிப்பார்கள். இது இயல்பு. ஆகையால், ஐரோப்பாவில் நிகழ்ந்துகொண்

டிருந்த மகத்தான சம்பவங்களைப் பற்றி, தம் சகாக்களுக்குச் சங்கடமா யிருக்கக்கூடிய எந்த அபிப்பிராயங்களும் தாம் சொல்லிவிடக் கூடாது என்று ஜவாஹர் மிக்க எச்சரிக்கை எடுத்துக்கொண்டார். தனிமையிலோ, பகிரங்கமாகவோ தாம் மேற்கொண்ட அரசியல் வேலைகளையெல்லாம் விவரமாய் அவ்வப்போது பல அறிக்கைகளாய் எழுதி, காங்கிரஸ் தலைவர் சுபாஷுக்கும், காரிய தரிசி மூலம் காரியக்கமிட்டி அங்கத்தினர்களுக்கும், காந்திஜிக்கும் அனுப்பினார். இவர்களுடைய யோசனைகளைத் தாம் பெறுவதற்காகவே இப்படி அறிக்கைகள் அனுப்பினார். சுபாஷ்பாபு பதிலே எழுதவில்லை. காந்திஜியும் காரியக்கமிட்டி அங்கத்தினர்களும் மட்டில், ஜவாஹரின் அபிப்பிராயத்தைப் பொதுவாய் ஆதரிப்பதாகப் பதில் கிடைத்தது. இந்திய சமஷ்டியைப் பற்றி இனிப் பேசத் தேவையில்லையென்றும், இந்தியப் பிரதிநிதிகளே கூடிய ஓர் அரசியல் நிர்ணய சபைதான் இந்திய அரசியல் அமைப்பைத் தயாரிக்கவேண்டும் என்ற கோரிக்கையையே இனி காங்கிரஸ் கைக்கொள்ள வேண்டியதென்றும் ஜவாஹர் அபிப்பிராயப்பட்டார்.

சர்வதேச விஷயங்கள் பற்றியும் ஜவாஹரின் அபிப்பிராயங்கள் சுபாஷுக்குப் பிடிக்கவில்லைபோலிருந்தது. அவர் அவற்றைக் குறித்தும் பதிலே எழுதவில்லை.

25. திரிபுரியும் பின்னரும்

நவம்பர்மீ ஜவாஹர் இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். வந்த சிறிதுகாலத்துக்கெல்லாம், அடுத்த காங்கிரஸுக்கு யாரைத் தலைவராய்த் தேர்ந்தெடுக்கலாம் என்ற கேள்வி எழுந்தது. சோஷலிஸத்தில் பற்றுள்ள ஒருவரே இந்தக் காங்கிரஸுக்குத் தலைவராயிருக்க வேண்டுமென்று காந்திஜி அபிப்பிராயப்பட்டார். ஆகவே, ஜவாஹர் திரும்பவும் ராஷ்டிரபதி ஆகவேண்டும் அல்லது ஆச்சார்ய நரேந்திரதேவ் அந்தப் பதவியை ஏற்கவேண்டும் என்று காந்திஜி குறிப்பிட்டார். அன்றை நிலைமையில் ஒரு சோஷலிஸ்டு காங்கிரஸ் தலைமை வகிப்பது சரியல்ல என்று பல காரணங்களால் ஜவாஹர் கருதினார். மௌலானா அபுல்கலாம்தாம் ஏற்ற தலைவர் என்று காந்திஜியிடம் ஜவாஹர் தெரிவித்தார். சுபாஷ்பாபு மீண்டும் தலைமைப் பதவிக்குப் போட்டியிட விரும்பும் விஷயம் பின்னால்தான் ஜவாஹருக்குத் தெரியவந்தது. தாமோ சுபாஷோ அச்சமயம் தலைமைப் பதவி வகிக்காமல் வெளியிலிருப்பதே நலம் என்று ஜவாஹர் அபிப்பிராயப்பட்டார். சுபாஷிடம் நேரே இது பற்றிச் சம்பாஷித்தார். தமது அபிப்பிராயத்தைச் சுபாஷ் அங்கீகரித்ததாகவே ஜவாஹருக்குத் தோன்றியது. தலைமைப் பதவிக்கு நிற்க ஆஜாது சுலபத்தில் சம்மதிக்கவில்லை. மிக வற்புறுத்தியதன்மேல் சம்மதித்தார். ஆனால், போட்டி ஏற்படும்போலிருந்ததால், கடைசியில் அவர் மறுத்துவிட்டார். போட்டி பட்டாபிக்கும் சுபாஷுக்குமாக நடைபெற்றது. ரஸக்குறைவான அறிக்கைகளும் பதில் அறிக்கைகளும் கிளம்பின. காங்கிரஸுக்குள்ளே வலதுசாரிக்கும் இடதுசாரிக்கும் ஏற்பட்ட போராட்டமாக அதற்கு ஒரு வர்ணம் பூசிவிட்டார்கள்.

சுபாஷ் வென்ருர்; பட்டாபி தோற்ருர். 'பட்டாபியின் தோல்வி என் தோல்வி' என்ருர் காந்திஜி. வலதுசாரிக் காரர்களெல்லாம் காங்கிரஸ் காரியக்கமிட்டியிலிருந்து ராஜிஞமாச் செய்தார்கள். ஜவாஹரும் அவர்களோடு சேர்ந்து ராஜிஞமாச் செய்தார்.

திரிபுரியில் சுபாஷ் பாபுவின் தலைமையில் 1939-ஆம் ஞு மார்ச்சுமீ ஆரம்பத்தில் காங்கிரஸ் கூடியது. சுபாஷ் பாபு நோயுற்றுப் படுத்த படுக்கையாயிருந்தபடி, தலைமை வகித்தார். இதே சமயத்தில், ராஜகோட் சமஸ்தாஞதிபதி வாக்குப் பிறழ்ந்ததால், அங்கே மகாத்மா காந்தி உண்ணு விரதம் கிடந்தார். காங்கிரஸில் ஒருவாறு கட்சிப் பிரதி கட்சி வாதங்களில் அதிகம் சிக்காமல் ஒற்றுமைக்குப் பாடு பட்டவர் ஜவாஹர் ஒருவர்தாம். என்ருலும், பின்ஞல் பல மாத காலம் முயன்றும் தம் இஷ்டப்படி ஒரு காரியக் கமிட்டியை அமைக்க முடியாததால், சுபாஷ்பாபு ராஷ்டிர பதி பதவியை ராஜிஞமாச் செய்தார். அதன் மேல், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியார் பாபு ராஜேந்திரப் பிரஸாதைத் தலைவராய்த் தேர்ந்தெடுத்தார்கள்.

சுபாஷ்பாபு இரண்டாவது முறை ராஷ்டிரபதி பதவிக்குப் போட்டியிட்டது தொடங்கி, ராஜிஞமாச் செய்த காலம் வரைக்கும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப்பற்றி, இங்கே விஸ்தரித்து விவாதிக்கும் நோக்கம் கிடையாது. அவைபற்றி இருவித அபிப்பிராயங்கள் கொண்டவர் இன்னமும் இருக்கிருர்கள். ஆஞல், இவ்விஷயத்தில் நேரு வின் நிலைமை சிறிதும் பட்சபாதமற்றதாகும். அவருங் கூடச் சுபாஷ்பாபுவுடன் முற்றும் உடன்பட முடியாமல் தவித்தார் என்றுமட்டில் குறிப்பிடுவது போதும்.

சீஞவுக்குப் போய் வரவேண்டுமென்று ஜவாஹருக்கு வெகுநாளாக ஆவல். 1939-ஆம் ஞு ஆகஸ்டுமீ அவர் சீஞவுக்குச் சென்ருர். சுங்கிங் நகரில் தலைக்கு மேலே ஜப்பானிய விமானங்கள் பறந்து குண்டுகள் சொரிந்த

பயங்கரத்தை நேரே கண்டார். சீனமக்களும் சியாங்கே ஷேக்கும் தங்கள் நாட்டின் சுதந்தரத்தைப் பாதுகாக்கத் தீரமாய் உறுதியுடன் போர்புரிவது கண்டு களிப்புற்றார். அவர்களுடைய நட்புடன் தாய்நாடு திரும்பினார்.

1939-ஆம் ஸு செப்டம்பர் மீ இரண்டாவது மகா யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. ஜனப்பிரதிநிதிகளைக் கேட்காமலே, இந்தியாவையும் அந்த யுத்தத்திலே பிரிட்டிஷ் சர்க்கார் மாட்டிவிட்டார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் யுத்த நோக்கங்களை வெளியிடாததால், காங்கிரஸ் மாகாண மந்திரிசபைகள் ராஜினாமாச்செய்தன.

1940-ஆம் ஸு ஏப்பிரல் மாதம் மௌலானா அபுல் கலாம் ஆஜாதின் தலைமையில் ராம்கார் நகரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. அது ஒரே ஒரு தீர்மானந்தான் நிறைவேற்றியது. (1) காங்கிரஸ் யுத்தத்தில் கலந்துகொள்வதில்லை (2) பூர்ண சுதந்தரமே இந்தியரைத் திருப்தி செய்யும் (3) அதற்குச் சுயநிர்ணய சபை வேண்டும் (4) இந்தியாவைத் துண்டுபோடுவதைக் காங்கிரஸ் ஒப்பாது- இந்த நாலு அம்சங்களும் அந்தத் தீர்மானத்தில் அடங்கியிருந்தன. ஆகஸ்டு மாதத்தில் பிரிட்டிஷ் சர்க்காரின் கட்டளைப்படி வைசிராய் ஓர் அறிக்கை வெளிட்டார். காங்கிரஸ், லீக் முதலிய பற்பல கட்சிகளிலிருந்தும் சிலரைத் தமது நிர்வாக சபையில் நியமித்துக் கொள்வதாக அதில் அவர் கூறினார். காங்கிரஸ் இதை நிராகரித்தது. மகாத்மா காந்தியைச் சத்தியாக்கிரகம் நடத்தும்படி கேட்டுக்கொண்டது. நெருக்கடியில் சர்க்காருக்குச் சங்கடம் தரக் கூடாதென்று எண்ணிப் பொதுஜன சத்தியாக்கிரகம் அன்றைய நிலைமையில் வேண்டாமென்று மகாத்மா முடிவு செய்தார். கண்டனத்தைக் காட்டும் சின்னமாக புதுமையான தனி நபர் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தார். முதல் சத்தியாக்கிரகியான விநோபா பாவே சிறைப்பட்டார். இரண்டாவது சத்தியாக்கிரகி

யாக, ஜவாஹர் உத்தேசிக்கப்பட்டிருந்தார். ஆனால் சட்டத்தை அவர்மீறு முன்பே, கோரக்பூரில் அவர் செய்த மூன்று பழைய பிரசங்கங்களுக்காக அதிகாரிகள் அவரைக் கைது செய்து, நவம்பர்மாதத் தொடக்கத்தில் அவருக்கு நான்கு வருஷக் காவல் தண்டனை விதித்தார்கள். ஜவாஹருக்கு இதற்கு முன் ஏழு தடவை சிறைத் தண்டனைகள் கிடைத்திருக்கின்றன. ஆயினும், பழி வாங்குவது போல் மிதமிஞ்சிய இந்தத் தண்டனையைக் கேட்டவர் யாவரும் ஸ்தம்பித்துப் போனார்கள். ஆனால், தம் தங்கை கிருஷ்ணாவுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் ஜவாஹர் கூறினார்: "அருமைத் தங்கையே, என் தண்டனையைக் கேட்டு நீயும் உன் கணவர் ராஜாவும் கவலையுற்றதை அறிந்து நான் வருந்துகிறேன். இது வரையில் கிடைக்காத மனச்சாந்தி, இப்போது சிறையிலே எனக்குக் கிடைத்துள்ளது."

26. 'வெளியே போ'

1941-ஆம் ஞு இறுதியில் சத்தியாக்கிரகிகளை யெல் லாம் விடுதலை செய்யச் சர்க்கார் தீர்மானித்தார்கள். ஜவாஹரும் வெளியே வந்தார்.

இதேசமயத்தில் ஜப்பான் யுத்தத்தில் புகுந்தது. **1942-**ஆம் ஞு ஜனவரிமீ சிங்கப்பூர் விழுந்தது. இந்தியா வில் பெருங் குழப்பம் ஏற்பட்டது. ஆஸ்திரேலியா நடுங் கியது. பிரிட்டன் சலசலத்தது. பிப்ரவரிமீ சீன சர்க்கா ரின் தலைவர் சியாங்கே ஷேக் தம் மனைவியுடன் இந்தியா வந்து சேர்ந்தார். சியாங் தம்பதிகள் ஜவாஹருக்கு ஏற்கனவே நண்பராகி விட்டார்கள். ஆகையால், ஜவா ஹரைச் சியாங் நேரே அழைத்துப் பேசினார். மகாத்மா வுக்கும் சியாங் இரண்டு அழைப்புகள் அனுப்பினார்; ஒன்று ஜவாஹர் மூலம்; மற்றது வைசிராய் மூலம். சியாங் அழைத்த மூன்றாவது தலைவர் ஜனாப் ஜின்னா. அவ ருக்கு அழைப்பு வைசிராய் மூலம் வந்தது. சியாங் இந் திய சர்க்காரின் விருந்தினராகவே வந்தார். இந்திய ராணுவமும் சீன ராணுவமும் எப்படி ஒற்றுமையுடன் போர் நடத்துவது என்று ஆராய்வதுதான் அவர் நோக் கம். ஆயினும், இந்தியத் தலைவர்களை அவர் சந்தித்தார். "இந்திய ஜனங்களுக்குச் சகல அரசியல் அதிகாரங்களை யும் பிரிட்டன் அளித்து விடுவது அவசியம்" என்று அவர் பகிரங்கமாய்ச் சொல்லவும் சொல்லிவிட்டார். இந்த நிலைமைக்குச் சீனாவின் நட்பைச் சம்பாதித்த பெருமை ஜவாஹருக்கே உரியதாகும்.

கொஞ்ச காலத்துக்கெல்லாம் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், பிரிட்டிஷ் சர்க்காரின் தூதராக இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இந்தியத் தலைவர்களைக் கண்டு மீண்

டும் மீண்டும் பேசினர். அவர் கொண்டுவந்த திட்டத்தின் சாரம் இதுதான்: (1) யுத்தத்துக்குப் பிற்பாடு, இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்து அடையும். அதற்குப் பிரியும் உரிமையும் இருக்கும். அப்போது ஒவ்வொரு மாகாணமும் சுதேச சமஸ்தானமும் ஒரே இந்திய ஐக்கிய யூனியனில் சேரவோ, பல யூனியன்கள் ஸ்தாபிக்கவோ உரிமை உண்டு. (அதாவது, ஒரு பாகிஸ்தான் அல்ல: பல பாகிஸ்தான்கள்!) (2) தற்போது, ராணுவ இலாகா பிரதம சேனதிபதி கையிலேயே இருக்கும். மற்ற இலாகாக்கள் யாவும் இந்தியர் கையில் ஒப்படைக்கப் படும்.

இந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் நிராகரித்து விட்டது. 'மதியிழந்து தன் வாயிழந்தருந்தவன் மறைந்தான்' என்றவாறு, தூதர் கிரிப்ஸ் வந்தபடியே திரும்பிப் போய் விட்டார்.

கிரிப்ஸ் திட்டத்தை, 'பின் தேதி போட்ட செக்' என்று மகாத்மா குறிப்பிட்டார். கிரிப்ஸ் பேச்சு முறிந்ததுபற்றி நேரு ஓர் அறிக்கையில் ரசமாக விளக்கியிருக்கிருர்: "கிரிப்ஸ் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டார். நமக்குப் பூர்ண சுதந்தரம் வேண்டும் என்று நான் ஏற்கனவே சொல்லி வந்தேன் அல்லவா? அதெல்லாம் விளையாட்டுக்கு என்று அவர் நினைத்திருந்ததாய்த் தோன்றுகிறது. நாம் உண்மையாகவே பூர்ண சுதந்தரம் கேட்கிறோம் என்று அறியவந்ததும், அவருக்கு வருத்தமாய்ப் போய்விட்டது; அவர் அதிசயித்துப் போனுர். 'உண்மையிலேயே, எங்களை விட்டுப் பிரியவா நீங்கள் விரும்புகிறீர்கள்?' என்று அவர் என்னைக் கேட்டார். என்ன வேடிக்கை! நான் எத்தனையோ எழுதியும் பேசியுமாயிற்று; அவரும் எத்தனையோ எழுதியாயிற்று. அத்தனைக்கும் பிறகுமா இந்தச் சந்தேகம்!"

கிரிப்ஸ் தூது முறிந்ததும், மகாத்மாவின் எழுத்திலே வேகம் நிறைந்தது. "வெளியே போ" என்று அந்நிய சர்க்காரை, பேய் விரட்டும் மந்திரவாதிபோல், தம் மந்திர சக்தி கொண்ட எழுத்துக்களால்விரட்ட ஆரம்பித்து விட்டார்.

1942-ஆம் ஆகஸ்டுமீ 7, 8-ஆம் தேதிகளில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிகூடி, 'வெளியே போ தீர்மானம்' என்று பிரசித்திபெற்ற தீர்மானத்தைப் பகிரங்கமாய் வாதித்தது. அதன் சாரமாவது: (1) இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி உடனே முடிய வேண்டும்; (2) நாஜிஸம், பாஸிஸம், ஏகாதிபத்திய முறை இவைகளை ஒழிக்கச் சுதந்தர இந்தியா உதவும்; (3) பிரிட்டன் ஒதுங்க இணங்கா விட்டால், மகாத்மாவின் தலைமையில் அஹிம்சாதர்ம சுதந்தரப் போர் நடத்துவது; (4) அயல்சர்க்கார் ஒழிந்ததும் வகுப்பு ஒற்றுமை ஏற்படும்; அதன்மேல் சகல வகுப்புப் பிரதிநிதிகளையும் கொண்டு தாற்காலிகமான ஓர் இந்திய சர்க்கார் அமைக்கப்படும்.

8-ஆந் தேதி இரவு தீர்மானம் நிறைவேறியது. 9-ஆம் தேதி பொழுது விடியவில்லை; காந்திஜியும் காரியக்கமிட்டி அங்கத்தினர்களும் மற்றும் பல பிரபல காங்கிரஸ் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டார்கள். சர்க்கார் கைகொண்டது ஒரே மின்னல் படையெடுப்புமுறைதான். விக்டோரியா டெர்மினஸ் ரெயில்வே ஸ்டேஷனில் ஒரு ஸ்பெஷல் ரெயில்வண்டி காத்திருந்தது. தலைவர்களையெல்லாம் அந்த வண்டியிலே ஏற்றிக் கண்காணுச் சிறைகளுக்குக் கொண்டு போய்விட்டார்கள். வெகுநாள்வரையில், தலைவர்கள் எங்கே இருக்கிருர்கள் என்றே தெரியவில்லை. மகாத்மாஜி ஆகாகான் அரண்மனையில் சிறையிருந்தார் என்றும், ஜவாஹர் முதலிய சிலர் அஹமத் நகர்க் கோட்டையில் வைக்கப்பட்டிருந்தார்கள் என்றும் பின்னுல்தான் தெரியவந்தது.

தலைவர்கள் சிறைப்பட்டதும் தேசமெங்கும் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஜனங்கள் தம்மிச்சையாகத் தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் அமளி செய்தார்கள். அதிகாரிகள் வெறியாட்டம் ஆடினார்கள். தந்திக் கம்பிகள் அறுபட்டன. ரெயில் தண்டவாளங்கள் பிடுங்கப் பட்டன. சர்க்கார்க் கட்டிடங்கள் தீக்கு இரையாயின. துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்தன. கிராமங்களிலே, ஏழை மக்களின் வீடுகள் நிர்த்தூளியாயின. சொல்லொணுக் கொடுமை! வைசிராய் நிர்வாக சபையின் உள்நாட்டு அங்கத்தினர், இந்தப் பெரும் கொந்தளிப்பை, “பெருங்கலகம், உள்நாட்டுப் புரட்சி முயற்சி” என்று வர்ணித்தார்.

ஜனங்கள் ஓரளவு அத்து மீறிச் சென்ருர்கள் என்பது வாஸ்தவம். ஆனல், அதிகாரிகள் ஆடிய பேயாட்டம் எவரையும் குலை நடுங்கச் செய்துவிட்டது.

27. விடுதலையும் வரவேற்பும்

1945-ஆம் ஹு ஜூன்மீ 18உ அலகாபாது வாசிகள் அதிகாலையிலே எழுந்துவிட்டார்கள். ஊரெங்கும் ஒரே வரவேற்பு வளைவுகளாய்க்கட்டி, அவைகளை மகர தோர ணங்களால் அலங்கரித்தார்கள். மொத்தம் ஐம்பத்தாறு வளைவுகள்! வரவேற்புக்குரிய கர்த்தாவுக்கு வயது 56 என்று காட்டத்தான் இந்த எண்ணிக்கை.

ஜவாஹர் லட்சுமணபுரியிலிருந்து வருகிறார். 15உ விடுதலை யடைந்து அங்கே போனவர், இப்போது தம் வீட்டுக்கு வருகிறார். அவர் வருவதாய் எதிர்பார்க்கும் ரெயில்வண்டி, காலையில் எட்டடிக்க ஐந்து நிமிஷம் இருக் கும்போது ஸ்டேஷனுக்கு வரவேண்டும். ஆறு மணிக்கே சமுத்திரம்போல் மக்கள் அங்கே திரண்டு விட்டார்கள். பத்து, இருபது, முப்பது, நாற்பதாயிரம் பேர் இருக்கும். பிளாட்பாரமெல்லாம், மேம்பாலமெல்லாம், மூலை முடுக்கு எங்கும் ஒரே தலை வெள்ளமாயிருந்தது. விடுபட்ட ஒரு கைதியா வருகிறார்? நவ இந்தியாவின் முடிசூடா மன்னர் அல்லவா வருகிறார்!

திடீரென்று ஒரு வதந்தி கிளம்பியது. "ஜவாஹர் சாலைவழியே காரிலே வருகிறார்!" என்று ஒரு கோஷம் காற்றிலே மிதந்தது. "கள்ளன்!...... தம்மிஷ்டப்படி நடக்கும் எதேச்சாதிகாரி... காரிலா வருகிறார்?... அதைத் தான் நம்பலாமா?"—இப்படி நூறு குரல்கள்—அன்பு கனிந்த செல்லக் குரல்கள்—எழுந்தன. உடனே ஓட்ட மும் பிடியுமாய், முட்டி மோதிக்கொண்டு, சாலையை நோக் கித் திரும்பியது ஜனவெள்ளம். இதற்குள் கார் ஸ்டே ஷன் வாயிலிலே நுழைந்தது. இதோ ஜவாஹர் வந்து

விட்டார். அவருடைய ஒரே மகள் இந்திராவும் பக்கத்திலே இருக்கிருள்.

ஆண்களும் பெண்களும், மலர்களையும் மாலைகளையும் அவர்மீது வாரி வாரிச் சொரிகிருர்கள். பல்லாயிக்கணக்கான நாவுகள் 'ஜவாஹர் லால்கி ஜே! - ஜவாஹர் நீடூழி வாழ்க!' என்று கடல் அலைபோல் ஆர்ப்பரிக்கின்றன. ஜனங்களின் அன்பான வாழ்த்தையும் வணக்கத்தையும் வரவேற்பையும் நின்றுகொண்டே அவர் ஏற்றுக்கொள்கிருர். அவர் முகத்திலே புன்சிரிப்புத் தவழ்கிறது.

"அடடா! என்ன இளைத்துப்போய் விட்டார்!... ஓயாமல் சிறையிலே கிடந்தால் வேறே என்ன ஆகும்?... ...ஐயோ பாவம்! என்ன இளைப்பு!" என்று ஒவ்வொரு வாயும் முணுமுணுக்கிறது. கார் புறப்பட்டது. பெட்ரோல் வேகத்தால் போகிறதா? அல்லது ஜனங்கள்தாம் தள்ளுகிருர்களோ? முன்னும் கூட்டம், பின்னும் கூட்டம், நாலுபுறமும் ஒரே ஜனக்கூட்டம். கிழவர் குமரர், ஆண் பெண், ஹிந்து முஸ்லீம் கிறிஸ்தவர் சீக்கியர், உழவர் தொழிலாளர், படித்தவர் பாமரர், காங்கிரஸ்காரர் கம்யூனிஸ்டுகள் - இப்படிப் பலதிறப்பட்ட மக்களின் கூட்டம். வழியெல்லாம் ஒரே மலர்மாரி, ஜரிகையிட்ட மாலைகள். வீடுகளெல்லாம் கார்த்திகைபோல் தீபாலங்காரம், மின்சார விளக்குகள், மெழுகு வர்த்திகள், மண்ணகல் தீபங்கள். யார் இந்த ஜவாஹர்? இந்துவா, முஸ்லீமா, கிறிஸ்தவரா, சீக்கியரா, பிற யாராவதா? கம்யூனிஸ்டா, காங்கிரஸ்காரரா? யாராயிருந்தால் என்ன? அவர் தேசத்தின் செல்வம்; மகாத்மா காந்தி கூறியதுபோல் 'மனித குல மாணிக்கம்.' அது அனைவருக்கும் தெரியும்.

ஒருவர் கமலா நேரு ஆஸ்பத்திரிக்காக அவரிடம் பண முடிப்புக் கொடுத்தார். ஒருவர் அவருக்கே சமர்ப்பணம் செய்த தமது புஸ்தகத்தை நீட்டினுர். ஒருவர் ஒரு கவிதையை அளித்தார். இவ்விதமாகவே, ஐந்து மைல்

தூரம் மெல்ல மெல்ல அந்த ஊர்வலம் சென்று 'ஆனந்த பவனத்'தை அடைந்தது. பாதி ராத்திரி வரையில் 'ஜவாஹர்லால்கி ஜே' என்ற கோஷம் வானைப் பிளந்தது. "'ஜவாஹர்லால்ஜி, சோர்வடையாதீர்கள். எடுத்த வேலையைக் கைவிடாதீர்கள். எண்ணற்ற மக்களின் இருதயம் உங்களையே நம்பியிருக்கிறது" என்று கூட்டத்திலே இருந்த ஒரு வாலிபப்பெண் உரக்கக் கூவினாள். அவள் சொல் முற்றும் உண்மை. அது அவர்காதிலே விழுந்ததோ?

மறுநாள் அதிகாலையில், ஆயிரக்கணக்கான மக்கள் 'ஆனந்த பவனத்'தைச் சூழ்ந்து விட்டார்கள். வண்ணான் சலவை கண்டிராத கந்தலுடுத்த ஏழைமக்கள் ஒரு புறம்; ஜோராய் உடுப்பணிந்து, 'ஒரு செய்தி வேண்டும் - ஒரு செய்தி' என்று கூச்சலிடும் பத்திரிகை நிருபர் ஒரு புறம். எல்லாருக்கும் ஒரு புன்சிரிப்பு; அந்தப் புன்சிரிப்பு ஒரு நிமிஷந்தான். அடுத்த நிமிஷம் அந்த முகத்திலே ஒரு சோகரேகை படர்ந்தது. கமலா நேரு ஆஸ்பத்திரிக்குச் செல்கிறார் ஜவாஹர். வீட்டிலிருந்து, உட்புறமாய்ச் செல்லும் சொந்தப்பாதை வழியே அவர் நடக்கிறார். அப்போது, 64 - வயதான முதிய தோட்டிக்கிழவி ஒருத்தி ஜவாஹரை வந்து வணங்குகிறாள். அவள் நேரு குடும்பத்துக்கு நெடுநாள் பணிபுரிந்தவள். எலும்பும் தோலுமான அவள் முதுகைப் பரிவுடன் தடவிக்கொடுத்து, "என்ன, க்ஷேமமா?" என்று விசாரித்தார். அவள் கரகரத்த தொண்டையால், தன் பேரப்பிள்ளைகளைக் கூப்பிட்டு, "சர்க்காரின் கால்களிலே விழுங்கள். இவர்தாம் நம் தங்கமான எஜமான்" என்றாள். ஜவாஹர் புன்சிரிப்புடனே, "ஏன் அவர்கள் என் காலிலே விழ வேண்டும்?... நீயும் உன் பிள்ளைகளுடன் உன் பேரப்பிள்ளைகளும் நிமிர்ந்து நிற்கவேண்டும். எவர் காலிலும் விழக்கூடாது என்று எப்போதும் நான் சொல்லி வந்திருக்கிறேனே; உனக்குத் தெரியாதா?...இல்லை...கூடாது...

அவர்கள் என் காலிலே விழக்கூடாது; யார் காலிலுமே விழக்கூடாது" என்று தடுத்தார்.

இரண்டொரு தினங்களில் பம்பாயில் நடக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்கு, ஜவாஹர் உடனே புறப்பட்டார். பம்பாயில் விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷனில் சுமார் லட்சம் மக்கள் கூடி ஜவாஹரை வரவேற்றார்கள். போரிபந்தர், ஹார்ன்பி ரஸ்தாவில் வண்டிப் போக்குவரத்தே இல்லாதபடி எவ்வளவு பெருந்திரளான கூட்டம்!

28. வேவல் திட்ட முறிவு

ஐரோப்பிய யுத்தம் முடிந்து விட்டது. தேசத்திலோ நிலைமை மிக்க நெருக்கடியாகிக் கொண்டிருந்தது. புதிய நிலைமைகள் எழுந்துவிட்ட குறிகள் தென்படத் தொடங்கின. பிரிட்டனில்வேறு பொதுத் தேர்தல்கள் சமீபித்துக் கொண்டிருந்தன. யுத்தகாலத் தனித் தலைவனுன சர்ச்சிலின் கன்ஸெர்வடிவ் கட்சி கவிழப்போவது அநேகமாய் நிச்சயம் எனத் தோன்றிவிட்டது. இந்நிலையில், வைசிராய் வேவல் 1945-ஆம் வருஷ ஆரம்பத்திலே திடீரென்று லண்டனுக்குப் பறந்தார்; ஒரு புதிய திட்டத்தோடு இந்தியாவுக்கு ஓடிவந்தார். அதுதான் வேவல் திட்டம் என்பது.

ஜூன் மீ 14உ வேவல் தமது திட்டத்தைப்பற்றி ரேடியோ மூலம் புது டில்லியிலிருந்து ஒரு பிரசங்கம் செய்தார். ஜப்பானுடன் நடக்கும் யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதற்காகவும், வருங்கால அரசியல் அமைப்பு முன்னேற்றத்துக்கு வசதி செய்வதற்காகவும் இந்திய அரசியல் முட்டுக்கட்டையைத் தீர்க்கத்தக்க புதிய திட்டம் ஒன்றைப் பிரிட்டிஷ் சர்க்கார் வகுத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

அந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு: (1) இந்திய அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய வைசிராய் நிர்வாக சபை ஒன்றை அமைப்பது; (2) அதில் ஜாதி ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சமமான ஸ்தானங்கள் பெறுவார்கள்; (3) வைசிராயும் சேனுதிபதியும் தவிர மற்ற அங்கத்தினர்கள் அனைவரும் இந்தியராகவே இருப்பார்கள்; (4) வெளிநாட்டு விவகாரங்களைக் கவனிக்கும் இலாகாவும் இந்தியரிடமே இருக்கும்; (5) இந்தியாவில் ஒரு பிரிட்டிஷ் ஹை கமிஷனர் நியமிக்கப்படுவார்;

(6) தற்போதைய இந்திய அரசியல் சட்டத்தின் கீழேயே அந்த நிர்வாகச் சபை வேலை செய்யும்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகச் சிம்லாவில் வைசிராய் ஒரு மகாநாடு கூட்ட விரும்பினர். ஜூன்மீ 15உ காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர்களெல்லாம் விடுதலை அடைந்தார்கள். சிம்லா மகாநாட்டுக்கு வருமாறு, பற்பல தலைவர்களுக்கும் தந்திமூலம் வைசிராயின் அழைப்பு வந்தது. ஒன்றிரு காங்கிரஸ் தலைவர்களுக்குச் சிறையிலேயே அந்த அழைப்புப் பட்டுவாடா ஆயிற்று. மகாநாட்டுக்கு முன்தினம் தம்முடன் வந்து பேசும்படி ஜனுப்ஜின்னுவுக்கும் காந்தியடிகளுக்கும் விசேஷ அழைப்பு அனுப்பினர் வைசிராய். காங்கிரஸின் சார்பாகப் பேசத் தமக்கு அதிகாரம் இல்லையென்றும், ராஷ்டிரபதி ஆஜாதுக்குத்தான் அந்த அதிகாரம் உண்டென்றும், தாம் தனிப்பட்ட முறையில் ஏதும் ஆலோசனை சொல்லலாமேயொழிய மகாநாட்டில் தமக்கு இடமில்லையென்றும் மகாத்மா பதில் அளித்தார். அதன் பிறகுதான் ஆஜாதுக்கு வைசிராயின் அழைப்பு வந்தது. காந்திஜியோ தாம் சொன்னபடி வைசிராயைத் தனியே கண்டு பேசினரேயொழிய, மகாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. ஆஜாதும் மற்றவருமே மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். பம்பாயில் 21உ கூடிய காரியக்கமிட்டிக் கூட்டத்தின் தீர்மானப்படியே, அவர்கள் இப்படிக் கலந்துகொண்டார்கள். மகாநாடு ஜூன் 29உ ஆரம்பமாயிற்று.

மகாநாட்டின் நிகழ்ச்சிகள் பகிரங்கமானவையல்ல. மகாநாடு பலனின்றி முடிந்தது. "மகாநாடு முறிந்ததற்கு நானே பொறுப்பு; வேறு யாரும் அல்ல" என்று சொல்லி, மகாநாட்டை வைசிராய் முடிவுசெய்தார். ஆயினும், அவர் பேச்சிலிருந்தே, முஸ்லீம் லீக் தலைவர் ஜனுப் ஜின்னுதான் அந்த முறிவுக்கு ஜவாப்தாரி என்று தெளிவாகப் புலனாயிற்று. "நான் என் பரிகாரத்தை ஜின்னுவிடம் விளக்

கினேன். அதில் லீகுக்குச் சம்மதமில்லை என்று அவர் சொல்லிவிட்டார். பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு நடத்துவது பயனில்லை என்று நான் உணர்ந்தேன்" என்று வேவல் குறிப்பிட்டார்.

மகாநாட்டில் காங்கிரஸ் முற்றும் ஒத்துழைத்த தென்று தெளிவாயிற்று. மகாநாடு முறிந்ததற்கு ஜின்னா சொல்லிய முக்கிய காரணங்களின் சாரமாவது: (1)புதிய நிர்வாக சபையில் மூன்றில் ஒரு பகுதியே முஸ்லீம்கள் இருப்பார்கள்; (2) முஸ்லீம் அங்கத்தினர்கள் அனைவரும் லீகினாலேயே பொறுக்கப்படுவார்கள் என்று வைசிராய் உறுதி கூறவில்லை; (3) யுத்தம் முடிந்ததும் பாகிஸ்தான் செய்வதாக, பிரிட்டிஷ் சர்க்கார் உத்தரவாதம் தரவில்லை. இவைகளே லீகுக்குப் பிடிக்கவில்லையாம்.

ஜவாஹர் கூறினார்: "கடைசியாய்ப் பார்க்குமிடத்துப் பிரிட்டிஷ் கொள்கையின் வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் லார்டு வேவல் செயல்புரிய வேண்டும். இந்திய தேசீயம், இந்திய சுதந்தரம் இவைகளின் வரம்புகளுக்கு உட்பட்டுத் தான் காங்கிரஸ்காரர் செயல்புரிய வேண்டும். ஸ்ரீ ஜின்னா வற்புறுத்துவதும் கிளப்பிவிடுவதும் எதை என்பதையோ நான் சொல்லக்கூடாது. ஆகையால் நமது பிரச்னை தனிப்பட்ட நபர்களின் அந்தரங்க சுத்தியைப் பொறுத்த விஷயம் அல்ல; அவர்களுக்கு அப்பாற்பட்ட சில சக்திகளின் போராட்டமேயாகும். முதன்மையாக, அது இங்கே பிரிட்டன் செலுத்தும் ஆட்சிக்கும் இந்திய தேசீயத்துக்கும் நிகழும் போராட்டமாகும். இந்த இடை வெளியிலே, இந்தியாவில் உள்ள சில பத்தாம் பசலிச் சக்திகளும், பற்பல வீண் பயங்களால் ஏற்பட்ட மனப் பிராந்திகளும், நவீன முற்போக்கு மனோபாவங்களும் புகுந்து ஒன்றுக்கொன்று மல்லுக்கு நிற்கின்றன."

வேவல் மகாநாடு தோற்றதற்கு ஜவாஹர் சொன்ன காரணம் இதுதான்.

29. மந்திரிகள் தூது

வேவல் மகாநாடு முறியும் சமயத்திலே, பிரிட்டனில் அதற்கு மூலாதாரமாயிருந்த சர்ச்சிலின் பிற்போக்குக் கன்ஸெர்வடிவ் கட்சியும் அடியோடு முறியடிக்கப்பட்டு விட்டது. புதிய பார்லிமெண்ட் தேர்தலில், அட்லியைத் தலைவராகக் கொண்ட தொழிற்கட்சி பிரமாத வெற்றி பெற்றது. மொத்தம் 640 ஸ்தானங்களில் தொழிற் கட்சி 400 ஸ்தானங்களுக்குமேல் பெற்றது. கன்ஸெர் வடிவ் கட்சியோ 190 ஸ்தானங்களுக்கும் கீழே போய்விட் டது. கூடிய சீக்கிரம் இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் நடத்தி மீண்டும் அரசியல் பேச்சு வார்த்தைகள் நடத்தப் படுமென, அட்லி சர்க்கார் அறிக்கை வெளியிட்டது. காங் கிரஸ் ஸ்தாபனங்களின் மீதிருந்த தடைகளெல்லாம் மெல்ல மெல்ல நீங்கின. பொதுத் தேர்தல்களில் முஸ்லீம் ஸ்தானங்களையன்றி மற்ற ஸ்தானங்களிலும், பொதுத் தொகுதிகளிலும், காங்கிரஸ் அநேகமாய்ச் சகல எதிரி களையும் வேர்கல்லி எறிந்துவிட்டது. முஸ்லிம் ஸ்தா னங்களில், முஸ்லீம் லீகும் முன்னிலும் பெரும் பலத் தோடு வெற்றி பெற்றது.

இதற்கிடையில், பண்டித ஜவாஹர் சில அபூர்வமான காரியங்களைச் செய்தார். அவர் சுற்றுப் பிரயாணங்கள் புரிந்து சுதந்தர புருஷனாக யாருக்கும் அஞ்சாமல் பற்பல தீரமான பிரசங்கங்கள் செய்தார். 1942-ஆம் ஹு ஆகஸ்டில் மக்கள் நடத்திய வீர எதிர்ப்பை அவர் பகிரங்க மாய்ப் பாராட்டினார். "அப்போது மக்கள் செய்த எல்லாக் காரியங்களுக்கும் நான் பொறுப்பு ஏற்கிறேன்" என்றார். நேத்தாஜியின் இந்திய தேசிய சேனை வீரர் களை, 1857-ஆம் வருஷ இந்திய சுதந்தரப் போர் வீரர்

களுக்கு ஜவாஹர் ஒப்பிட்டார். அவர்களைப் பகிரங்க விசாரணையில்லாமல் தண்டிக்கச் சர்க்கார் எண்ணிய யோசனை பலிக்காதபடி, அதை அம்பலத்துக்குக்கொணர்ந்து பகிரங்க விசாரணை நடக்கும்படி செய்த பெருமையும் ஜவாஹருக்கு உரியதாகும். "ஊரிலே பஞ்சம் வந்தால், ஜனங்களை நான் புரட்சி செய்யச் சொல்வேன்" என்று சர்க்காரை அவர் எச்சரித்தார். "ஒரே ஒரு மனிதன் டில்லியில் இருந்துகொண்டு இந்தியா முழுவதையும் ஆள்கிறான்; ஒரே ஒரு மனிதன் லட்சுமணபுரியில் இருந்துகொண்டு மாகாண மக்களையெல்லாம் ஆதிக்கம் செலுத்துகிறான். இதைக் காணும்போது, என் உள்ளம் குமுறுகிறது. இந்தியாவிலே உள்ள கட்டிடங்கள் மீது யூனியன் ஜாக் கொடி பறப்பதை எப்போது கண்டாலும், நான் பேராத்திரம் அடைகிறேன். ஏனென்றால், இன்னமுங்கூட நாம் அடிமைகளாயிருக்கிறோமே என்று அது எனக்கு ஞாபகமூட்டி என் மனக்கசப்பைக் கிளப்பிவிடுகிறது" என்று அவர் கர்ஜித்தார்.

ஜவாஹர் மித மிஞ்சிப் போகிறார் என்று நம்மில் சிலர் பயந்தார்கள். மீண்டும் சிறைப்பட்டுவிடுவாரோ என்று கூடச் சிலர் மருண்டார்கள். அதிகாரிகளுக்கும் கொஞ்சம் சலசலப்பு உண்டாகத்தான் செய்தது. ஆனால், ஜவாஹர் எதையும் லட்சியம் செய்யவில்லை: "என் பிரசங்கங்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குக் கசப்பாயிருக்கின்றனவாம். இவ்வாறு நான் கேள்விப்படுகிறேன். ஆனால், நான் என்ன செய்யட்டும்? என்னுள்ளத்திலே மூண்டிருக்கும் கனல், இப்போதுள்ள நிலைமைகளைக் கண்டு என்னால் சகிக்க முடியாமல் செய்கிறது" என்று கோஷித்தார்.

காங்கிரஸின் பிரதிநிதியாக 1946-ஆம் ஆண்டு மார்ச்சு மீ மலேயாவுக்கு ஜவாஹர் போய் வந்தார். பிரபல பிரிட்டிஷ் தளபதியான லார்டு லூயி மௌண்ட் பாட்டன்,

ராஜவைபவமாய் ஜவாஹரை வரவேற்று உபசரித்தார். ஜவாஹரும் தளபதியும் சேர்ந்தாற்போல் ஒரே காரில் பவனி சென்றபோது, ராணுவ வீரர்களும் பொது மக்களும் கட்டுக்கடங்காப் பெருங் கூட்டமாகச் சூழ்ந்து உற்சாகங் காட்டினார்கள். பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னே யென்றால், ராணுவ வீரர்களைப் பொது ஜனத் தலைவர்களின் கண்ணிலே கூடக் காட்ட மாட்டார்கள். தவறி யாராவது அவர்களைக் கண்டு பேசி விட்டால், அதைப் பெரிய ராஜத்துவேஷ முயற்சி என்று சர்க்கார் கடிந்தார்கள். அந்தக் காலம் இப்போது மலையேறிப் போய்விட்டது. தமது மலேயா விஜயத்தை ஜவாஹர் மிக்க வெற்றியோடு முடித்துக்கொண்டு, விமானத்தில் சீக்கிரமே இந்தியாவுக்குத் திரும்பிவந்தார்.

இதன் பின்பு, மூன்று பிரிட்டிஷ் மந்திரிகள் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதிகளாய் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்கள். இந்தியாமந்திரி லார்டுபெதிக் லாரென்ஸ், கடற்படை மந்திரி ஏ.வி.அலெக்ஸாண்டர், வர்த்தக மந்திரி ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் ஆகிய மூவரும் வந்தார்கள். அவர்கள் பற்பல தலைவர்களுடனும் தனித் தனியே பேச்சு வார்த்தைகள் நடத்திய பிறகு முக்கட்சி மகாநாடு நடத்த முடிவு செய்தார்கள். மேமீ 5-ஆந் தேதி சிம்லாவில் வைசிராய் மாளிகையில் அந்த மகாநாடு ஆரம்பமாயிற்று. (1) மூன்று பிரிட்டிஷ் மந்திரிகள், வைசிராய் வேவல், (2) ராஷ்டிரபதி ஆஜாத், ஜவாஹர், சர்தார் படேல், கபார்கான் ஆகிய நான்கு காங்கிரஸ் பிரதிநிதிகள், (3) லீக் தலைவர் ஜனாப் ஜின்னா, நவாப்ஜாடா லியாகத் அலிகான், நவாப் முகம்மது இஸ்மேல், அப்துல் ரப் நிஷ்டார் ஆகிய நான்கு முஸ்லீம் லீக் பிரதிநிதிகள்—இந்தப் பன்னிருவரும் அந்த மகாநாட்டின் அங்கத்தினர்கள்.

மகாநாடு இரண்டு மூன்று நாள் கூடிக் கூடிக் கலைந்தது. திடீரென்று ஒரு நாள் ஜவாஹரை ஏகாந்தமாய்ச்

சந்திக்க வேண்டுமென்று ஜனுப் ஜின்னுவுக்கு ஓர் ஆவல் பிறந்தது. இதைக் கேட்ட மற்றப் பத்துப் பேரும் வெளியே புல் தரைக்குப் போய் விட்டார்கள். மகா நாட்டு அறையில் ஜவாஹரும் ஜின்னுவும் கொஞ்ச நேரம் தனியே பேசிக் கொண்டிருந்தார்கள். பின்பு, இருவரும் மறுபடி சந்தித்துப் பேசுவதென்று ஏற்பாடு செய்து கொண்டதால், மகாநாடு இரண்டு நாள் ஒத்திப் போடப் பட்டது. இடையில் நிகழ்ந்த ஜவாஹர் - ஜின்னு சந்திப் பும் பலன் தரவில்லை. இறுதியில் மகாநாடும் முடிவடைந் தது.

மகாநாடு ஒற்றுமையான முடிவு காணுததால், தங்க ளுடைய மத்தியஸ்தமான சிபாரிசாக, ஒரு திட்டத்தைப் பிரிட்டிஷ் மந்திரிகள் மேமீ 16-ஆந் தேதி வெளியிட்டார் கள். அதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு: (1) முஸ்லீம்கள் பெரும்பான்மையாய் உள்ள பிரதேசங்களை மாத்திரம் பாகிஸ்தான் செய்துகொள்ள, முஸ்லீம் லீக் சம்மதிக்கவில்லை. வேறுவிதமான பாகிஸ்தான் சாத்திய மில்லை. ஆகையால், ராணுவம், வெளிநாட்டு விவகாரம், போக்குவரத்து இவைகளைக் கவனிக்கும் மத்திய சர்க் காரையும் சட்ட சபையையும் கொண்ட, இந்திய மாகா ணங்களும் சுதேச சமஸ்தானங்களும் அடங்கிய ஓர் அகில இந்திய யூனியன்தான் அமைய வேண்டும் ; (2) மிச்ச முள்ள அதிகாரங்களெல்லாம் மாகாணங்களுக்கு இருக்க வேண்டும் ; (3) மாகாணங்கள் மூன்று கோஷ்டிகளா யிருக்கும் : (ஏ) சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பீஹார், மத்திய மாகாணம், ஒரிஸ்ஸா ; (பி) பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புறம், சிந்து ; (ஸி) வங்காளம், அஸ் ஸாம் இப்படி மூன்று கோஷ்டிகள். (4) இந்துக்களும் பிறரும் அடங்கிய பொது வகுப்பார், முஸ்லீம்கள், சீக்கி யர் ஆகிய மூன்று வகுப்புகளும் அந்த அந்த மாகாணச் சட்ட சபைகளில் நடத்தும் ஒற்றை மாற்று ஓட்டுத்

தேர்தல்மூலம், பத்துலட்சத்துக்கு ஒருவர் விகிதம் ஜனத் தொகை விகிதாசாரப்படி மொத்தம் 292-பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை கூடி, இந்திய யூனியன் அரசியல் அமைப்பை வகுக்கவேண்டும் ; (5) சமஸ்தானங்கள்மீது பிரிட்டனின் மேலதிகாரம் இருக்காது; அவை பிரிட்டிஷ் இந்திய யூனியனில் எந்த முறையில் ஒத்துழைப்பது என்பதை அவைகளே பிற பகுதி இந்தியப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி முடிவு செய்துகொள்ள வேண்டும் ; அப்படிச் செய்துகொள்ளும் முடிவின்மேல், அவை 93 பிரதிநிதிகளுக்கு மேற்படாமல் பொறுக்கி யூனியன் அரசியல் நிர்ணய சபைக்கு அனுப்பலாம் ; (6) மாகாணக் கோஷ்டி ஒவ்வொன்றின் பிரதிநிதிகளும் அவரவர் கூடி, அந்த அந்தக் கோஷ்டிக்கு உட்பட்ட மாகாணங்களின் அரசியல்அமைப்புகளை வகுக்கவேண்டும். அந்த அந்தக் கோஷ்டிக்கும் பொதுவாகச் சில இலாகாக் களை நிர்ணயித்துகொள்ளவும், அவைகளை நிர்வகிக்கவும் வேண்டிய கோஷ்டிப் பொது அரசியல் அமைப்புத் தேவை யானால், அதையும் அவர்கள் வகுக்கலாம். புதிய அரசியல் அமைப்புகள் அமைந்தவுடனே, எந்தக் கோஷ்டியில் உள்ள எந்த ஒரு மாகாணமும், தன் கோஷ்டியிலிருந்து பிரிந்துகொள்ள உரிமையுண்டு.

இதுவரையில் சொன்னவை பிரிட்டிஷ் மந்திரிகளின் நீண்டகாலத் திட்டத்தில் கண்ட அம்சங்கள். இவை போகத் தாற்காலிகத் திட்டமாக முற்றும் இந்தியத் தலைவர்களே அடங்கிய ஒரு நிர்வாக சபையை வைசிராய் நியமித்துக்கொள்ளுவார் என்றும் அவர்கள் சொன்னார் கள். அவர் அப்படி நியமித்துக்கொள்ள வசதியாக, பிரதம சேனாதிபதி பீல்டுமார்ஷல் ஆச்சின்லெக் உள்பட, அப்போ திருந்த வைசிராய் நிர்வாக சபை அங்கத்தினர்கள் அனை வரும் ராஜினாமாச் செய்தார்கள். சேனாதிபதி ஆச்சின்லெக்

மிகவும் பெருந்தன்மையோடு, ரேடியோவில் ஒரு பிரசங்கமும் செய்தார். அதில் அவர், "ஓர் இந்திய அங்கத்தினரின் கீழேயிருந்து சேவை புரிய நான் தயாராயிருக்கிறேன்" என்று குறிப்பிட்டார். சேனாதிபதி ஆச்சின்லெக்கின் இந்தச் செயல் மிகவும் பாராட்டத்தக்க காரியமாகும். ஏனென்றால், முன்னே கிரிப்ஸ் தனியே தூது வந்தபோது முட்டுக்கட்டையாயிருந்த ஒரு முக்கியச் சிக்கலை இதன் மூலம் ஆச்சின்லெக் தீர்த்துவைத்தார். கிரிப்ஸ் வந்தபோது வேவல் பிரபுவே இந்திய சேனாதிபதியா யிருந்தார். "நான் ஓர் இந்திய அங்கத்தினரின் கீழே இருந்து வேலை செய்யமாட்டேன்" என்று அவர் சொல்லிவிட்டார் என்றும், கிரிப்ஸ் பேச்சு முறிந்ததற்கு அதுவும் ஒரு காரணம் என்றும் அப்போது ஒரு வதந்தி கிளம்பியதுண்டு.

இதோடு வேலை பூர்த்தியாகவில்லை. திட்டத்தைப் பற்றி விளக்கம் பெறுவதற்காகவும், இடைக்கால நிர்வாக சபை அமைப்புச் சம்பந்தமாகவும், ஒரு பக்கம் காங்கிரஸ் தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கும் மறுபக்கம் லீக் தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கும் கடிதப் போக்குவரத்துகளும் பேச்சு வார்த்தைகளும் மீண்டும் நடைபெறலாயின.

இடைக்கால சர்க்கார் விஷயத்திலும் லீக் காங்கிரஸ் ஒற்றுமைக்கு வழியில்லை யாகையால், பிரிட்டிஷ் மந்திரிகளின் ஆலோசனையோடு, வைசிராய் வேவல், தனித் தனியே தமது நிர்வாக சபையில் சேருமாறு 14 பேருக்கு அழைப்பு விடுத்தார். (1) ஜவாஹர், (2) பட்டேல், (3) ராஜாஜி, (4) ராஜேந்திர பிரஸாத், (5) ஹரிகிருஷ்ண மேதாப் ஆகிய ஐந்து காங்கிரஸ் ஹிந்துக்கள், (6) காங்கிரஸ் ஹரிஜன் ஜகஜீவன்ராம், (7) ஜனாப் ஜின்னா,

(8) நவாப் ஜாடா லியாகத் ஆலிகான், (9) நவாப் முகம்மது இஸ்மேல்கான், (10) ஸர் நாஜிம் உத்தீன், (11) ஸர்தார் அப்துர் ரப் நிஷ்டார் ஆகிய ஐந்து முஸ்லீம் லீகர்கள் (12) சர்க்கார் உத்தியோகஸ்தரான பார்ஸீ ஸர் என். பி. எஞ்சினீர், (13) தேசீயப் பற்றுள்ள இந்தியக் கிறிஸ்தவர் டாக்டர் ஜான் மத்தாய், (14) சீக்கிய ஸர்தார் பலதேவ் சிங் - இந்தப் பதினுன்கு பேரும் வைசிராயால் அழைக்கப்பட்டவர்கள்.

இந்த ஜாபிதாவில் சரத்சந்திரபோஸைச் சேர்க்காமல் மேதாப்பைச் சேர்த்ததும், ஓர் உத்தியோகஸ்தரான எஞ்சினீரைச் சேர்த்ததும், ஒரு தேசீய முஸ்லீம்கூட இல்லாமல் விட்டதும், காங்கிரஸ் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. முதல் இரண்டு குறைகளையும் சரி செய்ய, வேவல் தயாராயிருந்தாராம். ஆனால், ஒரு தேசீய முஸ்லீம் பெயரைச் சேர்க்க மட்டில் அவர் இணங்கவில்லை. ஏனென்றால், காங்கிரஸ் எண்ணிக்கைக்குள்ளேயே ஒரு தேசீய முஸ்லீமைச் சேர்ப்பதைக்கூட ஜனுப் ஜின்னு பலமாய் ஆட்சேபித்தாராம். ஆகவே, நீண்ட காலத் திட்டத்தைச் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏற்பதென்றும், இடைக்கால சர்க்கார்த் திட்டத்தை நிராகரிப்பதென்றும், காங்கிரஸ் காரியக்கமிட்டியினர் தீர்மானித்தார்கள். முஸ்லீம் லீகர்களோ இரண்டு திட்டங்களையும் ஏற்பதென்று முடிவுசெய்தார்கள்.

இடைக்கால சர்க்காரில் சேரச் சிலர் மறுத்தாலும், மீதி யாரார் சேரச் சம்மதிக்கிறுர்களோ அவர்களைக் கொண்டு இடைக்கால சர்க்கார் அமைக்கப்படும் (அதாவது, காங்கிரஸ் சேர மறுத்ததால், தாங்களே மந்திரி சபையை அமைத்து விடலாம்) என்பது லீகர்களின் ஆசை. ஆனுல், அந்த ஆசை அவலமாய்ப் போகும்படி செய்துவிட்

டார்கள் வைசிராயும் பிரிட்டிஷ் மந்திரிகளும். ஜனப் பிரதிநிதிகளைக்கொண்ட இடைக்கால சார்க்கார்அமைக் கும் யோசனையை, அவர்கள் தற்போதைக்குக் கைவிட்டு விட்டார்கள். மிகவும் குறுகிய காலத்துக்குத் தாற் காலிகமாக ஆறு சர்க்கார் உத்தியோகஸ்தர்களை மட்டி லும் கொண்ட ஒரு காவல்கார நிர்வாக சபையை வைசிராய் நியமித்துக்கொண்டார்.

லீக் தலைவர்கள் சீறி விழுந்தார்கள். பயன்படவில்லை. பிரிட்டிஷ் மந்திரிகள் கையை உதறிவிட்டு ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.

30. காஷ்மீரச் சம்பவம்

பிரிட்டிஷ் மந்திரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டே யிருக்கையில், ஜவர்ஹர் சம்பந்தப்பட்ட நாலைந்து விசேஷ சம்பவங்கள் நடைபெற்றன. அவை யாவன : (1) பரித்கோட் சமஸ்தான சமரசம் ; (2) நேரு நான்காவது தடவையாகக் காங்கிரஸ் தலைவராய்த் தேர்ந் தெடுக்கப்பட்டது ; (3) இந்தியாவுக்கு இந்தோனீசியா, அரிசி அனுப்ப முன்வந்தது ; (4) காஷ்மீர விபரீதம்.

"வரப்போகும் நாட்கள், இந்திய சரித்திரத்தில் மகத் தான காரியங்களை நடத்தவேண்டிய நாட்களாகும். இச் சமயம் மந்திர சக்திவாய்ந்த வசீகர புருஷன் ஒருவனே ராஷ்டிரபதியாய் இருக்கவேண்டும். நாட்டின் பற்பல முற் போக்குச் சக்திகளையும் ஒன்றுதிரட்டி, அவைகளின் பிரதி நிதிகளையெல்லாம் ஒருவிதச் சமரசத்துக்குள்ளடக்கி, ஒற்றுமை குன்றாமல் வலிமை சிதறாமல் கொண்டு செலுத் தக்கூடிய ஒரு தலைவர் ஜவாஹர்தாம்" என்பது பலர் கருத்து. ஆகையால், புயலை ஒத்த ஆறு வருஷ காலம் அபூர்வமாய்க் காங்கிரஸ் கப்பலைச் செலுத்திவந்த மாலுமி ஆஜாதும், மகாத்மா காந்தியும், மற்றுமுள்ள பெருங் காங்கிரஸ் தலைவர்களும் ஜவாஹரே தலைவராகவேண்டு மென்று விரும்பினார்கள். போட்டியின்றி அவரும் தலைவ ரானார்.

இதற்கிடையில், மே மாத மத்தியில், இந்தோனீசியக் குடியரசுப் பிரதம மந்திரி டாக்டர் ஷாரிர் அவர்களிட மிருந்து பண்டித ஜவாஹருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் குறிப்பிட்டதாவது :

" அன்பார்ந்த ஜவாஹர் அவர்களே! இந்திய மக் களுக்கு இந்தோனீசிய சர்க்கார் அரிசி உதவத் தயாரா

யிருக்கிறது என்று பத்திரிகைச் செய்திகளில் படித்திருப்பீர்கள். அதை ஊர்ஜிதம்செய்வது இந்தக் கடிதம். தாங்கள் நேரே ஒருமுறை இந்தோனீசியாவுக்கு வந்து இந்தோனீசிய மக்களைக் கௌரவிக்க வேண்டுகிறேன். வந்தால் பரிவர்த்தனை ஒப்பந்தத்தைப்பேசிமுடித்துக்கொள்ளலாம். தாங்கள் வர இயலாவிட்டால், தங்கள் அதிகாரம்பெற்ற ஒருவரை அனுப்புங்கள். தங்கள் உண்மையுள்ள,ஷாரிர்.''

ஜவாஹரை இந்தியக் குடியரசின் தலைவர்போலவே ஒரு சுதந்தர சர்க்காரின் தலைவர் மதித்ததால்தான், இவ்வாறு அழைப்பு விடுத்தார். ஆனால், நாட்டுக்கு மிக முக்கியமான இந்தச் சமயத்தில் ஜவாஹர் எப்படி அயல் நாட்டுக்குப் போய்வர முடியும்? அவர் போக முடியவில்லை.

இனிக் காஷ்மீர விபரீதத்தைக் குறிப்பிடு முன்பாக, வேறு இரண்டொருவிஷயங்களைச் சொல்லியாகவேண்டும். இந்திய சமஸ்தானப் பிரஜைகளின் காங்கிரஸுக்குத் தலைவர் ஜவாஹர். இந்திய சமஸ்தானாதிபதிகள் சபையின் உப சான்சலர் பதவி வகிப்பவர் பாட்டியாலா மகாராஜா. பிரிட்டிஷ் மந்திரிகள் இந்தியாவுக்கு வந்துசேர்ந்த பின்பு, ஜவாஹரை அந்த மகாராஜா இரண்டு முறை சந்தித்து, சுதேச சமஸ்தானங்களுக்குள் என்ன சீர்திருத்தங்கள் வேண்டுமென்பதைப் பற்றிச் சம்பாஷித்தார்.

இந்த நிலையில் பரித்கோட் சமஸ்தானத்தில் அதிகாரிகள் மிகவும் அட்டூழியங்கள் செய்ததாகக் கேள்விப்பட்ட ஜவாஹர் அங்கே நேரே போய் நிலைமையை விசாரித்துவரப் புறப்பட்டார். பரித்கோட் ராஜாவுடன் சில நிமிஷ நேரம் பேசிக்கொண்டிருந்தார். அதன் பலனாக, ஒரு சமரசம் ஏற்பட்டது. சகல தடை உத்தரவுகளும் ரத்தாயின. ஜவாஹரின் இந்தத் திக்விஜயத்தை, லண்டன் நியூஸ் கிரானிகள் பத்திரிகையின் அயல்நாட்டு ஆசிரியரான நார்மன் கிளிப் தம் கண்ணால் கண்டபடி வர்ணித்திருக்கிறார். அவர் சொல்வதாவது :

"நேற்றுப் பரித்கோட்டில் பிரஜா உரிமைகளே இல்லை; இன்றோ அரசியல் ஸ்தாபனங்கள் அமைத்துக் கொள்ளவும், பொதுக்கூட்டங்கள் நடத்தவும், பகிரங்கமாய் அபிப்பிராயங்கள் தெரிவிக்கவும், ஊர்வலங்கள் செல்லவும், தேசியக்கொடி உயர்த்தவும் ஜனங்கள் சுதந்தரம் பெற்றுவிட்டார்கள். ஏற்கனவே, சர்வாதிகாரம் படைத்த தங்கள் ராஜாவின் ஒரே கொடியைத்தான் சமஸ்தானத்தில் எவரும் உயர்த்தலாம்.

"சுதந்தர தீபத்தைத் தாங்கிச் செல்லும் ஜவாஹர், டில்லியிலிருந்து திக்விஜயம் செய்யப் புறப்பட்டுவிட்டார். ஒவ்வொரு மனித இதயத்திலும் கனலும் தீப்பொறியை அவர் கிளறிவிட்டார். அது காட்டுத்தீயைப்போல் எங்கும் சூழ்ந்துவிட்டது. அந்தத் தீ, காலக்கிரமத்தில் ஒவ்வோர் எதேச்சாதிகாரக் கொடுங்கோலனையும் பணியச் செய்துவிடும்; அல்லது பதுங்கச் செய்துவிடும்.

"நேரு பிரயாணம் செய்கையில், இரவு நேரம். வழியெல்லாம் சில மைல் தூரத்துக்கொரு தடவை ஏராளமான ஜனங்கள் கூடி எங்களை உற்சாகமாய் வாழ்த்தினார்கள். எங்கள் ரெயில் வண்டி, வேறு பல சிறு சமஸ்தானங்களின் வழியே சென்றது. அவையன்றிப் பெரிய சமஸ்தானமான பாட்டியாலாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். நேரு அங்கே இறங்கி, அவர்களுக்கு ஒரு பிரசங்கமும் செய்ய வேண்டியதாயிற்று.

"பரித்கோட் சமஸ்தானத்துக்குள்ளே கோட்காபுராவில் நாங்கள் சிறிது நின்றோம். தூரத்திலே நகர மக்களைப் போலீஸார் தடிகளைக்கொண்டு தடுத்துவைத்திருந்தார்கள். அந்த மக்களின் பேரொலி எங்கள் காதில் விழுந்தது. வீட்டு மச்சுகளின்மீதும், தாழ்வாரங்களிலும், தெருக்களிலும் ஜனங்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் போட்ட கோஷம் போலீஸாரின் தலைக்குமேலே மிதந்து எங்களிடம் வந்துசேர்ந்தது. சில நூறு மக்கள் போலீஸா

ரையும் ஏமாற்றி, புலங்களில் விழுந்தடித்துக் கொண்டு வந்து, ஸ்டேஷனை நிறைத்துவிட்டார்கள்.

"பரித்கோட் ஸ்டேஷனில் பிரம்மாண்டமான கூட்டம் கூடிச் செய்த வரவேற்புக்கோஷம், எங்கள் காது செவிடுபடச் செய்தது. நேரு முன்னே செல்ல,பிரமாதமான ஓர் ஊர்வலம் புறப்பட்டது. நகர வாயிற்படியை நெருங்கியபோது, பிரதம மாஜிஸ்ரேட் வந்து குறுக்கிட்டு, கூட்டங்களும் ஊர்வலங்களும் கூடாவென்று 144 தடை உத்தரவு பிறந்திருப்பதாக நேருவை எச்சரித்தார். 'என்ன உத்தரவு அமலில் இருந்தாலும் எனக்குக் கவலை இல்லை. என் வேலைத்திட்டத்தை நான் நிறைவேற்றியே தீர்வேன்' என்று பதில் அளித்தார் நேரு. அமைதியாய்த் தம்மைப் பின்தொடரும்படி ஜனக்கூட்டத்தைஅவர் கேட்டுக்கொண்டார். சந்தை மைதானத்தில் வீட்டு மச்சுகள், மரக்கிளைகள் உட்படச் சகல இடத்திலும் ஜனங்கள் வெகு சீக்கிரத்தில் நிறைந்து கூடினார்கள். அவர்கள் போட்ட ஜே கோஷம் வானம் அதிரச் செய்தது."

இந்த வைபவமான விஜயத்துக்கு மேலே, பரித்கோட் சமரசம் ஏற்பட்டது.

பரித்கோட் தகராறு இப்படி மிகவும் சௌஜன்யமாகத் தீர்ந்திருக்க, காஷ்மீர விவகாரம் எப்படி ஆயிற்று? நாடெங்கும் - ஏன், உலகெங்குமே - நாறிவிட்டது. காஷ்மீரப் பிரச்னை, முக்கியமாக முஸ்லீம் ஏழை மக்களின் பிரச்னை என்று சொல்லலாம். அங்கே உள்ளோரில் மிகப் பெரும்பாலோர் ஏழைமுஸ்லீம்கள். சிற்சில முஸ்லீம்களும் மற்ற வகுப்பார் சிலருமே பணக்காரர்கள். ஏழை முஸ்லீம்கள் உரிமைகளற்றுப் பற்பல விதங்களில் தவிக்கிறார்களாம். ஏழை மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபடுவது காஷ்மீர நேஷனல் கான்பரன்ஸ். அதற்கு வகுப்பு வாதம் கிடையாது. அந்தக் கான்பரன்ஸின் தலைவர் ஷேக் அப்துல்லா. அந்தக் கான்பரன்ஸ் 'காஷ்மீரை விட்டு

வெளியேறு' என்ற ஓர் அதி தீவிர இயக்கத்தைச் சமீபத்தில் எக்காரணத்தினாலோ தொடங்கியது. இது ஜவாஹருக்கு உடன்பாடில்லை. என்றாலும், காஷ்மீர நிலைமையின் முழு விவரத்தையும் அறிவதற்காக, தம்மை வந்து கண்டு பேசும்படி ஷேக் அப்துல்லாவை ஜவாஹர் டில்லிக்கு அழைத்தார். அப்துல்லாவும் அதற்கிசைந்து டில்லிக்குப் புறப்பட்டார். தாம் இல்லாத காலத்தில் எவ்விதக் கிளர்ச்சியும் பொதுக் கூட்டமும் நடத்தாமல் நிறுத்திவைக்கும்படியும் மக்களைக் கேட்டுக்கொண்டார். அப்துல்லாவைப் போகிற வழியிலே சமஸ்தான அதிகாரி கள் சிறைப் பிடித்துவிட்டார்கள். வேறு பலரையும் கைது செய்தார்கள். துப்பாக்கிப்பிரயோகம் முதலிய அமளிகளும் நடந்தன.

உடனே, ஜவாஹர் காஷ்மீருக்குப் பயணமானார். முக்கியமாய் ஷேக் அப்துல்லா வழக்கில் எதிர்வாதம் செய்யத் தக்க ஏற்பாடுகள் செய்யவும், அடுத்தபடியாகக் காஷ்மீரச் சிக்கலைத் தீர்க்கத் தம்மால் இயன்ற உதவிகள் புரியவுமே அவர் சென்றார். ஆனால், காஷ்மீர எல்லையைப் போய் மிதித்ததும், ஜவாஹர் காஷ்மீரை விட்டுப் போகும் படி அதிகாரிகள் அவரிடம் ஓர் உத்தரவை நீட்டினார்கள். அது நியாயமில்லாத உத்தரவு என்று சொல்லி, ஜவாஹர் அதற்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டார். போலீஸாரும் ராணுவத்தினரும் சாலையிலே மரக்கட்டையைக் குறுக்கே போட்டு, வழியை அடைத்து, தாங்களும் தடிகள், தோட்டா போட்ட துப்பாக்கிகள் சகிதம் சனியன்களை நீட்டிக்கொண்டு மறித்து நின்றுகொண்டார்கள். ஜவா ஹர் இதை லட்சியம் செய்யவில்லை. போலீஸ், ராணுவ வீரர்களை மீறிக்கொண்டு முன் சென்றார். ஒரு சமயம் துப்பாக்கிச் சனியன் ஜவாஹர்மீது குத்திவிடும்போல் கூட இருந்தது. நல்ல வேளையாகப் பக்கத்திலிருந்த நண்பர் அதைத் தள்ளிவிட்டார்.

போலீஸாரும் ராணுவத்தினரும் மிக்க அடக்கமாக வே நடந்துகொண்டு, பின்னால் பல மைல்களுக்கு அப்பால் போய் நின்றுகொண்டார்கள். டொமெல் என்னுமிடத்தில் ஜவாஹரைக் கைது செய்து, அங்கிருந்து இரவுக்கிரவே ஊரி என்னுமிடத்தில் உள்ள டாக் பங்களாவுக்குக் கொண்டு சென்று பந்தோபஸ்தில் வைத்து மிக்க மரியாதையாக நடத்தினார்கள். அவர் எச்சமயம் வேண்டு மானாலும் திரும்பிச் செல்லலாமென்றும், அதற்கு ஆகாய விமானங்கூட ஏற்பாடு செய்வதாகவும் சமஸ்தான அதிகாரிகள் சொன்னார்கள்.

இதற்குள், ஜவாஹர் கைதியானார் என்றும், அவருக்குத் துப்பாக்கிச்சனியன் காயம் பட்டது என்றுங்கூட உல கெங்கும் செய்தி பறந்தது. இந்தியாவில் பல இடங்களில் ஹர்த்தால் முதலிய ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. நமது மதுரை நிலைமை துப்பாக்கிப் பிரயோகம் வரையில் போய் விட்டது. சீனத் தலைவர் தளபதி சியாங் கே ஷேக்கின் மனைவி, தாமும் தம் கணவரும் ஜவாஹர் கைதான செய்தி பற்றிக் கவலைப்படுவதாக ஜவாஹருக்கே ஒரு தந்தியும் அனுப்பி விசாரித்தார்.

ஜவாஹர் இப்படிக் காஷ்மீரில் தாமதிக்க நேரிட்ட தால், டில்லியில் பிரிட்டிஷ் மந்திரிகளுடைய திட்டங்களின் மீது காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவு செய்யத் தவக்கம் ஏற்பட்டது. அதைத் தெரிவித்து, ஜவாஹர் உடனே டில்லிக்கு வந்தாக வேண்டுமென்று, அவருக்கு ராஷ்டிர பதி ஆஜாது ஆகாயத்தந்தி மூலம் கட்டளை பிறப்பித்தார். ராஷ்டிரபதியின் கட்டளையை மறுக்கமுடியாமல் விமான மூலம் டில்லிக்கு விரைந்தார் ஜவாஹர். அதன் பிறகு தான், முன் அத்தியாயத்தில் கண்டபடி மந்திரிகளின் திட்டங்கள்மீது காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவு செய்தது.

31. முதல் இந்திய தேசிய சர்க்கார்

புதிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி 1946 ஜூலை 6-ல் பம்பாயில் கூடியது. சாந்தமும் உறுதியும் புலமையும் மேதையும் மிக்க பழைய ராஷ்டிரபதி ஆஜாது, காங்கிரஸ் தலைமையைச் சகல விதங்களிலும் தகுதி வாய்ந்த புதிய ராஷ்டிரபதி ஜவாஹரிடம் ஒப்பித்தார். பிரிட்டிஷ் மந்திரிகளின் திட்டங்கள் பற்றிப் பழைய காரியக்கமிட்டி செய்த தீர்மானத்தை, 51 ஓட்டுகளுக்கு எதிரே 204 ஓட்டுகளால் புதிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கீகரித்தது.

அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்ளத் தீர்மானித்த காங்கிரஸ், தன் கட்சிக்காரர்களாகவே பார்த்து, அந்தச் சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை. நாட்டின் சிறந்த பிரமுகர்களையெல்லாம் தன் கட்சி அபேட்சகர்களாகப் பொறுக்கி, அந்தச் சபைக்குப் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுத்து அனுப்பச்செய்தது.

அரசியல் நிர்ணய சபையில் காங்கிரஸ் எந்த நிலைமையில் கலந்துகொள்ளுகிறது என்று தலைவர் ஜவாஹர் இந்தச் சமயத்திலேயே விளக்கிவிட்டார். சுருக்கமாகச் சொன்னால், எந்த வரம்புகளுக்கும் உட்படாமலே அந்தச் சபையில் காங்கிரஸ் கலந்துகொண்டிருக்கிறது. அரசியல் நிர்ணய சபை, சர்வாதிகாரம் படைத்தது. வெளியார் யாரும் - முக்கியமாக, பிரிட்டிஷ் சர்க்கார் - அதை எவ்விதத்தும் கட்டுப்படுத்த முடியாது ; கட்டுப்படுத்த மாட்டார்கள். சபை எந்த முடிவுகளை வேண்டுமானாலும் தன் இஷ்டப்படியே செய்யலாம்-அப்படிப்பட்ட சபையாக அது இருக்கும் என்றே காங்கிரஸுக்குப் பிரிட்டிஷ் மந்திரிகள்

வாக்களித்தார்கள். இதற்கு மாருக, அந்தச் சபையின் சர்வாதிகாரத்துக்கு எவ்விதத்திலாவது ஊனம் செய்யப் படுமாளுல், காங்கிரஸ் எந்த நிலையிலும் அதை உதறித் தள்ளிவிடலாம்; போராடலாம். இதுவே தலைவர் ஜவாஹர் இச்சமயம் வெளியிட்ட கருத்து.

"அரசியல் நிர்ணய சபைக்குச் சர்வாதிகாரம் உண்டு என்கிறதே காங்கிரஸ்! அது அப்படிப்பட்ட சபையாளுல் அதில் எங்களுக்கு இடமில்லை" என்று முனகிஞர் முஸ்லிம் லீக் காரியதரிசி லியாகத் அலிகான். "இப்போது முளைத்துள்ள புதிய நிலைமையில், அரசியல் நிர்ணய சபைக்குள் முஸ்லிம் லீக் நுழைவது தற்கொலையாய் முடியும்" என்று மேலும் அவர் மருண்டார். "லீகர் இப்படிச் சொல்கிருரே" என்று ஜவாஹரிடம் ஒரு நிருபர் குறிப்பிட்டதற்கு, ஜவாஹர் சொன்ஞர்: "எப்போதுமே காங்கிரஸ் புதிய நிலைமைகளைச் சிருஷ்டிக்கத்தான் எக்காரியமும் செய்கிறது. மற்றவர்கள் என்ன செய்கிருர்கள் என்பதைப் பார்த்துப் பார்த்து நாங்கள் எதையும் செய்வதில்லை. இந்த ஒரு புதிய நிலைமைதானு? இன்னும் எத்தனையோ புதிய நிலைமைகளை நாங்கள் சிருஷ்டிக்கப்போகிருேமே!" என்ருர்.

பிரிட்டிஷ் மந்திரிகளின் டில்லிப் பேச்சுவார்த்தைகளின் முடிவுபற்றி லூயி பிஷர் என்ற பிரபல அமெரிக்க எழுத்தாளர் சொல்லிய அபிப்பிராயம் இது: "முஸ்லிம் லீக் டில்லியில் தோற்றுவிட்டது. அதன் தோல்வி, இந்திய சுதந்தரத்தின் வெற்றியாகும். ஏனென்ருல், முஸ்லிம் லீக் இயல்பாகவே பிற்போக்கான ஸ்தாபனம். அது அரசியல் களத்தில் புகுந்த ஒரு மத ரீதியான ஸ்தாபனம். இந்திய சுதந்தரத்தை அது ஒருநாளும் ஆதரிக்கவில்லை; இந்திய சுதந்தரம் கிட்டுவதற்கு அது ஒரு சேவையும் புரியவில்லை. லீக் தோற்றதற்கு நான் சந்தோஷிக்கிறேன்" என்ருர்.

காங்கிரஸ் ஒன்றின் போராட்டத்தால்தான், காங்கிரஸில் சேர்ந்து பணி புரிந்த எண்ணற்ற உத்தமர்களின் வீரத் தியாகத்தால்தான், இன்று இந்திய சுதந்தரம் நிராட்சேபணையாய் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு தத்துவமாயிற்று. ஆயினும், வரப்போகும் அதிகாரத்தைத் தனித்துத் தானே அபகரித்துக்கொள்ள, காங்கிரஸ் என்றும் முயலவில்லை ; இன்றும் முயலவில்லை. அரசியல் நிர்ணய சபைக்கு, தன்னைச் சேராத சில வெளிப் பிரமுகர்களையும் பிரதிநிதிகளாய்க் காங்கிரஸ் பொறுக்கியதே, அதன் நியாய புத்திக்கும் தாராள மனோபாவத்துக்கும் அசைக்கமுடியாத அத்தாட்சியாகும்.

அரசியல் நிர்ணய சபைக்குப் பல மாகாணச் சட்ட சபைகளிலும் தேர்தல்கள் நடந்தன. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு மொத்த ஸ்தானங்கள் 296. இதில் 206 ஸ்தானங்களைக் காங்கிரஸ் கைப்பற்றியது. 74 ஸ்தானங்களை முஸ்லிம் லீக் கைப்பற்றியது. மீதி ஸ்தானங்களைப் பிறர் கைப்பற்றினார்கள். முஸ்லிம் ஸ்தானங்களில் நாலைந்தைத் தவிர மீதியையெல்லாம் லீகர்களே கைப்பற்றியதை இங்கே குறிப்பிடவேண்டும்.

ஸ்தானங்களை இப்படிக் கைப்பற்றிய பின்பு, லீக் ஒரு வேலை செய்தது. ஜூலை 27உ அகில இந்திய லீக் கவுன்ஸில் பம்பாயில் கூடியது. பிரிட்டிஷ் மந்திரிகளின் திட்டத்தை அங்கீகரிப்பதில்லை யென்றும், பாகிஸ்தானை அடைவதற்காக நேரடியான போராட்டத்தில் இறங்குவதென்றும் லீக் தீர்மானம் செய்தது.

ஜின்னாவின் லீக் இப்படித் தீர்மானம் செய்தது பிரிட்டிஷ் சர்க்காரின் வேலையை மிகவும் எளிதாக்கிவிட்டது. பிரிட்டிஷ் மந்திரிகளின் திட்டத்தை ஒப்புக்கொண்ட பெரிய கட்சி, காங்கிரஸ் ஒன்றுதான். ஆகையால், இடைக்கால சர்க்காரை அமைக்கும்படி ராஷ்டிரபதி ஜவாஹரை, ஆகஸ்டுமீ 12-ஆம்உ வைசிராய் வேவல்

அழைத்தார். எவ்வித நிபந்தனையும் இன்றி இந்த அழைப்பு வந்ததால், ஜவாஹர் இதை ஏற்றுக்கொண்டார். என்றாலும், இடைக்கால இந்திய சர்க்காரில், லீகையும் சேர்த்துக்கொண்டு, ஒரு கலப்பு மந்திரிசபையை அமைக்கலாம் என்று அவர் விரும்பினார். ஸ்ரீ ஜின்னாவுக்கு ஒரு கடிதம் எழுதினார்; அவரை நேரிலும் சந்தித்தார். அவரோ ஒரே பிடிவாதமாய், இடைக்கால சர்க்காரில் தமது கட்சி சேர்ந்து ஒத்துழைக்காதென்று சொல்லி மறுத்துவிட்டார்.

ஜவாஹருக்கு வேறு வழியில்லை. லீகர்கள்மட்டிலும் விலக்காக, பிற முக்கிய வகுப்பார்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் பெற்று, இந்தியாவின் முதல்முதலான தேசீய சர்க்காரை ஜவாஹர் அமைத்தார். அதில் அங்கம்பெற்ற மந்திரிகளின் பெயர்கள் வருமாறு: (1) பண்டித ஜவாஹர்லால் நேரு (இடைக்கால தேசீய சர்க்காரின் உப அக்கிராசனர்); (2) ஸர்தார் பலதேவ சிங் (ராணுவ மந்திரி); (3) சர்தார் வல்லபபாய் பட்டேல்; (4) டாக்டர் ஜான் மத்தாய்; (5) ஆஸப் அலி; (6) டாக்டர் ராஜேந்திர பிரசாத்; (7) ஜகஜீவன் ராம்; (8) ஸர் ஷபாயத் அஹமத்கான்; (9) சையத் ஆலி ஜஹீர்; (10) ஸி. ராஜகோபாலாசாரியார்; (11) சரத்சந்திர போஸ்; (12) ஸி. எச். பாபா.

இந்தப் பன்னிரண்டு பேர்களும் அடங்கிய, பண்டித ஜவாஹர்லாலின் தேசீய சர்க்கார், செப்டம்பர்மீ 2உ பதவியேற்றது.

ஜவாஹரின் சர்க்கார், கூட்டுப் பொறுப்புள்ளதும், சட்டசபைக்கே ஜவாப்தாரியுமான சுதந்தர இந்திய தேசீய சர்க்காராக வேலை செய்யத்தொடங்கியது. ராணுவம் உட்படச் சகல இலாக்காக்களும் இந்தியரின் கைக்கு வந்தன. இந்தியாவின் பிரதம சேனாதிபதிக்கு இந்தியத் தேசீய மந்திரி சபையில் ஸ்தானம் இல்லை. "நான் தங்களுக்குக் கீழே சந்தோஷமாக வேலை செய்கிறேன்"

என்று, ராணுவ மந்திரி பலதேவ சிங்குக்கு, பிரதம சேனாதிபதி பீல்டு மார்ஷல் ஆச்சின்லெக் உறுதி கூறுகிறார். வைசிராய்க்குக் காட்டாமல், தம் சகாக்களுக்கு மட்டுமே தம் பிரசங்க வாசகத்தைக் காட்டிவிட்டு, ஜவாஹர் தமது ரேடியோப் பிரசங்கத்தைச் செய்தார். "ரத்தம் சிந்தாத புரட்சி" என்றே, இந்தப் புதிய இந்திய சர்க்காரின் நிர்வாகத்தை, யாவரும் பாராட்டத் தொடங்கினார்கள். இதற்கு முன்னே, சம்பந்தப்பட்ட ஓர் இலாகாவின் தலைவரான நிர்வாக அங்கத்தினரைக் கேட்காமலே, வைசிராய் தம் இச்சையாய்ப் பல காரியங்கள் செய்ததுண்டு. ஜவாஹரின் சர்க்கார் வந்த பின்பு, வைசிராய் தாமாக எதையும் செய்வதில்லை. இந்திய சர்க்காரின் தலைவர் வைசிராய் என்ற எண்ணமே போய்விட்டது. பண்டித ஜவாஹரே இந்திய சர்க்காரின் தலைவர் என்று, உத்தியோகஸ்தர்களுங்கூட உணர்ந்துகொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

இந்தச் சமயத்தில், ஒரு ரஸமான சம்பவத்தைச் சொல்லவேண்டும். வைசிராயைப் பற்றிக் குறிப்பிடும் போது, அதிகாரிகள் 'ஹிஸ் எக்ஸெலன்ஸி' என்று மரியாதையாய்ச் சொல்லுவது வழக்கம்.

ஒரு நாள் ஓர் அமெரிக்க அதிகாரி, ஒரு காங்கிரஸ்காரருடன் பேசத் தொடங்கினார்: "இப்போது, ஜனப் பிரதிநிதிகளின் சர்க்கார் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் ஹிஸ் எக்ஸெலன்ஸி இதைச் செய்வார்; அதைச் செய்வார்" என்று அவர் என்ன என்னவோ அடுக்கினார்.

காங்கிரஸ்காரர் சலிப்படைந்தார். "ஹிஸ் எக்ஸெலன்ஸியைப் பற்றி நாங்கள் இனிமேல் எவ்விதக் கவலையும் கொள்ளப் போவதில்லை" என்றார்.

"என்ன இது! உங்கள் அயல் நாட்டு விவகார மந்திரியைப்பற்றி, நீங்கள் கவலைகொள்ளப் போவதில்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் அமெரிக்கர்.

'ஹிஸ் எக்ஸெலன்ஸி' என்று அமெரிக்கர் குறிப்பிட்டது வைசிராயை அல்ல, ஜவாஹரையே என்று அப்போதுதான் காங்கிரஸ்காரருக்குப் புரிந்தது.

எல்லா அயல்நாடுகளின் சர்க்கார்ப் பிரதிநிதிகளும் நேரே ஜவாஹரையே வந்து கண்டார்கள்.

இடைக்கால சர்க்காரின் தலைமைப் பதவியையும் காங்கிரஸ் தலைமைப் பதவியையும் சேர்ந்தாற்போல் வகிப்பது சாத்தியமல்ல என்று கருதி, ராஷ்டிரபதி பதவியைப் பண்டித நேரு செப்டம்பர் 25உ ராஜிநாமாச் செய்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டி அதை அங்கீகரித்தது. என்றாலும், புதிய ராஷ்டிரபதி தேர்தல் நடந்து முடியும் வரையில், அந்தப் பதவியை வகித்துவர அவர் இசைந்தார். நவம்பர் 23உ நடந்த மீரத் காங்கிரஸில் புதிய ராஷ்டிரபதி ஆசார்ய கிருபளானி பதவி ஏற்கும் வரையில், ஜவாஹர் அவ்விதமே ராஷ்டிரபதி பதவியை வகித்துவந்தார்.

32. லீகர் பிரவேசம்

இதற்கிடையில், முஸ்லிம் லீக் தலைவர்கள் ஆத்திர மூட்டும் பிரசங்கங்களைப் புரியத் தொடங்கினார்கள். ஆகஸ்டு 16-ஆம் தேதியை 'நேரடியான நடவடிக்கை நாள்' என்று அறிக்கை செய்தார்கள். வங்க மாகாணத்தின் லீக் பிரதம மந்திரி சுஹ்ரவர்த்தி, சர்க்காரின் விடுமுறைநாளாக, அந்த ஆகஸ்டுமீ 16உயைப் பிரகடனம் செய்தார். எத்தனையோ பேர் எதிர்த்தும், மீறிப் பிடிவாதமாகச் சுஹ்ரவர்த்தி அப்படி ரஜா விட்டார். முஸ்லிம் லீக்கின் நேரடியான நடவடிக்கை நாளான அந்த ஆகஸ்டுமீ 16உ, கல்கத்தாவில் படுகொலையும் கொள்ளையும் கொள்ளிவைத்தலும் நிகழ்ந்தன. அப்படித் தொடங்கிய கலவரத்தினால், ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு தரப்பாரிலும் ஆயிரக் கணக்கான மக்கள் மாண்டதாகச் செய்திகள் பரவின. இந்தப் பயங்கரக் கலகத்தை அடக்க வங்க லீக் சர்க்கார் அடியோடு தவறிவிட்டது. என்றாலும், லீக் தலைவர் ஜின்னா சாகேப் அந்தக் காலத்தில் இதைப்பற்றி வாய் திறக்கவில்லை; தூளியும் இதற்கு வருந்தவும் இல்லை.

இந்த நிலையில் வைசிராய் வேவல் பல் இழந்த பாம்பு போல் தவித்தார் என்று தோன்றுகிறது. அவரைப் பண்டித நேருவின் ஒற்றுமையான சர்க்கார், இதர பிரிட்டிஷ் டொமினியன்களின் கவர்னர் ஜெனரல்கள் மாதிரி, பொம்மையாக்கிவிட்டார் என்று, பலவிதங்களில் புலனாயிற்று. வேவல் இதை எப்படிச் சகிப்பார்? லீகர்களை எப்படியாவது இந்திய சர்க்காருக்குள்ளே புகுத்திவிட வேண்டுமென்று ஏங்கத் தொடங்கிவிட்டார்போல் இருக்கிறது.

அதற்கு ஏற்றாற்போல், போபால் நவாபு பஞ்சாயத்து செய்ய முன்வந்தார். அக்டோபர் ஆரம்பத்தில் காங்கிரஸ் தலைவர்களுக்கும் லீக் தலைவர்களுக்கும் இடையே தூது போனார். நேரு ஜின்னா சந்திப்பும் போபால் நவாபின் வாசஸ்தலத்திலே நடைபெற்றது. ஒரு கட்டத்திலே சமரசம் ஏற்பட்டுவிட்டது என்றுகூடத் தோன்றியது. காந்திஜியே அப்படி நம்பி, பொதுக்கூட்டத்திலே சமரசம் அநேகமாய் ஏற்பட்டுவிட்டது என்பது போலப் பகிரங்கமாய்க் குறிப்பிட்டார். இல்லை; எல்லாம் வீண் கனவு. போபால் நவாபின் பஞ்சாயத்துப் பலிக்கவில்லை.

என்றாலும், இந்திய இடைக்கால சர்க்காரிலே, லீகரும் புகுந்துவிடத் தீர்மானித்தார்கள். இந்திய சர்க்காரின் உபதலைவர் நேருவுடன் ராஜீ செய்துகொண்டு, அவருடைய சம்மதத்தோடு அல்ல; வைசிராய் வேவல் பிரபுவின் ஆதரவைக் கொண்டு, சுயேச்சையாகவே லீகர்கள் அப்படி இந்திய இடைக்கால சர்க்காரில் புகத் தீர்மானித்தார்கள். இந்தச் சமயத்தில்தான், ஏதோ ஒரு சமாதானம்போல், கல்கத்தாப் படுகொலை சம்பந்தமாக அரைமனத்துடன் வருத்தம் தெரிவித்து ஓர் அறிக்கை விட்டார் ஜின்னா சாகேப்.

இந்திய இடைக்கால சர்க்காரில் நுழைய, அக்டோபர்மீ 13உ லீகர் தீர்மானித்தார்கள். தீர்மானித்துச் சில தினங்களிலே கிழக்கு வங்காளத்திலிருந்து மகா பயங்கரமான செய்திகள் வரத் தொடங்கின. முஸ்லிம் குண்டர்கள் ஒக்குமத்தாக, திக்கற்ற ஹிந்துக்களைப் படுகொலை செய்வதும் அவர்களின் வீடுகளைக் கொளுத்துவதும் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதும் பெண்களை நரசோரம் செய்வதும் பலவந்த மத மாற்றம் செய்வதுமாய் அட்டகாசம் செய்கிறார்கள் என்று கேட்டு, நாடெங்கும் அதிர்ச்சி அடைந்தது. மக்கள் இப்படி வெறி

பிடித்து ஆடும் இடத்துக்குத் தாம் நேரே சென்று, வகுப்பு ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டுமென்று அப்போதே மகாத்மா முடிவு செய்தார். இந்த நோவாகாளி வெறியாட்டம் பற்றியும் ஜின்னு சாகேப் துளியும் வருத்தம் தெரிவிக்கவில்லை. ஆனால், இடைக் கால சர்க்காரில் சேர்ந்த லீக் தலைவர்கள் லியாகத் அலிகானும், அப்துர் ரப் நிஷ்டாரும் காங்கிரஸ் தலைவர்கள் ஜவாஹருடனும் ஸர்தார் படேலுடனும் சேர்ந்து, நோவாகாளிக் கொடுமைகளுக்கு வருந்தி ஒரு வேண்டு கோளில் கையெழுத்திட்டார்கள் என்பதுமட்டில் இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

லீக்கின் சார்பாக இந்திய இடைக்கால சர்க்காரில் அக்டோபர் 26ஃ (1) லியாகத் அலிகான், (2) ஐ. ஐ. சந்திரிகர், (3) அப்துர் ரப் நிஷ்டார், (4) கஸ்னபர் அலி கான், (5) ஜோகேந்திரநாத் மண்டல் (ஹிந்து ஹரிஜன்) ஆகிய ஐந்து பேரும் சேர்ந்து பதவி ஏற்றார்கள். இவர்களுக்கு இடம் கொடுப்பதற்காக, (1) சரத் சந்திரபோஸ், (2) ஸர் ஷபாயத் அஹமது கான், (3) ஸையத் ஆலி ஜஹீர் இந்த மூவரும் விலகிக்கொண்டார்கள்.

முஸ்லிம் லீகர்கள் இடைக்கால சர்க்காரில் சேர்ந்து கொண்டதன் நோக்கம் என்ன ? இதற்கு முன்னே, ஜவாஹரின் மந்திரி சபை 'காபினெட்' முறையில் கூட்டுப் பொறுப்புடன் நடந்துவந்தது. லீகர்கள் அந்த முறைக்குக் கட்டுப்படவில்லை. ஜவாஹர் கூட்டிய மந்திரி சபைக் கூட்டங்களுக்குப் போக அவர்கள் மறுத்துவிட்டார்கள். "முஸ்லிம் நன்மைகளை உள்ளேயிருந்து காத்துவரப் புகுந்திருக்கும் ஐந்து காவலர்கள்" என்று இந்த லீகர்களை ஜின்னு சாகேப் வர்ணித்தார்.

இதே சமயத்தில், மற்றொரு வெறியாட்டம்பற்றிய செய்தி பீஹாரிலிருந்து புறப்பட்டது. கிழக்கு வங்காளத்தின் எதிரொலி பீஹாரில் கிளம்பியது. அங்கே திக்கற்ற

முஸ்லிம் மக்களை ஹிந்துக் குண்டர்கள் படுகொலை புரிந்தார்கள் ; அவர்களின் வீடுகளைக் கொளுத்தினார்கள். இந்தச் சம்பவம் நடக்கு முன்பே, மகாத்மா காந்தி கிழக்கு வங்காளத்துக்குச் சென்று, ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபடத் தொடங்கிவிட்டார். இந்தச் செய்தி கேட்டவுடனே அவர் பரம வேதனை அடைந்தார். "பீஹாரின் கலவரம் உடனே அடங்கா விட்டால், நான் அரை உபவாசம் கிடந்து உயிர் துறப்பேன்" என்று சபதம் செய்தார். உணவையும் குறைத்துக்கொண்டார். கலவரம் அடங்கியது என்ற செய்தி கேட்ட பின்பே, அந்த அரை உபவாசத்தை அவர் நிறுத்தினார்.

ஆனால், ஜின்னா சாகேப் என்ன செய்தார்? கல்கத்தாப் படுகொலைக்குக் காலந்தாழ்த்தி அரை மனது அறிக்கை விட்டதுடன் நோவாகாளிப் படுகொலைபற்றி வாய் மூடி மௌனியா யிருந்த அவர், "பீஹார், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், சென்னை, பம்பாய் ஆகிய மாகாணங்களில் எல்லாம் முஸ்லிம்களின் உயிரும் பொருளும் நாசம் செய்யப்படுவதாக எனக்குத் தகவல்கள் எட்டுகின்றன. இதுபற்றி நான் சும்மா இருக்கவில்லை ; கவலையாய்த்தான் இருக்கிறேன்" என்று கர்ஜித்தார். நோவாகாளியில் ஆரம்பித்த படுகொலை பீஹாரில் கோர எதிரொலி எழுப்பியது. அந்த இரண்டு கொடுமைகளையும் பற்றி வருந்தாதவர் இல்லை. அவைகளுடன் ஒப்பிடுகை யில் மற்ற இடங்களில் ஏதோ சிறு சிறு சம்பவங்களாகச் சில விபரீதங்கள் நடந்திருக்கலாம். பெரிய அக்கிரமம் நடந்த முதல் இடமான நோவாகாளியைப் பற்றிய ஞாபகமே இல்லை ஜின்னா சாகேப்புக்கு. அதன் எதி ரொலியான பீஹார் சம்பவத்தின் கொடுமையையும் பிற சிறு சம்பவங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து முடிச்சுப் போட்டு எல்லாவற்றையும் சமமாக்கி, அறிக்கை விட்டார் அவர். என்ன பாரபட்சமற்ற உள்ளம்! காங்கிரஸூம்

காந்திஜியுமே, பீஹார், நோவாகாளி இரண்டு இடங்களின் அக்கிரமங்களையும் உடனுக்குடனே கண்டித்தார்கள். இரண்டு இடங்களிலுமே மக்களின் வெறியைத் தணித்து அமைதியுண்டாக்கத் தங்களால் இயன்ற சகல முயற்சியும் செய்தார்கள்.

இதற்கு நடுவிலே இன்னொரு விநோதமும் நடந்தது. ஜவாஹரின் சர்க்கார் அமையச் சுமார் ஒரு மாதத்துக்கு முன்பு எல்லைப்புற மலைஜாதியார்மீது இந்திய சர்க்கார் குண்டு போட்டிருக்கிறார்கள். அந்தத் தகவல், ஜவாஹரின் சர்க்கார் அமைந்த பின்புதான் வெளிவந்தது. ஜவாஹரின் சர்க்கார் அநியாயமாய் எல்லைப்புற மக்களின்மீது குண்டுபோடுவதாகவும் லீகர்கள் ஒரு கூச்சலைக் கிளப்பினார்கள். உண்மையைத் தீர விசாரித்தறியாமலே, ஜவாஹரின் சர்க்கார்மீது இதற்குப் பழி சுமத்தி ஒரு லீக் கமிட்டியின் கூட்டத்திலே ஒரு தீர்மானமுங்கூட நிறைவேற்றிவிட்டார்கள்.

உண்மை என்ன என்றால், எல்லைப்புற மலை ஜாதியாரின் விஷயத்தில் பழைய சர்க்கார் கைக்கொண்டிருந்த கொள்கையை மாற்றி, தாராள மனோபாவம் வாய்ந்த புதிய கொள்கை ஒன்றைக் கைக்கொள்ள வேண்டும் என்பதே ஜவாஹரின் நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி எடுப்பதற்காக, எல்லைப் புறத்தில் அக்டோபர் மத்தியில் ஜவாஹர் ஒரு சுற்றுப் பிரயாணமும் செய்தார்.

ஜவாஹரின் இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் வைசிராயின் அரசியல் இலாகா ஏஜெண்டுகளுக்கு இஷ்டமில்லை. எல்லைப்புறக் கவர்னர் டில்லிக்கு ஓடிவந்து, "இந்தப் பிரயாணம் வேண்டாம்" என்று ஜவாஹருக்கு யோசனை கூறிப் பார்த்தார். ஜவாஹர் எதற்கும் மசியவில்லை. தம் இஷ்டப்படி பிரயாணம் செய்தே முடித்தார்.

இந்த எல்லைப்புற மலை ஜாதியார்களை முன்னேற விடாமல் தடுப்பதில் அரசியல் இலாகாவின் ஏஜெண்டு களுக்கு வெகு சிரத்தை. அது ஒரு தனிக்கதை. இந்த மலை ஜாதியாரிடம் காங்கிரஸ்காரர் பொய்ப் பிரசாரம் செய்ய, இந்திய சர்க்கார் என்றுமே இடம் கொடுப்ப தில்லை. லீகர்கள் பொய்ப் பிரசாரம் செய்ய மாத்திரம் தாராளமாய் இடம் கொடுத்து வந்தார்கள். இதை உடைக்கவும், இந்த எல்லைப்புற மக்களின் நிலைமையை நேரே அறியவும் ஜவாஹர் விரும்பினால், வைசிராயின் அரசியல் இலாகா ஏஜெண்டுகளுக்கு இனிப்பாய் இருக் குமா? எல்லைப்புறக் கவர்னருக்குத்தான் ரசிக்குமா?

இந்த எதிர்ப்பையெல்லாம் உதறியெறிந்துவிட்டு, ஜவாஹர் பிரயாணம் செய்தார். ஐந்தே நாள் தான் பிரயாணம் நடந்தது. அந்த ஐந்து நாளிலும் மொத்தம் எட்டு மணி நேரந்தான் எல்லைப்புற மக்களின் பூமியில் ஜவாஹர் விஜயம் செய்தார். இந்தச் சொற்ப நேரத்துக் குள்ளேயே சில விசித்திரங்களும் விபரீதங்களும் நிகழ்ந் தன. அரசியல் இலாகாவின் ஏஜெண்டுகளிடம் பென் ஷன் வாங்கும் மல்லிக்குகள் அடங்கிய ஜிர்காக்களை (கூட்டங்களை) ஜவாஹரை வரவேற்க எங்கும் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தன. அவர்கள் எப்படி நடந்துகொள் வார்கள்? "கல்கத்தாவில கலகமாமே; பம்பாயில் கலக மாமே!" என்றெல்லாம் அவர்கள் கேட்டார்களாம். ஆனால், தங்கள் தலைமேலே விழுந்த விமானக் குண்டு களைப் பற்றி, அந்த மல்லிக்குகளில் ஒருவர்கூடக் கேட்க வில்லையாம்! அரசியல் ஏஜெண்டுகள் முன்கூட்டி ஏற் பாடு செய்ய அவகாசம் கொடுக்காமல், தெற்கு வாஸிரிஸ் தானில் ஜண்டோலா என்னும் இடத்துக்கு ஜவாஹர் திடீரென்று விஜயம் செய்தார். அங்கே மட் டில் மலைஜாதி மக்கள் வெகு அன்புடன் ஜவாஹரை வரவேற்றார்கள்.

கைபர் கணவாய்க்குப் போய் வருகையில்தான் மிகவும் விபரீதமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ராய்ட்டரின் நிருபரான டங்கன் கூப்பர் இதைப்பற்றிப் பின்வருமாறு வர்ணித்திருக்கிறார்:

"மலைகளுக்கு நடுவிலே செல்லும் நிர்மானுஷ்யமான ஒரு ரஸ்தாவில், முதலிலே என் கார் வந்துகொண்டிருந்தது. சுமார் 300 முதல் 600 பேர் வரையில் மதிக்கக்கூடிய மலைஜாதி மக்கள் வந்து என் காரை மறித்துக் கொண்டார்கள். அவர்களில் சிலர் கறுப்புக் கொடி பிடித்துக்கொண்டிருந்தார்கள். வேறு சிலர் ஆயுதம் தாங்கியிருந்தார்கள். எல்லோருமே 'நேருவே, திரும்பிப் போ!' என்று ஆத்திரமாய்க் கூச்சலிட்டார்கள். மலைஜாதியாரில் ஒருவன் உக்கிரமாய் விழித்துக் கொண்டு, என் காருக்குள்ளே தலையை நுழைத்தான். 'எங்கே நேரு?' என்று கேட்டான். நானும் இன்னொரு நிருபரும் கீழே இறங்கி, அந்த ஜனங்களைச் சமாதானம் செய்ய எண்ணினோம். நாங்கள் இறங்கினோமோ இல்லையோ, அந்த நேரத்தில் மடமட என்று கல்மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. இந்தக் கல்மாரிக்குத் தப்புவதற்காக, உடனே எனக்குச் சமீபத்திலே எதிர்ப்பட்ட காரில் நான் தொற்றி ஏறினேன். அது பண்டித ஜவாஹரின் கார். உள்ளே நான் நுழைந்ததும், ஒரு பெரிய கல் என் மண்டையிலே மோதியது. கண்ணாடி சிதறி என் மணிக்கட்டைக் காயப்படுத்தியது. இந்தச் சமயத்தில், துருப்புகளுக்கும் மலைஜாதியார்களுக்கும் துப்பாக்கிச் சண்டை தொடங்கியது.

"இத்தனைக்கும் நடுவிலே பண்டித நேரு அமைதியாய் நிமிர்ந்து உட்கார்ந்து, எதைப் பற்றியோ ஆழ்ந்து சிந்திப்பவர்போல் காணப்பட்டார். நான் அவருடைய காருக்குள்ளே அடைக்கலம் அல்லவா புகுந்தேன்? ஆனால், அவரோ ஏதோ உபசாரமாய்ப் பார்க்கவந்த ஒருவனை

வரவேற்பது போல, என்னை மரியாதையாய் வரவேற்றார். 'உள்ளே வாருங்கள். கவலைப்படாதீர்கள். இதெல்லாம் ஒன்றுமில்லை' என்று அவர் சொன்னார். கான் அப்துல் கபார்கானின் கண்கள், எத்தனையோ சண்டைகளைப் பார்த்தவைபோல் ஒளி செய்தன. சுற்றிலும் துப்பாக்கி வேட்டுகள் சத்தமிடுகையிலும் அவர் புன்சிரிப்புப் பூத்தவராய், 'இது வெறும் தமாஷா' என்றார். சட்டென்று எங்கள் கார் முன்னேக்கிப் பாய்ந்தது. நாங்கள் லண்டிகோட்டால் கண்டோன்மெண்டை அடைந்தோம். ஜவாஹர் முன்னே யிருந்தபடியே இன்னமும் அமைதியாகவே இருக்கிறார்.

"போராட்டம் நடந்த அந்தச் சில நிமிஷ நேரத்தில் நான் கண்ட காட்சிகள் போட்டோப் படங்கள் மாதிரி என் மனத்திலே ஆழமாய்ப் பதிந்து விட்டன. மலைஜாதியான் ஒருவன் ஒரு பெரிய பாருங்கல்லை ஜவாஹரின் காரிலே போட முயலுகிறான். அவனுடன் எங்கள் துருப்புகளில் ஒருவன் மல்லுக்கட்டுகிறான். சாலையின் ஓரம்வரையில் இருவரும் போய்விட்டார்கள். அதற்கப்பால் ஐம்பது அடி பெரும்பள்ளம். கல்லெறிய முயன்ற மலைஜாதியான் கால்களைப் பரப்பிக்கொண்டு தலை குப்புற அந்தப் பள்ளத்திலே விழுந்து மறைகிறான்..."

பின்னுல், ஜவாஹர் லண்டன் சென்ற காலத்தில் அவரைப்பற்றி, 'நியூஸ் கிரானிகள்' பத்திரிகையில் எழுதிய நார்மன் கிளிப் என்பவரும் ஜவாஹரின் இந்தப் பிரயாணத்திலே கூட இருந்தவர். அவர் சொல்லுகிறார்:

"நேரு அச்சமற்ற தீரர். எல்லைப்புறத்திலே ஆத்திரம் கொண்ட மலைஜாதி மக்களைச் சமாளிக்க நேர்ந்த போது அவர் நடந்துகொண்ட மாதிரியையும், வெறி கொண்ட பீஹார் ஹிந்துக்களை, 'உங்களுடைய அண்டை அயல் முஸ்லிம்களைப் பழி வாங்காதீர்கள்' என்று அவர்

கட்டளையிட்ட மாதிரியையும் கூட இருந்துபார்த்தவன் நான். இதிலிருந்து அவரது தீரத்துக்கு நான் சாட்சி கூறமுடியும்.''

ஜவாஹரின் இந்தச் சுற்றுப் பிரயாணம் முடிந்து அவர் திரும்பிய பிறகுதான், லீகர்கள் மேலே கூறியவாறு இடைக்கால சர்க்காரில் புகுந்தார்கள்.

33. அரசியல் நிர்ணய சபை

இடைக்கால சர்க்காருக்குள்ளே புகுந்த லீகர்கள், இந்திய அரசியல் நிர்ணய சபைக்குள் மட்டிலும் கலந்து கொள்ள முடியாதென்று சொல்லி வந்தார்கள். ஆனால், பண்டித ஜவாஹரின் விருப்பப்படி அரசியல் நிர்ணயசபையின் கூட்டம் டிசம்பர் 9௳ கூடவேண்டுமென்று இந்திய சர்க்காரால் தேதி குறிப்பிடப்பட்டு, அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்களுக்கு அழைப்புக்களும் அனுப்பப் பட்டுவிட்டன.

அ. நி. சபையில் லீகர்கள் ஏன் கலந்துகொள்ள மறுத்தார்கள்? பிரிட்டிஷ் மந்திரிகளின் தூதுக் கோஷ்டித் திட்டத்தைக் காங்கிரஸ்தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று லீகர்கள் கட்சி பிடித்தார்கள். ஏனென்றால், தூதுக் கோஷ்டியின் திட்டத்தில் தொகுதி வட்டங்களைப் பற்றிய 19-ஆவது பாரா ஷரத்துக்களைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளவில்லை என்பது லீகர்களின் வாதம்.

இதன்மேல் பிரிட்டிஷ் சர்க்கார் மத்தியஸ்தம் செய்துவைக்க மீண்டும் விரும்பினார்கள். (1) வைஸிராய் வேவல், (2) பண்டித ஜவாஹர், (3) பலதேவ் சிங், (4) ஜின்னா சாகேப், (5) லியாகத் அலிகான் ஆகிய இந்த ஐந்து பேரையும் லண்டனுக்கு வந்து பேச்சு வார்த்தைகள் நடத்தும்படி, பிரிட்டிஷ் சர்க்கார் அழைத்தார்கள். வைஸிராய் வேவலும் இந்த நான்கு இந்தியத் தலைவர்களும் டிசம்பர்மீ 1-ஆம்௳ கராச்சியை விட்டு லண்டனுக்குப் புறப்பட்டார்கள்.

லண்டனிலே இவர்களுக்கும் பிரிட்டிஷ் மந்திரிகளுக்கும் பேச்சு வார்த்தைகள் நடந்தன. சமரசம் எதுவும்

ஏற்படவில்லை. மீண்டும் பிரிட்டிஷ் சர்க்காரே பஞ்சாயத்தும் கூறினார்கள். தங்கள் திட்டத்தின் 19-ஆவது பாராவின் ஷரத்துக்களுக்குத் தாங்களே புதிய வியாக்கியானமும் கூறினார்கள்.

பிரஸ்தாப 19-ஆவது பாராவின் 5-ஆவது உட்பிரிவு கூறுவதாவது : "ஒவ்வொரு பிரிவிலும் சேர்க்கப்பட்டுள்ள மகாணங்களுக்கான மாகாண அரசியல் அமைப்புகளை வகுக்கும் வேலையை இந்தப் பிரிவுகள் மேற்கொள்ளும். அந்த மாகாணங்களுக்குத் தொகுதி அரசியல் அமைப்பு எதையேனும் ஏற்படுத்த வேண்டுமா என்பது பற்றியும், அவ்விதமானால் மாகாண விஷயங்களில் எந்த எந்த விஷயங்களை அந்தத் தொகுதி கவனிக்கவேண்டும் என்பது பற்றியும் தீர்மானிக்கும். கீழ்க்காணும் 8-ஆவது உட்பிரிவில் கண்டுள்ள ஷரத்துக்களையொட்டித் தொகுதிகளிலிருந்து பிரிந்துபோகும் உரிமையும் மாகாணங்களுக்கு இருக்கும்."

இதே 19-ஆவது பாராவின் 8-ஆவது உட்பிரிவு கூறுவதாவது : "புதிய அரசியல் ஏற்பாடுகள் அமலுக்கு வந்தவுடன், எந்த ஒரு மாகாணமும் தான் சேர்க்கப்பட்டிருக்கும் எந்தத் தொகுதியிலிருந்தும் வெளியேற அதற்கு உரிமை உண்டு. அவ்வித முடிவு புதிய அரசியல் அமைப்பின்கீழ் முதல் பொதுத்தேர்தல் நடைபெற்ற பிறகு அந்த மாகாணத்தின் புதிய சட்டசபையால் தீர்மானிக்கப்படும்."

இந்த இரண்டு ஷரத்துக்களுக்கும் என்ன அர்த்தம் என்பதில்தான் விவகாரம். ஒரு தொகுதியிலே சேர்வதா இல்லையா என்று தீர்மானிக்க, எந்த மாகாணத்துக்கும் முதலிலே உரிமை கிடையாது என்றும், புதிய அரசியல் அமைப்பு ஏற்பாடுகள் அமுலுக்கு வந்தபின்பு வேண்டுமானால் எந்த மகாணமும் தன்னைப் பிணைத்திருக்கும் பிரிவிலிருந்து வெளியேற உரிமை உண்டு என்றுமே இந்த

ஷரத்துக்களுக்கு அர்த்தம் என்று லீகர்கள் சொன்னார்கள். ஆகவே, பிரிவுகளின் கூட்டங்கள் முதலில் நடக்கும்போது, ஒரு பிரிவின் மொத்த அங்கத்தினர்களுக்குள், மெஜாரிட்டி ஓட்டுப்படியே எந்த விஷயமும் முடிவு செய்யப்படவேண்டுமே யல்லாமல், எந்த ஒரு மாகாணமும் தனியே தனக்குரிய அரசியல் அமைப்பையோ வேறு எந்த விஷயத்தையோ தனக்குத் தானே தீர்மானித்துக்கொள்ளச் சுதந்தரம் கிடையாது என்றும் லீகர்கள் பிடிவாதம் பிடித்தார்கள். இந்த ஏற்பாட்டினால், வடமேற்கு எல்லைப்புறத்தையும் பிரிட்டிஷ் பலுசிஸ்தானத்தையும் பஞ்சாப் மாகாணத்துடனும், அஸ்ஸாமை வங்காளத்துடனும் நிர்ப்பந்தமாகப் பிணைத்து ஆட்டிவைக்கலாம் என்பதுதான் லீகர்களின் ஆசை.

ஆனால், அதே பிரிட்டிஷ் திட்டத்தின் 15-ஆவது பிரிவு சொல்வதென்ன? புதிய அரசியல் அமைப்பின் "அடிப்படையான அம்சங்கள்" இன்னவை என்று அந்தப் பிரிவு சொல்கிறது: (1) "பிரிட்டிஷ் இந்தியாவையும் சமஸ்தானங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்ட ஓர் இந்திய யூனியன் இருக்கவேண்டும்" என்றும், (2) "யூனியன் விஷயங்கள் தவிர இதர சகல விஷயங்களும் எஞ்சியுள்ள சகல அதிகாரங்களும் மாகாணங்களிடமே இருக்க வேண்டும்" என்றும், (3) "தொகுதிகளாகச் சேர்ந்துகொள்ள மாகாணங்களுக்குச் சுதந்தரம் இருக்க வேண்டும்" என்றும் அது சொல்கிறது. இவை பிரிட்டிஷ் திட்டத்தின் 'அடிப்படை அம்சங்கள்.' லீகர்களின் வியாக்கியானப்படி மாகாணங்களை நிர்ப்பந்திப்பதானால், இந்த அடிப்படை அம்சங்களுக்கு ஊறு ஏற்படாதா? அது நியாயந்தான் ஆகுமா? லீகர்கள் பிடிவாதம் செய்யவே, காங்கிரஸ் தலைவர்கள், நியாயமான ஒரு முறையில் இந்த விவகாரத்தைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று யோசனை சொன்னார்கள். அதுவும் பிரிட்டிஷ் திட்டத்தில் கண்ட

ஒரு வழியே யாகும். சந்தேகப்பட்ட வகுப்புப் பிரச்னைகளைப்பற்றிச் சமஷ்டிக் கோர்ட்டின் அபிப்பிராயத்தைக் கேட்டுக்கொள்ள, பிரிட்டிஷ் திட்டத்திலேயே ஒரு ஷரத்து இருக்கிறது. ஆகவே, இந்த விவகாரத்தையும் அதன் வியாக்கியானத்துக்கு விட்டு அதன் முடிவுப்படி நடக்கலாம் என்று காங்கிரஸ் தலைவர்கள் சொன்னார்கள். இது கூடாதென்று லீகர்கள் மறுத்துவிட்டார்கள்.

இதன்மேல்தான் பிரிட்டிஷ் சர்க்கார் புதிய மத்தியஸ்தம் செய்யக் கிளம்பி, தங்கள் புதிய வியாக்கியானத்தையும் கூறினார்கள். தங்கள் திட்டத்தின் 19-ஆவது பாராவுக்கு லீக் சொல்லும் அர்த்தமே சரி என்று அவர்கள் சொன்னார்கள். சட்ட கர்த்தா வியாக்கியான கர்த்தாவாக மாறுவது பொதுவாகவே நியாயமல்ல. அதுவும் இந்த இந்திய அரசியல் விவகாரத்தில், பிரிட்டிஷ் சர்க்காரும் ஒரு கட்சிக்காரர்களே ஆவார்கள். அவர்களின் திட்டம் ஓர் ஒப்பந்தத்தின் தன்மை வாய்ந்தது. ஆகையால், கட்சிக்காரர்களே புதிய வியாக்கியானம் கூறியது எந்தவிதத்திலும் நியாயம் அல்ல. ஆகவே, காங்கிரஸ் தலைவர்கள் இதுபற்றி வருத்தம் அடைந்தார்கள். என்றாலும், பிரிட்டிஷ் சர்க்காரின் வியாக்கியானப்படி நிகழ்ச்சிமுறைகளை அனுஷ்டித்து நடக்கும்படி மாகாணங்களுக்கு ஆலோசனை சொல்லத் தாங்கள் தயார் என்றும், ஆனால் இதற்காக எந்த மாகாணத்தையும் நிர்ப்பந்தம் செய்யக் கூடாதென்றும், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியார் 1947 ஜனவரி முதல் வாரம் டில்லியில் நடந்த கூட்டத்தில் தீர்மானித்தார்கள்.

இதற்கிடையில், குறித்த வாய்தாப்படி 1946-ஆம் ௵ டிசம்பர்௴ 9௨ இந்திய அரசியல் நிர்ணய சபை மிக்க வைபவமாகப் புது டில்லியில் கூடியது. சபை அங்கத்தினர்

களுக்குள்ளே வயதில் முதிர்ந்தவரான டாக்டர் சச்சிதானந்த சின்ஹா, தாற்காலிகமாகத் தலைமை வகித்தார். முஸ்லீம் லீகர்களைத் தவிரப் பிற கட்சியார் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அமெரிக்கா, சீனா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் சர்க்கார்கள் தங்கள் வாழ்த்துச் செய்திகளைச் சபைக்கு அனுப்பின. 11-ஆந் தேதிக் கூட்டத்தில் டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் சபையின் நிரந்தரத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சபையின் லட்சியத்தை வகுக்கும் தீர்மானத்தை, 13-ஆந் தேதிக் கூட்டத்தில் பண்டித ஜவாஹர் பிரேரணை செய்தார். (1) “ சுயேச்சையும் ஆதிபத்திய அதிகாரமும் உள்ள ஒரு குடியரசு இந்தியா என்று சபை பிரகடனம் செய்கிறது ” என்றும், (2) பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் சுதேச சமஸ்தானங்களும் மற்றும் சேர விரும்பும் இதர பிரதேசங்களும் சேர்ந்த ஒரு யூனியனாக அந்தக் குடியரசுக்கு ஓர் அரசியல் அமைக்கவேண்டும் என்றும், (3) அந்தச் சுயேச்சை இந்தியாவுக்கும் அதன் பகுதிகளுக்கும் சர்க்கார் அங்கங்களுக்கும் சகல அதிகாரங்களும் மக்களிடமிருந்தே கிடைப்பவையாகும் என்றும், (4) சகல மக்களுக்கும் பொருளாதாரம், அரசியல், சமயம் முதலிய ஜீவாதார உரிமைகள் உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் என்றும், (5) சகல சிறுபான்மை வகுப்புகளுக்கும் பிற்போக்கு மலைஜாதியார்களுக்கும் பாதுகாப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்றும் அந்தத் தீர்மானம் கூறியது.

இந்த முக்கியமான தீர்மானத்தை உடனே நிறைவேற்றாமல், முஸ்லீம் லீகரும் சமஸ்தானப் பிரதிநிதிகளும் சபைக்குள் வரும் வரையில் ஒத்திப் போட வேண்டுமென்று டாக்டர் ஜயகர் ஒரு திருத்தம் கொண்டுவந்தார்.

சபையும் ஜனவரி மாதத்துக்கு ஒத்திப் போடப்பட்டது. ஜனவரி 21-ஆந் தேதிக் கூட்டத்தில் ஜயகர் தமது திருத்தத்தை வாபஸ் வாங்கிக்கொண்டார். விவாதத்துக்கு ஜவாஹர் பதில் அளிக்கையில் செய்த அற்புதமான பிரசங்கம் நாம் ஒரு நாளும் மறக்க முடியாத ஒன்ருகும். இறுதியில் ஜவாஹரின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

34. பிரிட்டிஷ் வாபஸ் கெடு

இப்படி அரசியல் நிர்ணய சபையின் காரியங்கள் நிற்காமலே நடைபெற்று வருவது கண்டு லீகர்கள் ஆத்திரம் கொண்டார்கள். கராச்சியில் கூடிய லீக் காரியக்கமிட்டி ஜனவரி 31-ஆந் தேதி மூவாயிரம் வார்த்தை கொண்ட ('ஹிந்து'ப் பத்திரிகையில் மிகச் சிறு எழுத்துக்களில் இரண்டு காலம் நீளம் உள்ள) ஒரு தீர்மானம் செய்தது. வார்த்தைகளைக் கொண்டு காங்கிரஸ் செப்படுவித்தை செய்கிறதென்றும், அது நாணயமாய் நடக்கவில்லையென்றும், 'அரசியல் நிர்ணய சபை சட்டப்படி செல்லாது, சட்ட விரோதமானது, ஆகையால் அதை உடனே கலைத்து விடவேண்டும்' என்றும், தங்கள் திட்டம் தோற்றதாக, பிரிட்டிஷ் சர்க்கார் அறிக்கை செய்யவேண்டும் என்றும் அந்தத் தீர்மானம் சொல்லியது.

இதற்கிடையில் இந்திய இடைக்கால சர்க்காரில் ஒரு மந்திரியாய்ப் பதவி வகித்த காங்கிரஸ் கட்சி ஆஸப் அலி, நேரு சர்க்காரால் அமெரிக்காவில் முதல் இந்திய ஸ்தானிகராக ஜனவரி மாதத்தில் நியமிக்கப்பட்டார். அவரது ஸ்தானத்தில் ஒரு மந்திரி பதவியை மாஜி ராஷ்டிரபதி மௌலானு ஆஜாது ஏற்றுக்கொண்டு, கல்வி இலாகாவை நிர்வகிக்கத் தொடங்கினுர். பண்டித நேருவின் சர்க்கார், சகல விதத்திலும் ஒற்றுமையாயும் விக்கினமின்றியும் வெளிநாடுகளில் எங்கும் சிறப்பும் செல்வாக்கும் உடையதாகவும் நடைபெற்று வருவது ஏகாதிபத்திய வாதிகளுக்கும் பிற்போக்காளர்களுக்கும் கண்ணைக் கரிக்காமல் இருக்குமா? இடைக்கால சர்க்காரில் லீகர்களின் போக்குப் பற்றிப் பல வதந்திகள் வெளிக் கிளம்பின.

லீக் மந்திரிகள், காங்கிரஸ் மந்திரிகளுடன் ஒத்துழை யாமை செய்வதாகவும், இலாகாவுக்கு இலாகா விரோதி கள் மாதிரி நடந்துகொள்வதாகவும், டில்லி சர்க்காரின் காரியாலயத்துக் குள்ளேயே வகுப்பு வாதம் தலை விரித் தாடுவதாகவும், ஒரு மந்திரிக்குக் கீழுள்ள உத்தியோகஸ் தர்கள் மற்ற மந்திரிகளுக்கு ரகசிய உளவுகள் சொல்லுவ தாகவுமெல்லாம் அமெரிக்க 'டைம்ஸ்' போன்ற பிரபல பத்திரிகைகளின் நிருபர்களே பழி சொல்லும் நிலைமை ஏற் பட்டது. இந்திய சர்க்கார் ஒரே சர்க்காரா யில்லாமல் இரு பிளவாய்ப் பிளந்த சர்க்காராகவும் வேலவ்பெருமான் 'எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற' பிராணுகவும் நடந்துகொள்வதாக, எங்கும் பேச்சுக் கிளம்பியது.

நிலைமை மோசமாகிக்கொண்டு போகவே, பண்டித ஜவாஹர் ஒரு விஷயத்தைப் பிரிட்டிஷ் சர்க்காரிடம் வற் புறுத்தலானுர். ஒன்று முஸ்லிம் லீகர் இந்திய அரசியல் நிர்ணய சபையில் கலந்து உழைக்கவேண்டும்; அல்லது இடைக்கால சர்க்காரிலிருந்து வெளியேறிவிட வேண் டும்.—இது பண்டித ஜவாஹரின் கண்டிப்பான கோரிக்கை. "நாங்கள் அ. நி. சபையிலும் கலக்கமாட்டோம்; இடைக்கால சர்க்காரிலிருந்தும் வெளியேற மாட்டோம்" என்று வீண் வம்பு செய்தார்களாம் லீகர்கள்.

பிரிட்டிஷ் சர்க்காரின் நிலைமை மிகவும் தர்ம சங்கட மாகப் போயிற்று. பிப்ரவரிமீ 20-ஆந் தேதி பிரிட்டிஷ் தொழிற்கட்சி அட்லி சர்க்கார், மிகவும் புரட்சிகரமான மற்றும் ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். **1948-ஆம் ௵ ஜூன் மாதத்துக்குள்ளாக, பிரிட்டிஷ் சர்க்கார் சகல அதிகாரங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக ஒரே மத்திய இந்திய சர்க்காரிடமோ, மத்திய சர்க்காரிடமும் சில மாகாண சர்க்காரிடமுமோ மாற்றிக் கொடுத்துவிட்டு வெளி யேறிவிடப்போவதாக, அந்த அறிக்கையில் திட்ட மாகச் சொல்லிவிட்டார்கள். இந்த** அதிகார மாற்ற

விஷயத்தில் பொறுப்பு வகிப்பதற்காக, லார்டு மவுண்ட் பேட்டனைப் புதிய வைசிராயாகவும் நியமித்தார்கள். வேவல் பிரபுவுக்கு ஓர் 'ஏர்ல்' பட்டத்தைக் கொடுத்து, வீட்டுக்கு அழைத்துவிட்டார்கள். இந்த வைஸிராய் பதவி மாற்றத்தின் காரணம், லார்டு வேவலுக்கும் பிரதம மந்திரி அட்லிக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதமேயாம். அதைப் பற்றிப் பற்பல வதந்திகள் உலவுகின்றன. அவை எவ்வாறாயினும், ஒரு விஷயம் மட்டிலும் நமக்கு நிச்சயமாய்ப் புலனாகிறது. பண்டித ஜவாஹர், இந்திய சர்க்காரை ஏற்ற காலம் தொடங்கி, பற்பல அபூர்வமான சம்பவங்கள் ஒன்றுக்குப் பின் ஒன்றாய் நிகழ்ந்துவருகின்றன. அத்தனையும் தேசீய இந்தியாவுக்குப் பெருமையும் புகழும் தருபவையா யிருப்பதோடு, நாட்டின் பூரண சுதந்தர வேளையையும் மிகமிக நிச்சயமாகச் சமீபத்தில் கொண்டுவந்து விட்டன. எவர் ஆட்சேபித்தும் எவர் மிரட்டியும் துளியும் விட்டுக்கொடுக்காமல், தீரமாக, பூரண சுயேச்சைக் குடியரசு என்று இந்தியாவை அரசியல் நிர்ணயசபை மூலம் பிரகடனம் செய்தார் நேரு. இதனால் சுதேச மன்னர்கள் மிரண்டு போவார்கள் என்று யாரோ சொன்னார்கள். ஆனால், சுதேச மன்னர்களின் பேச்சு வார்த்தைக் கமிட்டியும் அரசியல் நிர்ணய சபை நேருவின் தலைமையில் நியமித்த பிரிட்டிஷ் இந்தியப் பேச்சு வார்த்தைக் கமிட்டியும் வெகு சௌஜன்யமாகப் பேச்சு வார்த்தை நடத்தின. சுதேச மன்னர்களின் கமிட்டி, நேருவைப் பாராட்டவும் செய்தது. இப்போது இரண்டு கமிட்டிகளும் ஒற்றுமையாக, பற்பல சமஸ்தானங்களுக்கும் எவ்வளவு பிரதிநிதிகள் என்பதை நிர்ணயித்ததோடு, அந்தப் பிரதிநிதிகளில் பாதிப் பேர் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரா யிருக்கவேண்டும் என்றும் முடிவு செய்துவிட்டனவாம். பிரிட்டிஷ் சர்க்காரோ திட்டமாக வெளியேறத் தேதி குறிப்பிட்டு விட்டார்கள்.

புதிய வைசிராய் மவுண்ட் பேட்டன் இந்தியாவுக்கு வந்தவுடனேயே இந்திய இடைக்கால சர்க்கார் கூட்டுப் பொறுப்புள்ள ஒரே சர்க்காராக மாறிப் பூர்ண சுயேச்சையுள்ளதாக நடந்துகொள்ளும் என்று நாம் நம்பலாம். லீகர்களும் மனம் மாறி, தேசத்துக்கும் முஸ்லிம்களுக்குமே நன்மையான முறையில் நடந்துகொள்ளத்தக்க சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்றே நம்புவோம்.

பிரிட்டிஷ் சர்க்காரின் அறிக்கையை வரவேற்று, மார்ச்சுமீ 8-ஆந் தேதி அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி புது டில்லிக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இந்தத் தீர்மானத்தில் இரண்டு அம்சங்கள் முக்கியமாகும்: (1) அதிகார மாற்றம் சரளமாக நடந்து முடியவேண்டுமானால், இந்திய இடைக்கால சர்க்கார், குடியேற்ற நாட்டுச் சர்க்கார்களைப்போல் பூரணப் பொறுப்பும் அதிகாரமும் உள்ளதா யிருக்க வேண்டும் என்றும், வைசிராய் அந்தச் சர்க்காரின் தீர்மானப்படி நடக்கும் சட்ட வரம்புக்குட்பட்ட தலைவரா யிருக்கவேண்டும் என்றும் அதில் காரியக் கமிட்டி வற்புறுத்தியிருக்கிறது. இந்த அம்சத்தை நிறைவேற்றுவது பிரிட்டிஷ் சர்க்காரின் கடமையாகும். பழைய வைசிராய் போய், புதிய வைசிராய் மவுண்ட் பேட்டன் வந்ததும், இது பூர்த்தியாகும் என்று நாம் நம்புவோம். (2) இந்த அதிகார மாறுதலை அமைதியாகவும் எல்லோருக்கும் நன்மையான முறையிலும் அடைவதற்காக இந்திய மக்கள் ஐக்கியமாகவும் ஒத்துழைப்புடனும் தங்களைத் தயார் செய்துகொள்ளவேண்டும். ஆகையால், காங்கிரஸ் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிப் புதிய நிலைமையைச் சமாளிக்கும் வழியைக் கோலுவதற்காக முஸ்லிம் லீக் தன் பிரதிநிதிகள் சிலரை நியமிக்கும்படி அந்த லீகையும் காங்கிரஸ் மேற்கண்ட தீர்மானத்தில் அழைத்திருக்கிறது. இந்த அழைப்பின் பெருந்தன்மையை எவரும் பாராட்டியே

ஆகவேண்டும். பிரிட்டனிலும் இதுபற்றி நல்லபிப்பிராயம் விழுந்திருக்கிறது. இந்தக் கடைசி நேரத்திலும், லீக் வீணா பிடிவாதம் காட்டியது என்று பேரெடுக்காமல் மனம் திரும்பி வழிக்கு வரவேண்டும் என்பதே நமது விருப்பம்; வரும் என்பதே நமது நம்பிக்கை.

தலைவர் ஜவாஹர் பதவியேற்றவுடன் தமது முதல் ரேடியோப் பிரசங்கத்தில் கூறியதேபோல, “கதவு திறந்திருக்கிறது. முடிவான லட்சியமும் நம் எல்லோரையும் கூவி யழைக்கிறது. நாம் எல்லோரும் ஒன்றுபட்டே முன்னேறவேண்டி யிருப்பதால், இதில் ஜயிப்பவர் இன்னார், தோற்பவர் இன்னார் என்பதற்கே இடமில்லை. ஜயித்தால் எல்லோரும் ஜயிக்கிறோம்; தோற்றால் எல்லோருக்கும் தோல்வியே. ஆனால், இதில் தோல்வி என்பதே இல்லை. வெற்றி, சுயேச்சை, நாற்பது கோடி மக்களின் சுதந்தர சுகங்கள் இவைகளை அடையும் திசையில் நாம் முன்னோக்கியே செல்கிறோம். ஜே ஹிந்த்!”

முற்றும்

என் சரிதம்

மகாத்மா காந்தி
எழுதியது

மகாதேவ தேசாய், ஹரிபாவூ உபாத்தியாய ஹிந்தியில் சுருக்கியதை
இனிய எளிய நடையில் கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்த்தது.

விலை ரூ. 3 - 8 - 0

பத்திரிகைகளின் அபிப்பிராயங்களில் சில

பாரத தேவி :— * *எளிய வாழ்க்கையும், உயரிய சிந்தனையும் நிறைந்த காந்திஜியின் சரிதம், தூய்மையான துணிவு நிறைந்த வாழ்வுக்கு ஒரு வழிகாட்டியாகும்.*

ஹனுமான்:— * *மாணவர் மட்டுமின்றி, தேசிய ஆர்வங் கொண்ட எல்லா இளைஞர்களுக்கும் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை.*

Indian Express:— * * We trust that the students and youths will make the best use of this attractive publication.

The Hindu :—The necessity for every reader in Tamilnad to be informed and inspired by Gandhiji's life needs no emphasis and this excellent translation will provide him a good introduction.

Sunday Times :—Pre-eminently fit to be included as a text-book in our Educational Instituitions.

ஆனந்த விகடன் :— * *மிகவும் உயர்ந்த முறையில் பிரசுரித்திருக்கிறார்கள் அல்லயன்ஸ் கம்பெனியார்.* இந்நூல், பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைக்கத்தகுந்தது.*

கல்கி:—**ஓர் அதிமதுர பொக்கிஷம் என்று சொல்லலாம்.*

ஹிந்துஸ்தான் :— * *இந்த அற்புதமான சரித்திரத்தைப் படித்தால் புனிதமடைவதுடன் பயனும் பெறலாம்.*

சக்தி :— * *முன்பு இல்லாத புது விஷயங்கள் பல இதில் சேர்க்கப்பெற்றுள்ளன.*

தினசரி :— * *மாணவர் மாத்திரமல்ல ; ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டும். வாழ்வுக்கோர் நல்ல வழிகாட்டி 'என சரிதம்'. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய புஸ்தகம்.*

அல்லயன்ஸ் கம்பெனி மயிலாப்பூர், சென்னை - 4

விஜயா

டாக்டர் சரத்சந்த்ரா சட்டர்ஜி எழுதிய நாவல்களுள் முதன்மையானது. 'இந்திரா', 'ரஜனி' என்னும் பங்கிம்சந்த்ரர் நாவல்களை மொழிபெயர்த்த ஸ்ரீ எஸ். குருஸ்வாமி, பி. ஏ., தமிழில் மொழி பெயர்த்தது. கலிகோ பைண்ட் விலை ரூ. 3—0—0

ஜோதி :— * வாசிப்பதற்குச் சுவையாயிருக்கிறது. ஸ்ரீ குருஸ்வாமி இதைச் சுவைகுன்றுமல் மொழிபெயர்த்திருக்கிருர்.

கலைமகள் :— * இந் நவீனம் படிப்பதற்கு மிக்க ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. ஒவ்வொரு புத்தகாலயத்திலும் வைப்பதற்கேற்ற நூல்.

The Mail :— The style of the translation is good and expressive and the story is free flowing.

ஜய பாரதி:— * மொழிபெயர்ப்பு நடை சிறப்பாயிருப்பதை குறிப்பிடவேண்டும். சரளமான பாஷையில், சொந்தத் தமிழ்க் கதைபோல், அந்நியச் செற்றொடர் இல்லாமல் மொழி பெயர்த்திருப்பதை, தமிழ் இலக்கியத்திற்கு ஒரு தொண்டெனக் கூற வேண்டும். புஸ்தகம் அச்சுப் பிழையில்லாமல் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. நல்ல பைண்ட் கட்டடத்திலிருக்கும் இப்புத்தகம் பிரசுராலயத்திற்குப் பெருமையளிப்பதாகும்.

குமரன் :— * ஆடவரும் பெண்டிரும் படித்து இன்புறலாம். இதுமாதிரி வங்காள மொழியிலுள்ள பல இனிய கதைகளையும், நாவல்களையும் மொழி பெயர்த்துத் தமிழுலகுக்குத் தந்துவரும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் தொண்டு பெரிதும் போற்றத்தக்கது.

பாரதமணி:— * ஸ்ரீ குருஸ்வாமியின் மொழிபெயர்ப்பு வாசிப்பதற்கு எளிதாகவும் நல்ல ஓட்டம் கொண்டதாகவும் இருக்கிறது.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4